# பாராளுமன்ற

## தகவல் திரட்டு

# பாராளுமன்ற
## தகவல் திரட்டு

தொகுப்பு மற்றும் வெளியீடு
தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்

# பாராளுமன்ற தகவல் திரட்டு

**ஆலோசனை**

| | |
|---|---|
| திரு. தம்மிக்க தஸநாயக்க | (பாராளுமன்றச் செயலாளர் நாயகம்) |
| திரு. நீல் இத்தவல | (பிரதிச் செயலாளர் நாயகமும், பணியாட்தொகுதி பிரதானியும்) |
| திருமதி.கே.ஏ. ரோஹனதீர | (உதவிச் செயலாளர் நாயகம்) |
| திரு. டிக்கிரி.கே. ஜயதிலக | (உதவிச் செயலாளர் நாயகம்) |

**எண்ணக்கரு மற்றும் மேற்பார்வை**

| | |
|---|---|
| திரு. ஷான் விஜயதுங்க | (பணிப்பாளர், தொடர்பாடல் திணைக்களம்) |

**வழிகாட்டல்**

| | |
|---|---|
| திருமதி. நிம்மி ஹாத்தியல்தெனிய | (ஊடக முகாமையாளர்) |
| செல்வி. புத்தினி ராமநாயக்க | (வெளிக்கள முகாமையாளர்) |

**தொகுப்பு**

| | |
|---|---|
| திரு. மகேஸ்வரன் பிரசாத் | (ஊடக அதிகாரி) |

**மொழிபெயர்ப்பு**

| | |
|---|---|
| திரு. முஹம்மட் நுஸ்கி | (ஊடக அதிகாரி) |
| திரு. பா. ருத்ரகுமார் | (வெளிக்கள அதிகாரி) |
| திரு. யஸ்ரி முஹம்மட் | (வெளிக்கள அதிகாரி) |

**தொகுப்பில் உதவி**

| | |
|---|---|
| திரு. எச்.டி. எதிரிவீர குணசேகர | (ஊடக அதிகாரி) |
| திரு. ஆசிரி ஹப்புகொட | (ஊடக அதிகாரி) |
| திரு. சௌமிய ஏக்கநாயக்க | (ஊடக அதிகாரி) |
| திருமதி. மாதவி பெரேரா | (ஊடக அதிகாரி) |
| திரு. நுவன் துமிந்த | (ஊடக அதிகாரி) |
| செல்வி. இஷாரா விக்ரமசிங்க | (வெளிக்கள அதிகாரி) |
| செல்வி. நிபுனி பலகமகே | (வெளிக்கள அதிகாரி) |
| திருமதி. ரிஷ்மியா நூட்டான் | (வெளிக்கள அதிகாரி) |
| திரு. துமிந்த விக்ரமசிங்க | (வெளிக்கள அதிகாரி) |
| திரு. சப்புமல்.டி.சில்வா | (ஊடக இணைப்பதிகாரி) |
| திரு. ஜெயப்பிரகாஷ் | (வெளிக்கள இணைப்பதிகாரி) |
| திரு. பி.ஜே. ரொட்றிகோ | (வெளிக்கள இணைப்பதிகாரி) |
| திரு. பிரபாத் பிரேமரத்ன | (பயிற்சி மாணவன்) |

# பாராளுமன்ற தகவல் திரட்டு

ISBN 978-955-8412-15-2

முதலாவது பதிப்பு 2020

**ஒப்புநோக்கு**
திரு. எம்.எஸ்.எம். லின்னாஸ் (உதவி ஹன்சாட் பதிப்பாசிரியர்)

**அட்டைப்படம்**
சபா மண்டபத்துக்கான பிரதான கதவு (பக்கம் 57)

**புகைப்படங்கள்**
நுவன் துமிந்த (ஊடக அதிகாரி)

**பக்க வடிவமைப்பும் பதிப்பும்**
Design Waves (Pvt) Ltd
011 2 150 100

**தொகுப்பு மற்றும் வெளியீடு**
தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
ஸ்ரீ ஜயவர்தனபுர
கோட்டே.

0112- 777287 / 0112- 2777328, sriparliament@gmail.com

# உள்ளடக்கம்


பக்கம்

முன்னுரை

01. பாராளுமன்ற விதிகள், ஒழுங்குகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விமர்சன ரீதியான ஆய்வு - தம்மிக்க தஸநாயக்க ... 1

02. பாராளுமன்ற முறைமை மற்றும் சம்பிரதாயம் தொடர்பான விமர்சன ரீதியான ஆய்வு - நீல் இத்தவெல ... 9

03. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவை தொடர்பான பகுப்பாய்வு - குஷானி ரோஹனதீர ... 15

04. பிரதிநிதித்துவ ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற குழு முறைமை - டிக்கிரி கே. ஜயதிலக ... 19

05. பாராளுமன்ற அமர்வுதினமொன்றில் உறுப்பினர் ஒருவர் செயற்பாட்டு ரீதியாக பங்களிப்பு செய்யக்கூடிய சட்டவாக்க செயற்பாடுகள் தொடர்பான விளக்கம் - எச்.ஈ. ஜனகாந்த சில்வா ... 25

06. பாராளுமன்றத்தின் முதல் அமர்வுநாளும் அன்றைய நடைமுறைகளும் - நிம்மி ஹாத்தியல்தெனிய ... 29

07. பாராளுமன்றப் பணிகளுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) ஒன்றிணைத்தல் - ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம், இலங்கை ... 33

08. இலங்கைப் பாராளுமன்ற செயலகம் - எச்.டி. எதிரிவீர குணசேகர ... 41

09. பாராளுமன்றத்தில் சட்டத்தை நிறைவேற்றும் நடைமுறை - எச்.டி. எதிரிவீர குணசேகர ... 47

10. பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை தொடர்பான அறிமுகம் மற்றும் ஹன்சாட் அறிக்கையின் முதலாவது தொகுதி - குணவதி பிடவல ... 49

11. பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னம் மற்றும் பெருமை - செங்கோல் - சௌமிய ஏக்கநாயக்க ... 53

## உள்ளடக்கம்


பக்கம்

12. இலங்கையில் பெண்கள் அரசியல் மற்றும் அதன் பரிணாமங்கள் — 55
- புத்தினி ராமநாயக்க

13. இலங்கை பாராளுமன்றத்தின் சபா மண்டபத்துக்கான பிரதான கதவு — 57
- சௌமிய ஏக்கநாயக்க

14. பாராளுமன்ற சபாமண்டபத்தின் தடை எல்லை — 59
- நிம்மி ஹாத்தியல்தெனிய

15. இலங்கை பாராளுமன்றத்தின் ஊடக மத்திய நிலையம் மற்றும் அதன் செயற்பாடுகள் — 61
- மகேஸ்வரன் பிரசாத்

16. சுதந்திர இலங்கையில் பாராளுமன்ற முறைமையின் பரிணாமம்; விரிவான ஆய்வு — 63
- நிபுனி பலகமகே

17. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் இலகுபடுத்தப்பட்ட முறையில் — 73

## முன்னுரை

அரசு இயந்திரங்களை மிகவும் ஒழுங்கான முறையில் பராமரிக்கும் அதேநேரம், நாட்டை மிகவும் முறையான ஜனநாயகப் பாதையில் கொண்டுசெல்லும் பொறுப்பு பாராளுமன்றத்துக்குக் காணப்படுகிறது. இலங்கை பாராளுமன்றத்தில் உள்ள அனைவரும் இதற்காக அர்ப்பணிப்புடன் உள்ளனர். இதற்காகவே பொது மக்களின் பிரதிநிதிகளாக அவர்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுகின்றனர். கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து பொது மக்கள் எதிர்பார்ப்பதை உரிய முறையில் செயற்படுத்துவதற்கு அவர்களுக்கு நாம் ஒத்துழைப்பு வழங்குவோம். பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்தொகுதியின் கீழ் செயற்படும் தொடர்பாடல் திணைக்களம் இதில் முக்கிய பங்குவகிக்கிறது. இதன் ஓர் அங்கமாகவே “பாராளுமன்ற தகவல் திரட்டு” என்ற தலைப்பைக்கொண்ட இந்தப் புத்தகம் தயாரிக்கப்பட்டுள்ளது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் கைகளுக்குச் செல்லும் இந்தப் புத்தகத்தில் பாராளுமன்றம் பற்றியும் அதன் செயற்பாடுகள் பற்றியும் பல தகவல்கள் உள்ளடங்கியுள்ளன.

பாராளுமன்ற முறைமை மற்றும் சம்பிரதாயம், பாராளுமன்றத்தின் முதல் அமர்வுநாள் நடவடிக்கைகள், பிரதிநிதித்துவ ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற குழு நடைமுறைகள், இலங்கை பாராளுமன்ற செயலகம், பாராளுமன்றத்தில் சட்டமூலமொன்றை நிறைவேற்றும் நடைமுறைகள், பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னமான செங்கோல், பாராளுமன்ற குழுக்கள், பாராளுமன்ற ஊடக நிலையம், பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் போன்ற பல்வேறு தலைப்புக்களைத் தாங்கியதாக இந்தப் புத்தகம் அமையப்பெற்றுள்ளது. இது கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்குப் பெரும் உதவியாகவிருக்கும் என்பதே எமது நம்பிக்கையாகும்.

அத்துடன், பூகோள பொறிமுறையில் உள்ள சிக்கலான விடயங்களுக்குத் தீர்வைக் காண்பதற்காக சகலரையும் ஒன்றிணைத்த பொறிமுறையொன்றை உருவாக்கி செயற்படவேண்டியது காலத்தின் தேவையாகவுள்ளது. இதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும், உலகளாவிய விடயங்களை உள்நாட்டில் வெற்றிகொள்வது தொடர்பிலும் விசேட அவதானம் செலுத்தவேண்டியுள்ளது பற்றியும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஷான் விஜயதுங்க
பணிப்பாளர், தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
shan_w@parliament'lk

# பாராளுமன்ற விதிகள், ஒழுங்குகள் மற்றும் நடைமுறைகள் பற்றிய விமர்சன ரீதியான ஆய்வு

தம்மிக்க தஸநாயக்க
செயலாளர் நாயகம்
இலங்கை பாராளுமன்றம்
dhammika_d@parliament.lk



சட்டமியற்றும் உயர் நிறுவனமான பாராளுமன்றத்தின் அனைத்து செயற்பாடுகளும் அரசியல் யாப்பு, நிலையியற் கட்டளைகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு அமைய நடைபெறுகின்றன. நிலையியற் கட்டளை 03க்கு அமைய பொதுத்தேர்தலின் பின்னர் பாராளுமன்றம் கூடும் முதலாவது தினத்தில் ஒவ்வோர் உறுப்பினருக்கும் வெவ்வேறாக ஆசனங்கள் ஒதுக்கப்படும் வரை சபாமண்டப எல்லைக்குள் காணப்படும் எந்தவோர் ஆசனத்திலும் அமர முடியும். ஆசன ஒதுக்கீடு சபாநாயகரின் விருப்பத்துக்கு அமைய மேற்கொள்ளப்படுவதுடன் அது இறுதித் தீர்மானமாகும். எவ்வாறாயினும், ஆசன ஒதுக்கீட்டின் போது சபையில் வகிக்கும் பதவி, அமைச்சுப் பதவிகளை வகித்தல், கட்சித் தலைமைத்துவம், சிரேஷ்டத்துவம், பெயர்களின் அகர வரிசை என்பன சம்பிரதாயமாக சபாநாயகரினால் கருத்தில் கொள்ளப்படும்.

பாராளுமன்றம் மாதத்தின் முதலாவது ஞாயிறு தினத்தை அடுத்துவரும் முதலாவது மற்றும் மூன்றாவது வாரங்களில் கூட்டப்படும். அந்த வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன் மற்றும் வெள்ளி ஆகிய தினங்களில் பாராளுமன்றம் கூடுவதோடு செவ்வாய் மற்றும் புதன் கிழமைகளில் பி.ப.01.00 மணி முதல் பி.ப. 7.30 மணிவரையும் வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மு.ப. 10.30 மணி முதல் பி.ப. 7.30 வரை கூட்டப்படும்.

எனினும் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் 26 நாட்களுக்கு மேற்படாத தினங்கள் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தை பரிசீலிப்பதற்காக ஒதுக்கப்படும்.

அரசியலமைப்பின் 73வது உறுப்புரை மற்றும் நிலையியற் கட்டளை 11க்கு அமைய பாராளுமன்றத்தின் கூட்டநடப்பெண் தலைமை தாங்கும் உறுப்பினர் உள்ளடங்கலாக 20 உறுப்பினர்களை கொண்டதாகும். குழுக்களின் கூட்டநடப்பெண் நிலையியற் கட்டளைகள் மூலம் நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் அவ்வாறில்லாத போது குறித்த குழுக்களினால் தீர்மானித்துக்கொள்ள முடியும். ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் போதிய கூட்டநடப்பெண் இல்லை என சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினரின் அவதானத்துக்கு கொண்டுவரப்படுமிடத்து வாக்கழைப்பு மணியை ஒலிக்கும்படி சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் ஆணை பிறப்பிக்க வேண்டும்.

அவ்வாறு 5 நிமிடங்கள் மணி ஒலிக்கப்பட்ட பின்னர் கூட்டநடப்பெண் இல்லை எனில் சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினர் எந்தவித கேள்வியும் எழுப்பாது பாராளுமன்றத்தை ஒத்திவைக்க வேண்டும்.

நிலையியற் கட்டளை 13க்கு அமைய பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் நடைபெறவேண்டும். இதன்படி ஒழுங்குப் புத்தகம் மற்றும் ஒழுங்குப் பத்திரம் என்பன மூன்று மொழிகளிலும் வெளியிடப்படுவதுடன் உரைகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகள் சமகாலத்தில் ஏனைய இரு மொழிகளிலும் மொழிபெயர்ப்பு செய்யப்பட வேண்டும். நடத்தப்படும் உரைகள் அவை நடத்தப்பட்ட மொழிகளிலேயே ஹன்சாட் அறிக்கையில் வெளியிடப்பட வேண்டும் என்பதுடன் உரையாற்றுபவரின் பெயர் மும்மொழிகளிலும் குறிப்பிடப்பட வேண்டும். மேலும் ஹன்சாட் அறிக்கையின் முன்பக்க அட்டை மூன்று மொழிகளிலும் அச்சிடப்படும்.

நிலையியற் கட்டளைகள் மற்றும் சம்பிரதாயங்களுக்கு அமைய பாராளுமன்ற அமர்வு ஒன்றுக்கான நடவடிக்கைகள் நிகழும் ஒழுங்குமுறை காணப்படுகின்றது. நிலையியற் கட்டளை 22இல் பாராளுமன்றத்தின் நடவடிக்கைகள் இடம்பெறும் ஒழுங்குமுறை கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

1. புதிய உறுப்பினர் ஒருவரின் சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிமொழி
2. ஜனாதிபதியின் செய்திகள்
3. சபாநாயகரின் அறிவித்தல்கள்
4. பத்திரங்கள் சமர்ப்பித்தல்
5. குழுக்களின் அறிக்கைகளை சமர்ப்பித்தல்
6. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்
7. வாய்மொழி மூல விடைக்கான வினாக்கள்
8. சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்
9. அமைச்சு சம்பந்தமான கூற்றுக்கள்
10. தனிப்பட்ட விளக்கங்கள்
11. சிறப்புரிமை கேள்விகள்
12. பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான முன்னறிவித்தல் தேவைப்படாத பிரேரணைகள்
13. பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான முன்னறிவித்தல் தேவைப்படும் பிரேரணைகள்
14. அனுதாப பிரேரணைகள்
15. பொது அலுவல்கள்

பொதுவாக தினம் ஒன்றுக்கான பணிகள் இவ்வாறு குறிப்பிடப்பட்டு இருந்தாலும் ஒவ்வொரு நாளும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படுவதில்லை. பாராளுமன்றத்தின் பிரதான பணிகள் தினம் ஒன்றுக்கான பணிகள் மற்றும் பிரேரணைகள் தொடர்பிலான முன் அறிவித்தல்கள் என்பவற்றை கொண்டதாகும். சட்டமூலங்கள், ஒழுங்குவிதிகள், பிரேரணைகள் நிறைவேற்றம் அல்லது ஏனைய விடயங்கள் தினமொன்றுக்கான பணிகளின் கீழ் இடம்பெறுகின்றன. ஒரு மாதத்தில் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வு தவிர்ந்த ஏனைய அனைத்து தினங்களிலும் அரசாங்கத்தின் அலுவல்கள் முன்னுரிமைபெறும்.

பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதும் ஒரு விசேட சந்தர்ப்பமாகும். முன்னறிவித்தல் தேவைப்படும் பிரேரணை ஒன்றுக்கமைய பாராளுமன்றம் கூடும் அடுத்த தினம் வரை ஒத்திவைத்தல் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் எனப்படும். 48 மணித்தியாலங்களுக்கு மேற்பட்டு காணப்படும் ஒத்திவைப்பின் போது பாராளுமன்றத்தை மீண்டும் கூட்டுவதற்காக நிர்ணயிக்கப்பட்ட தினத்திற்கு முன்பு ஒரு தினத்தில் பாராளுமன்றத்தை கூட்டுமாறு பிரதமர் சபாநாயகரை கோரமுடியும். இந்தக் கோரிக்கைக்கு அமைய பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான அறிவிப்பை சபாநாயகர் மேற்கொள்ள வேண்டும். அதன்போது சபாநாயகரின் அறிவித்தலில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தினத்தில் குறிப்பிட்ட நேரத்தில் பாராளுமன்றம் கூடி அந்தத் தினம் மற்றும் நேரம் வரும் வரை முறையாக ஒத்திவைக்கப்பட்டதை போன்று பாராளுமன்றம் அதன் பணிகளை தொடர வேண்டும். இவ்வாறு அறிவிக்கப்படும் போது பாராளுமன்றத்தை கூட்டும் தினம் மற்றும் நேரத்தை உறுப்பினர்களுக்கு அறிவிப்பதற்கு எடுக்கவேண்டிய அனைத்து நடவடிக்கைகளையும் சபாநாயகர் மேற்கொள்ள வேண்டும்.

அதேபோன்று பாராளுமன்றத்துக்கு மனுக்களை சமர்பிப்பதற்கு பொதுமக்களுக்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் அனைத்து மனுக்களும் சபாநாயகருக்கு முகவரியிடப்பட வேண்டும். பொது மனுக்கள் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரின் ஊடாக சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு மனுவும் மதிப்பான வார்த்தைகளில் முன்வைக்கப்பட வேண்டும். அவற்றில் பொருத்தமற்ற கூற்றுகள் அடங்கியிருக்கலாகாது.

பாராளுமன்றத்தின் பல்வேறு சட்டவாக்கங்களின் கீழான தீர்மானங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள், கட்டளைகள், குறைநிரப்பு மதிப்பீடுகள் போன்றவற்றை சபையில் சமர்ப்பித்தல் ஒரு நியதிச்சட்டத் தேவைப்பாடாகும் என்பதுடன் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அது மேற்கொள்ளப்படுகின்றது. அமைச்சுக்களின் கீழ் வராத பத்திரங்கள் கௌரவ சபாநாயகரினால் சமர்ப்பிக்கப்படும்.

மேலும் வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் இலங்கை மத்திய வங்கி வருடாந்த அறிக்கை போன்ற பல்வேறு அமைச்சுக்களின், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்ட நிறுவனங்களின் நிதி அறிக்கைகள் இங்கு சமர்ப்பிக்கப்படும். அரசியல் யாப்பின் 41. ஆ (6) உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணைக்குழுக்கள் மற்றும் நிர்வாகம் சம்பந்தமான பாராளுமன்ற ஆணையாளர் போன்ற நியதிச்சட்ட நிறுவனங்களின் கீழ் வரும் அறிக்கைகள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

கேள்விகள் மற்றும் பிரேரணைகள் தொடர்பில் அறிவிக்கப்படுவது குறித்த அறிவிப்பை மேற்கொள்ளும் உறுப்பினர் கையொப்பமிட்ட எழுத்து மூல ஆவணம் செயலாளர் நாயகத்திற்கு முகவரியிடுவதன் மூலம் ஆகும். அவ்வாறான அறிவிப்புகளை பாராளுமன்றம் கூடியிருக்கும் எந்த ஒரு நேரத்திலும் செயலாளர் நாயகத்திற்கு கையளிக்கப்பட முடியும். அவ்வாறு இல்லையெனில் எந்த ஒரு நேரத்திலும் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்ப முடியும். ஒழுங்குவிதிகளுக்கு முரணானது என சபாநாயகரால் தீர்மானிக்கப்படும் ஏதாவது ஒரு கேள்வி தவிர்ந்த செயலாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ள அனைத்து கேள்விகளும், அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து 7 நாட்கள் பூர்த்தியாகும் முன்னர் வரும் ஒரு தினத்தில் பதிலளிக்கும் வகையில் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

ஏதாவது விடயம் தொடர்பான வாக்கெடுப்பின் போது “ஆம் மற்றும் இல்லை” என குரல் மூலம் வாக்கெடுப்பை மேற்கொண்டு சபாநாயகர் முடிவுகளை அறிவிக்க வேண்டும். சபாநாயகரின் தீர்மானத்துடன் குறிப்பிட்ட ஓர் உறுப்பினர் இணங்கவில்லை எனின், சபாநாயகரினால் தீர்மானிக்கப்படும் நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முறைப்படி வாக்கெடுப்பொன்றை கோர முடியும்.

தீர்மானத்திற்கு ஆதரவாக மற்றும் எதிராக வழங்கப்பட்டுள்ள வாக்குகளை சபாநாயகர் அறிவிக்க வேண்டும். சமனான வாக்குகள் காணப்படுமாயின் சபாநாயகருக்கு தீர்மானமிக்க வாக்கை வழங்க முடியும். அதனை அடுத்து சபாநாயகர் வாக்கெடுப்பின் முடிவை அறிவிக்க வேண்டும். வாக்கெடுப்பின் போது எண்ணிக்கை அல்லது பெயர்கள் தொடர்பில் சரி செய்ய முடியாத குழப்ப நிலைமை ஏற்படின் சபாநாயகர் உடனடியாக மற்றுமொரு வாக்கெடுப்பு மேற்கொள்ள வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் தனது வாக்கை பிழையாக வழங்கியுள்ளதாகவோ அல்லது ஏதாவதொரு வாக்கு பிழையாக கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டால், அதனை திருத்திக்கொள்ளுமாறு குறித்த உறுப்பினரால் கோரிக்கை விடுக்க முடியும். எனினும், சபாநாயகரினால் வாக்கெடுப்புக்காக வழங்கப்பட்டுள்ள காலம் முடிவடைந்துவிட்டதாக அறிவிக்க முன்னர் குறித்த உறுப்பினர் அந்த கோரிக்கையை முன்வைக்க வேண்டும்.

ஒழுங்குகளை பேணுவது தொடர்பான பொறுப்பை முறையாக பாராளுமன்றத்தில் சபாநாயகரும், குழுக்களில் குறித்த குழுக்களின் தவிசாளர்களும் ஏற்க வேண்டும். ஒழுங்குப் பிரச்சினை தொடர்பில் சபாநாயகர் அல்லது குழுக்களின் தவிசாளரினால் வழங்கப்படும் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு செய்ய சந்தர்ப்பம் இல்லை.

விவாதமொன்று இடம்பெறும் வேளையில் சபாநாயகர் அல்லது தவிசாளர் ஏதாவதொரு விடயத்தை தெரிவிக்கும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உரையாற்றும் அல்லது உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ள உறுப்பினர் ஆசனத்தில் அமர வேண்டும். சபாநாயகர் அல்லது தவிசாளரினால் தெரிவிக்கப்படும் விடயம் தடையின்றி கேட்கும் வகையில் பாராளுமன்றம் அல்லது குழுக்களில் அமைதி பேணப்படவேண்டும்.

ஒழுங்குப்பிரச்சினை எழுப்பும் போது குறித்த உறுப்பினர் மீண்டும் தனது ஆசனத்தில் அமர வேண்டும். சபாநாயகர் அல்லது தவிசாளர் குறித்த பிரச்சினைக்கு தீர்வு வழங்கும் வரை சபாநாயகர் அல்லது தவிசாளரின் அனுமதியின்றி வேறொரு உறுப்பினர் எழுந்து நிற்கலாகாது. பிரச்சினையை எழுப்பும் பொழுது உரையாற்றும் உறுப்பினர் தலைமையின் தீர்மானத்துக்கு ஏற்ப தனது உரையை மீண்டும் தொடரமுடியும்.

உறுப்பினரொருவர் தலைமையின் தீர்மானத்தை புறக்கணித்து வேண்டுமென்றே பாராளுமன்ற நடவடிக்கைகளுக்கு தடை ஏற்படுத்துவதன் ஊடக பாராளுமன்றத்தின் ஒழுங்குகளை தவறாக பயன்படுத்தியமை தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்டு உடனடியாக சபாநாயகரினால், அந்த உறுப்பினர் பெயர் குறிப்பிடப்பட்ட எந்தவொரு சந்தர்ப்பத்திலும் “குறித்த உறுப்பினரின் பாராளுமன்ற சேவையை இடைநிறுத்த வேண்டும்” என்ற பிரேரணையை (எந்தவித திருத்தங்களுக்கு, ஒத்திவைத்தலுக்கு அல்லது விவாதத்துக்கு இடமளிக்கப்படாமல்) சபாநாயகர் உடனடியாக சபைக்கு விட வேண்டும்.

அவ்வாறான பிரேரணை ஒன்று நிறைவேற்றப்பட்டு நிலையியற் கட்டளைகளின் கீழ் ஒரு உறுப்பினரின் பாராளுமன்ற சேவை இடை நிறுத்தப்பட்டு இருப்பின் அவ்வாறு அந்த உறுப்பினரின் சேவை இடைநிறுத்தம் முதலாவது சந்தர்ப்பத்தில் இரண்டு வாரங்களும் அதே கூட்டத் தொடரில் இரண்டாவது சந்தர்ப்பத்தில் மூன்று வாரங்களும் அதே கூட்டத்தொடரில் மூன்றாவது அல்லது அதற்குப் பின்னர் ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் நான்கு வாரங்களுமாக அமைய வேண்டும்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள உறுப்பினர் குறித்த இடைநிறுத்த காலப்பகுதிக்குள் ஒதுக்கீட்டு சட்டமூலத்தின் இறுதி வாக்கெடுப்பு நடைபெறும் போது வாக்கெடுப்பில் கலந்து கொள்ள சபாநாயகரின் அனுமதி வழங்கப்படும்.

பாராளுமன்றத்தின் சபா மண்டபத்தில் செங்கோல் வைக்கப்பட்டுள்ள சந்தர்ப்பம் ஒன்றில் அதனை தொடுவது அல்லது அதனை தூக்குவதன் ஊடாக கடுமையான ஒழுக்க மீறல் ஒன்றை மேற்கொள்ளும் உறுப்பினர் ஒருவர் குறித்த தவறை முதலாவது முறை மேற்கொண்டார் என்ற விடயத்தை கருத்தில் கொள்ளாது குறித்த உறுப்பினரின் பாராளுமன்ற சேவை நான்கு வாரங்களுக்கு இடை நிறுத்தப்படும்.

அதேபோன்று வருகை தந்துள்ள உறுப்பினர்கள் சிலர் ஒன்றாக சேர்ந்து தலைமையின் தீர்மானங்களுக்கு கட்டுப்படாமல் இருந்தாலன்றி ஒரு வேளையில் ஓர் உறுப்பினருக்கு மேலதிகமாக பெயர் குறிப்பிடப்படலாகாது. நிலையியற் கட்டளைகளின் கீழ் பாராளுமன்ற சேவை இடைநிறுத்தம் செய்யப்படும் உறுப்பினரோ அல்லது ஒன்றாக சேர்ந்து செயற்பட்ட உறுப்பினர்களோ அவ்வாறு சேவை இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ள காலப்பகுதியில் பாராளுமன்ற வளாகத்தில் இருந்து வெளியேற்றும் சபாநாயகரினால் வழங்கப்பட்ட ஆணையை புறக்கணிப்பு செய்வதாயின், சபாநாயகர் தனது ஆணையை செயல்படுத்த தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்க முடியும்.

மேற்குறிப்பிட்டது போன்ற ஒரு தவறை பூரண பாராளுமன்ற குழுவில் மேற்கொள்ளும்போது தவிசாளரினால் குழுவின் செயற்பாடுகள் உடனடியாக இடைநிறுத்தப்பட்டு குறித்த சம்பவத்துடன் தொடர்பான விடயங்களை பாராளுமன்றத்துக்கு முன்வைக்க வேண்டும். அதன் பின்னர் பிரேரணை ஒன்றின் மூலம் குறித்த தவறை பாராளுமன்றத்தினுள் மேற்கொண்ட வகையில் கணித்து திருத்தம், ஒத்திவைப்பு அல்லது விவாதம் இல்லாமலேயே சபாநாயகரினால் குறித்த பிரச்சினை தொடர்பில் வினவப்படும்.

விவாதம் ஒன்றின் போது தன்னால் அல்லது வேறொரு உறுப்பினரால் மேற்கொள்ளப்பட்ட வாதத்துடன் தொடர்புபடாத விடயத்தை மீண்டும் மீண்டும் தெரிவிக்கும் உறுப்பினர் ஒருவரின் நடத்தை தொடர்பில் பாராளுமன்றத்தின் கவனத்தை கொண்டுவந்து குறித்த உறுப்பினரின் உரையை தொடர்ந்து மேற்கொள்வதை நிறுத்துவதற்கும் அல்லது நேரடி ஒளிபரப்பை நிறுத்துமாறு பணிக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு காணப்படுகின்றது.

கடுமையான முறையில் ஒழுங்குகளை மீறும் உறுப்பினர் ஒருவருக்கு குறித்த தினத்தில் எஞ்சியுள்ள பகுதி முடிவடையும் வரை பாராளுமன்றத்திலிருந்து உடனடியாக நீங்கிக் கொள்ளுமாறு உத்தரவிடுவதற்கு சபாநாயகருக்கு முடியும் என்பதுடன் குறித்த உத்தரவை செயற்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள பணிப்புரை வழங்க முடியும். படைக்கல சேவிதர் குறித்த பணிப்புரையை செயற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற வளாகத்தில் இருந்து உடனடியாக நீக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ்வாறு நீக்கப்பட்ட காலப்பகுதிக்குள் குழு அமர்வுகளிலும் பங்கேற்பது குறித்த உறுப்பினருக்கு தடை செய்யப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தில் கடுமையான முறையில் ஒழுக்கு மீறல்கள் ஏற்படும் நிலைமைகளின் போது சபாநாயகர் தேவை எனக் கருதினால் சபையில் கேட்காமல் பாராளுமன்றத்தை ஒத்திவைப்பதற்கு அல்லது சபாநாயகரினால் நிர்ணயிக்கப்படும் காலத்துக்கு சபையை இடைநிறுத்த அதிகாரம் உண்டு.

விவாதம் ஒன்றின் போது பொருத்தமற்ற சொற்களை பயன்படுத்தி, அவ்வாறான சொற்களை பயன்படுத்தியமைக்காக பாராளுமன்றம் திருப்தி அடையும் வகையில் தனது வருத்தத்தை வெளிப்படுத்தாத உறுப்பினர் ஒருவர் அல்லது நிலையியற் கட்டளைகளில் குறிப்பிடப்படாத

ஒழுங்குகளை மீறிய உறுப்பினர் ஒருவருக்கு எதிராக பாராளுமன்றத்தினால் பொருத்தம் எனக் கருதும் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்க முடியும்.

உறுப்பினர் ஒருவர் தொடர்ந்தும் பொருத்தமற்ற முறையில் நடந்து கொள்வதாக அல்லது நிலையியற் கட்டளைகளை மீறி நடந்துகொள்வதாக சபாநாயகர் கருதுமிடத்து, பாராளுமன்ற நடவடிக்கைகளை நேரடியாக ஒளிபரப்பு செய்வதை உடனடியாக நிறுத்துமாறு உத்தரவிடுவதற்கு சபாநாயகருக்கு அதிகாரமுண்டு.

விவாதம் ஒன்றின் போது பொருத்தமற்ற சொற்கள் பயன்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் குறித்த சொற்களை அல்லது கூற்றை ஹன்சாட் அறிக்கையில் இருந்து நீக்குமாறு அல்லது அந்த சொற்கள் பயன்படுத்தப்படாதவையாக கருதப்பட வேண்டும் என பணிப்பதற்கு சபாநாயகருக்கு அதிகாரம் உண்டு.

அதேபோன்று, ஜனாதிபதி அல்லது பதில் ஜனாதிபதி ஒருவரின், பாராளுமன்ற உறுப்பினர்களின், நீதிபதிகளின் அல்லது நீதியை நிலைநாட்டும் பணிகளில் ஈடுபடும் நபர்களின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் பூரண பிரேரணை ஒன்றின் மூலம் அல்லாமல் எழுப்பலாகாது. ஏதாவது ஒரு விடயத்தில் அமைச்சர் ஒருவரிடம் முன்வைக்கப்படும் கேள்விகள் அல்லது வேறு விடயங்கள் தொடர்பில் முன்வைக்கப்படும் பிரேரணை மீது மேற்கொள்ளப்படும் விவாதத்தின் போது அவ்வாறான நபர்களின் தனிப்பட்ட விடயங்கள் தொடர்பில் குறிப்பிடுவது விதிகளுக்கு முரணானதாகும்.

உறுப்பினர் ஒருவர் தனது உரையில் பிழையாக புரிந்து கொள்ளப்பட்ட முக்கியமான ஒரு விடயம் தொடர்பில் குறித்த விடயத்திற்கு புதிதாக விடயங்களை சேர்த்துக் கொள்ளாமல் அந்த விடயத்தை தெளிவுபடுத்தும் நோக்கில் அல்லது ஒழுங்குப் பிரச்சினை மீது அல்லாமல் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் ஒரு தடவைக்கு மேலதிகமாக உரையாற்ற முடியாது.

ஒரு பிரேரணையை அல்லது திருத்தத்தை முன்வைக்கும் உறுப்பினர் ஒருவர் அதனை உறுதிப்படுத்தும் வகையில் உரையாற்ற முடியும். எவ்வாறாயினும் குறித்த பிரேரணை அல்லது திருத்தம் உரிய முறையில் நிறைவேற்றப்படும் வரை அது தொடர்பில் விவாதத்திற்கு இடமில்லை. அது தொடர்பில் எந்த கேள்வியும் பாராளுமன்றத்தில் கேட்க முடியாது.

ஏதாவது ஓர் உறுப்பினர் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்று தலைமைக்கு தலைசாய்த்து விவாதத்தின் பின்னொரு சந்தர்ப்பத்தில் தனக்கு உரையாற்றும் உரிமைக்கு பாதகம் ஏற்படாமல் பிரேரணையொன்றை அல்லது திருத்தம் ஒன்றை அங்கீகரிக்க முடியும்.

ஏதாவது ஒரு விடயம் தொடர்பில் “ஆம் அல்லது இல்லை” என குரல் மூலம் வாக்களிப்பதற்கு கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் காணப்படுகின்றது. விவாதம் செய்ய வேண்டிய பிரச்சினை ஒன்றை சபையில் முன்வைத்து விவாதம் செய்து நிறைவடைந்த பின்னர் சபாநாயகரின் அனுமதியின்றி எந்த ஓர் உறுப்பினருக்கும் அதே கூட்டத்தொடரில் குறித்த பிரச்சினையை மீண்டும் முன்வைக்க முடியாது.

ஒவ்வோர் உறுப்பினரும் சபாநாயகரை விளித்து தமது உரையை நிகழ்த்த வேண்டும். சபாநாயகரின் அனுமதியுடன் அவர்கள் தமது ஆசனங்களில் இருந்து எழுந்து நின்று உரையாற்ற வேண்டும். உறுப்பினர் ஒருவரின் உரைக்கு ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின் மூலமோ அல்லது குறித்த உரையாற்றும் உறுப்பினரால் இடையீடு செய்வதற்கு வழங்கப்படும் அனுமதியின் மூலமோ

தடை ஏற்படுத்த முடியும். உறுப்பினர் ஒருவர் தனது உரையை நிறைவு செய்த பின்னர் அவர் மீண்டும் ஆசனத்தில் அமர வேண்டும். இரண்டு உறுப்பினர்கள் ஒரே நேரத்தில் எழுந்து நிற்கும் போது சபாநாயகர் தனது கண்களுக்கு தென்படும் முதலாவது உறுப்பினருக்கு உரையாற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்குவார். ஒவ்வொரு உறுப்பினரும் தமது கருத்துக்களை கலந்துரையாடும் விடயத்துடன் மாத்திரம் மட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். எந்தவொரு உறுப்பினருக்கும் ஏதாவது ஒரு பிரேரணை அல்லது விவாதம் ஒன்றின்போது நீதிமன்றத்தில் தீர்மானிக்கப்படுகின்ற அல்லது தீர்ப்பு வழங்கப்பட இருக்கும் விடயம் ஒன்று தொடர்பில் குறிப்பிட முடியாது. அவ்வாறு மேற்கொள்ளும் உறுப்பினர் ஒருவருக்கு தனது ஆசனத்தில் அமருமாறு பணிப்பதற்கு சபாநாயகர் அல்லது தலைமை தாங்கும் உறுப்பினருக்கு அதிகாரம் காணப்படுகின்றது. உரையாற்றும் அல்லது சபையில் இருக்கும் உறுப்பினர் ஒருவரால் தகாத வார்த்தை பிரயோகம் பயன்படுத்தப்படும் பொழுது சபாநாயகர் குறித்த உறுப்பினருக்கு எதிராக ஒழுங்கு விதிகளுக்கு அமைய பணிப்புரை வழங்குவார். அதன் போது குறித்த விடயத்தை பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்குவதற்கு சபாநாயகருக்கு அதிகாரம் காணப்படுகின்றது.

எந்தவொரு உறுப்பினரும் ஏனைய உறுப்பினர் ஒருவருக்கு முறையற்ற குற்றச்சாட்டை முன்வைக்கவோ அல்லது உறுப்பினர் ஒருவரின் தனிப்பட்ட விவகாரங்களை குறிப்பிடவோ கூடாது. உறுப்பினர் ஒருவர் பாராளுமன்றத்தின் முன்னிலையில் காணப்படும் விடயம் தொடர்பிலேயே உரையாற்ற வேண்டும். பாராளுமன்றத்தின் முன்னிலையில் கேள்வியொன்று முன்வைக்கப்பட்டாத போதிலும் பாராளுமன்றத்தின் விருப்பத்துடன் உறுப்பினர் ஒருவர் தனது தனிப்பட்ட விவகாரம் தொடர்பிலான விளக்கங்களை வழங்க முடியும். எனினும் அவ்வாறான விடயம் தொடர்பில் விவாதம் ஒன்று இடம் பெற முடியாது. அதே போன்று அந்த உரை குறித்த உறுப்பினரின் இருப்பை நியாயப்படுத்தும் வகையில் மட்டுப்படுத்தப்படும். சட்டமூலம் ஒன்று, கட்டளை ஒன்று அல்லது பிரேரணை நிறைவேற்றம் ஒன்றை முன்வைக்கும் உறுப்பினருக்கு விவாத இறுதியில் பதிலளிப்பதற்குரிய உரிமை காணப்படுகின்றது. ஒழுங்கு விதிகளை மீறும் எந்த ஒரு உறுப்பினருக்கும் உடனடியாக சபையின் ஒழுங்குகளை பேணுமாறு சபாநாயகரினால் பணிக்க முடியும். வாக்களிக்கும் சந்தர்ப்பம் தவிர்ந்த, உறுப்பினர்கள் சபா மண்டபத்துக்கு நுழையும் போதும் வெளியேறும் போதும் தலைமைக்கு மரியாதை செலுத்த வேண்டும்.

அமர்வின் நிறைவில் சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் சபா மண்டபத்தில் இருந்து வெளியேறும் போது உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் சபா மண்டபத்தில் இருந்து வெளியேறும் வரை எழுந்து நிற்க வேண்டும். நிலையிற் கட்டளைகளில் எவ்வாறு குறிப்பிடப்பட்டாலும் சபாநாயகரினால் உறுப்பினர்களுக்கு நியாயமான முறையில் நேரத்தை ஒதுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். உரையாற்றுவதற்காக யார் அழைக்கப்பட வேண்டும் என்பதை தீர்மானிப்பதில் ஆளுங்கட்சி மற்றும் எதிர்க்கட்சியின் அமைப்பாளர்கள் உரையாற்றுவதற்காக சபாநாயகரினால் அழைக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் பட்டியல் ஒன்றை வழங்குவதன் மூலம் சபாநாயகருக்கு உதவுகின்றனர்.

ஆதாரம்

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு, (2015 திருத்தப்பட்ட பதிப்பு) "இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் யாப்பு" அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், கொழும்பு

இலங்கை பாராளுமன்றம், (2018). "இலங்கை பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள்", இலங்கை பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே.

# பாராளுமன்ற முறைமை மற்றும் சம்பிரதாயம் தொடர்பான விமர்சன ரீதியான ஆய்வு

நீல் இத்தவெல
பிரதிச் செயலாளர் நாயகமும், பணியாட்தொகுதி பிரதானியும்
இலங்கை பாராளுமன்றம்
neil_p@parliament.lk

## வரலாற்றுப் பின்னணி

பிரித்தானியர்கள் இலங்கைக்கு வந்து 32 ஆண்டுகளுக்குப் பின்னரும், 1815 ஆம் ஆண்டு கண்டிய உடன்படிக்கை கையெழுத்திட்டு 12 ஆண்டுகளுக்குப் பிறகும் 1827 ஆம் ஆண்டில் டபிள்யு. ஜி.எம் கோல்புறூக் மற்றும் சார்ள்ஸ் ஹே கெமரூன் ஆகியோரைக் கொண்ட அரச ஆணைக்குழு ஒன்று இலங்கைக்கு வந்து இரண்டு அரச சபைகளை நிறுவவதற்குப் பரிந்துரைத்தது. அவற்றில் ஒன்று நிறைவேற்றுப் பேரவை மற்றையது சட்டவாக்கப் பேரவையாகும். 15 உறுப்பினர்களைக் கொண்ட சட்டவாக்கப் பேரவைக்கு ஆளுநர் தலைமைத்தாங்குவார். இதில் ஒன்பது உத்தியோகபூர்வ உறுப்பினர்களும் ஆளுநரால் பரிந்துரைக்கப்பட்ட மூன்று ஐரோப்பியர்கள் மற்றும் மூன்று சிங்களவர்கள், தமிழர்கள் மற்றும் பறங்கியர் ஆகியோர் அங்கம் வகித்தனர்.

1921 ஆம் ஆண்டு சட்டவாக்கப் பேரவையில் காணப்பட்ட 37 மொத்த அங்கத்தவர்களில் உத்தியோகப்பற்றுள்ள 14 பேரும், உத்தியோகப்பற்றற்ற 23 பேரும் அங்கம் வகித்தனர். 1924 ஆம் ஆண்டு சட்டவாக்கப் பேரவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 49 ஆக உயர்த்தப்பட்டதுடன், இதில் உத்தியோகப்பற்றற்ற 12 பேரும் உத்தியோகப்பற்றுள்ள 37 பேரும் காணப்பட்டனர். 1931 ஆம் ஆண்டு டொனமூர் ஆணைக்குழுவின் பரிந்துரை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் இலங்கைக்கு முதன்முதலாக சர்வஜன வாக்குரிமை கிடைத்தது. டொனமூர் அரசியலமைப்பின் கீழ் சட்டவாக்கப் பேரவை ராஜ்ய சபையாகப் பெயர் மாற்றப்பட்டதுடன், இது 61 உறுப்பினர்களைக் கொண்டதாக அமைந்தது.

1944 ஆம் ஆண்டு புதிய அரசியலமைப்பு மறுசீரமைப்புக்கான சோல்பரி கமிஷன் அமைக்கப்பட்டதுடன், சோல்பரி அரசியலமைப்பின் கீழ் 1946 ஆம் ஆண்டு வெஸ்மினிஸ்டர் முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. இதன் கீழ் செனட்சபை (மேல்சபை) மற்றும் பிரதிநிதிகள் சபை (கீழ் சபை) என இரு சபைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. செனட்சபை 30 உறுப்பினர்களையும், பிரதிநிதிகள் சபை 101 உறுப்பினர்களையும் கொண்டதாக அமைந்தன. இங்கு ஆளுநர் நாயகத்தினால் பெயரிடப்பட்ட பிரதமர் மற்றும் அமைச்சரவை கீழ் சபைக்குப் பொறுப்பாகவிருக்கும். 1948 பெப்ரவரி 04ஆம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது முதல் 1972 ஆம் ஆண்டு ஆண்டு வரை 1946 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட சோல்பரி அரசியலமைப்பே நடைமுறையிலிருந்தது.

1971 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 2ஆம் திகதி முதல் செனட் சபை கலைக்கப்பட்டு 1972 ஆம் ஆண்டு மே மாதம் 22 ஆம் திகதி புதிய குடியரசு அரசியலமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டமை விசேட அம்சமாகும். அதுவரையிருந்த ஆளுநர் நாயகம் என்ற பதவிக்குப் பதிலாக பெயரிடப்படும் ஜனாதிபதி அரச தலைவராக இருந்ததுடன், உண்மையில் அதிகாரம் கொண்ட பிரதமர் இருந்தார். இந்த அரசியலமைப்புக்கு அமைய தேசிய அரசுப் பேரவை ஒரு சபையாக மாற்றப்பட்டதுடன், இது மக்களால் தெரிவுசெய்யப்பட்ட 161 பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகவும் அமைந்தது.

1978 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி இரண்டாம் குடியரசு அரசியல் அமைப்பான இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டது. விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறைமை மற்றும் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை உறுதிப்படுத்தப்பட்டமை இதன் விசேட அம்சங்களாகும். இந்த அரசியலமைப்பு ஒரு சபையைக் கொண்டமைந்ததுடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 225ஆக அதிகரித்தது. இதில் 196 பேர் விகிதாசார முறையின் அடிப்படையிலும், 29 பேர் பொதுத் தேர்தலில் பெற்றுக்கொண்ட வாக்குகளின் விகிதாசாரத்துக்கு அமைய தேசியப் பட்டியல் மூலமும் தெரிவுசெய்யப்பட்டனர்.

1833 தொடக்கம் 1931 வரை சட்டவாக்கப் பேரவை

1931 தொடக்கம் 1947 வரை ராஜ்ய சபை

1947 தொடக்கம் 1972 வரை பிரதிநிதிகள் சபை

1971 இல் நிறைவேற்றுச்சபை கலைக்கப்பட்டது

1972 தொடக்கம் 1978 வரை தேசிய அரசுப் பேரவை

1978 தொடக்கம் இன்றுவரை பாராளுமன்றம்

### சம்பிரதாயம்

இலங்கை சுதந்திரமும் இறைமையும் தன்னாதிக்கமும் கொண்ட சனநாயக சோசலிச குடியரசாகும். இலங்கை குடியரசில் இறைமை மக்களுக்கு உரியதாகவும் பராதீனப்படுத்த முடியாததாகவும் இருக்கும். மக்களின் இறைமை மக்களது சட்டமாக்கல் தத்துவம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றத்தினாலும் மக்கள் தீர்ப்பொன்றின்போது மக்களாலும் பிரயோகிக்கப்படுவதாகும் என அரசியலமைப்பில் முதலாவது அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. குடியரசின் மிக உயர்ந்த நிறுவனமாகவும் மக்களின் இறையாண்மையைக் கடைப்பிடிக்கும் இடமாகவும் பாராளுமன்றம் கருதப்படுகின்றது. பாராளுமன்றத்தின் அதிகாரங்கள் அரசியலமைப்பினால் வழங்கப்படுகின்றன. பாராளுமன்றத்தின் அன்றாட செயற்பாடுகளுக்கு விதிகளின் தொகுப்பை உருவாக்கும் பிரத்தியேக அதிகாரமும் பாராளுமன்றத்திற்கு உண்டு. இந்த விதிகள் நிலையியற் கட்டளைகள் என்று அழைக்கப்படுகின்றன. ஆனால், அந்த அதிகாரங்களுக்கும் விதிகளுக்கும் புறம்பாக பல பாராளுமன்ற நடவடிக்கைகள் பாரம்பரியம், நடைமுறை மற்றும் முன்னோடி ஆகியவற்றின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டுள்ளன. 1833 முதல் ஆங்கிலேயர்கள் அவ்வப்போது அறிமுகப்படுத்திய அரசியலமைப்புகள் முதல் இன்றைய அரசியலமைப்பு வரை பிரித்தானிய பாராளுமன்றத்தை முன்னுதாரணமாகக் கொண்டே செயற்பட்டுள்ளது என்பது இரகசியமல்ல. அதன்படி, பிரித்தானியாவில் உள்ள பொதுச் சபையின் சம்பிரதாயங்கள் நமது பாராளுமன்றத்தின் இருப்பில் தாக்கம் செலுத்தியுள்ளன. அதன் கீழ்,

### 1. செங்கோல்

பாராளுமன்றத்தினதும், பாராளுமன்றத்தினூடாக சபாநாயகரினதும் அதிகாரச் சின்னமாகச் காணப்படும் செங்கோல் வெஸ்ட்மினிஸ்டர் முறைமையின்கீழ் எமக்கு கிடைத்த பரிசாகும். பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னமாகத் திகழும் தற்போது பயன்படுத்தப்படும் செங்கோல் 1949ஆம் ஆண்டு பிரித்தானியப் பொதுச்சபையினால் இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. சபை அமர்வுகளின் ஆரம்பத்தின்போது படைக்கல சேவிதரினால் செங்கோல் சபாமண்டபத்திற்கு எடுத்துவரப்படுவதுடன், சபை அமர்வுகள் நிறைவடைந்ததும் அதனை மீண்டும் எடுத்துச் செல்வது சம்பிரதாயமாகும். செங்கோலுடன் தொடர்புடைய பல பாராளுமன்ற

மரபுகள் உள்ளன. பாராளுமன்ற கூட்டத்தொடர் செங்கோல் இல்லாமல் முன்னெடுக்க முடியாமை, செங்கோல் சபாமண்டபத்திற்குள் கொண்டு வரப்படும் போது, அனைத்து உறுப்பினர்களும் தங்கள் இருக்கைகளிலிருந்து எழுந்து நின்று மரியாதை செலுத்துவது, செங்கோல் வைக்கப்படும் திசை, மற்றும் முழுப்பாராளுமன்ற குழுநிலையின் போது செங்கோல் கீழுள்ள படிக்கு இறக்கி வைக்கப்படுதல் போன்றன முக்கியம்வாய்ந்த சம்பிரதாயங்களாகும். எவ்வாறாயினும், அரசியலமைப்பிலோ அல்லது நிலையியற் கட்டளையிலேயோ செங்கோல் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

### 2. அக்கிராசனத்துக்கு மரியாதை செலுத்துதல்

படைக்கல சேவிதர் செங்கோலை ஏந்திவரும்போது அவர் பின்னால் சபாநாயகரும் பாராளுமன்ற செயலாளர்நாயக குழுவும் சபாமண்டபத்திற்குள் நுழையும்போதும், சபாநாயகர் அவரது இருக்கையில் அமர்ந்த பின்னர் செங்கோல் அதற்குரிய இடத்தில் வைக்கப்படும்வரையும் சபாமண்டபத்தில் உள்ள சகல உறுப்பினர்களும் எழுந்து நின்று மரியாதை செலுத்துவர். அதேபோன்று சபாமண்டபத்திற்குள் பிரவேசித்து வெளியேறும்போதும் அக்கிராசனத்துக்கு தலைவணங்கிவிட்டுச் செல்வதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயமாகும்.

### 3. உடை

சபாநாயகர் மற்றும் சபாமண்டபத்தில் உள்ள அதிகாரிகளுக்கு முறையான உடை வழங்கப்பட்டுள்ளதோடு அதை அவர்கள் அணிந்திருக்கவும் வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர்களும் தங்களுக்கு பரிந்துரைக்கப்பட்ட உடையில் சபையில் கலந்து கொள்ள வேண்டும். ஒரு பாராளுமன்ற உறுப்பினர் முறையான உடை அணியவில்லை என்றால் குறித்த உறுப்பினர் தொடர்பில் கவனத்துக்கு கொண்டுவருவதற்கும் அவரை சபாமண்டபத்திலிருந்து வெளியேற்றுவதற்கும் அக்கிராசனத்திலிருப்பவருக்கு அதிகாரம் உண்டு, பாராளுமன்றத்தைப் பார்வையிட கலரிக்கு வருபவர்கள் முறையான மற்றும் ஒழுங்கான உடை அணிந்திருக்க வேண்டும் என்பதுடன், சபாநாயகர் கலரியில் உள்ளவர்கள் சம்பிரதாயபூர்வமான அல்லது முறையான உடையை அணிந்திருக்க வேண்டும்.

### 4. சபாமண்டபத்தினுள் உறுப்பினர்களை அறிமுகப்படுத்தல்

சபாமண்டபத்தினுள் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போதும், விவாதம் நடக்கும்போதும் சம்பந்தப்பட்ட உறுப்பினர்கள் அவர்களின் தேர்தல் தொகுதியின் பெயரைக்கொண்டே அறிமுகப்படுத்தப்படுகிறார்கள். உதாரணமாக கௌரவ களனித் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் என்றாகும். எனினும், இந்தப் பாரம்பரியம் பாராளுமன்றத்தில் விகிதாசார பிரதிநிதித்துவத்தை அறிமுகப்படுத்தியதன் ஊடாக இல்லாமல்போனது. குறித்த பாரம்பரியம் பிரித்தானியா, அவுஸ்திரேலியா, கனடா, தென்னாப்பிரிக்கா மற்றும் இந்தியா போன்ற நாடுகளிலுள்ள பாராளுமன்றங்களில் தொடர்ந்தும் காணப்படுகின்றது. பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர்கள் மற்றும் சபாமண்டபத்தில் பதவியில் இருப்பவர்கள் குறித்த பதவியின் தலைப்பைக் குறித்து அறிமுகப்படுத்தப்படுவது ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு சம்பிரதாயமாகும். அதன்படி, 'கௌரவ பிரதமர்', 'கௌரவ எதிர்க்கட்சித் தலைவர்', 'கௌரவ சபை முதல்வர்' மற்றும் 'கௌரவ நிதியமைச்சர்' என பதவி பெயர் குறித்து அழைக்கப்படுவர்.

## 5. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசன ஒதுக்கீடு

சபையிலுள்ள உறுப்பினர்களுக்கு குறித்த ஆசனங்களை ஒதுக்குவது கௌரவ சபாநாயகரின் கடமையாகும். பாரம்பரியமாக ஆளும் கட்சி உறுப்பினர்கள் சபாநாயகரின் வலதுபுறத்திலும் எதிர்க்கட்சியினர் சபாநாயகருக்கு இடதுபுறத்திலும் அமர்ந்திருப்பர். மேலும் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேடமான ஆசனங்கள் சபாமண்டபத்தில் ஒதுக்கப்பட்டுள்ளன. அதேபோல அமைச்சர்கள், எதிர்க்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கு முறையே முன்வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டிருக்கும். ஏனைய ஆசனங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களின் சிரேஷ்டத்துவத்தின் அடிப்படையில் ஒதுக்கப்படும்.

## 6. கட்சி மாறுதல்

இதன் பொருள் ஆளும் கட்சி உறுப்பினர்கள் எதிர்க்கட்சிக்கு மாறுவது மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆளும் கட்சிக்கு மாறுவதாகும். அத்தகைய சந்தர்ப்பத்தில், சபாநாயகரின் சிறப்பு அனுமதியுடன் தற்போது அவருக்காக ஒதுக்கப்பட்ட இருக்கையிலிருந்து எழுந்து ஓர் அறிக்கையை வெளிப்படுத்திவிட்டு சபாமண்டபத்தினூடாக செல்ல வேண்டும் என்பது ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயமாகும்.

## 7. பாராளுமன்றத்திற்கு பொருத்தமில்லாத சொற்கள்

பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒரு விவாதத்தில் பங்கேற்கும்போது அல்லது சபையில் ஓர் அறிக்கையை வெளியிடும்போது, அது கண்ணியமான பொருத்தமான வார்த்தையினால் பிரயோகிக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்திற்கு பொருந்தாத வகையில் உரையாற்றுவாராக இருந்தால் முதலில் அந்த வார்த்தையை திரும்பப் பெறுமாறு, குறித்த பாராளுமன்ற உறுப்பினருக்கு அக்கிராசத்திலுள்ளவர் பணிப்பார். அவ்வாறு குறித்த உறுப்பினர் செய்ய மறுத்தால் அந்த உறுப்பினர் அக்கிராசனத்திற்கு அதிகாரம் இல்லாத/ கீழ்ப்படிதலின் அடிப்படையில் செயற்படவில்லை என அறிவிக்கப்பட்ட பின்னர் அவரை சபாமண்டபத்திலிருந்து வெளியேற்றி, சபைக்கு பொருந்தாத சொற்கள் அல்லது அறிக்கைகளை உத்தியோகபூர்வ பதிவிலிருந்து நீக்க உத்தரவிடலாம்.

## 8. ஒழுங்குப் பிரச்சினை

சபையில் எந்த நேரத்திலும், ஓர் உறுப்பினர் சபையின் விதிகள் மீறப்படுவதாக நம்பும்போது ஓர் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப முடியும். ஒழுங்குப் பிரச்சினை குறித்த கேள்வி எழும்போது, அதனை அக்கிராசனத்திலுள்ளவர் கட்டளையிட வேண்டும். ஆனால், ஒழுங்குப் பிரச்சினை பற்றிய கேள்வியை விவாதமாக மாற்ற முடியாது. எவ்வாறாயினும், சம்பிரதாயபூர்வமாக வாக்கழைப்பு மணி ஒலிக்கும் போது, ஜனாதிபதி பாராளுமன்றத்தில் அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையை வெளியிடும் போது, நிதி அமைச்சர் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை முன்வைக்கும்போது, புதிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தனது தொடக்க உரையை வழங்கும்போது எந்தவிதமான இடையூறும் ஏற்படுத்தக்கூடாது.

## 9. சிறப்புரிமை

வெஸ்ட்மினிஸ்டர் பாராளுமன்ற சம்பிரதாயத்தின் அடிப்படையில் பாராளுமன்ற அமைப்பில் மிக முக்கியமான சம்பிரதாயமாக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் சிறப்புரிமையை கருதலாம். நடைமுறைகளில் நோக்குகையில் சிறப்புரிமை தொடர்பான அனைத்து விதிமுறைகளும் மரபுகளும் கட்டமைக்கப்பட்டுள்ளன. ஆனால், தற்போதுள்ள பாராளுமன்ற அமைப்பின் சிறப்புரிமை தொடர்பாக 1953 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க பாராளுமன்ற அதிகாரங்கள் மற்றும் சிறப்புரிமை சட்டத்தின்படி நடைமுறைப்படுத்தப்படுகின்றது. பாராளுமன்ற உறுப்பினர்கள் தங்கள் கடமைகளை நேர்த்தியாகவும் கண்ணியமாகவும் சுதந்திரமாகவும் தங்களுக்கான முழு அதிகாரத்துடன் நிறைவேற்றவும் குறித்த வரப்பிரசாதங்கள் உதவுகின்றன. பாராளுமன்ற உறுப்பினர்கள் எவ்விதமான மிரட்டலுக்கோ அல்லது அச்சுறுத்தலுக்கோ அஞ்சாமல் தங்கள் கடமைகளைத் தொடர்ந்து மேற்கொள்ளவும் சிறப்புரிமைகள் பெரிதும் உதவுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினரின் பாராளுமன்ற சிறப்புரிமையின் கீழ், அவர் பாராளுமன்ற விவாதங்களின் போது தனக்கு வாக்களித்த மக்களின் பிரதிநிதியாக தனது சுதந்திரமான கருத்துக்களை வெளிப்படுத்த உரித்துடையவராகிறார்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் பாராளுமன்ற விவாதத்தின் போதோ அல்லது பாராளுமன்ற நடவடிக்கைகளின் போதோ தெரிவித்த கருத்துக்கள் அல்லது அறிக்கைகள் தொடர்பாக எந்தவொரு சிவில் அல்லது குற்றவியல் நடவடிக்கைகளையும் தொடர முடியாது. பாராளுமன்ற உறுப்பினரொருவர் பாராளுமன்றத்தில் ஒரு பொறுப்பான அறிக்கையை வெளியிடும்போது, அந்த விடயத்துக்கான உறுப்பினரிடத்தில் தகவல்களை எவ்வாறு திரட்டினீர்கள் என்பது தொடர்பில் கேள்வியெழுப்ப முடியாது.

பாராளுமன்ற உறுப்பினரொருவரின் அடுத்த முக்கியமான சிறப்புரிமையாக கைது செய்யப்படுவதிலிருந்து விடுபடுவதாகும். இதன்மூலம் அறியப்படுவதாவது பாராளுமன்ற அமர்வில் கலந்துகொண்டிருக்கும்போதோ அல்லது பாராளுமன்ற அமர்வுக்கு வருகை தரும்போதோ அல்லது பாராளுமன்ற அமர்வு நிறைவடைந்து செல்லும் காலப்பகுதியில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் சிவில் வழக்கு தொடர்பாக கைது செய்யப்படுவதிலிருந்து விடுபடுவதாகும். இருப்பினும், ஒரு குற்றவியல் வழக்கில் சந்தேக நபராக பாராளுமன்ற உறுப்பினரொருவர் இருக்கும்போது அவருக்கு கைது செய்யப்படுவதைத் தடுக்கும் சிறப்புரிமை இல்லை. இருப்பினும், ஒரு குற்றவியல் குற்றத்திற்காக பாராளுமன்ற உறுப்பினரை கைது செய்வதற்கு முன் சபாநாயகருக்கு அறிவிப்பது வழமையாகும்.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டால் அது தொடர்பில் சபை முதல்வரின் ஊடாக சபைக்கு அறிவிப்பது சம்பிரதாயமாகும். பாராளுமன்ற உறுப்பினர் தடுப்புக் காவலில் இருக்கும்போது பாராளுமன்ற அமர்வில் அல்லது பாராளுமன்றக் குழு நடவடிக்கைகளில் கலந்து கொள்ள அனுமதிப்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சம்பிரதாயமாகும்.

# பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் மற்றும் உறுப்பினர்களுக்கான நடத்தைக்கோவை தொடர்பான பகுப்பாய்வு

குஷானி ரோஹனதீர
உதவிச் செயலாளர் நாயகம் (நிர்வாகம்)
இலங்கை பாராளுமன்றம்
kushani_r@parliament.lk

### பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள்

பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகள் என்பது பாராளுமன்ற செயற்பாட்டை ஒழுக்கமாக, அர்த்தமுள்ள முறையில் நடத்துவதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை விதிகளின் தொகுப்பாகும். பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்பாக விளக்குகின்ற மிகமுக்கிய மூலாதாரமான நிலையியற் கட்டளைக்கு அரசியலமைப்பின் கீழ் அமைகின்ற விதிகளுக்கான அந்தஸ்து கிடைக்கின்றது.

இலங்கை சட்டவாக்கப் பேரவையில் செயற்பாடுகளை ஒழுங்குபடுத்துவதற்காக உருவாக்கப்பட்ட முதலாவது விதிமுறைகள், 1912 ஆம் ஆண்டில் சட்டவாக்கப் பேரவைக்கு உருவாக்கப்பட்டதாக சான்றுகள் உள்ளன. இச்சட்டக்கோவை ஏறத்தாழ முற்றுமுழுதும் பிரித்தானிய பாராளுமன்ற முறையை ஒத்ததாக காணப்படுவதை அவதானிக்க முடியும். 1947 இல் உருவாக்கப்பட்ட நிலையியற் கட்டளைகளும் அப்போது பிரித்தானிய பாராளுமன்றத்தில் நிலையியற் கட்டளைகளை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளன.

1979 இல் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய நிலையியற் கட்டளைகள் 1978 இன் இரண்டாவது குடியரசு யாப்பின் மாதிரிக்கு ஒத்ததாக மாற்றம் செய்யப்பட்டாலும் அதன் உள்ளடக்கத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்கனவே உள்ள நிலையியற் கட்டளை ஒத்ததாகவே காணப்படுகின்றதை அவதானிக்க முடியும். காலத்துக்கு காலம் அவ்வாறாயின், 1980, 1981, 1984, 1987 மற்றும் 1993 போன்ற வருடங்களில் திருத்தங்களுக்கு உள்ளான நிலையியற் கட்டளைகள் 1993 தொடக்கம் 25 வருடகாலப்போக்கில் செயற்பாட்டு முறைமை, புதிய குழு முறைமைகள் போன்றவற்றை உள்ளடக்கி 2018 ஏப்ரல் மாதம் 15 திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் புதிய நிலையியற் கட்டளைகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இலங்கை பாராளுமன்ற சம்பிரதாயத்துடன் இணைந்த புதிய தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட பயன்பாடுகளும், குழுக்கள் முறைமைக்கு புதிதாக சேர்த்துள்ள துறைசார் மேற்பார்வைக் குழு, அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள், அரசாங்க நிதி பற்றிய குழு, ஒருங்கிணைப்புக் குழு, பின்வரிசை பாராளுமன்ற உறுப்பினர்களின் குழு போன்ற புதிய குழுக்களும் பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகள், இலத்திரனியல் முறையிலான வாக்குகள் எண்ணும் முறைமை, பாராளுமன்ற மற்றும் குழுக்களில் இடம்பெறுகின்ற விடயங்களை ஊடகங்களுக்கு அனுமதித்தல், நேரடி பாராளுமன்ற ஒலி மற்றும் ஒளிபரப்பு போன்ற பல திருத்தங்கள் புதிய நிலையியற்கட்டளைகளில் சேர்க்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினராக செயற்படுகின்ற கௌரவ மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் நிலையியற் கட்டளைகள் தொடர்பான அறிவினை பெற்றுக்கொள்வது அவசியமாகும். பொதுத்தேர்தலின் பின்னர் ஆரம்பமாகும் முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தில் சபாநாயகர், பிரதி சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதி தவிசாளர் போன்ற பதவிகளுக்கான

உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு செய்யப்படுகின்ற முறையும், சத்தியப்பிரமாணம்/ உறுதியுரை செய்கின்ற முறை, பாராளுமன்றத்தில் ஆசன ஒதுக்கீடு முதல் பாராளுமன்ற செயற்பாடுகளில் கடைபிடிக்க வேண்டிய ஒழுங்குமுறைகள், விவாத விதிகள், பாராளுமன்றத்தில் முன்வைக்கின்ற கேள்விகள், மனுக்கள், சிறப்புரிமை கேள்விகளை முன்வைக்கக்கூடிய முறைகள், சட்டவாக்க செயற்பாடுகள், வரவு செலவுத்திட்ட விவாதங்கள், பிரதமரிடம் கேட்கப்படும் கேள்விகள், கூட்டநடப்பெண், பாராளுமன்ற செயற்பாடுகளின் ஒழுங்குமுறைகள் போன்ற சகல விதிமுறைகளும் ஒழுங்கமைக்கப்பட்டு உள்ளன.

அதேபோன்று பாராளுமன்ற செயற்பாடுகளை ஒழுங்கமைப்புச் செய்தல் தொடர்பாக சபாநாயகருக்கு இருக்கின்ற அதிகாரம் மற்றும் அபிப்பிராய அதிகாரம் தொடர்பாக சகல விடயங்களையும் உள்ளடக்கிய 143 நிலையியற் கட்டளைகள் காணப்படுகின்றன. 1978 இன் அரசியல் யாப்பின் 74ஆம் சரத்துக்கமைய சபாநாயகர், பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் போன்றவர்கள் வாக்களிப்பின் மூலம் தெரிவு செய்தல் மற்றும் பதவியிலிருந்து அகற்றுதல் தொடர்பாகவும் பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை விஸ்தரிப்பது தொடர்பாகவும், கூட்டங்களின் ஒழுக்கங்களை பேணுதல், பாராளுமன்ற பிரேரணை சம்மதத்துடன் மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய ஏற்பாடுகளை செய்யமுடியும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்று இவ்வாறு பிரேரணை சம்மதம் அங்கீகரிக்கப்படும் வரையில் ஏற்கனவே உள்ள நிலையியற் கட்டளைகள் செல்லுபடியாகும் என்பதும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரசியல் யாப்பின் 78(2) உப பிரிவின் கீழ் நிலையியற் கட்டளைகளில் ஒன்றையோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டளைகளையோ இடை நிறுத்துவதற்கு ஏற்பாடுகள் இருக்கின்றன. அதன்படி ஏதேனும் ஒரு புதிய செயற்பாடு ஒன்றை ஆராய்வதற்கோ அல்லது அது தொடர்பில் பொருத்தமான இறுதித் தீர்மானம் மேற்கொள்வதற்கோ பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்த முடியும் என்று 135ஆவது நிலையியற் கட்டளை குறிப்பிடுகிறது.

நிலையியற் கட்டளைகளில் திருத்தங்களை முன்வைப்பதற்கு உறுப்பினர்களுக்கு 134 வது நிலையியற்கட்டளையின் பிரகாரம் சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி ஒழுங்கு முறையான அறிவித்தல் வழங்கியதன் பின்னர் எழுத்து மூலமாக அதனை சபைக்கு முன்மொழிய வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்ட யோசனையை இன்னொரு உறுப்பினர் மூலம் வழிமொழிய வேண்டும். பின்னர் அது தொடர்பாக ஆராய்வதற்கு நிலையியற் கட்டளைகள் தொடர்பான குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படும். நிலையியற் கட்டளைகள் தொடர்பான குழு தமது சிபார்சுகளை பாராளுமன்றத்துக்கு முன்வக்கும் வரை இது தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

ஏதேனும் ஒரு பாராளுமன்ற கூட்டத்தொடருக்கு செல்லுபடியாகும் வகையில் சமர்ப்பிக்கப்படும் நிலையியற் கட்டளைகள் கூட்டத்தொடர் நிலையியற் கட்டளைகள் என கருத வேண்டும். மேலும் இவற்றில் அடங்கப்பட்டிருக்கும் விடயங்கள் அக்கூட்டத்தொடருக்கு மாத்திரமே பொருந்தும்.

பாராளுமன்றத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கூட்டங்கள் தொடர்பான விடயங்களை ஆராய்ந்து நிலையியற் கட்டளைகளில் அவசியமாக மேற்கொள்ள வேண்டிய திருத்தங்கள் சேகரித்தல், அங்கீகரித்தல், மற்றும் பாராளுமன்றத்தின் மூலம் தமக்கு ஒதுக்கப்படும் நிலையியற் கட்டளைகள் தொடர்பான சகல விடயங்களையும் கவனித்து அது தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நிலையியற் கட்டளை குழு என்ற பெயரில் குழு ஒன்று செயற்படுகின்றது. அதேவேளை, அதன் தவிசாளராக சபாநாயகர் பதவி வகிப்பார். பிரதி சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட மற்றும் தெரிவுக்குழுவினால் பெயர் குறிப்பிடப்படும் 06 உறுப்பினர்களை கொண்டதாக இக்குழு அமையும்.

பாராளுமன்ற உறுப்பினராக தாம் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற மக்களுக்காக செய்யவேண்டிய பணிகளை மேற்கொண்டு மக்களை பிரதிநிதித்துவபடுத்துவதற்காகவும், சட்ட அமைப்பு செயற்பாடுகளுக்கு பங்களிப்பு செய்து அரச நிதிப் பயன்பாடு தொடர்பாக மேற்பார்வை செய்தல் போன்ற கடமைகளை சிறப்பாக மேற்கொள்வதற்கு நிலையியற் கட்டளைகள் தொடர்பில் அறிந்து வைத்திருப்பது அத்தியாவசியமாகும். விசேடமாக பாராளுமன்றம் இடம்பெறுகின்ற திகதிகள், நேரம் குறிப்பிட்ட திகதிக்கு ஒதுக்கப்பட்டுள்ள விடயங்கள், ஆவணங்களை ஏற்றுக்கொள்ளல், பிரேரணை மற்றும் கேள்விகளை முன்வைக்க வேண்டிய ஒழுங்கு முறைகள், சட்டமூலம், அங்கீகரிக்கப்படுகின்ற முறை, ஒவ்வொரு குழுக்களும் செயற்படுகின்ற விதம் மற்றும் சபையில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன விடயங்கள், மற்றும் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படாத விடயங்கள், தொடர்பில் பின்பற்றவேண்டிய விதிமுறைகள், வரவு செலவுத் திட்ட சட்டமூலம் தொடர்பில் பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள், சபையில் ஒழுக்கமான முறையில் நடந்து கொள்ளல் மற்றும் சபை ஒழுக்கங்களை பின்பற்றுதல் தொடர்பில் உறுப்பினர்கள் கட்டாயமாக பின்பற்ற வேண்டிய சகல விதிமுறைகளையும் உள்ளடக்கிய பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் தொடர்பாக மக்கள் பிரதிநிதியாக செயற்படுகின்ற சகல சந்தர்ப்பங்களிலும் நினைவில் வைத்து அதன் பிரகாரம் செயற்படுவது சகல உறுப்பினர்களுக்கும் கட்டாயக் கடமையாகும்.

## பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தை விதிக்கோவை

பாராளுமன்ற உறுப்பினர் என்பவர் மக்களால் தெரிவு செய்து அனுப்பக்கூடிய அவர்களின் பிரதிநிதி என்பதுடன் பாராளுமன்றத்தில் செயற்படுகின்ற போது அவர்களினால் எப்போதும் பாராளுமன்ற சம்பிரதாயங்களுக்கு மதிப்பளித்து நிலையியற் கட்டளைகளை பின்பற்றி சபையினால் ஒழுக்கத்தைப் பேணி கௌரவமான முறையில் நடந்துகொள்வது அவசியமாகும். எப்படியாயினும் பல ஆண்டு காலத்திற்கு முன்னர் வெவ்வேறான சட்டவாக்க உறுப்பினர்களால் பாதுகாப்பாகப் பேணி முன்னெடுத்து வந்துள்ள இதன் குணாதிசயங்களை ஒரு சிலரின் துஷ்பிரயோக செயற்பாடுகளின் காரணமாக பொதுமக்களின் மத்தியில் பாராளுமன்றம் தொடர்பாக சிறந்ததொரு அபிப்பிராயம் குறைவடைந்து சமூகத்திலும் இது தற்போது பேசுபொருளாக உருவெடுத்துள்ளது. பாராளுமன்ற உறுப்பினர்கள் அவ்வாறான நடத்தைக்கோவையொன்றை அமைத்துக்கொள்ள வேண்டும் என்று 70 ஆம் நூற்றாண்டுக்கு முந்தைய காலத்திலிருந்தே ஊடகங்கள் மூலம் அடிக்கடி ஞாபகப்படுத்தும் தலைப்பாக அமைந்தது.

இதன் அவசியத்தை சரியாக இனங்கண்டு 1978 தேசிய அரசுப் பேரவையில் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் ஆளும் கட்சியின் உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவை ஒன்று முன்வைக்கப்பட்டது. 1990 இல் அப்போதைய ஜனாதிபதி கௌரவ ரணசிங்க பிரேமதாச அவர்களின் ஆலோசனைக்கு அமைய அமைச்சர்கள் மற்றும் உயர் பதவி நிலையிலுள்ளவர்கள் மூலம் பின்பற்றக்கூடிய நடத்தைமுறைத் தொகுதி ஒன்று அமைச்சரவை அதிகாரத்தின் கீழ் வெளியிடப்பட்டது. அதிலிருந்து 2018 வரை உறுப்பினர்களுக்கான ஒழுக்கவிதிக்கோவை ஒன்று இல்லாதிருந்ததுடன், 2016 வருடத்தில் புதிய நிலையியற் கட்டளையை தயாரித்ததற்கு சமாந்தரமாக உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவையும் தயாரிக்கப்பட்டு இது 2018.03.07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டு 2018.04.15 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டது.

விளக்கமான 13 பிரிவுகளைக் கொண்ட நடத்தை கோவையில் அதன் நோக்கம், விடயப்பரப்பு, உறுப்பினர்களின் கடமைகளும் பொறுப்புகளும், ஒழுக்கவியல் மற்றும் ஒழுக்க விதிகள், நிதிசார் விடயங்கள் தொடர்பான ஆவணம், பொதுச் சொத்துக்களை பயன்படுத்தல் மற்றும் தூண்டுதல், சமுகமளித்தல், நடத்தைகள் மற்றும் நற்பண்புகள் போன்ற ஒழுக்க முறைகளை பின்பற்றுதல்,

முறைப்பாடுகளை விசாரணை செய்தல் மற்றும் செயல்படுத்துதல், விசாரணைக்கான ஒழுங்கு முறைகள் மற்றும் தண்டனைகள், அறிக்கைகளை ஏற்றல் மற்றும் ஆராய்ந்து பார்த்தல், போன்ற ஒழுக்க முறை கோவை அமைப்பது மற்றும் புத்தூக்கப்படுத்துதல் தொடர்பான பல்வேறு விடயங்கள் இதில் விளக்கமாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன.

நடத்தை கோவைத் தொகுப்பைத் தயாரிக்கின்றபோது ஜனநாயக அரசியலில் செயற்படுத்தப்பட வேண்டிய சிறந்த தத்துவங்கள், பொதுநலவாய சபையில் அங்கம் வகிக்கின்ற பாராளுமன்றத்தில் செயற்படுத்தப்படுகின்ற முறைமைகள் போன்ற விடயங்களை விசேடமாக ஆராய்ந்து பார்த்து நீண்டநாள் பரிசீலனைக்குப் பின்னர் நிலையியற் கட்டளைகள் தொடர்பான பாராளுமன்ற குழுவின் மூலம் சிபாரிசு செய்யப்பட்டு பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

பாராளுமன்ற உறுப்பினராக செயற்படும்போது பாராளுமன்றத்தின் சம்பிரதாயம் மற்றும் பொதுமக்களுக்காகத் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்குத் தமக்கிருக்கும் அதிகாரத்தை பயன்படுத்தல் போன்ற விடயங்களை மேற்கொள்வதற்காக ஒத்துழைப்பை வழங்குவதே இந்த நடத்தை விதிக்கோவையின் நோக்கமாகும். சபைக்குத் தலைமை தாங்கும் உறுப்பினர், பிரதமர், சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சிகளின் பிரதம கொரடாக்கள் உட்பட உறுப்பினர்களினது பொதுவாழ்வின் சகல பகுதிகளும் நடத்தைக் கோவையுடன் தொடர்புபட்டுள்ளபோதும், தனிப்பட்ட வாழ்க்கைக்கு இதன்மூலம் எந்த வரையறையும் நிர்ணயிக்கப்படவில்லை.

சகல உறுப்பினர்களுக்கும் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பை பின்பற்றி மற்றும் பாதுகாத்து அரசின் ஒருமித்த தன்மை, புவியியல் அமைப்பை பாதுகாக்கும் பொறுப்புக் காணப்படுவதுடன், சகல உறுப்பினர்களும் அடிப்படை உரிமைகள் தொடர்பான சட்டங்களைப் பின்பற்றி நடக்க வேண்டும். அத்துடன், சகல சந்தர்ப்பங்களிலும் தமது வாக்காளர்களுக்காக செயற்படும்போது தமது அதிகாரங்களை வேறுவிதமாகப் பயன்படுத்தாதிருக்கவேண்டும். தமது அதிகாரத்தை பயன்படுத்தும்போது தேசிய நலன் மற்றும் விசேடமாக வாக்காளர்களுக்கு நன்மையை ஏற்படுத்தும் முகமாக செயற்பட வேண்டும். உறுப்பினர்கள், சகல சந்தர்ப்பங்களிலும் அவர்கள் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு ஏற்றவாறு நடந்துகொள்வதுடன், பொதுச் சொத்துக்களைப் பயன்படுத்தும்போது நேர்மையாகச் செயற்படவேண்டும். அனைத்து உறுப்பினர்களும் தீர்மானம் எடுக்கின்ற சகல சந்தர்ப்பங்களிலும் மக்களின் நலனை கருத்தில் கொள்ள வேண்டியதுடன், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள், நண்பர்கள் மற்றும் அவர்களுக்கு வேண்டப்பட்டவர்களுக்கு நிதி மற்றும் நிதிசார் பிரதிபலன்களை எதிர்பார்த்து அல்லது இலாப நோக்கங்களை எதிர்பார்த்து கடமைகளை மேற்கொள்ளக்கூடாது.

உறுப்பினர்கள் மூலம் பொதுமக்கள் தொடர்பாக எடுக்கின்ற தீர்மானங்கள் மற்றும் அவர்களுக்காக மேற்கொள்ளுகின்ற நடவடிக்கைகள் முடிந்தளவு பொதுமக்களுக்கு வெளிப்படையாக இருப்பதுடன், அவ்வாறான முடிவுகள் எடுக்கப்பட்டமைக்கான காரணங்களும் பகிரங்கப்படுத்தப்பட வேண்டியதாக இருக்க வேண்டும். சகல உறுப்பினர்களும் சக உறுப்பினர்களுடன் மற்றும் பாராளுமன்ற ஆளணியினருடன் மற்றும் பொதுமக்களுடன் கௌரவமான முறையிலும், பாராளுமன்ற சம்பிரதாயங்கள் மற்றும் கௌரவத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலும் நடந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

நன்னடத்தைக் கோவை நிபந்தனையை மீறுதல் அல்லது உறுப்பினர் ஒருவரின் ஒழுங்கீனமான செயல் தொடர்பில் ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழுவுக்கு எவரேனும் ஓர் உறுப்பினரால் அல்லது நபரொருவரால் ஏதேனும் முறைப்பாடொன்றைச் செய்ய முடியும்.

# பிரதிநிதித்துவ ஜனநாயகம் மற்றும் பாராளுமன்ற குழு முறைமை

டிக்கிரி கே. ஜயதிலக
உதவிச் செயலாளர் நாயகம் (சட்டவாக்க சேவைகள்)
tikiri_j@parliament.lk

## பிரதிநிதித்துவ ஜனநாயகம்

எந்தவொரு நாட்டிலுமுள்ள மக்கள் தமது இறையாண்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டரீதியாகத் தெரிவுசெய்யும் பிரதிநிதிகளின் ஊடாக முன்னெடுக்கப்படும் ஜனநாயக நிர்வாகக் கட்டமைப்பே பிரதிநிதித்துவ ஜனநாயகம் எனப்படும். பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமை பல நாடுகளில் வெவ்வேறு விதமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதுவே இன்று உலகில் நீண்டகாலமாகக் காணப்படும் திறமையான அரசாங்கக் கட்டமைப்பாகும். பிரதிநிதித்துவ ஜனநாயகம் சமூக சமரசம் என்ற கருத்தின் அடிப்படையில் செயற்படுகிறது. இதனால் ஆட்சியாளர்களுக்கும் மக்களுக்கும் இடையில் இணக்கப்பாடும் சமூக ஒப்பந்தமொன்றும் ஏற்படுவதாக பெரும்பாலும் நிபுணர்கள் மத்தியில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

இலங்கையில் நடைமுறையிலுள்ள பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கு நீண்ட வரலாறு உள்ளது. காலனித்துவத்தின்கீழ் காணப்பட்ட நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த பின்னர் காலனித்துவ யுகத்தில் இடம்பெற்ற அரசியல், பொருளாதார சமூக மற்றும் கலாசார வேறுபாடுகள் காரணமாக சமூக கட்டமைப்புக்குள் ஏற்பட்ட பெரும் மாற்றங்களால் எழுந்த பல்வேறுபட்ட சவால்கள் மற்றும் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கான சட்டப்பின்புலம் மற்றும் கொள்கைகள் என்பவற்றை உருவாக்குவதற்கு பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினால் முடிந்தது. பிரதிநிதித்துவ ஜனநாயகம் இந்த நாட்டுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அமைக்கப்பட்ட பாராளுமன்ற சட்டங்களை நோக்கும் போது இவ்விடயம் தெளிவாகிறது. இதனூடாக நாட்டுக்குள் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்பட்டதுடன், நாட்டையும் நாட்டு மக்களையும் சமூக மற்றும் அறிவியல் ரீதியாக உயர்ந்த மட்டத்துக்குக் கொண்டு செல்வதற்கான அடித்தளம் உருவானது. பிற்காலத்தில் இந்நாட்டின் சமூகத்துக்குள் எழுந்த கிளர்ச்சிகள், நீண்டகால சிவில் யுத்தம் மற்றும் இயற்கை அனர்த்தங்கள் ஆகிய சவால்களுக்கு ஓர் அரசு என்ற வகையில் வலுவாக முகங்கொடுத்து தீர்மானங்களை எடுக்க இந்த முறை அரசுக்கு வாய்ப்பாக அமைந்தது.

உதாரணமாக 16வது நூற்றாண்டில் காலனித்துவ ஆட்சியின் கீழ் தேசிய கல்விக் கட்டமைப்பை கையகப்படுத்திக்கொண்டு போர்த்துகீசர்கள், டச்சுக்கள் மற்றும் ஆங்கிலேயர்களால் அவர்களின் கல்விமுறைமைகள் உட்புகுத்தப்பட்டன. 1931இல் இலங்கையின் எழுத்தறிவு இயலுமை 47.9% ஆக காணப்பட்டது. விசேடமாக 1943-44 வரையான காலப்பகுதியில் கிராமப்பகுதிகளில் தேர்தல் பிரிவொன்றுக்கு ஒரு பாடசாலை என்ற வகையில் 50 மகா வித்தியாலயங்களை நிர்மாணிக்கும் வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டது. 1940 ஏப்ரல் மாதம் கல்வியமைச்சர் கௌரவ சி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கராவின் தலைமையில் கல்வி தொடர்பான சகல துறைகளையையும் ஆராய்ந்து பரிந்துரைகளை முன்வைப்பதற்கான விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், பாலர் பாடசாலை முதல் பல்கலைக்கழகம் வரையிலுள்ள சகல மட்டத்திலும் கல்வி இலவசமாக வழங்கப்பட வேண்டுமென்பது அங்குழுவின் தீர்மானமாக இருந்தது.

இதன்படி இலங்கையில் இலவசக் கல்வியை பெற்றுக்கொடுப்பதற்கான அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டதுடன், அது 1945 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கும் வந்தது. இலங்கையில் தற்போதைய கல்வியறிவு வீதம் 91.2% வரை உயர்வடைந்திருப்பது சாதகமான அம்சமாகும்.

அத்துடன் காலனித்துவ ஆட்சியின்கீழ் காணப்பட்ட பல பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டு காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவை உருவாக்குவதற்காக, நபர்களால் சொந்தமாக வைத்துக்கொள்ளக்கூடிய விவசாய நிலங்களின் அதிகபட்ச அளவை தீர்மானிப்பதற்காகவும், அதற்கு அதிகமாக நிலங்களை வைத்திருப்போர், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தாக்குதல் அல்லது குறிப்பிட்டதொரு சட்டத்துக்கு அமைவான வரியுடன் முன்னைய சொந்தக்காரருக்கே உரித்துடையதாக்குதல் தொடர்பாகவும் 1972ஆம் ஆண்டு 1ஆம் இலக்க காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு சட்டம் உருவாக்கப்பட்டது. இதுவும் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தினூடாக உருவாகிய சாதகமான அம்சமாகும்.

பிரதிநிதித்துவ ஜனநாயகத்தில் காணப்படும் தனித்துவமான அம்சம் என்னவெனில், உயர்ந்த மட்டத்தில் உள்ள பல நாடுகள் அபிவிருத்தி அடைந்த அல்லது அபிவிருத்தி இலக்குகளை நோக்கி சாதகமாகப் பயணிக்கும் நாடுகளாக உள்ளன. அதேபோல் அந்த நாடுகளிலுள்ள மக்களின் மகிழ்ச்சியான வாழ்க்கை மட்டம் மிகவுயர்ந்த அளவில் காணப்படுகின்றது. இங்கு உள்ளகக் கலவரங்கள், பஞ்சம் என்பன குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றன.

தற்போது இலங்கையில் நடைமுறையிலிருக்கும் பிரதிநிதித்துவ ஜனநாயக முறைமையை நோக்கும்போது நம்மால் உணர்ந்துகொள்ளக்கூடிய விசேட அம்சம் என்னவெனில், நிறைவேற்று அதிகாரத்தின் பிரதானியான ஜனாதிபதி நாட்டின் சகல வாக்காளர்களினதும் நேரடியான வாக்குகளால் தெரிவுசெய்யப்படுவதாகும். பாராளுமன்றம், பொது தேர்தலில் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளால் ஆனது என்பதோடு பிரதமர் மற்றும் அமைச்சரவை பாராளுமன்ற உறுப்பினர்களிலிருந்து தெரிவுசெய்யப்படுவர்.

## பாராளுமன்ற குழு முறைமை

இந்த கட்டுரையில் அவதானம் செலுத்தப்படும் பாராளுமன்றக் குழு முறைமை தொடர்பாக அரசியலமைப்பில் எதுவும் குறிப்பிடப்படாவிட்டாலும் 74(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்துக்கு நிலையியற் கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் அதிகாரத்தினூடாக குழுக்களை அமைப்பதற்கான நிலையியற் கட்டளைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இலங்கை பாராளுமன்றத்தில் மிகவும் சிக்கலான மற்றும் திறமையான குழுமுறையொன்று தற்பொழுது காணப்படுகிறது. இந்தக் குழுக்கள் ஆறு வகைப்படும் அவையாவன,

1. பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு (நிலையியற் கட்டளை 93-99)
2. விசேட தெரிவுக்குழு (நிலையியற் கட்டளை 100-110)
3. துறைசார் மேற்பார்வை குழு (நிலையியற் கட்டளை 111)
4. அமைச்சுசார் ஆலோசனைக்குழ (நிலையியற் கட்டளை 112)
5. சட்டவாக்க நிலையியற்குழு (நிலையியற் கட்டளை 113)
6. சிறப்பு நோக்கங்களுக்கான குழு (நிலையியற் கட்டளை 114)

இப்பிரிவில் தெரிவுக்குழு உட்பட 13 குழுக்கள் உள்ளடங்குகின்றன.

அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அரசியலமைப்பினூடாகவும் நிலையியற் கட்டளையினூடாகவும் கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரதானமாக நான்கு வகைப்படும்.

1. பிரதிநித்துவம் (அரசியலமைப்பு 62)
2. சட்டவாக்க அதிகாரம் (அரசியலமைப்பு 75)
3. அரச நிதிக் கட்டுப்பாடு (அரசியலமைப்பு 148)
4. மேற்பார்வை (நிலையியற் கட்டளையின் பிரகாரம்)

பிரதிநிதித்துவ ஜனநாயகத்துக்கமைய பராளுமன்றத்தில் அதிக ஆசனங்களைப் பெற்றுக்கொண்ட கட்சிக்கு ஆட்சி அதிகாரம் கிடைப்பதுடன், அரசாட்சி பொறுப்பும் சுமத்தப்படும். இங்கு அரசாங்கத்தின் அலுவல்களுக்கு பாராளுமன்ற செயன்முறை முக்கிய இடம் வகிக்கிறது. சட்டவாக்க செயற்பாடுகளின் பெருஞ்சுமையை அரசாங்கமே சுமக்கிறது. பாராளுமன்ற குழுக்களை நிறுவுவதன் முக்கிய நோக்கமானது, பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் சட்டமூலங்கள், வரையறுப்புகள், உயர் பதவிகளுக்கான நியமனங்கள், பாராளுமன்றத்தின் நிர்வாகம், மக்கள் பிரச்சினை உள்ளிட்ட அனைத்தையும் பாராளுமன்ற சபா மண்டபத்துக்குள் பேசுவதற்கான காலம் போதாமையாகும். அதன்படி பாராளுமன்றத்தின் சார்பில் குறித்ததொரு விடயத்தை விரிவாகவும், ஆழமாகவும் ஆராய்ந்து அதற்கான சில பரிந்துரைகளை பாராளுமன்றத்துக்கு பெற்றுக்கொடுப்பது குழுக்களின் பணியாகிறது.

குழுக்கள் கட்டமைக்கப்படும் போது பாராளுமன்ற பிரநிதித்துவத்தின் அடிப்படையில் அரசியல் கட்சிகளின் உள்ளடக்கங்கள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன், முடிந்தவரை சகல அரசியல் கட்சிகளினதும் பிரதிநிதிகளுக்கும் குழுக்களில் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கையெடுக்கப்படும். பாராளுமன்ற சபா மண்டபத்துக்குள் இடம்பெறுவது போலன்றி, குழுக்களின் முன்னிலையில் காணப்படும் விடயம் தொடர்பாக நீண்ட நேரம் பேசுவதற்கான வாய்ப்பு உறுப்பினர் ஒருவருக்கு கிடைப்பதுடன், பாராளுமன்றம் கூடுகின்ற தினங்களைப் போன்று அமர்வுகள் இல்லாத தினங்களிலும், பாராளுமன்றத்துக்கு வெளியிலும் நேரம் பற்றிய வரையறைகளுக்கு மட்டுப்படாமல் குழு அமர்வுகள் நடத்தப்பபடும்.

இலங்கையில் நடைமுறையிலுள்ள குழுக்களின் செயற்பாடுகள், சம்பிரதாயமான பாராளுமன்றத்தில் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளாகும்.

1. நிறைவேற்றுச் செயற்பாடுகள்
2. மேற்பார்வை
3. விசாரணை
4. உயர் பதவிகள் தொடர்பாக பரிந்துரை செய்தல்

போன்ற செயற்பாடுகளுக்கு அப்பாலானவையாகும். மக்கள் வாழ்க்கைக்கு பாதகமாக அமைந்துள்ள பிரச்சினைகளுக்கான தீர்வுகளை அமைச்சர் ஊடாக பெற்றுக்கொடுத்தல், பொதுமக்களின் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக பரிந்துரைகளை முன்மொழிதல் போன்றவை குழுக்களால் மேற்கொள்ளப்படும் சிறப்பான செயற்பாடுகளாகும்.

அரசாங்கத்தின் சட்டவாக்க, கொள்கை உருவாக்க செயற்பாடுகளில் பங்கெடுக்கும் இயலுமை எதிர்க்கட்சிகளுக்கும் பெது மக்களுக்கும் இல்லையென்பதே பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் சம்பிரதாயபூர்வமான நிலைப்பாடாக இருந்தது.

இவ்வாறான நிலையில் பொதுமக்களின் திருப்தியின்மை மற்றும் பாராளுமன்ற முறைமை தொடர்பில் மக்கள் விரக்தியடைந்திருக்கும் நிலைமை உலகளாவிய ரீதியில் அதிகரித்தது. பல்வேறு சந்தர்ப்பங்களில் மக்களை பாராளுமன்ற செயற்பாடுகளில் பங்குபெறச் செய்வதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டபோதும் பாராளுமன்ற குழு முறைமையே இதில் வெற்றிபெற்ற முறையாக அமைந்தது.

பிரதிநிதித்துவ ஜனநாயக முறைக்குள் பொதுமக்கள், அதிகாரிகளுக்கு ஒரே சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற சபா மண்டப செயற்பாடுகளில் பங்கெடுக்கும் சந்தர்ப்பம் கிடைக்காது. அவ்வாறு இருந்தாலும், குழு முறையில் அதிகாரிகள் போன்றே பொதுமக்களும் பாராளுமன்ற செயற்பாடுகளில் பங்குபற்ற முடியும். குழு முறைமையை நடைமுறைப்படுத்தும்போது அங்கு பாராளுமன்ற உறுப்பினருக்கான ஆசனம், தகவல்களை கலந்துரையாடல், விசாரணை செய்தல் மற்றும் இறுதியில் அது தொடர்பாக அறிக்கையொன்றை பாராளுமன்றத்துக்கு சமர்பித்தல் உள்ளிட்ட சகல செயற்பாடுகளும் கட்சி அரசியல் சாராமல் அரசியல் சாராத செயற்பாடுகளாக முன்னெடுக்கப்படும். இதன்போது குழுவினால் மேற்கொள்ளப்படும் தீர்மானங்களை ஏகமனதாக ஏற்றுக்கொள்வதற்கான சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றமையும் சிறப்பம்சமாகும்.

சட்டவாக்கம், மேற்பார்வை மற்றும் நிதிக் கட்டுப்பாடு போன்ற செயற்பாடுகளின் போது அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக நீண்ட விசாரணைகளை முன்னெடுக்கவும், கலந்தாலோசிக்கவும், அது தொடர்பான நிலைப்பாடுகளை கூறவும் குழு உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் கிடைக்கும். அவர், பல்லின, பல் மத, பல் கலாசாரங்களைக் கொண்ட இலங்கை போன்ற நாடுகளுக்கு மக்களின் வேறுப்பட்ட எதிர்பார்ப்புக்களை பிரதிநிதித்துவப்படுத்தவும், தகவல்களை முன்வைக்கவும் உறுப்பினர்களுக்கு இதன்போது சந்தர்ப்பம் கிட்டும். சட்டவாக்க செயற்பாடுகளின் போது தற்போதுள்ள சட்டங்களில் காணப்படும் குறைபாடுகளைக் கண்டறிந்து, புதிய சட்டத்திருத்தங்களை செய்வதற்கான வாய்ப்புகளும் இதனூடாக கிடைக்கப்பெறும்.

முன்னர் சட்டவாக்க செயற்பாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்களும் அதிகாரிகளும் மாத்திரமே பங்குபற்றியதுடன், தற்போது சட்டவாக்க முறைமை மிகக் கடினமான செயற்பாடாக மாறியிருப்பதால் தொடர்புடைய சகல தரப்புக்கள், நிபுணர்கள், தாக்கம் செலுத்தும் அமைப்புகள்,

சிவில் அமைப்புகளின் பிரநிதிகள் ஆகிய பலரும் குழுவின் முன்பாக அழைக்கப்படுகின்றனர். அதன்படி பாராளுமன்ற முறைமைக்குள் இருக்கவேண்டிய 03 அடிப்படைச் சித்தாந்தங்களான பல்வகைத் தன்மையை பாதுகாத்தல், சமநிலைத்தன்மை, சகலரையும் உள்வாங்குதல் போன்றவை சரியாக முன்னெடுக்கப்படுகின்றன.

நிறைவேற்று அதிகாரத்தின் கீழ் கொண்டுவரப்படும் சட்டமூலங்கள் தொடர்பாக எதிர்க்கட்சிகளுக்கும், பின்வரிசை உறுப்பினர்களுக்கும் தெளிவுகளைப் பெற்றுக்கொள்வதற்கான முன்மொழிவுகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் ஏற்படுகின்றமை இதில் முக்கிய அம்சமாகும். சட்டமூலத்தை கொண்டுவருவதற்குரிய கொள்கைகள், அவை சரியான முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்வதற்கும், அதற்குரிய மக்கள் பிரச்சினை குறித்த கருத்துகளை முன்வைக்கவும், கலந்தாலோசிப்பதற்கும் சந்தர்ப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

அதேபோல் பாராளுமன்ற முறைமைக்குள்ளும், அரசியலுக்குள்ளும் நேரடியாக தொடர்புபட தயக்கம் காட்டும் அறிஞர்கள், தொழிலாளர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் ஆகியோரையும் இந்த முறைமையின் கீழ் பாராளுமன்ற முறைக்குள் உள்வாங்கிக்கொள்ள முடியும். மக்கள் பிரதிநிதிகளுக்கு மாத்திரமின்றி கொள்கை வகுப்பாளர்களுக்கும் சில பிரச்சினைகள் தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்கத் தேவையான தகவல்கள், ஆவணங்கள் என்பவற்றைப் பெற்றுக்கொள்ளகூடியதாகவும் இந்த முறை வடிவமைக்கப்பட்டுள்ளது.

பிரதிநிதித்துவ ஜனநாயகம் நீண்ட காலமாகவும், சாதகமான முறையாகவும் பின்பற்றப்படும் பிரித்தானியா, கனடா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் மிகவும் செயற்திறனுடனும், சாத்தியமானதுமான பாராளுமன்ற முறைமையை காண முடியும். அதனால் நாட்டின் அபிவிருத்தி, பொருளாதாரம், மனித அபிவிருத்தி, அறிவியல் தொழில்நுட்ப முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கான அடித்தளத்தை இடுதல் உள்ளிட்ட பல செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதுடன், துரிதமாக மாற்றமடையும் பொருளாதார, சமூக, அரசியல், சுற்றுச்சூழல் சவால்களுக்கு முகம்கொடுக்கவும், அவற்றுக்கான சரியான தீர்வுகளை பெற்றுக்கொள்ளவும், குழு முறைமை வழங்கும் ஒத்துழைப்பு காரணமாக முழுமையாக பாராளுமன்ற முறைமை தொடர்பாக மக்களுக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

# பாராளுமன்ற அமர்வுதினமொன்றில் உறுப்பினர் ஒருவர் செயற்பாட்டு ரீதியாக பங்களிப்பு செய்யக்கூடிய சட்டவாக்க செயற்பாடுகள் தொடர்பான விளக்கம்

எச்.ஈ. ஜனகாந்த சில்வா
பிரிவுத் தலைவர் மற்றும் உதவி பணிப்பாளர் (நிர்வாகம்),
சபை ஆவண அலுவலகம், சட்டவாக்க சேவைகள் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
janakantha_s@parliament.lk

### அரசியலமைப்பின் 4 (அ) மற்றும் 62 ஆம் உறுப்புரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய

- மக்களின் இறையாண்மையை செயற்படுத்துவதும், அனுபவிப்பதும் மக்களின் சட்டவாக்க அதிகாரம் மக்களால் தெரிவுசெய்யப்படும் 225 உறுப்பினர்ககளை கொண்ட பாராளுமன்றத்தினால் செயற்படுத்தப்படுவதாக அரசியலமைப்பு ரீதியாக தெளிவானது.

### அரசியலமைப்பின் 75 ஆம் உறுப்பிரையில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளுக்கு அமைய

- சட்டமியற்றும் அதிகாரம் சட்டமன்றம் அல்லது பாராளுமன்றத்திடம் காணப்படுவதால் அதற்கமைய, நாட்டுக்கு தேவையான சட்டங்களை இயற்றுவதில் நேரடியாக ஈடுபடுவதற்கும்

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 22 மற்றும் 50 க்கு அமைய

- அரசாங்க நிதியை செலவிடும் விசேட நிறுவனங்கள், பல்வேறு அமைச்சுக்கள், திணைக்களங்களின் செயற்பாட்டறிக்கை,
- பாராளுமன்ற சட்டங்களினால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நிறுவனங்களின் வருடாந்த அறிக்கைகள்,
- பல்வேறு சட்டங்கள் மூலம் அமைச்சர்கள் தயாரிக்கும் துணைச்சட்டங்கள்,
- பல்வேறு சட்டமூலங்கள்,
- அரசாங்கத்தினால் பாராளுமன்றத்துக்கு பல்வேறு பத்திரங்களை முன்வைத்தலின் கீழ் அவற்றை முன்வைத்து அவை பாராளுமன்ற நிலையியற் கட்டளை 111(4) க்கு அமைய குறித்த துறைசார் மேற்பார்வை குழுக்களுக்கு முன்வைத்து பரிசீலனை செய்யும் போது அவை தொடர்பில் குறிப்பிட்ட குழுக்களில் பங்களிப்புச் செய்வதற்கும்;
- துணைச்சட்டங்கள், சட்டமூலங்கள் போன்றவற்றை பாராளுமன்றத்தில் விவாதிக்கும் போதும், பல்வேறு குழுக்களில் பொருத்தமான வகையில் பரிசோதனைகள், விசாரணைகள் மற்றும் மேற்பார்வை செய்யப்பட்ட விடயங்கள் தொடர்பில் சபா மண்டபத்தில் செயற்பாட்டு ரீதியாகவும் நேர்மறையாகவும் விவாதங்களில் பங்குபற்றவும்;

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30 க்கு அமைய

- ஏதாவதொரு அரச நிறுவனம் அல்லது ஏதாவதொரு அரச உத்தியோகத்தர் மூலம் சிவில் சமூக பிரஜை ஒருவருக்கு ஏதாவது அநீதி ஏற்பட்டிருப்பின், அது தொடர்பில் பொது மனுவொன்றை மக்கள் பிரதிநிதி என்ற வகையில் சபாநாயகரை அழைத்து

பாராளுமன்ற உறுப்பினரால் பாராளுமன்றத்துக்கு முன்வைத்து, பாராளுமன்ற நிலையியற் கட்டளை 122 க்கு அமைய பொது மனுக்கள் பற்றிய குழுவில் அது தொடர்பான முறையான விசாரணையின் பின்னர் அவ்வாறு அநீதியிழைக்கப்பட்ட தரப்பினருக்கு நீதியை நிலைநாட்டவும்;

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 31 முதல் 71 வரையான கட்டளைகளுக்கு அமைய

- பொது விடயங்கள் தொடர்பில் பிரதமர் அல்லது ஜனாதிபதியினால் நியமிக்கப்படும் ஒரு விடயம் தொடர்பில் அமைச்சு ரீதியான பொறுப்புவாய்ந்த அமைச்சர் ஒருவரிடம் வெளிநாட்டு தொடர்புகள் உள்ளிட்ட முழு அரச கட்டமைப்பினுள் அதிகாரத்துவம் காரணமாக பாதிக்கப்பட்ட தனிநபரொருவர் அல்லது குழுவினருடன் தொடர்புபட்ட திட்டவட்டமான ஒரு விடயம் தொடர்பில் தகவல்களை பெற்றுக்கொள்வதற்கு அல்லது ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கு அரசுக்கு அழுத்தம் செய்வது அல்லது வாய்மொழிமூல விடைக்கான வினாவொன்றை பாராளுமன்றத்தில் கேட்பதற்கும்;
- பிரதமர் அல்லது குறித்த விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர் மூலம் அவ்வாறான வினாவொன்று தொடர்பில் சபையில் விடையளித்த பின்னர் அதன் விடையை தெளிவுபடுத்திக்கொள்ள வினாவை தொடுத்த உறுப்பினருக்கோ அல்லது வேறு உறுப்பினர்களுக்கோ இரண்டு துணைக் கேள்விகளை கேட்பதற்கும்;

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 38 க்கு அமைய

- தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம் உள்ளிட்ட அரசின் கொள்கைகளுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு மட்டுப்பட்டு ஒவ்வொரு மாதத்திலும் முதல் அமர்வு வாரத்தில் புதன்கிழமை வாய்மொழிமூல விடைக்கான வினாக்களுக்காக ஒதுக்கப்பட்ட நேரத்தில் 30 நிமிடங்கள் அரசாங்க மற்றும் எதிர்க்கட்சியின் பின்வரிசை ஆசன உறுப்பினர்களுக்கு இரண்டு வினாக்கள் வீதம் நான்கு வினாக்கள் பிரதமரிடம் கேட்பதற்கும்;
- பிரதமரினால் கேள்வியொன்றுக்கு விடையளித்ததன் பின்னர் வினாவை தொடுத்த உறுப்பினரால் இரண்டு துணைக்கேள்விகளை கேட்க முடியும் என்பதுடன் வினாவை தொடுத்த உறுப்பினரின் அனுமதியுடன் வேறு உறுப்பினர்களுக்கு அந்த துணைக்கேள்விகள் ஒன்றோ அல்லது அதற்கு மேலதிகமான கேள்விகள் கேட்பதற்கும்;

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 24 க்கு அமைய

- பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் மாதத்தின் முதலாவது வெள்ளிக்கிழமை தனியார் உறுப்பினர் பிரேரணைகள் மூலம் கொள்கை வகுப்புத் தொடர்பில் அரசுக்கு நேர்மறையான விடயங்களை முன்வைத்து அது தொடர்பில் விவாதம் செய்து அது தொடர்பில் செயற்பாட்டு ரீதியான பங்களிப்பை வழங்குவதற்கும்;

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 20 க்கு அமைய

- அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற அமர்வு இடம்பெறும் ஒவ்வொரு தினத்திலும் ஒரு மணித்தியாலம் ஒத்திவைப்பு வேளையின் போதான பிரேரணை ஒன்றை முன்வைப்பதன் மூலம் பொதுமக்களுக்கு பொறுப்புக் கூறுவதற்கும்;

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 க்கு அமைய**

- அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டங்களில் குறித்த தேர்தல் தொகுதி அதிகார வரம்புக்குள் அரசினால் மேற்கொள்ள எதிர்பார்க்கும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கண்டறிதல் அல்லது நிறைவு செய்துள்ள அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் பின்தொடர்வதற்கான பிரேரணை முன்வைத்தல் அல்லது குறித்த அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களில் கலந்துகொண்டு அவை தொடர்பில் கேட்டறிவதற்கும்;

**அரசியலமைப்பின் 148 வது உறுப்புரைக்கு அமைய**

- அரச நிதி தொடர்பில் முழுமையான கட்டுப்பாடு பாராளுமன்றத்திடம் காணப்படுவதால் அரச நிதியை செலவிடும் பல்வேறு நிறுவனங்கள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்கள் பல்வேறு தலைப்புகளின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து பாராளுமன்ற நிலையியற் கட்டளை 75 க்கு அமைய ஒதுக்கீட்டு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதன் மூலம் அரசாங்க நிதி முகாமைத்துவத்தில் பங்களிப்பு செய்வதற்கும்;

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 119 க்கு அமைய**

- பொதுமக்களின் செலவுகள் தொடர்பில் பாராளுமன்றத்தினால் வழங்கும் நிதி ஒதுக்கீடு செய்யும் கணக்குகள், அரசாங்க கணக்குக் குழுவினால் பொருத்தம் என கருதும் பாராளுமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படும் வேறு ஏதாவது கணக்குகள் கணக்காய்வாளர் நாயகத்தின் உதவியுடன் பரிசீலிக்கப்படுவது அரசாங்க கணக்குக் குழுவின் பணியாகும் என்பதால் அதற்கு தொடர்ந்தும் பங்களிப்பு செய்வதற்கும்;

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 120க்கு அமைய**

- அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் முழுமையாகவோ பகுதியளவிலோ அரசினால் நிதி ஒதுக்கப்படும் நிறுவனங்களின் கணக்குகள் மற்றும் எதாவது எழுத்துமூல சட்டம்மூலம் அரசுக்கு கையகப்படுத்தப்படும் வணிகங்கள் அல்லது வேறு ஏதாவது கையகப்படுத்தல்கள் தொடர்பில் பாராளுமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்படும் கணக்குகளை கணக்காய்வாளர் நாயகத்தின் உதவியுடன் ஆய்வுசெய்வது அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் பணியாகும் என்பதால் அதற்கு தொடர்ந்தும் பங்களிப்பு செய்வதற்கும்;

**பாராளுமன்ற நிலையியற் கட்டளை 121 க்கு அமைய**

- வருமானங்களை சேகரித்தல், திரட்டு நிதியிலிருந்து கொடுப்பனவு செய்தல், சட்டரீதியான தேவைப்பாடுகளிற்காக அரசாங்க நிதியை பயன்படுத்துதல், அரசாங்க நிதியங்களை பயன்படுத்துதல், நடப்பாண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மந்தநிலை, ஒதுக்கீட்டை கைமாற்றுதல் மற்றும் எதிர்பார்க்கப்படாத மீதி, நடப்பாண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டத்தை நடைமுறைப்படுத்தல், பொதுக் கடனும் கடன் சேவை மற்றும் 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின்கீழான அறிக்கைகள், கூற்றுக்கள் தொடர்பில் ஆய்வுசெய்தல் அரசாங்க நிதி பற்றிய குழுவின் பணியாகும் என்பதால் அதற்கு தொடர்ந்தும் பங்களிப்பு செய்வதற்கும்;

### பாராளுமன்ற நிலையியற் கட்டளை 13(அ) மற்றும் 10(3) க்கு அமைய

- முறையே பாராளுமன்ற ஒழுங்குப்பத்திரம், ஒழுங்குப்புத்தகம் போன்ற சட்டவாக்க ஆவணங்களை முறையாக பரிசீலனை செய்வதனூடாக பாராளுமன்ற உறுப்பினரென்றவகையில் செய்யவேண்டிய சட்டவாக்க செயற்பாடுகளை முறையாக செய்வதற்கும்;
- அரசினால் ஒதுக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு வழங்கப்படும் பன்முகப்படுத்தப்பட்ட நிதியை பயன்படுத்தி உறுப்பினரின் தேர்தல் தொகுதியில் பல்வேறு அபிவிருத்தி நடவடிக்கைகளில் நேரடியாக பங்களிப்பு செய்வதன் மூலம் நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புபடவும்;
- பாராளுமன்ற ஆய்வுப் பிரிவு, நூலகம் போன்ற தகவல் மூலங்களை பயன்படுத்தி பாராளுமன்ற விவாதங்களில் செயற்பாட்டு ரீதியாக தொடர்ந்து பங்கேற்பதற்கும்;
- பாராளுமன்ற உத்தியோகபூர்வ இணையத்தளத்தை பயன்படுத்தி சட்டமியற்றும் பணிகள் தொடர்பில் பகுப்பாய்வு செய்வதற்கு முடியும் என்பதுடன் எதிர்வரும் அமர்வுகளில் கலந்துரையாடும் விடயங்கள் தொடர்பில் முன்கூட்டியே தயாராவதற்கும், பொருத்தமான வகையில் விவாதங்களில் பங்கேற்பதற்கும் ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினருக்கும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

மேற்குறிப்பிட்ட அனைத்து விடயங்களையும் ஆழமாக பார்க்கும் போது பாராளுமன்ற அமர்வு தினமொன்றில் அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும்;

- மக்கள் பிரதிநிதி (People's Representative)
- சட்டமியற்றுபவர் (Legislator)
- ஆய்வாளர் (Scrutinizer)
- மேற்பார்வையாளர் (Oversight Function)
- பொது நிதிக் கட்டுப்பாட்டாளர் (Controller over Public Finance)
- கொள்கை வகுப்பாளர் (Policy Maker)
- அபிவிருத்தி ஊக்குவிப்பாளர் (Development Promoter)
- பொதுமக்கள் குறைகேள் அதிகாரி (Public Ombudsman)
- சட்டவாக்க வாசகர் (Legislative Reader)
- சட்டவாக்க ஆய்வாளர் (Legislative Researcher)

என ஒன்பதாவது பாராளுமன்றத்தில் சபாமண்டபத்திலும், குழு முறைமையில் செயற்பாட்டு ரீதியாகவும் நேர்மறையானதுமான பங்களிப்பை மக்களுக்கு வழங்க முடியும் என நான் நம்புகிறேன்.

# பாராளுமன்றத்தின் முதல் அமர்வு நாளும் அன்றைய நடைமுறைகளும்

நிம்மி ஹாத்தியல்தெனிய
ஊடக முகாமையாளர், தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
nimmiehathiyaldeniya@gmail.com



பொதுத் தேர்தலில் மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்படும் 196 உறுப்பினர்கள் மற்றும் தேசியப் பட்டியலின் ஊடாக நியமிக்கப்படும் 29 உறுப்பினர்களையும் உள்ளடக்கியதாக 225 உறுப்பினர்களைக் கொண்டதாக பாராளுமன்றம் காணப்படுகிறது, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு ஜனாதிபதி அறிவித்த தினம் மற்றும் நேரத்தில் கூடியது. முதலாவது அமர்வு நாளில் பல்வேறு முக்கியமான நடவடிக்கைகள் இடம்பெறுவதால் அன்றையநாள் மிகவும் விசேடமானதாகும்.

முதலாவது அமர்வுநாளில் சபாமண்டபத்தில் இடம்பெறும் செயற்பாடுகளில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்துக்கே பிரதான பொறுப்புக் காணப்படுகிறது. முதலாவது நாளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்காக விசேடமான ஆசன ஒதுக்கீடுகள் எதுவும் இருக்காது என்பதுடன், விரும்பிய ஆசனத்தில் அமர்வதற்கான வாய்ப்புக் கிடைக்கும். செங்கோல் சபா மண்படத்தில் வைக்கப்பட்ட பின்னர் பாராளுமன்றம் கூட்டப்படவேண்டிய நாள் மற்றும் நேரம் அடங்கிய ஜனாதிபதியின் அறிவிப்பு பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படும். அதன் பின்னர் அரசியலமைப்பின் 64(1) உறுப்புரையின் பிரகாரம் சபாநாயகர் தெரிவு, சபாநாயகரின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை, பாராளுமன்ற உறுப்பினர்களின் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை அதன் பின்னர் பிரதி சாபாநாயகரும் குழுக்களின் தலைவரும், குழுக்களின் பிரதித் தவிசாளரின் தெரிவு என்பன இடம்பெறும்.

## சபாநாயகர் தெரிவு

பாராளுமன்ற உறுப்பினர் எவரையும் சபாநாயகராகத் தெரிவுசெய்ய முடியும். எனினும், உறுப்பினர் குறித்த முன்மொழிவுக்கு அமைய தேர்ந்தெடுக்கப்பட்டால் அந்த உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாராவென்பதை முன்கூட்டியே நிச்சயப்படுத்திக் கொள்ளல் வேண்டும். எவராவது உறுப்பினர் ஒருவரின் பெயரை சபாநாயகராகத் தெரிவுசெய்யுமாறு உறுப்பினர் ஒருவர் முன்மொழியவேண்டும் என்பதுடன், இது தொடர்பில் விவாதம் மேற்கொள்ள முடியாது.

முதலில் சபாநாயகர் ஒருவரைத் தெரிவுசெய்யவேண்டும் என செயலாளர் நாயகம் சபைக்கு அறிவிக்க வேண்டும். இதன்போது எவராவது ஓர் உறுப்பினர் தனது ஆசனத்திலிருந்து எழுந்து நின்றால் குறித்த உறுப்பினரின் பக்கம் செயலாளர் நாயகம் பார்த்து நிற்க அந்த உறுப்பினரின் யோசனை சபைக்கு முன்வைக்கப்படும். ஒருவருடைய பெயர் முன்மொழியப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வேறு நபர்களின் பெயர்கள் உள்ளனவா என செயலாளர் நாயகம் சபையிடம் வினவுவது கட்டாயமாகும். அவ்வாறு வினவும்போது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படாது அல்லது பிறிதொரு நபரின் பெயர் முன்வைக்கப்பட்டிருக்காவிட்டால் குறித்த நபர் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்படுவார். இந்தச் சந்தர்ப்பத்தில் குறித்த உறுப்பினரின் பெயரை முன்மொழிந்த மற்றும் வழிமொழிந்த உறுப்பினர்கள் இருவரும் கையில் பிடித்துச் சென்று அவரை அக்கிராசனத்தில் அமர்த்துவது வழமையாகப் பின்பற்றப்படும் சம்பிரதாயமாகும். இரு உறுப்பினர்கள் கைகளில் பிடித்து அழைத்துச்செல்லும் சம்பிரதாயம் பிரித்தானிய பாராளுமன்றத்திலிருந்து பின்பற்றப்படும் ஒன்றாகும். கடந்தகாலத்தில் பாராளுமன்ற முறையில் சபாநாயகர் பதவியென்பது அவ்வளவு சுவாரஸ்யமான பதவியாக இல்லையென்பதால், உறுப்பினர் ஒருவரை விருப்பமின்றி சபாநாயகர் ஆசனத்துக்கு அழைத்துச் செல்வதையே இந்த சம்பிரதாயம் உணர்த்துகிறது. அதனைத் தொடர்ந்து சபாநாயகரினால் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், இதனை பாராளுமன்ற செயலாளர் நாயகம் மேற்கொண்டு வைப்பார். இவ்வாறு பதவிச்சத்தியம் செய்துகொண்ட சபாநாயகர் அக்கிராசனத்தில் அமர்வதற்கு முன்னர் தான் தெரிவுசெய்யப்பட்டமைக்கு நன்றிதெரிவித்து சிறியதொரு உரையாற்றுவதும் சம்பிரதாயமாகும். தெரிவுசெய்யப்பட்ட புதிய சபாநாயகருக்கு ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், சபாநாயகரினால் நீண்ட நன்றியுரையொன்று ஆற்றப்படும். அதன் பின்னர் சபா மண்டபத்திலுள்ள சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் பதவிச்சத்தியம் அல்லது உறுதியுரை எடுத்துக்கொள்வர்.

சபாநாயகர் பதவிக்கு இரண்டு உறுப்பினர்களின் பெயர்கள் முன்மொழியப்பட்டிருந்தால் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படும். இவ்வாறு இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்படுவதற்கான நான்கு சந்தர்ப்பங்கள் உண்டு. அவையாவன, சபாநாயகர் தெரிவு, பிரதிச் சபாநாயகர் தெரிவு, குழுக்களின் பிரதித் தலைவர் தெரிவு மற்றும் ஜனாதிபதி ஒருவரைத் தெரிவுசெய்வது போன்றவையாகும்.

சபாநாயகராக ஒன்றுக்கு மேற்பட்ட உறுப்பினர்களின் பெயர் முன்மொழியப்பட்டிருந்தால் வாக்கெடுப்பின் மூலமே சபாநாயகரைத் தெரிவுசெய்ய வேண்டி ஏற்படும். ஐந்து நிமிடங்கள் வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்படும். இதற்காக சபையில் சமுகமளித்திருக்கும் உறுப்பினர்களுக்கு செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டொன்றை வழங்குவார். இந்த வாக்குச்சீட்டில் சபாநாயகராகத் தெரிவுசெய்ய விரும்பும் நபரின் பெயர் மற்றும் வாக்களிக்கும் உறுப்பினரின் கையொப்பம் என்பன இடப்பட்டு வெளியில் தெரியாதவாறு மடிக்கப்பட்டு வாக்குப்பெட்டியில் இடவேண்டும். வாக்களிப்பு நடத்தப்படும்முறை மற்றும் அதனைக் கணக்கெடுப்பது பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பொறுப்பாகும். செயலாளர் நாயகத்தின் மேசையிலேயே (Table of Parliament) வாக்குகள் எண்ணப்படும். வாக்குகள் எண்ணப்பட்டதும் அதன் முடிவுகள் சபைக்கு அறிவிக்கப்படும். எதாவது ஒரு சந்தர்ப்பத்தில் வாக்குச்சீட்டில் வாக்களித்த பாராளுமன்ற

உறுப்பினரின் கையொப்பம் இடப்படாவிட்டால் அது செல்லுபடியற்ற வாக்காகக் கருதப்படும். இரண்டுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் முன்மொழியப்பட்டு இதற்கான வாக்கெடுப்பில் ஏனைய வேட்பாளர்களினால் பெறப்பட்ட கூட்டுமொத்த வாக்குகளிலும் பார்க்க அதிகமான வாக்குகளை வேட்பாளர்கள் எவரும் பெற்றிராத சந்தர்ப்பத்தில் குறைந்த வாக்குகளைப் பெற்ற வேட்பாளர் நீக்கப்பட்டு விடயத்துக்கேற்ப ஒரு வேட்பாளர் எஞ்சியுள்ள வேட்பாளரின் வாக்குகளைப் பார்க்க அல்லது எஞ்சிய வேட்பாளர்களின் கூட்டுமொத்த வாக்குகளைப் பார்க்க அதிகமான வாக்குகளைப் பெறும்வரை, ஒவ்வொரு வாக்கெடுப்பிலும் மிகக்குறைந்த வாக்குகளைப் பெறுகின்ற வேட்பாளர் விலக்கப்படுவதுடன் வாக்கெடுப்பானது புதிதாக மேற்கொள்ளப்படும்.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கு இடையிலான வாக்கெடுப்பில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் சம எண்ணிக்கையிலான வாக்குகளைப் பெற்று அவர் தேர்தலிலிருந்து விலக்கப்பட வேண்டியவராகின்ற சந்தர்ப்பத்தில், எவ்வேட்பாளர்களுக்கிடையில் வாக்குகள் சமமாக உள்ளனவோ அவ்வேட்பாளர்களுக்கிடையே எவர் விலக்கப்பட வேண்டியவர் என்பது செயலாளர் நாயகத்தினால் தீர்மானிக்கக்கூடியவாறான திருவுளச் சீட்டின்மூலம் நிர்ணயிக்கப்படுதல் வேண்டும். மீண்டும் நடத்தப்படும் ஏதேனும் வாக்கெடுப்பில் வாக்குகள் சமமாகவிருக்கும்போது மற்றுமொருமுறை வாக்கெடுப்பு நடத்தப்படுவதுடன், வாக்குகள் சமமாகவிருந்தால் யார் நீக்கப்படவேண்டும் என்பது திருவுளச் சீட்டின்மூலம் தீர்மானிக்கப்படும்.

வாக்கெடுப்பிற்குப் பயன்படுத்தப்பட்ட வாக்குச்சீட்டுக்களை ஆகக் குறைந்தது ஒரு மாதகாலம் பாதுகாப்பாகவும் இரகசியமாகவும் பேண வேண்டியதும், பாராளுமன்றத்திடமிருந்து பெறக்கூடிய ஏதேனும் பணிப்பிற்கமைய செயலாளர் நாயகம் வாக்குச்சீட்டுப் பத்திரங்களை அழித்துவிட்டு அதனைப் பாராளுமன்றத்திற்குச் சான்றுப்படுத்தலும் செயலாளர் நாயகத்தின் கடமையாகும்.

பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட் உறுப்பினர்கள் அனைவரும் முதலாவது பாராளுமன்ற நாள் அமர்வில் ‘பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர் அட்டவணை’ எனும் புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும். இதில் சபாநாயகர் முதன்முதலில் கையொப்பமிடுவார் என்பதுடன், அடுத்து பிரதமர் கையொப்பமிட்டதும் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அதில் கையொப்பமிடுவது சம்பிரதாயமாகும். இந்தப் பெயர் அட்டவணைப் புத்தகம் பாதுகாப்பான ஆவணமாகப் பேணப்படும்.

முதலாவது பாராளுமன்ற அமர்வு தினத்தில் பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் ஆகிய பதவிகளுக்கு உறுப்பினர்களைத் தெரிவுசெய்ய வேண்டும். இவர்களின் தெரிவுகள் இடம்பெறும்போது சபாநாயகர் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டு அக்கிராசனத்தில் இருப்பதனால் குறித்த அறிவிப்பு மற்றும் வாக்கெடுப்புப் போன்றன சபாநாயகரின் தலைமையிலேயே முன்னெடுக்கப்படும். பிரதி சபாநாயகரும் குழுக்களின் தவிசாளர் பதவிக்கு ஒருவருடைய பெயர் முன்மொழியப்பட்டிருந்தால், வேறு எவரினதும் பெயர்கள் முன்மொழியப்படுகின்றனவா என சபையிடம் வினவவேண்டிய பொறுப்பு சபாநாயகருடையதாகும். அவ்வாறு வேறு பெயர்கள் முன்மொழியப்படாவிட்டால் குறித்த உறுப்பினர் பிரதி சபாநாயகர் பதவிக்குத் தெரிவுசெய்யப்படுவார். ஏதாவது சந்தர்ப்பத்தில் இந்தப் பதவிகளுக்காக வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டி ஏற்பட்டால் சபாநாயகரின் தெரிவின்போது பின்பற்றப்பட்ட வாக்களிப்புமுறை பின்பற்றப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகள் பூர்த்தியடைந்ததும் முதல்நாள் அமர்வுகள் ஒத்திவைக்கப்படும். ஒத்திவைக்கப்படும் நாள் பெரும்பாலும் அடுத்த பாராளுமன்ற அமர்வுநாளாகவிருக்கும்.

குறிப்பு : பாராளுமன்ற பிரதி செயலாளர் நாயகமும், பணியாட்தொகுதி பிரதாணியுமான நீல் இத்தவல அவர்களின் கலந்துரையாடலிலிருந்து பெறப்பட்ட தகவல்கள்.

# பாராளுமன்றப் பணிகளுடன் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (SDGs) ஒன்றிணைத்தல்

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டம், இலங்கை

"நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரல்" என்று அறியப்படும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் 2030 ஆம் ஆண்டளவில் வறுமையை ஒழித்து, இந்தப் பூமியை பாதுகாப்பதுடன் அனைத்து மக்களும் சமாதானத்தையும் சுபீட்சத்தையும் அடைவதை உறுதி செய்யும் செயற்பாட்டுக்கான உலகளாவிய கோரிக்கை ஒன்றாக 2015 ஆம் ஆண்டில் இலங்கை உள்ளடங்கலாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் அனைத்து உறுப்பு நாடுகளாலும் வகுத்தமைக்கப்பட்டன.[1]

17 SDG இலக்குகளும் ஒன்றிணைக்கப்பட்டுள்ளன - அதாவது, ஒரு விடயப்பரப்பின் செயற்பாடு ஏனைய விடயப் பரப்புகளின் விளைவுகளில் பாதிப்புச் செலுத்துகிறது என்றும் அபிவிருத்தி என்பது சமூகம், பொருளாதாரம் மற்றும் சுற்றாடல் ஆகியவற்றின் நிலைபேறான தன்மையை சமநிலைப்படுத்த வேண்டும் என்றும் அந்த நாடுகள் ஏற்றுக்கொள்கின்றன.

நிலைபேறான அபிவிருத்தியை யதார்த்தமாக மாற்றுவதற்கான ஒரு முக்கிய வகிபாகம் பாராளுமன்றங்களுக்கு உள்ளன. "தேசிய பாராளுமன்றங்கள் சட்டவாக்கங்களை இயற்றுவதன் மூலமாகவும் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகவும் அவை வகிக்கும் அத்தியாவசிய வகிபாகத்தையும் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பயனுறுதிமிக்க முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான வகைப்பொறுப்பை உறுதி செய்வதில் அவற்றின் வகிபாகத்தையும்" 2030 நிகழ்ச்சி நிரல் ஏற்றுக்கொள்கிறது.

> **"தேசிய பாராளுமன்றங்கள் சட்டவாக்கங்களை இயற்றுவதன் மூலமாகவும் வரவு செலவுத் திட்டத்தை நிறைவேற்றுவதன் மூலமாகவும் அவைவகிக்கும் அத்தியாவசிய வகிபாகத்தையும் எமது வாக்குறுதிகளை பயனுறுதிமிக்க முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான வகைப்பொறுப்பை உறுதி செய்வதில் அவற்றின் வகிபாகத்தையும் நாம் ஏற்றுக்கொள்கிறோம்"**
>
> **2030 நிகழ்ச்சி நிரலின் பிரகடனம்**

SDG இலக்குகளுக்கான வரைச்சட்டத்தை உருவாக்குவதற்குத் தேவையான சட்டங்கள் பாராளுமன்றத்தால் நுண்ணாய்வு செய்யப்பட்டு வகுத்தமைக்கப்பட வேண்டும். SDG இலக்குகளுடன் தொடர்புபட்ட பல்வேறுபட்ட அபிவிருத்தி துறைக்கு நிதி ஒதுக்கும் வருடாந்த அரச வரவு செலவுத்திட்டம் விவாதிக்கப்பட்டு, வாதிக்கப்பட்டு இறுதியில் பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட வேண்டும். அரசாங்கம் நடைமுறைப்படுத்தும் SDG இலக்குகள் தேசிய மற்றும் உள்ளூர் சூழமைவுகளுக்கு பொருத்தமானவையா என்பதை உறுதி செய்வதற்கு பாராளுமன்றம் அவற்றை கண்காணிக்கலாம் என்பதுடன் SDG இலக்குகளை நடைமுறைப்படுத்தும் போது பிரசைகளின் பங்கேற்பை ஊக்குவிப்பதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது தேர்தல் தொகுதிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தலாம்.[2]

---

1 2017ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தை இலங்கை பின்னர் சட்டமாக்கியது

2 முக்கிய கிடைக்கப்பெறும் வழங்களாவன

- UNDP/GOPAC/IDB (2017) Parliament's Role in Implementing the Sustainable Development Goals: A Parliamentary Handbook. Available in English, Russian and Arabic here
- UNDP/ IPU (2016) Parliaments and the Sustainable Development Goals: A self-assessment toolkit. Available here

UNDP பாராளுமன்ற மேம்பாட்டுத்துறையில் உள்ள பிரதான பங்காளிகளுடன் சேர்ந்து பாராளுமன்றங்கள், உறுப்பினர்கள் மற்றும் பணியாட்டொகுதியினர் ஆகியவர்களுக்கு 2030 நிகழ்ச்சி நிரலில் தமது வகிபாகத்தை சிறப்பாக புரிந்துகொள்வதற்கு உதவுவதற்கும், இலக்குகளின் நடைமுறைப்படுத்தலை ஊக்குவிப்பதற்கும் கண்காணிப்பதற்குமான அவர்களின் தற்போதைய தயார்நிலையை மதிப்பிடுவதற்கும் அத்துடன் அவ்வாறு செய்வதற்கான இயலளவை விருத்தி செய்வதற்கும் சட்டமன்றங்கள் மற்றும் SDG இலக்குகள் பற்றிய ஆக்கங்களை வெளியிட்டுள்ளது.




பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இலக்கு 16 விசேடமாக முக்கியத்துவம் மிக்கதாகும். “நிலைபேறான அபிவிருத்திக்காக அமைதியான மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய சமூகங்களை ஊக்குவிப்பதற்கும், அனைவருக்கும் நீதிக்கான அணுகலை வழங்கி அனைத்து மட்டங்களிலும் பயனுறுதிமிக்க வகைப்பொறுப்புள்ள மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய நிறுவனங்களை அமைப்பதற்கும்” SDG 16 எதிர்பார்க்கிறது. பயனுறுதிமிக்க, அனைவரையும் உள்ளடக்கிய வகைப்பொறுப்புள்ள ஒரு நிறுவனமே பாராளுமன்றம் என்பதை உறுதி செய்வதற்கான ஒரு தேவையும் உள்ளது.

SDG இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான ஒரு நாட்டின் வாக்குறுதி ஆட்சித் துறையால் வழங்கப்படுவதுடன் முன்னேற்றம் தொடர்பான அனைத்து அறிக்கையிடலும் உத்தியோகபூர்வமாக இத்துறையினால் மேற்கொள்ளப்படும். எனினும் SDG இலக்குகளின் நடைமுறைப்படுத்தலின் ஆரம்பத்தில் இருந்தே நடைமுறைப்படுத்தலுக்கான திட்டமிடலின் அனைத்து அம்சங்களிலும் பாராளுமன்றத்தின் முனைப்பான ஈடுபாடு முக்கியமாகும். அத்தகைய ஈடுபாடு பாராளுமன்றம் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களில் SDG இலக்குகள் தொடர்பான ஆழமான பொறுப்புணர்ச்சியை ஏற்படுத்தும். சட்டங்கள் வகுத்தமைக்கப்படும் போதும் அல்லது திருத்தப்படும் போதும் மற்றும் வரவு செலவு திட்டம் சீராக்கவேண்டிய தேவை ஏற்படும்போதும் குறித்த சூழமைவு தொடர்பான பூரண அறிவுடன் பாராளுமன்றம் குறித்த மாற்றங்கள் தொடர்பான விவாதங்களை மேற்கொள்ளக் கூடியதாக இருக்க வேண்டும்.

இலக்கு 16 இன் கீழ் உள்ள அனைத்து செயல் இலக்குகளும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பொதுவானது என்றாலும், இலக்குகள் 16.6 மற்றும் 16.7 நேரடியாக அவர்களின் பணியை உள்ளடக்குகின்றன. “அனைத்து மட்டங்களிலும் பயனுறுதிமிக்க வகைப்பொறுப்புள்ள வெளிப்படைத்தன்மையுடைய நிறுவனங்களின்” உருவாக்குவாக்கத்திற்காக இலக்கு 16.6 கோரிக்கை விடுக்கிறது. “அனைத்து மட்டங்களிலும் பதில் நடவடிக்கைக்குரிய, அனைவரையும் உள்ளடக்கிய, பங்கேற்புடன் கூடிய பிரதிநிதித்துவ அடிப்படையில் தீர்மானம் மேற்கொள்வதை” இலக்கு 16.7 வேண்டுகிறது. “பொது மக்களுக்கு பாராளுமன்ற குழுக்களை திறத்தல், அதிகமாக பாராளுமன்ற தகவல்களை வெளியிடுதல், வெளித்தொடர்புகளை பாராளுமன்ற உறுப்பினர்கள் சிறப்பாக பேணுவதை ஊக்கப்படுத்தல் மற்றும் பெண்கள் மற்றும் பாதிப்புக்குள்ளாகக்கூடிய அத்துடன் ஓரங்கட்டப்பட்டுள்ள குழுக்களின் உறுப்பினர்களின் நிலையை மேம்படுத்துவதற்கான குறிப்பான உபாயமுறைகளை நடைமுறைப்படுத்தல் ஆகியவற்றை உதாரணங்களாகக் குறிப்பிடலாம்.[3] இந்த இலக்குகளை அடைந்து கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது பணிகளின் செயற்பாட்டையும் முறைமைகளையும் மேம்படுத்துவதற்கான வித்தியாசமான வழிகளை ஆராய வேண்டி இருக்கும்.

3 (GOPAC/UNDP 2017 Parliamentary handbook on SDGs) Page 16

## இலங்கையில் SDG இலக்குகளை எவ்வாறு அடைவது

நிலைபெறுதகு அபிவிருத்திப் பேரவையை தாபிப்பதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்கின்ற 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தை சட்டமாக்குவதற்கு மேலதிகமாக, நிலைபெறுதகு அபிவிருத்தி பற்றிய பாராளுமன்றத் தெரிகுழு ஒன்றை உலகில் முதலாவதாக அமைத்த பாராளுமன்றங்களில் இலங்கைப் பாராளுமன்றமும் ஒன்றாகும். குறித்த தெரிகுழு, ஏனைய பணிகளுடன், 2017 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் SDG இலக்குகள் எந்தளவுக்கு உள்ளடக்கப்பட்டுள்ளன என்பதை மதிப்பிடுவதற்காக அதனை பகுப்பாய்வு செய்தது. இந்த விடயம் வரவு செலவுத்திட்டம் எந்த அளவுக்கு SDG இலக்குகளுடன் பொருந்துகிறது என்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்காக நிதி அமைச்சுடன் சேர்ந்து பணியாற்றுவதற்கு இட்டுச் சென்றது. ஒரு மேம்பாட்டுச் செயற்பாடு என்ற ரீதியில் SDG இன் மீது அவதானம் செலுத்தி வரவு செலவுத்திட்டத்தை மதிப்பிடுவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை பாராளுமன்றத்துக்கு வழங்குவது இந்தப் பணியின் குறிக்கோள்களில் ஒன்றாக இருந்தது.

**1. தேசிய முன்னுரிமைகளை தீர்மானித்து SDG இலக்குகளை யதார்த்தமாக்குவதற்கு பாராளுமன்றங்கள் உதவலாம்:** தேசிய மற்றும் உள்ளூர் ஆகிய இரண்டு மட்டங்களிலும் SDG இலக்குகளை பிரசைகளுக்கு மத்தியில் கொண்டுவந்து தேசிய முன்னுரிமைகளை தீர்மானிப்பதற்கு பங்கீடுபாடு உடையவர்களை ஈடுபடுத்துவதற்கு பாராளுமன்றங்கள் பெரும்பாலும் சிறந்த நிலையில் உள்ளன. பொது மக்களுடன் அதிக பயனுறுதிமிக்க முறையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஈடுபாட்டை பேண முடியுமான சில வழிகளை பாராளுமன்றத்திற்கான தொடர்பாடல் மற்றும் வெளித்தொடர்பு உபாயமுறை வரையறுப்பதுடன் குழுக்கள் வெளித்தொடர்புகள், உள்ளீடு மற்றும் ஒளி/ ஒலிபரப்பு ஆகியவற்றுக்கு திறக்கப்பட்டது பொது மக்கள் ஈடுபடுத்துவதற்கான ஒரு பலம் மிக்க ஊடகமாகும்.

**2. SDG இலக்குகளின் அடைவுகளின் தரம் பற்றி பாராளுமன்றங்கள் மேற்பார்வை செய்ய முடியும்:** பாராளுமன்றங்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது மேற்பார்வைப் பணிகள் மூலம் SDG இலக்குகளின் நடைமுறைப்படுத்தல் மீதான அரசாங்கத்தின் முன்னேற்றத்தை கண்காணிப்பது அத்தியாவசியமாகும். நாட்டின் எதிர்காலத்திற்காக முன்னுரிமைகள் மற்றும் இலக்குகள் தொடர்பான தீர்மானங்ளை தகவல் அறிந்து மேற்கொள்வதற்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் என்ற வகையில் உரிய அரசாங்க முகவராண்மைகளிடம் இருந்து தரவுகளையும் புள்ளிவிபரங்களையும் பெற்றுக்கொள்வதற்கான ஒரு கடமை இருக்கிறது. குழு உறுப்பினர்கள் ஆட்சித்துறை நிறுவனங்களின் மூலமான வளப் பயன்பாடு பற்றி கண்காணிக்கும் பிரதான ஊடகமாக இருக்க முடியும். SDG இலக்குகள், செயல் இலக்குகள் மற்றும் குறிகாட்டிகள் தொடர்பாக குழுக்களின் இயலளவை பலப்படுத்தினால் ஆட்சித்துறை சார்ந்த நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் கருத்திட்டங்களின் மதிப்பீட்டை SDG நடைமுறைப்படுத்தலை நோக்கி சீர்செய்யலாம் என்பதுடன் இடைவெளிகளையும் இனங்காணலாம்.

**3. SDG நடைமுறைப்படுத்தலுக்கான நிதியளிப்பை பாராளுமன்றங்கள் உறுதி செய்யலாம்:** SDG இலக்குகளுக்கான போதிய வள ஒதுக்கீட்டை உறுதி செய்வதற்கான ஒரு குறிப்பான வகிபாகம் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளது. கோவிட் நெருக்கடியின் பின்னணியில், SDG இலக்குகளுக்கான தெளிவான நிதியளிப்பு இடைவெளிகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் இந்த விடயம் குறிப்பாக முக்கியத்துவம் பெறுகிறது (அதாவது SDG இலக்குகளுக்கான செலவு கிடைக்கப்பெறும் வளங்களில் குறைப்பை ஏற்படுத்தும்). SDG இலக்குகளை அடைவதில் அரிதானவளங்களின் உயர் பயன்பாட்டை உறுதி செய்வதற்கு பாராளுமன்றத்தின் மேற்பார்வை முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

**4 முனைப்பான பல்வகை பங்கீடுபாடு உடைய பங்குடைமைகளை உருவாக்குவதற்கு பாராளுமன்றம் உதவலாம்:** இந்தப் பாரிய நிகழ்ச்சி நிரலை அடைவதற்கு "ஒரு பூரணமான சமூக அணுகுமுறையும்" முனைப்பான பங்குடைமைகளும் முக்கியமாகும். SDG இலக்குகளின் பயனுறுதிமிக்க நடைமுறைப்படுத்தலை உறுதி செய்வது அரசாங்கங்களினால் மாத்திரம் சாத்தியப்படாது. அனைத்து பங்காளிகளுக்கும் பங்குதாரர்களுக்கும் பங்கேற்பதற்கான சமமான பொறுப்பு உள்ளது. இது தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர்கள் பிரதான வகிபாகத்தை வகிக்க முடியும் என்பதுடன் சிவில் சமூக அமைப்புகள், கல்வியாளர்கள், வியாபார சனசமூகம், அரசாங்கம், சர்வதேச அபிவிருத்தி அமைப்புகள், ஊடகம் மற்றும் ஏனையவை உள்ளடங்கலாக பங்குதாரர்களுக்கு மத்தியில் பங்குடைமைகளையும் உருவாக்கலாம்.

**5. சட்டவாக்கம், வரவு செலவுத்திட்டம், மேற்பார்வை ஆகியவற்றின் போது மிகவும் பாதிப்புறும் நிலையில் வாழ்கின்ற மற்றும் புறக்கணிக்கப்பட்ட மக்களது நலன்கள் பிரதிநிதித்துவம் செய்யப்படுவதை பாராளுமன்றங்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதி செய்ய முடியும்:** கொவிட் 19, வெள்ளப்பெருக்கு, வரட்சி, மண்சரிவுகள் போன்ற பல்வேறு இயற்கை அனர்த்தங்கள் உள்ளடங்கலாக, பல்வேறுவிதமான அதிர்ச்சிகளின் காரணமாக மீண்டும் வறுமை நிலைக்கு தள்ளப்படக்கூடிய இடர்களை பாதிப்புறும் நிலையில் வாழ்கின்ற குழுக்கள் எதிர்கொள்கின்றனர். யாரையும் விட்டுவிடவில்லையென்ற 2030 நிகழ்ச்சி நிரலின் நீண்ட இலக்கை இலங்கை அடைய வேண்டுமாயின், பெண்கள், பிள்ளைகள், இளைஞர்கள், அங்கவீனமான ஆட்கள் உள்ளடங்கலாக இடரை எதிர்கொள்கின்ற அத்தகையவர்களை இணைத்துக் கொள்வதற்கு அவசியமான வழிமுறைகள் அறிமுகம் செய்யப்படல் வேண்டும். தமது திட்டவட்டமான சூழ்நிலைகள் மற்றும் நலன்கள் ஆகியவற்றை நிறைவேற்றக்கூடிய திருத்தியமைக்கப்பட்ட சட்ட ரீதியான பதில் நடவடிக்கைகள் காணப்படுகின்றன என்பதை உறுதி செய்வதற்கான சிறப்பான நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

**6. கொவிட் 19 போன்ற பெரும் நோய்த் தொற்றுகள் தொடர்பான பதில் நடவடிக்கைகளை பாராளுமன்றங்களினாலும் பாராளுமன்ற உறுப்பினர்களினாலும் அறிமுகம் செய்ய முடியும்.** கொவிட் 19 பெரும் நோய்த்தொற்று உலகளாவிய ரீதியில் பல்வேறு விதமான தனித்துமான சவால்களை ஏற்படுத்தியுள்ளது. இத்தகைய சூழமைவில் பாராளுமன்றங்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதில் குறிப்பிடக்கூடிய சவால்களை எதிர்கொள்ளலாம். இந்த நெருக்கடியின் பன்முகத்தன்மையானது சுகாதாரம் சார்ந்த நெருக்கடியுடன் ஆரம்பித்தாலும் கடினமான சமூக மற்றும் பொருளாதார பின்விளைவுகளை நோக்கி பயணிப்பதன் காரணமாக, சுகாதார ரீதியான பாதுகாப்பு, பொருளாதார பாதுகாப்பு, மனித உரிமைகள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதில் கணிசமான சவால்களை ஏற்படுத்துகிறது. நெருக்கடியின் காரணமாக குறிப்பிடக்கூடிய காலதாமதத்தை ஏற்படுத்துகின்ற மரபுரீதியான தரவு மூலங்களில் தங்கியிருப்பதற்கு பதிலாக அடிமட்டத்திலிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக மிகவும் புத்தாக்க ரீதியான முறைகளையும் பாராளுமன்றங்களினால் பிரயோகிக்க முடியும். தரவுகளை உறுதியான பகுப்பாய்வு மற்றும் நுண்ணறிவாக ஒன்றிணைக்கும் வழிமுறைகளுடன் (இவற்றிற்குப் பாராளுமன்ற செயலகத்தினால் ஒத்துழைப்பு வழங்கப்படலாம்), "நாடித்துடிப்பை அறிந்து கொள்வதற்கான" புத்தாக்க டிஜிட்டல் அலைவரிசைகளின் அதிகளவிலான பயன்பாட்டில் தங்கியிருக்க வேண்டியிருக்கும்.

## நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை (நி.அ.இ.) மேற்பார்வை செய்வதற்காக சான்றுகளை அடிப்படையாகக் கொண்ட கருவிகளை பயன்படுத்துதல்

முன்னைய அரசாங்கம் வலுவாதார அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் பிராந்திய அபிவிருத்தி அமைச்சு மூலம் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவதற்கான பொறுப்பை 425 சட்டபூர்வமான நிறுவனங்களுக்கு வழங்கியது.[4]

அரசாங்கத்தையும் இத்தகைய 425 நிறுவனங்களையும் நடத்துவதற்கும் மற்றும் இலங்கையிலுள்ள சகல அமைச்சுகளும் தமது நி.அ.இ. தொடர்பில் பொறுப்புக்கூறுவதற்குமான பிரதான வகிபாகத்தை குழுக்கள் வகிக்கின்றன. குழுச் செயற்பாடுகளில் காத்திரமாக ஈடுபடுவதன் மூலம் தமது சம்பந்தப்பட்ட தேர்தல் தொகுதியைச் சேர்ந்த மக்கள், உள்ளூர் கிராமங்கள், அயலில் வகிக்கின்றவர்கள் ஆகியோர் இத்தகைய இலக்குகளிலிருந்து உண்மையில் நன்மையடைகின்றனர் என்பதை பாராளுமன்ற உறுப்பினர்கள் உறுதிப்படுத்துவதுடன் அவற்றை வெளிப்படுத்தவும் முடியும்.

### சாத்தியமான அடுத்த நடவடிக்கைகள்:

## நிலைபேறான அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பில் பாராளுமன்ற தெரிவுக்குழுவொன்றை மீள்-தாபித்தல்

பாராளுமன்றம் மற்றும் தொடர்புடைய அமைச்சுகள் ஆகியவற்றுடனான மீளாய்வு, ஆலோசனை சேவைகளை வழங்குதல், ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள் போன்றவற்றினூடாக நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளின் நடைமுறைப்படுத்தலை எளிதாக்குவதையும், நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்தி இலக்குகளை இலகுவாக நடைமுறைப்படுத்துவதற்கான ஆலோசனையை வழங்குவதையும் நோக்காகக் கொண்டு நீடித்து நிலைக்கக்கூடிய அபிவிருத்திக்கான ஐக்கிய நாடுகள் 2030 நிகழச்சிநிரல் மீதான பாராளுமன்றத்தின் தெரிகுழு 2016 ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

“பின்வருவன தொடர்பான விதப்புரைகளை மேற்கொள்வதற்கான ஆணை தெரி குழுவிற்கு வழங்கப்பட்டுள்ளது: சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சுடன் ஆலோசனைகளை மேற்கொண்டு தேசிய கொள்கைகள் மற்றும் சட்டங்கள் ஆகியவற்றை உருவாக்குதல் போதியளவு உள்நாட்டு வளங்களை ஒதுக்குதல் மற்றும் சர்வதேச நிதி வளங்களை கண்டறிதல் அரசாங்க அமுலாக்கல் முகவர்களுக்கு மத்தியில் ஒருங்கிணைப்புகளை மேற்கொள்ளல் தேசிய, மாகாண, பிரதேச மட்டங்களில் வலையமைப்பு நடவடிக்கைகள் அரசாங்க தனியார் பங்காண்மைகளை ஊக்குவித்தல் ஐக்கிய நாடுகள் முகவர்கள் மற்றும் CSO கள் ஆகியவற்றின் உதவிகளை பெற்றுக் கொள்ளல் பிராந்திய மற்றும் சர்வதேச மட்டங்களில் உள்ள நாடுகளுக்கு மத்தியில் நிபுணத்துவம், அனுபவங்கள் ஆகியவற்றை பரிமாறல் தனியான தரவு மையமொன்றை விருத்தி செய்து முன்னேற்றங்களை குறிப்பிட்ட காலப்பகுதிக்கொருமுறை மீளாய்வு செய்தல் மேற்படி விடயங்களுடன் தொடர்புடைய அல்லது அவற்றுடன் இடைநேர்விளைவான சகல விடயங்களையும் பரிசீலித்தல்”[5]

---

4 .P.25, Sri Lanka Voluntary National Review on the Status of Implementing the Sustainable Development Goals (2018) https://sustainabledevelopment.un.org/content/documents/19677FINAL_SriLankaVNR_Report_30Jun2018.pdf

5 P.43, Interim Report of the Select Committee of Parliament on the United Nations 2030 Agenda for Sustainable Development, Parliamentary Series No. 226 of 2017 of the Eighth Parliament of the Democratic Socialist Republic of Sri Lanka (First Session) Hon. Thilanga Sumathipala, MP, Chairman, Parliamentary Select Committee on 2030 Agenda for Sustainable Development

### சகல குழுக்களும் தமது முக்கிய வேலைகளின் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான ஈடுபாட்டை கருத்திற் கொண்டுள்ளது என்பதை உறுதி செய்தல்

இலங்கையில் அரசாங்க திணைக்களுக்கிடையில் நி.அ.இ. ஈடுபாடுகள் ஏற்கனவே நன்கு தாபிக்கப்பட்டுள்ளது என்பதை கருத்திற் கொண்டு, சகல குழுக்களும் தமது முக்கிய பணிகளின் போது நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை உள்ளடக்கி செயற்படுவது சிறப்பானது. தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தல் அந்தஸ்து தொடர்பான இலங்கையின் தன்னார்வ தேசிய மீளாய்வு (ஜூன் 2018), ஏனைய பல அறிக்கையிடல் பொறிமுறைகள் ஆகியன ஒவ்வொரு குழுவின் வேலைகளையும் மேம்படுத்துவதற்காக பல்வேறு வகையான பொருட்களை வழங்குகின்றன.

### தேசிய புள்ளிவிபரவியல் அலுவலகம் போன்ற சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுகள் மற்றும் ஏனைய நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் ஆகியவற்றுடன் பணியாற்றல்

அரசாங்கத்தின் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களம், இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான புள்ளிவிபரச் செயற்பாடுகளை ஒன்லைன் (online) மூலம் வழங்குகிறது. இந்த இணையத்தளமானது 46 குறிகாட்டிகளுக்கான தரவுகளை, அந்த 46 குறிகாட்டிகளுக்கான அடிப்படைத் தரவுகளுடன் சேர்த்து ஏற்கனவே தொகுத்துள்ளது. 46 குறிகாட்டிகளுக்கான பிரசுரிக்கப்பட்ட தரவுகள் காணப்படுகின்றன[6]. அதாவது இன்னும் 195 குறிகாட்டிகள் தொடர்பில் செயற்பட வேண்டியுள்ளது. 245 குறிகாட்டிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இத்தகைய தரவுகள் இலங்கைக்கு பொருத்தமானவையாக உள்ளன என்பதை உறுதி செய்து கொள்வது ஒவ்வொரு குழுவின் பிரதான வகிபாகமாக இருக்கலாம். மேற்பார்வை தொடர்பில் நோக்குகையில், ஏனைய 195 குறிகாட்டிகளில் சில பற்றிய தரவுகள் ஏற்கனவே சிறப்பாக சேகரிக்கப்பட்டிருக்கலாம். இருப்பினும், இவை முழுமையாக அரசாங்கத்திற்கு ஏற்றவகையில் சமர்ப்பிக்கப்படவில்லை.

2020-2030 இற்கான நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக இலங்கை பாராளுமன்றத்திற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்குமான வகிபாகம் பற்றிய புதிய செயல்திட்டத்திற்கான உரிமையை ஏற்றல்

இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் பற்றிய பாராளுமன்றத்தின் ஈடுபாடுகள் தொடர்பான சிறப்பான மற்றும் விரிவான பணியை கடந்த பாராளுமன்றம், தெரிவுக் குழு மற்றும் செயலகம் ஆகியன ஏற்றிருந்தன. இந்த செயல்திட்டத்தை மீள் செயற்படுத்தியமைக்கான சிறப்பிற்கு சபாநாயகர், செயலகம், மற்றும் குழுக்கள் ஆகியன உரித்துடையனவாகின்றன.

யு.என்.டி.பி. இன் தொழில்நுட்ப உதவியுடன் 2018 ஒக்டோபரில் சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் நடைபெற்ற செயலமர்வின் போது 8 ஆவது பாராளுமன்ற உறுப்பினர்களினால் ஆரம்பத்தில் இந்த செயல்திட்டம் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இங்கு 27 ஆலோசிக்கப்பட்ட செயல்கள் காணப்படுகின்றன. இவற்றை பின்வரும் வகைகளின் கீழ் பரந்தளவில் காண முடியும்.

6 http://www.statistics.gov.lk/sdg/index.php/sdg/page/Tables

- பாராளுமன்ற பொறிமுறைகளுக்குள் நிலைபேறான அபிவிருத்தி இலக்கை பிரதானப்படுத்தல்
- பாராளுமன்றத்தினுள் நி.அ.இ. பற்றிய புரிந்துணர்வை கட்டியெழுப்பல்
- உள்ளூர் மட்டத்தில் நி.அ.இலக்குகளைக் கொண்டு வருதல்
- நி.அ.இ. இற்கு உதவக்கூடிய சட்டங்களை நிறைவேற்றல்
- நி.அ.இ. இற்கு நிதியிடல்
- நி.அ.இ. நடைமுறைப்படுத்தலை மேற்பார்வை செய்தல்
- பொது மக்களை ஈடுபடச் செய்தல்
- மிகவும் பாதிப்புறும் நிலையில் வாழ்கின்றவர்களுக்கு நி.அ.இ. சேவையாற்றுகிறது என்பதை உறுதி செய்தல்
- பாராளுமன்ற ஒருங்கிணைப்பு

ஐ.நா. வின் நிலைபேறான அபிவிருத்தி வரைவுச் சட்டகம் (UNSDF)[7] மூலம், நிலைபேறோன அபிவிருத்திக்கான 2030 இற்கான நிகழ்ச்சி நிரலை யதார்த்தபூர்வமாக மாற்றும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கு உதவும் முகமாக இலங்கையில் பணியாற்றுகின்ற 13 ஐ.நா. நிறுவனங்கள் பரஸ்பர உடன்படிக்கையொன்றை மேற்கொண்டது. உதாரணமாக யு.என்.டி.பி., ஐக்கிய நாடுகள் சிறுவர்களுக்கான நிதியம் (யுனிசெப்) ஆகியன ஆசியா பவுன்டேஷன் போன்ற ஏனைய சர்வதேச அபிவிருத்தி பங்காளர்களுடன் கூட்டிணைந்து, சிறுவர் நேய நீதிமன்றங்களை விருத்தி செய்தல், சமுதாய இணக்க சபைகளை உருவாக்கி வலுப்படுத்தல், சமத்துவமான நீதியை மேம்படுத்தல் ஆகியவற்றிற்காக நீதி அமைச்சுடன் இணைந்து பணியாற்றின. அரசாங்க அதிகாரிகளின் கருத்துப்படி, தொழில்நுட்ப மற்றும் நிதி ரீதியான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு விஷேடமாக இவை பயன்தரக்கூடியன[8].

சில இலக்குகளை விட சில இலக்குகள் பற்றிய செல் தடத்தை அறிவது கடினமாகும். அதேவேளை பல்வேறு துறைகளுக்கான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் பற்றிய காத்திரமான புள்ளிவிபரங்கள் அரசாங்க அறிக்கையிடல் பொறிமுறைகளில் காணப்படுகின்றன. சம்பந்தப்பட்ட உபதுறைகள் தொடர்பான உண்மையான செலவுகள் பற்றிய தரவுகளை பெற்றுக் கொள்வது கடினமாகும். கல்வி மற்றும் சுகாதாரம் தொடர்பான செலவுகள் பற்றிய விபரங்களை பொதுவாக இலகுவாக இனம்காண முடியும். அரசாங்க செலவுகளில் இவை இரண்டுமே மிகப் பாரியதாகவும், முக்கியமானதாகவும் காணப்படுகின்றன. பாராளுமன்ற குழுக்களின் முக்கியமான ஆய்வுப் பணியாக இவை காணப்படுகின்றன. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை பயன்படுத்தி, அறிக்கையிடல் ஆகியன குழுப் பணிகளின் தாக்கத்தை சிறப்பாக மேம்படுத்தும்.

7 https://lk.one.un.org/our-work/unsdf/ Page 109

8 181 Tilakaratna et al. (2017). “National Level Implications of SDG Implementation: The Case of Sri Lanka.” Occasional Paper Series 41, Southern Voice on Post-MDG International Development Goals

# இலங்கைப் பாராளுமன்ற செயலகம்

எச்.டி. எதிரிவீர குணசேகர
ஊடக அதிகாரி - தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
edirigunas@gmail.com



இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதானமாக ஒன்பது திணைக்களங்கள் காணப்படுகின்றன. இவையாவும் பாராளுமன்ற செயலகத்தின் கீழ் செயற்படுகின்றன.

1. படைக்கல சேவிதர் திணைக்களம்
2. நிருவாகத் திணைக்களம்
3. ஹன்சாட் திணைக்களம்
4. உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்
5. இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்
6. நிதி மற்றும் வழங்கல் திணைக்களம்
7. சட்டவாக்க சேவைகள் திணைக்களம்
8. தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்
9. தொடர்பாடல் திணைக்களம்

## படைக்கல சேவிதர் திணைக்களம்

பாராளுமன்றத்தில் மிக முக்கியமான திணைக்களில் ஒன்றான படைக்கல சேவிதர் திணைக்களம், இரண்டாவது மிகப் பழைமை வாய்ந்த திணைக்களமாகும். படைக்கல சேவிதர், பிரதிப் படைக்கல சேவிதர், உதவிப் படைக்கல சேவிதர் உள்ளடங்கலாக சுமார் 140க்கும் மேற்பட்ட பணிட்தொகுதியினரைக் கொண்டதாக இத்திணைக்களம் செயற்படுகின்றது. கௌரவ சபாநாயகருக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் பணியாட்தொகுதியினருக்கும், பாராளுமன்ற பணியாட்தொகுதியினருக்கும், துணைநிலைப் பணியாட்தொகுதியினருக்கும் உரிய நேரத்தில் வினைத்திறன்மிக்க சாத்தியமான உயர்தர சேவைகளை வழங்குவதன் மூலம் பாராளுமன்ற சபையின் பயனுறுதியான செயல்பாட்டுக்கு வசதியளித்தல் இத்திணைக்களத்தின் பிரதான பணியாகும். இந்த திணைக்களத்தின் தலைவர் படைக்கல சேவிதராவார். பாராளுமன்றக் கட்டடத்தொகுதி முழுவதும் பாதுகாப்பானதும் பத்திரமானதுமான சூழலை உறுதிப்படுத்துவது இத்திணைக்களத்தின் பணியாகும். இதற்குப் பாராளுமன்றப் பொலிஸ் பிரிவின் உதவியும் பெற்றுக்கொள்ளப்படும். இவற்றில் பாதுகாப்புப் பரிசீலனை, முப்படைகளுடனும் பொலிஸாருடனும், புலனாய்வு முகவர்களுடனும் இணைந்து பணியாற்றுதல், வெளிநாட்டு அதிதிகள் சம்பந்தப்படும் பிரதான நிகழ்வுகளைத் திட்டமிடல் போன்றன உள்ளடங்கும். விசேடமாக பாராளுமன்றத்தின் புதிய கூட்டத்தொடர் வைபவரீதியாக ஆரம்பிக்கும் நிகழ்வு, விசேட அரச தலைவர்கள் பாராளுமன்றத்துக்கு வருகை தருவதை முன்னிட்டு இடம்பெறும் வைபங்கள் உள்ளடங்கலாக சபாநாயகரின் வைபவங்கள் போன்றவற்றை சரியான முறையில் ஒழுங்குசெய்வதும் இத்திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கையாகும்.

## நிர்வாகத் திணைக்களம்

இலங்கைப் பாராளுமன்றத்தில் நிர்வாகத் திணைக்களம் மிகவும் முக்கியமான சேவையாற்றும் ஒரு திணைக்களமாக விளங்குகிறது. பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தின் பணியாளர்கள் போட்டித்தன்மை வாய்ந்த சூழலில் தமது செயற்பாடுகளை வினைத்திறன் வாய்ந்ததாக மேற்கொள்வதை இயலச்செய்யும் நிமித்தம் அவர்களின் தனிப்பட்ட மேம்பாடு, நல்வாழ்வு ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தும் வகையில் பங்களிப்புச் செய்வது நிர்வாகத் திணைக்களத்தின் பிரதான வகிபங்காகும். பாராளுமன்றச் செயலாளர் நாயகத்தினது பணியாட்தொகுதியினரது முன்னேற்றம், விருத்தி மற்றும் நலனோம்புகை என்பவற்றுக்காக நிர்வாகத் திணைக்களத்தின் பணியாளர்கள் பற்றுறுதியுடன் தம்மை அர்ப்பணித்து செயலாற்றி வருகின்றனர். இந்த நோக்கத்திற்கான மாற்றத்தை ஏற்படுத்த கடும் முயற்சி மேற்கொள்ளப்பட்டு வரும் அதேவேளையில் மனித வள முகாமைத்துவத்தில் சரியான கொள்கைகள், தீர்மானங்களை எடுத்து மனித வளக் கொள்கைகளை நிர்ணயித்துக் கட்டமைப்பதற்கான அதிகாரம் நிர்வாகத் திணைக்களத்திற்கு உரித்தளிக்கப்பட்டுள்ளது. பணியாட்தொகுதியில் புதிய பதவிகளை உருவாக்குதல், பணியாட்தொகுதி சார்பில் சட்ட சுற்றறிக்கைகளைத் தயாரித்தல், புதியவர்களைப் பணிக்கு அமர்த்துதல் மற்றும் ஏனைய செயற்பாடுகளுக்காக 1956ஆம் ஆண்டு 09ஆம் இலக்க பாராளுமன்ற பணியாட்தொகுதிச் சட்டத்துக்கு அமைய அமைக்கப்பட்டுள்ள சபாநாயகரைத் தலைமையில் கொண்ட பணியாட்தொகுதி ஆலோசனைக்குழுவுக்கு அனுப்பப்படுகின்ற சகல யோசனைகள் மற்றும் கடிதங்களை தயாரிப்பது இந்தத் திணைக்களத்தின் பிரதான செயற்பாடாகும். இத்திணைக்களத்தின் கீழ் தாபன அலுவலகம், உறுப்பினர் சேவைகள் அலுவலகம், போக்குவரத்து அலுவலகம் மற்றும் ஆவணக் காப்பகம் போன்றவை செயற்படுகின்றன.

### ஹன்சாட் திணைக்களம்

இலங்கைப் பாராளுமன்றத்தில் ஹன்சாட் திணைக்களத்தின் பணிகள் மிகவும் பாராட்டுதலுக்குரியதாகும். உறுப்பினர்களின் பாராளுமன்ற உரைகளை உள்ளடக்கிய "ஹன்சாட் அறிக்கை" தயாரித்தல், பாராளுமன்றக் குழுக்களின் கூட்ட நடவடிக்கைகளையும் அறிக்கையிடுதல் ஹன்சாட் திணைக்களத்தின் கடமைப் பொறுப்பாகும். ஹன்சாட் பதிப்பாசிரியர், ஹன்சாட் பிரதிப் பதிப்பாசிரியர்கள், ஹன்சாட் உதவிப் பதிப்பாசிரியர்கள், சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர்கள், ஹன்சாட் அறிக்கையாளர்கள் ஆகியோரைக் கொண்ட இத்திணைக்களம் குழு அறிக்கையாளர்கள் அலகினையும் சூசிகை உத்தியோகத்தர் அலகு மற்றும் ஒலிப்பதிவுப் பிரிவினையும் உள்ளடக்கியுள்ளது. ஒவ்வொரு மொழிப்பிரிவுக்கும் (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்) ஒருவராக மூன்று பிரதிப் பதிப்பாசிரியர்களும், சிங்கள மொழிக்கு ஐவரும் ஆங்கில மொழிக்கு ஐவரும் தமிழ் மொழிக்கு ஒருவருமாக பதினொரு உதவிப் பதிப்பாசிரியர்களும், ஹன்சாட் அறிக்கையாளர் பிரிவில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளில் தலா 18 பேரும், தமிழ் மொழியில் ஐவரும் பணியாற்றுகின்றனர்.

### உணவு வழங்கல், வீடு பராமரிப்புத் திணைக்களம்

இலங்கை பாராளுமன்றம் 1982 ஆம் ஆண்டு ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தொகுதிக்கு மாற்றப்பட்ட பின்னர் உணவு வழங்கல், வீடுபராமரிப்புத் திணைக்களம் புதியதொரு திணைக்களமாக உருவாக்கப்பட்டது. சர்வதேச அங்கீகாரம் பெற்ற முன்னோடி ஐந்து நட்சத்திர "லங்கா ஒபரோய் ஹோட்டல்" நிறுவனத்தின் தொழில்நுட்ப, தொழில்சார் நிபுணத்துவம், ஆலோசனை ஆகியவற்றின் கீழ் இது உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னர் இத்திணைக்களம் பாராளுமன்ற சபாநாயகரின் பணியாட்தொகுதிக்குள் உள்வாங்கப்பட்டது. பணிப்பாளரின் கீழ் வரும் இத்திணைக்களம், பாராளுமன்றத்தின் நாளாந்த நடவடிக்கைகளில் முக்கிய மற்றும் பிரபல்யமான பங்களிப்புச் செய்வதுடன் சமையலறை, உணவகம், வீடு பராமரிப்பு, கணக்குகள் ஆகிய நான்கு பிரதான பிரிவுகளை உள்ளடக்குகின்றது. உணவு வழங்கல் பிரிவு பன்னிரண்டு பிரதான சேவைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டுள்ளது. இவற்றில் ஐந்து தொகுதிகள் நாளாந்தம் தொழிற்படுவதோடு பாராளுமன்ற அமர்வு நடைபெறாத நாட்களில் 1000 முதல் 1200 வரையான நபர்களுக்கு உணவு வழங்குகின்றன. பலதரப்பட்ட திறன்கள், பல்லாண்டு கால தொழில்சார் அனுபவம் ஆகியவற்றுடன் தமது கடமைகளை அர்ப்பணிப்புடனும் ஆர்வத்துடனும் மேற்கொள்ளவும் 260 க்கும் மேற்பட்ட உயர்தரமுடைய பணியாட்கள் இத்திணைக்களத்தில் பணிபுரிகின்றனர்.

### இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம்

1990ஆம் ஆண்டு தொடக்கம் பாராளுமன்றத்தில் செயற்படும் இணைப்புப் பொறியியலாளர் திணைக்களம், பாராளுமன்ற கட்டடத் தொகுதி, சபாநாயகரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலம், ஜயவர்தனகம வீட்டுத்தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள பணியாளர் விடுதிகள், மாத்திவலவில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான 120 வீடுகள், நுவரெலியாவிலுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான விடுதி போன்றவற்றின் சிவில் பராமரிப்புப் பணிகளை இத்திணைக்களம் மேற்கொள்ளும். மின் உயர்த்திகள், பிரதான வாயு சீராக்கிகள், சிசிரிவி கட்டமைப்பு, பாராளுமன்ற அமர்வுகளின் நேரடி ஒலி மற்றும் ஒளிபரப்பு, இலத்திரனியல் வாக்களிப்புக் கட்டமைப்பு, பிரதான தொலைக்காட்சி அன்டனா கட்டமைப்பு, குளிரூட்டல் அறைகள் சேவைகள் மற்றும் உபகரணங்களின் சுமுகமான செயற்பாட்டினை உறுதிப்படுத்தல் மற்றும் துணைச்சேவைத் திணைக்களங்களின்

பராமரிப்புப் பணிகளுக்குப் பொறுப்பாக இருத்தல் என்பன இத்திணைக்களத்தின் பிரதான சேவைகளாகும். உறுப்பினர்களின் உரைகள் அடங்கிய இறுவட்டுக்கள் வெளியிடப்படுவதும் இத்திணைக்களத்தின் ஊடாகவாகும்.

## நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம்

நிதி மற்றும் வழங்கல்கள் திணைக்களம் பாராளுமன்றத்தை முகாமைத்துவம் செய்வதில் பிரதான வகிபாகமொன்றை வகிக்கின்றது. பணிப்பாளர் (நிதி) இத்திணைக்களத்தின் தலைவராவார். இவர் கணக்கீட்டு அதிகாரி என்ற வகையில் பாராளுமன்ற செயலாளர் நாயகத்திற்கு நிதி விடயங்கள் தொடர்பாக நேரடியாக ஆலோசனை வழங்குவதற்கும் அறிக்கையிடுவதற்குமான பொறுப்பைக் கொண்டுள்ளார். "நிதி, கணக்குகள்" மற்றும் "வழங்கல்கள், சேவைகள்" ஆகிய அலுவலகங்கள் இரண்டு உதவிப் பணிப்பாளர்களின் தலைமையில் இருக்கின்றன. அதேவேளை, "உணவு வழங்கல் - கணக்குகள்" அலுவலகம் ஒரு கணக்காளரின் தலைமையில் உள்ளது. பணிப்பாளரின் (நிதி) ஆளுகையின் கீழ்வரும் பிரதான பணிகளாவன: கணக்கீட்டு அலுவலர் என்ற வகையில் தமது பொதுவான பொறுப்புக்களை நிறைவேற்றுதல் மற்றும் அரசாங்க நிதிப் பிரமாணங்கள், சட்டவாக்கங்கள், கொள்கைகள் மற்றும் நடைமுறைகள் ஆகியவற்றுக்கு ஏற்றவாறு நிதிகள் முகாமைத்துவம் செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான கணக்குத் தணிக்கைத் தொழிற்பாடுகளை வழங்குதல் என்பனவாகும்.

## சட்டவாக்க சேவைகள் திணைக்களம்

இலங்கைப் பாராளுமன்றத்தில் சட்டவாக்க சேவைகள் திணைக்களம் மேற்கொள்ளும் பணிகள் அளப்பெரியதாகும். சட்டமியற்றுதல், மேற்பார்வை மற்றும் பொது நிதி பரிபாலனம் ஆகிய துறைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தொழில்சார் சேவைகளை இத்திணைக்களம் வழங்கிவருகிறது. சட்டவாக்க சேவைகள் திணைக்களமானது சபை ஆவண அலுவலகம், பாராளுமன்ற சட்டமூல அலுவலகம், குழு அலுவலகம், அமைச்சுசார் ஆலோசனைக் குழு, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு, அராசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு, உரைபெயர்ப்பாளர் அலுவலகம், நூலகம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

பாராளுமன்றத்தின் அமர்வுகளுடன் தொடர்புடைய எதிர்கால திட்டங்கள் மற்றும் கேள்விகளைக் கொண்ட ஒழுங்குப் புத்தகங்கள் மற்றும் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம் என்பவற்றைத் தயாரித்தல் மற்றும் அச்சிடுதல் சபை ஆவண அலுவலகத்தின் பிரதான செயற்பாடாகும். இதற்கு மேலதிகமாக பாராளுமன்ற அமர்வு தினமொன்றில் பாராளுமன்ற அமர்வுக்கான ஒழுங்குப் பத்திரம் மற்றும் கூட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அச்சிடப்படுவதும் இந்த அலுவலகத்தினாலாகும்.

பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான செயற்பாடான சட்டமியற்றும் செயற்பாட்டை அரசியலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளை ஒழுங்குவிதிகளுக்கு அமைய முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது சட்டவாக்கச் சேவைகள் திணைக்களத்தின் கீழ் உள்ள சட்டமூல அலுவலகத்தின் பணியாகும்.

பாராளுமன்றத்தில் பல குழுக்கள் செயற்படுவதுடன், சட்டமூலமொன்றை நிறைவேற்றுவதில் பெரும்பாலான பணிகள் குழுக்களினால் முன்னெடுக்கப்படுகின்றன. சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் கீழேயே இக்குழுக்கள் செயற்படுகின்றன. பாராளுமன்ற நிலையியற் கட்டளைகளுக்கு அமைய குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசாங்கத்தின் திட்டங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்தும் வழிகள் என்பவற்றை

இந்தக் குழுக்களிலேயே மிகவும் ஆழமாக ஆராய்கின்றனர். இலங்கைப் பாராளுமன்றத்தில் விசேடமான முக்கிய குழுக்கள் செயற்படுகின்றன. விசேட குழுக்கள், மேற்பார்வைக் குழுக்கள், அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் மற்றும் சட்டவாக்க நிலையியற் குழுக்கள் என அவை பெயரிடப்பட்டுள்ளன.

பாராளுமன்ற அமர்வு நாட்களில் சபாமண்டபத்தில் உள்ள கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு சிங்களம்/ ஆங்கிலம், சிங்களம்/ தமிழ், தமிழ்/ ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் உரைப்பெயர்ப்பு சேவைகளை வழங்குவது பாராளுமன்ற உரைபெயர்ப்பு அலுவலகத்தினாலாகும். துறைசார் மேற்பார்வைக் குழு கூட்டங்கள் மற்றும் குழு அறைகளில் நடைபெறும் பிற கூட்டங்களில் அவசியப்படும்போது இந்த அலுவலகத்தினூடாக உரைபெயர்ப்பு சேவைகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்காக பிரத்தியேகமான முறையில் முழுமையான முறைமையிலமைந்த நூலகம் காணப்படுகின்றது. அரசியல், வரலாறு, பொருளாதாரம் மற்றும் சமூகவியல் போன்ற பல்வேறு விடயப்பரப்பில் 30,000 கட்டுரைகளின் தொகுப்பு இந்த நூலகத்தில் காணப்படுகிறது. பாராளுமன்ற விவாதங்கள், ஹன்சாட் அறிக்கைகள், சட்டங்கள், அறிக்கைகள் மற்றும் சட்டமூலங்கள், அரச வர்த்தமானிகள், பாராளுமன்ற வெளியீடுகள், நிர்வாக அறிக்கைகள்/ வருடாந்த அறிக்கைகள் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் உறுதிமொழிகள்/ பிரமாண குறிப்புக்கள் போன்ற மதிப்புமிக்க ஆவணங்களும் இந்நூலகத்தில் பாதுகாப்பாகப் பேணப்பட்டு வருகின்றன. மேலும் இந்த நூலகத்தில் நவீன தகவல் தொடர்பு சாதனங்களும் இணைய வசதிகளும் காணப்படுகின்றமை விசேட அம்சமாகும். பாராளுமன்ற நூலகத்தால் செயற்படுத்தப்பட்ட ஆவணப் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சுமார் 3.3 மில்லியன் மதிப்புமிக்க ஆவணங்கள் இலத்திரனியல் மயப்படுத்தப்பட்டுள்ளன.

### தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களம்

தகவல் முறைமைகள் மற்றும் முகாமைத்துவத் திணைக்களத்தினால் பாராளுமன்றத்தின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத் தேவைகள் கையாளப்படுகின்றன. இத்திணைக்களமானது 2004 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சேர்த்துக்கொள்ளப்பட்டது. "இலங்கையில் சனநாயகத்துக்காகவும், அபிவிருத்திக்காகவும் பாராளுமன்றத்தை நவீனமயப்படுத்தல்" என்ற இலங்கை அரசாங்கத்தின் திட்டத்திற்கு அமைய இத்திணைக்களம் உருவாக்கப்பட்டது. இதன்படி, இத்திணைக்களமானது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகாமைத்துவத்தை பாராளுமன்றத்தில் நிறுவுவதற்கு பொறுப்பளிக்கப்பட்டுள்ளதோடு, "e-Parliament" எனும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப மூலோபாய செயன்முறையையும் செயல்படுத்துகின்றது. கடந்த சில வருடங்களில் e-Parliament ஆனது குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை அடைந்திருப்பதுடன், பாராளுமன்றத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளம் பல்வேறு விருதுகளையும் வென்றுள்ளது.

### தொடர்பாடல் திணைக்களம்

பாராளுமன்றத்தின் செயற்பாடுகளை சமூகமயமாக்கும் நோக்கில் 2019 ஆம் ஆண்டில் புதிதாக தொடர்பாடல் திணைக்களம் உருவாக்கப்பட்டது. இலங்கை பாராளுமன்றம், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பிரஜைகள் 'ஊடகங்கள்' சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் சமூக குழுக்களுக்கிடையிலான இடைத்தொடர்பின் தரத்தை மேம்படுத்தல் இத்திணைக்களத்தின் பிரதான நோக்கமாகும். தற்போதைய பாராளுமன்றத்தை ஒரு திறமையான மக்கள் மையமாகக் கொண்ட பாராளுமன்றமாக அபிவிருத்தி செய்வதுடன், அங்கு இடம்பெறும் தகவல்களை மக்கள்

மத்தியில் கொண்டுசென்று அவர்களையும் பங்குதார்களாக மாற்றுவதும் இத்திணைக்களம் உருவாக்கப்பட்டதன் நோக்கமாகும். வெகுஜன ஊடகங்கள், விருந்தோம்பல், பொதுமக்கள் தொடர்புகள், சந்தைப்படுத்தல், விளம்பரமாக்கல், டிஜிட்டல் அல்லது சமூக ஊடகங்கள் மற்றும் தொடர்பாடல் போன்ற துறைகளில் தொடர்பாடல் திணைக்களம் சிறந்த பணிகளை மேற்கொண்டு வருகின்றது. தொடர்பாடல் திணைக்களம் ஊடகப் பிரிவு மற்றும் பொதுமக்கள் வெளிக்கள பிரிவு ஆகிய இரு பிரதான பகுதிகளை கொண்டுள்ளது. அத்தோடு நவீனமயமாக்கப்பட்ட ஊடக நிலையத்தையும் இந்த திணைக்களம் கொண்டுள்ளது.

### உள்ளகக் கணக்காய்வு அலுவலகம்

அரசாங்கத்தின் சுற்றுநிருபம் மற்றும் நிதி ஒழுங்குமுறைகளுக்கு அமைய செயற்படுத்தப்படுதல், அரசாங்கத்தின் வளங்கள் வினைத்திறனாகப் பயன்படுத்தப்படுதல் என்பவற்றை அப்படையாகக் கொண்டு உள்ளகக் கணக்காய்வு அலுவலகம் பாராளுமன்றத்தில் செயற்படுகிறது. கணக்காய்வு மற்றும் நிர்வாகக் குழுக் கூட்டத்தை நடத்துவதும் இந்த அலுவலகத்தினால் முன்னெடுக்கப்படும் பணியாகும்.

### வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகம்

இலங்கை பாராளுமன்றத்தில் செயற்படும் வெளிநாட்டு உறவுகள் மற்றும் ஒழுங்கு மரபுகள் அலுவலகம் ஊடாக சர்வதேச மாநாடுகள், செயலமர்வுகள், வெளிநாட்டுப் பயணங்கள், கூட்டங்கள், கற்றல் சுற்றுலாக்கள் போன்றவற்றக்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். பாராளுமன்றத்தின் நட்புறவு அமைப்புக்களுடான செயற்பாடுகளும் இந்த அலுவலகத்தின் ஊடாகவே முன்னெடுக்கப்படும்.

# பாராளுமன்றத்தில் சட்டத்தை நிறைவேற்றும் நடைமுறை

எச்.டி. எதிரிவீர குணசேகர
ஊடக அதிகாரி - தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
edirigunas@gmail.com



அரசியலமைப்பின் 75வது உறுப்புரையின் கீழ் சட்டங்களை இயற்றுவதற்கான அடிப்படை சட்டவாக்க அதிகாரம் பாராளுமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. கடந்தகாலத்தையும் உள்ளடக்கும் பயன்கொண்ட சட்டங்களை இயற்றுவது உள்ளிட்ட சட்டவாக்க அதிகாரம், அரசியலமைப்பின் ஏதேனும் ஏற்பாட்டை நீக்குவது அல்லது திருத்துவது அல்லது ஏதேனும் புதிய ஏற்பாட்டை சேர்ப்பது போன்ற அதிகாரங்கள் பாராளுமன்றத்துக்கு உள்ளது. சகல அரசியலமைப்பு யோசனைகளும் வரைபுகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அரசாங்கத்தின் சட்டமூலம், பாராளுமன்ற உறுப்பினர்களின் தனிநபர் சட்டமூலம் போன்று பல்வேறு வகையான சட்டமூலங்களை நிறைவேற்ற பல்வேறு நடைமுறைகள் உள்ளன.

அமைச்சரவை அந்தஸ்துள்ள உறுப்பினர் ஒருவரினாலேயே அரசாங்கத்தின் சட்டமூலமொன்றை சமர்ப்பிக்க முடியும். சம்பந்தப்பட்ட அமைச்சினால் தயாரிக்கப்படும் முதலாவது வரைபை உத்தியோகபூர்வ வரைபாகக் கலந்துரையாட முன்னர் அதனை சட்டவரைஞர் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படும். அதன் பின்னர் குறித்த வரைபு அரசியலமைப்புக்கு உட்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிப்பதற்கு சட்ட மாஅதிபருக்கு அனுப்பிவைக்கப்படும். அரசியலமைப்பின் 77வது உறுப்புரையின் கீழ் இதற்கான அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து சட்ட மாஅதிபரின் உறுதிப்படுத்தலுடன் சட்டவரைபு அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்படும். சட்டவரைபை வர்த்தமானியில் வெளியிடுவதற்கும், பாராளுமன்றத்தில் அதனை முன்வைப்பதற்கும் அமைச்சரவையின் அனுமதி அவசியமாகும். சட்டமூலமாக பாராளுமன்றத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவது முதலாம் மதிப்பீடு எனப்படும். முன்வைக்கப்படும் சட்டமூலம் தொடர்பான இரண்டாவது மதிப்பீடு பிரதான விவாதமாக அமைவதுடன், இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்கள் குறித்த விடயதானம் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைப்பதுடன், சட்டமூலத்தை முன்வைப்பதற்கான பிரதான நோக்கம் உள்ளிட்ட பல விடயங்கள் விரிவாகக் கலந்துரையாடப்படும். இரண்டாவது மதிப்பீடு வாக்கெடுப்புக்கு விடப்பட்ட பின்னர் இச்சட்டமூலம் முழுப்பாராளுமன்றக்


குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுவதுடன், சட்டவாக்க நிலையியற்குழு அல்லது விசேட தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

எவ்வாறு இருந்தபோதும், அரசியலமைப்பின் 121வது உறுப்புரையின் பிரகாரம் எவராவது ஒரு பிரஜையினால், சட்டமூலம் நீதிமன்றமொன்றில் சவாலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில், நீதிமன்றம் தனது தீர்ப்பினை வழங்கும்வரை அல்லது மனுத்தாக்கல் செய்த திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடிவடையும்வரை அல்லது இவை இரண்டில் முதலாவதாக வரும் திகதிவரை குறித்த சட்டமூலம் தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையையும் பாராளுமன்றம் முன்னெடுக்க முடியாது.

மூன்றாவது மதிப்பீட்டின் போது குழுநிலையில் திருத்தம் பிரேரிக்கப்பட்டால் குறித்த திருத்தத்துடன் சட்டமூலம் நிறைவேற்றப்படும். சட்டமூலமொன்று சட்டமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமாயின் சபாநாயகர் புறக்குறிப்பீடு செய்து தனது சான்றுப்படுத்தலை வழங்க வேண்டும். இதற்கு அரசியலமைப்பின் 80வது உறுப்புரையின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

# பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை தொடர்பான அறிமுகம் மற்றும் ஹன்சாட் அறிக்கையின் முதலாவது தொகுதி

குணவதி பிடவல
உதவி ஹன்சாட் பதிப்பாசிரியர்
இலங்கை பாராளுமன்றம்
guna_p@parliament.lk



පාර්ලිමේන්තු විවාද
(හැන්සාඩ්)

**பாராளுமன்ற விவாதங்கள்**
(ஹன்சாட்)

**PARLIAMENTARY DEBATES**
(HANSARD)

பாராளுமன்ற அமர்வுகள் தொடர்பான தினசரி அதிகார அறிக்கையான பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கை "பாராளுமன்றத்தின் உண்மையான கண்ணாடி" (True mirror of Parliament), மற்றும் "வரலாற்றின் செவிவழிப்பதிவு" (Auditory of history) என்ற புகழ்நாம பெயர்களுடன் அழைக்கப்படுகின்றது. இது பாராளுமன்றம் தொடர்பாக அறிவினைப் பெறவிருப்பும் ஒருவருக்கு சிறந்ததொரு பொக்கிஷமாகவும் விளங்குகின்றது.

17 வது நூற்றாண்டு வரையான கால பாராளுமன்ற வரலாற்றுக்கு உரிமை கோருகின்ற பாராளுமன்ற ஹன்சாட் அறிக்கையானது, 1870 ஆம் ஆண்டு பிரித்தானிய கிரீடத்தின் கீழ் நிறைவேற்றுப் பேரவை மற்றும் சட்டவாக்கப் பேரவையூடாக நாடு ஆட்சிசெய்யப்பட்டபோதே இலங்கையில் ஹன்சாட் பிறந்தது. எமது ஹன்சாட் அறிக்கையை உலகின் வளர்ச்சியடைந்த நாடுகளின் ஹன்சாட் அறிக்கைகளுக்கு சமமாக தரமானதாகப் பேணக் கூடியதாகவுள்ளது. 1833 ஆம் ஆண்டின் Ceylon Hansard அறிக்கையிலிருந்து அனைத்து ஹன்சாட் அறிக்கைகளும் நூலகத்தில் மிகவும் கவனமாகப் பாதுகாக்கப்படுவதால், எந்தத் தரப்பினரும் இவற்றைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக் கிடைத்துள்ளது.

இந்த அதிகாரபூர்வ அறிக்கைக்கு "ஹன்சாட்" எனப் பெயர் வரக்காரணம், பிரித்தானிய பாராளுமன்றத்தில் ஆவண அச்சிடல் நடவடிக்கைகளுக்கு பொறுப்பான செயற்பட்ட லுக் ஹன்சாட் அவரது மகன் தோமஸ் கர்ஸன் ஹன்சாட் (Thomas Curson Hansard 1776 - 1833) மற்றும் பேரப்பிள்ளைகளின் முதற் பெயர் ஹன்சாட் எனத் தொடங்கியதாலாகும்.

ஆரம்ப காலத்தில் ஹன்சாட் அறிக்கைகள் ஆங்கில மொழியில் மாத்திரம் வெளியிடப்பட்டன. ஏனெனில் அக்காலத்தில் உரையாற்றியவர்கள் ஆங்கில மொழியில் மாத்திரமே உரைகளையாற்றியிருந்தனர். இருந்தபோதும், இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பேச்சாளர்கள் தமது உரைகளை சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் ஆற்றியதன் காரணமாக அவர்கள் உரையாற்றுகின்ற மொழியிலேயே ஹன்சாட் அறிக்கையில் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

## ஹன்சாட் அறிக்கையின் முக்கியத்துவம்

- ஜனநாயகத்தின் கீழ் நீங்கள் வாக்களித்த மற்றும் உங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்கள் கூறுகின்ற விடயங்களுக்கான அணுகல் முக்கியமானதாகும். சபை அமர்வுகள் நடைபெறும் தினங்களில் சபையில் நடக்கின்ற விடயங்களை அங்கு நடந்தவாறே அறிந்துகொள்ளக்கூடிய வகையில் உரையாற்றுபவர்களின் மொழியில், அவர்கள் உச்சரித்த சொற்பதங்கள் மாறாதவகையில் ஹன்சாட் அறிக்கைகளில் பதிவிடுவது முக்கியமான பொறுப்பாகும். இலங்கையின் ஜனநாயகம் சகலருக்கும் அணுகக் கூடியதாகவும், வெளிப்படையானதாகவும் உள்ளது என்பதை இது உறுதிசெய்கிறது.
- பாராளுமன்ற விவாதங்களின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை அறிந்து கொள்வதற்கு,
- அந்தந்த கால பகுதிகளுக்கு உட்பட்ட சமூக, அரசியல், சமய, கலாச்சார மற்றும் பொருளாதார விடயங்கள் தொடர்பாக தகவல்களை பெற்றுக் கொள்வதற்கு,
- (பொது மனுக்கள், வாய்மூல விடைக்கான கேள்வி மற்றும் பதில்கள், எழுத்து மூல விடைக்கான கேள்விகள் மற்றும் பதில்கள், பிரதமரிடம் கேட்கப்படும் கேள்வி மற்றும் பதில்கள், அமைச்சுகளின் அறிவித்தல்கள், தனிப்பட்ட விளக்கங்கள், சிறப்புரிமை தொடர்பான கேள்விகள், சபை ஒத்திவைப்பு நேரத்தில் கேட்கப்படும் கேள்விகள் போன்ற அனைத்து விடயங்களும் அந்தந்தக் காலப் பிரிவு தொடர்பான சமூகப் பிரச்சினை என்பதால் அக்காலத்தில் இலங்கையின் சமூகம் தொடர்பான தெளிவைப் பெறுவதற்கு ஹன்சாட் உதவியாகவிருக்கும்)
- வேறு உறுப்பினர்கள் சபையில் முன்னர் கூறிய கருத்துக்கள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு,

  (ஹன்சாட் அறிக்கையின் திகதி மற்றும் பக்க இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டு மேற்கொள்களை முன்வைப்பார்கள். பெரும்பாலான விவாதங்களில் இவ்வாறு குறிப்பிடப்படுவதை அவதானிக்க முடியும்)
- அந்தந்தப் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்கள் பற்றிய விபரங்களை அறிந்துகொள்வதற்கும்,
- அந்தந்த பாராளுமன்ற காலப்பிரிவுகளிலிருந்த அமைச்சர்கள் (Portfolio) பற்றி அறிந்துகொள்வதற்கு, (சகல தொகுதியின் முதலாவது பதிப்பில் இது தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்)
- ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அரசியல் அபிப்பிராயம் தொடர்பாக அறிந்து கொள்வதற்கு,
- உறுப்பினர்களின் கருத்துப் பரிமாற்றத்திற்கு,
- சட்ட ரீதியான விடயங்கள் தொடர்பில் அடிப்படையின் மூலதாரமாக,

  (நீதிமன்ற வழக்குகளில் ஏதேனும் ஒரு சாட்சியை ஒப்புவிக்கும் போது ஹன்சாட் அறிக்கையானது உண்மையானதும் நியாயமான ஆவணமாக செயற்படுகிறது. Pepper v Hart (1993) AC 593 எனும் வழக்கின் மூலம் இது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. இதற்கேற்ப ஆரம்ப நீதிமன்ற வழக்காடும் செயற்பாடுகளின் போது அமைச்சர்கள் மற்றும் வேறு சட்டமூல நிபுணர்கள் பாராளுமன்றத்தில் தெரிவித்த கருத்துக்கள் நீதிமன்றத்தினால் அந்தந்த சூழ்நிலைகளைக் கருத்தில்கொண்டு நீதிமன்றத்தால் ஆராயப்படலாம். அதில் சட்டமூலத்தை சமர்ப்பித்த அமைச்சரின் நோக்கங்கள் என்னவென்பதை கருத்தில் எடுக்க முடியும். இதற்கமைய 1993ஆம் ஆண்டிலிருந்து வழக்கொன்றில் சாட்சியாக விசேடமாக ஹன்சாட் பயன்படுத்தப்படுவதைக் காணக்கூடியதாகவுள்ளது.)
- இலங்கையின் அரச மொழிகளான சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளிலும், இணைப்பு மொழியான ஆங்கிலத்திலும் உறுப்பினர்கள் உரையாற்றுவதாலும், முக்கிய ஆவணங்கள் மும்மொழிகளிலும் அறிக்கையிடப்படுவதால் மொழியைக் கற்கும் ஒரு கருவியாக,

(20ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கூடுதலான விவாதங்கள் ஆங்கில மொழியிலேயே முன்னெடுக்கப்பட்டமையால் அதிகமானவர்கள் தமது கற்றல் தேவைகளுக்காக ஹன்சாட்டைப் பயன்படுத்தியமைக்கான சான்றுகள் உள்ளன.)

- உரை பெயர்ப்பு மற்றும் மொழி பெயர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் தமது திறனை விருத்திசெய்வதற்கான கற்றல் கருவியாக,
- எழுத்தாளர்கள், ஹன்சாட் அறிக்கையாளர்கள் பேன்ற தொழில் திறன்களை பெற எதிர்ப்பார்ப்பவர்களுக்கான கற்றல் சாதனமாக,
  (தமது எழுத்து வேகத்தை அதிகரிப்பதுடன் பாராளுமன்ற மொழிகள் தொடர்பான அறிவினை பெற்றுக் கொள்ளலாம்)

ஹன்சாட் அறிக்கை என்பது அன்றாட பாராளுமன்ற செயற்பாடுகளை காலக்கிரம வரிசையில் கொண்ட அறிக்கையாகும். பாராளுமன்ற உறுப்பினர்கள் உரையாற்றும் மொழிகளில், ஹன்சாட் அறிக்கையாளர்களால் உரையாற்றும் உச்சரிப்புக்களுடனேயே பதிவுசெய்யப்பட்டு அந்தந்த மொழிகளில் கணினி மயப்படுத்தப்பட்டு, பாராளுமன்றத்துக்குப் பொருத்தமற்ற சொற்கள் தொடர்பில் நிலையியற் கட்டளைகளுக்கு அமைய சபைக்குத் தலைமைதாங்கும் உறுப்பினரின் கட்டளைக்கு அமைய செயற்பட்டு, உதவி ஹன்சாட் பதிப்பாசிரியர், பிரதி ஹன்சாட் பதிப்பாசிரியர், ஹன்சாட் பதிப்பாசிரியரின் ஒப்புநோக்குதலின் பின்னர் ஒவ்வொரு நாளைக்குமான திகதியில் அச்சிடப்பட்ட ஹன்சாட் அறிக்கையாக வெளியிடப்படும். இதனை https://www.parliament.lk/si/business-of-parliament/hansard எனும் இணைய இணைப்பின் மூலம் தரவிறக்கம் செய்து பயன்படுத்தலாம்.

## ஹன்சாட் அறிக்கை - முதலாவது தொகுதி

சாதாரண ஹன்சாட் அறிக்கையைவிட ஹன்சாட் அறிக்கையின் முதலாவது தொகுதி, அதிலும் முதலாவது தொகுதியின் முதலாவது தொகுப்பு முக்கியம் வாய்ந்ததாக அமைவதற்குக் காரணம் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களாகும். ஜனநாயகத்தின் உச்சம் என வர்ணிக்கப்படும் பாராளுமன்றமானது, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் சமூக முன்னேற்றத்திற்கு அமைய அதற்கு ஏற்றாற்போல் புத்தாக்கம் பெற்று, அரசியலமைப்பு மற்றும் நிலையியற் கட்டளைகளுக்கு உள்ளடங்கி அதன் விடயங்கள் (Scope) அதற்கு ஏற்ற அமைப்பில் புத்தாக்கம் பெற்று அரசியலமைப்புக்கு மற்றும் நிலையியற் கட்டளைக்கு மாற்றங்களை ஏற்படுத்தும் சகல சந்தர்ப்பங்களிலும் அதற்கு ஏற்ற முறையில் ஹன்சாட் அறிக்கையிலும் அதற்கு பொருத்தமாக முதலாவது தொகுதியிலும் அதனுடன் தொடர்புபட்ட முதலாவது தொகுப்பிலும் வெளிப்படுத்தி இது தொடர்பாக சமூகத்தை தெளிவுபடுத்தி சமூகத்தினால் நடக்கவேண்டிய விடயங்களை தெளிவாக விளக்கப்படுத்தியுள்ளதை கடந்த கால ஹன்சாட் அறிக்கைகளை ஆராய்வதன் மூலம் அறியலாம்.

ஒருவர் தனது கடமைக்குத் தேவையான அனைத்து தகவல்களையும் மனப்பாடம் செய்ய முடியாது என்பதால், தகவல்களை மனப்பாடம் செய்வதோடு, தகவல்களை விரைவாக அணுகுவதையும் அறிந்திருப்பது செயற்திறனை மேம்படுத்த தேவையான காரணியாகும். மேலும், ஒரு துறையின் வரலாற்றை அறிந்துகொள்ள அவ்வாறு செய்வது இலகுவானதாக அமையும். எனவே, ஹான்சாட் அறிக்கை தயாரிப்பின் தன்மை குறித்து அறிந்திருப்பது அதன் தகவல்களை அணுகுவதை எளிதாக்கும் தற்போதுள்ள ஹன்சாட் அறிக்கைகளின் பிரகாரம் முதலாவது தொகுதி 1924 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் 1933 ஆம் ஆண்டு தொடக்கம் 1947 ஆம் ஆண்டு வரையான ராஜ்ய சபை காலப் பகுதியில் (முதலாவது ராஜ்ய சபை 1931-1935, இரண்டாவது ராஜ்ய சபா 1936-1947) ஒவ்வொரு வருடமும் முதலாவது தொகுதி வெளியிடப்பட்டது என்பதை அறிகின்றோம். அதன் பிறகு பாராளுமன்ற-பிரதிநிதிகள் சபை 1947 ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும், 1972-ல் தேசிய அரசுப்பேரவை உருவாக்கப்பட்ட சந்தர்ப்பத்திலும், 1978ஆம்

ஆண்டில் இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் பாராளுமன்றம் அமைந்த சந்தர்ப்பத்திலும் புதிய ஹன்சாட் அறிக்கைத் தொகுதிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு 1978 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட முதல் தொகுதியின் 276வது தொகுதியின் 6வது இலக்க ஹன்சாட் 2020 பெப்ரவரி 06ஆம் திகதி எட்டாவது பாராளுமன்றத்தின் கடைசிநாளன்று வெளியிடப்பட்டது.

ஹன்சாட் அறிக்கையின் ஒவ்வொரு தொகுதியின் முதல் தொகுப்பின் உள்ளடக்கங்களில் பல முக்கியமான விடயங்கள் உள்ளடங்கியிருக்கும். அதில் அப்போதைய பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்திய உறுப்பினர்களில் பெயர் விபரம் (தொகுதி/ தேசியப்பட்டியல் மூலமாக/ அதுபோல் உறுப்பினருக்கு பதிலாக நியமனம் பெற்றவர் ஆயின் அவர் நியமனம் பெற்ற போன்ற விடயங்களும் உள்ளடங்குகின்றன) அமைச்சரவை, அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பிரதி அமைச்சர்களின் பெயர் பட்டியல்கள், தவிசாளர்களின் பெயர் விபரங்கள், பாராளுமன்ற குழு, அமைச்சரவை ஆலோசனை குழுக்கள், விசேட குழுக்களை உள்ளடக்கிய உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட பாராளுமன்ற அதிகாரிகளின் பெயர் விபரங்கள் என காலத்துக்கேற்ற பல விடயங்கள் மும்மொழிகளிலும் ஹன்சாட் அறிக்கையில் உள்ளடங்கியிருக்கும். இவை அந்தந்த பாராளுமன்ற சபை நடவடிக்கைகளுக்கு மேலதிகமாகவே சேர்க்கப்பட்டிருக்கும்.

முதலாவது தொகுதி வெளியிடப்படுகின்றது சந்தர்ப்பங்களிலும் அதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் பொதுவான விடயங்கள் புதுப்பிக்கப்படுகின்றன. உங்களுக்கு யாரேனும் ஒரு உறுப்பினர் அல்லது அமைச்சரின் அமைச்சுக்கள் (portfolio) தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள வேண்டி இருப்பின் அக்காலப் பகுதிக்கான முதலாவது இலக்கத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம். எமது நாடு சுதந்திரம் பெற்றுவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னரே முதலாவது பாராளுமன்றம் - பிரதிநிதிகள் சபை கூடியது. 1947 ஒக்டோபர் மாதம் 14ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10:00 மணிக்கு அது கூடியபோது அதனுடன் தொடர்புபட்ட முதலாவது தொகுதியின் முதலாவது இலக்கத் தொகுப்பு வெளியிடப்பட்டது.

அன்று பிரதிநிதிகள் சபைக்கு Clark ஆகவிருந்த (தற்போது பாராளுமன்ற செயலாளர் பதவி) சென்ட் லுவிஸ் பீரிஸ் தெரணியகல அவர்கள், ஆளுனரினால் அனுப்பப்பட்ட சபையை கூட்டுவதற்கான அறிவிப்பை வாசித்ததன் பின்னர் சபையில் இடம்பெற்ற செயற்பாடு சபாநாயகரைத் தேர்ந்தெடுப்பதாகும். இதன்போது தபால் மற்றும் தொலைத்தொடர்பு அமைச்சராகவிருந்த கௌரவ சி. பொன்னம்பலம் மற்றும் கௌரவ எஸ்.யூ.எதிர்மானசிங்கம் (பட்டிருப்பு) ஆகியோரின் பிரேரணை உறுதிப்படுத்தலுடன், கௌரவ அலெக்சாண்டர் பிரான்சிஸ் மொலமுரே (பலாங்கொடை) அவர்களின் பெயரும், கௌரவ விட்மட் ஏ பெரேரா (மத்துகம) மற்றும் கௌரவ ஏ.எஸ். தம்பையா (ஊர்காவற்துறை) அவர்களின் பிரேரணை உறுதிப்படுத்ததலுடன் கௌரவ வில்மட் ஸ்ரீ நிசங்க அவர்களது பெயரும் முன்மொழியப்பட்டன. இதில் மொலமுரே அவர்களுக்கு 58 வாக்குகளும், ஸ்ரீநிசங்க அவர்களுக்கு 41 வாக்குகளும் கிடைக்கப்பெற்றதுடன், 02 உறுப்பினர்கள் வாக்களிப்பில் இருந்து தவிர்ந்து கொண்டனர். கௌரவ மொலமுரே அவர்கள் சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டார். (1931 ஜூலை 7ஆம் திகதி முதல் 1934 டிசம்பர் 10 ஆம் திகதி வரையான ராஜ்ய சபையில் சபாநாயகராகப் பதவி வகித்த மொலமுரே அவர்கள் 1947 ஒக்டோபர் 14ஆம் திகதியிலிருந்து 1951 ஜனவரி 25 ஆம் திகதி வரை இப்பதவியை வகித்துள்ளார்) சபை நடவடிக்கைகள் அன்றைய தினம் பிற்பகல் 2:55 க்கு முற்றுப்பெற்றது. அன்றையதினத்தின் சபை நடவடிக்கைகள் அனைத்தும் ஆங்கில மொழியில் மாத்திரம் இடம்பெற்றுள்ளதாக அறியமுடிகிறது. கௌரவ ப்லோரன்ஸ் சேனநாயக்க அவர்கள் (கிரிஎல்ல), கௌரவ குசுமசிறி குணரத்ன அவர்கள் (அவிசாலை) மற்றும் தமரா கௌரவ குமாரி இலங்கரத்ன (கண்டி) ஆகியோர்களை உள்ளடக்கிய அப்பாராளுமன்ற பிரதிநிதிகள் சபையில் பெண்களின் பிரதிநிதித்துவம் நூற்றுக்கு 2.97 வீதமாக அமைந்தது.

மூலம் : 1947 பாராளுமன்ற பிரதிநிதித்துவ சபை ஹன்சாட் அறிக்கையின் முதலாவது தொகுதி

# பாராளுமன்றத்தின் அதிகாரச் சின்னம் மற்றும் பெருமை - செங்கோல்

சௌமிய ஏக்கநாயக்க
ஊடக அதிகாரி - தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
saumya_e@parliament.lk



பெரும்பாலான பொதுநலவாய நாடுகளில் பாராளுமன்றங்களின் இயற்பியல் அடையாளமாகவும், பாராளுமன்றத்துக்குள் சபாநாயகரின் அதிகாரச் சின்னமாகவும் செங்கோல் காணப்படுகிறது. இலங்கை பாராளுமன்ற பாரம்பரியத்துக்கு அமைய பாராளுமன்ற அமர்வொன்று செல்லுபடியாக வேண்டுமாயின் சபைக்குள் செங்கோல் வைக்கப்பட்டிருப்பது அத்தியாவசியமானதாகும்.

கடந்த காலத்தில் பிரித்தானிய அரசர் முன்னிலையில் தனிப்பட்ட பாதுகாவலர் அரசுச்சின்னத்தைக் கொண்டு பயணிப்பார். பிரித்தானிய அரசர் பாராளுமன்றத்துக்குள் வந்தவுடன் அரசுச்சின்னத்தை பாதுகாவலர் அரசர் முன்னிலையில் வைப்பார். பின்னரான காலப்பகுதியில் அரசருக்குப் பதிலாக பாராளுமன்ற அமர்வுக்கு அரசின் பிரதிநிதியாக சபாநாயகர் தலைமைதாங்கினார். கௌரவ சபாநாயகருக்கு மதிப்பளிக்கும் வகையிலும், அரசரின் அதிகாரத்தை சபாநாயகருக்கு வழங்கியிருப்பதைப் பறைசாற்றும் வகையிலும் அரசின் சின்னமாக செங்கோல் வழங்கப்பட்டதுடன், அரசரின் தனிப்பட்ட பாதுகாவலருக்குப் பதிலாக படைக்கலசேவிதரும் கடமைக்கு அமர்த்தப்பட்டார். இங்கு செங்கோல் அரசருக்குக் காணப்படும் இறையான்மையின் அடையாளமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இலங்கை பிரித்தானியாவின் காலனியாக இருந்த காலத்தில் பாராளுமன்ற ஜனநாயகம் நிறுவப்பட்டதிலிருந்து இதுவரை இலங்கையில் பாராளுமன்றத்தில் இந்த நடைமுறையே பின்பற்றப்பட்டு வருகிறது. இதற்கமைய படைக்கலசேவிதர் செங்கோலைத் தனது தோளில் தாங்கியவாறு முன்செல்ல, அவரைப் பின்தொடர்ந்து சபாநாயகர், பாராளுமன்ற செயலாளர் நாயகம் உள்ளிட்ட செயலாளர் குழுவினர் சபைக்குள் வருவார்கள். செங்கோலை வைப்பதற்கான தாங்கியில் செங்கோல் வைக்கப்பட்டதும் சபையின் நடவடிக்கைகள் ஆரம்பமாகும்.

இலங்கை பாராளுமன்றத்தில் உள்ள செங்கோல் சிங்கள கலை பாரம்பரியத்தைப் பறைசாற்றும் சிறந்ததொரு படைப்பாக அமைந்துள்ளது. இது 1949ஆம் ஆண்டு பிரித்தானிய பொதுச்சபையினால் இலங்கைப் பிரதிநிதிகள் சபைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இலங்கையின் கலை அடையாளத்தைப் பாதுகாத்து செதுக்கல் கலை சம்பிரதாயத்துக்கு அமைய அரசாங்கத்தின் லலித கலாலயத்தின் கலாநிதி எஸ்.பி.சார்ள்ஸ் அவர்களால் இதற்கான வடிவம் கொடுக்கப்பட்டது. அந்நாளில் பிரித்தானியாவின் பக்கிங்ஹாம் மாளிகையின் தங்க ஆபரணங்கள் தயாரிக்கும் 'ஜெராட்' எனும் இங்கிலாந்து நிறுவனத்தின் டயனியல் ஸ்பென்ஸர் என்ற படைப்பாளி இந்த செங்கோலைத் தயாரித்தார்.

இவ்வாறு உருவான செங்கோலின் எடை 28 இறாத்தல் அல்லது 12.5 கிலோகிராம் என்பதுடன், இதன் நீளம் 48 அங்குலமாகும். செங்கோலின் நிர்மாணமானது கீழைத்தேய கலைப்படைப்புக்களில் பரிசுத்தத்தின் அடையாளமாகப் பயன்படுத்தப்பட்ட தாமரையை தொனிப்பொருளாகக் கொண்டுள்ளது. வெள்ளி, 18 கரட் தங்கம் மற்றும் நீலமாணிக்கக் கற்கள் என்பவற்றினால் அலங்கரிக்கப்பட்டு கருங்காலி மரத்தினால் செய்யப்பட்டுள்ள செங்கோல் 28 அங்குலம் நீளமாகும். இதன் கீழ் பகுதி தங்கம் மற்றும் வெள்ளியாலான தாமரை செதுக்கலுடன் முடிவடைகிறது. கருங்காலி மரத்திலான பகுதி எட்டுப் பக்கங்களைக் கொண்டதாக அமைந்துள்ளது. இது வெள்ளியால் முடிவடைகிறது.

அதற்கு மேலே பூமியின் நான்கு திசைகளையும் குறிக்கும் வகையில் தாமைரைப் பூவின் வடிவம் கொண்ட வெள்ளி மற்றும் 18 கரட் தங்கத்தினாலான நான்கு செதுக்கல்கள் காணப்படுகின்றன. அதனுடன் அருமையான சதுர வடிவ கனவுருவொன்று இணைந்துள்ளது. நிலைபேறான தன்மையை குறிக்கும் வகையில் சூரியன் மற்றும் சந்திரன், முன்னோக்கிச் செல்வதை குறிக்கும் வகையில் சக்கரமும் செழிப்பை குறிக்கும் வகையில் கலசமும் அதன் நான்கு பக்கங்களிலும் செதுக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேல் 6 அங்குல விட்டத்துடன் கூடிய தங்கம் மற்றும் வெள்ளியிலான உருண்டையே செங்கோலின் முக்கிய பகுதியாகும். இதன் இரு பக்கத்திலும் வாள் ஏந்திய சிங்கம் தங்கத்தினால் செதுக்கப்பட்டுள்ளது. இந்த உருண்டைப் பகுதிக்கு மேல் நீல மாணிக்கக் கல்லும், தூய்மையின் அடையாளமாக பளிங்கும் காணப்படுகிறன.

தங்கம், வெள்ளி மற்றும் விலைமதிப்பற்ற மாணிக்கக்கல்லை கொண்டு உள்ளூர் செதுக்கல் கலையினால் அலங்கரிக்கப்பட்டுள்ள செங்கோல் இலங்கை பாராளுமன்றம் பறைசாற்றும் உயர்வான ஜனநாயகத்தின் முழுமையான அடையாளமாகும்.

செங்கோல் சபாமண்டபத்தில் வைக்கப்பட்டிருக்கும் போது அதனைத் தொடுகின்ற அல்லது அதனை உயர்த்துகின்ற எவரேனும் உறுப்பினர் பாரதூரமான ஒழுங்கீனத்தைப் புரிகின்றார் என்பது நிலையியற் கட்டளை 77இன் கீழ் ஏற்றுக்கொள்ளப்படும். அவ்வாறான சந்தர்ப்பத்தில் 77 (2)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்ற உறுப்பினரின் சேவை நான்கு வாரங்களுக்கு இடைநிறுத்தப்படும்.

# இலங்கையில் பெண்கள் அரசியல் மற்றும் அதன் பரிணாமங்கள்

புத்தினி ராமநாயக்க
பொது வெளிக்கள முகாமையாளர்
இலங்கை பாராளுமன்றம்
buddhiniuoc@gmail.com



எந்தவொரு தொழிலைத் தொடர்வதற்கும் அல்லது அத்துறையில் உச்சத்துக்கு செல்வதற்கும் பாலின அடையாளம் ஒரு தடையல்ல என அனைத்து நாகரீக சமூகங்களும் நம்புகின்றபோதும், உலகம் முழுவதிலும் விசேடமாக பெரும்பாலான பெண்கள் அரசியலில் நுழையும்போது முகங்கொடுப்பது கசப்பான அனுபவமாகவே அமைகிறது. இலங்கை அரசியலில் ஈடுபட்டுள்ள பெரும்பாலான பெண்கள் இந்த சிரமத்தை அறிந்துள்ளார்கள். எனவே, 21 வயதுக்கு மேற்பட்ட பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையைப் பெற்ற முதலாவது தெற்காசிய நாடு என்ற பெயர் இலங்கைக்கு 1931ஆம் ஆண்டு கிடைத்தது. உலகில் முதலாவது பெண் பிரதமரை கொண்டிருந்தபோதும், தற்போதைய அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவ விடயத்தில் தெற்காசிய நாடுகள் பலவற்றுடன் பின்தங்கியதாகவே இலங்கை காணப்படுகிறது.

இது ஆபிரிக்க ஆசியாவில் பெரும்பாலான மக்களைப் போல மூன்றாம் உலக நாடுகளுடன் மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நிலைமை அல்ல என்பதையும் குறிப்பிட வேண்டும். உலகம் முழுவதிலும் 46,064 பாராளுமன்ற உறுப்பினர்கள் காணப்படுவதுடன், இதில் 10,849 பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளனர். அவ்வாறாயின் உலகத்தில் பெரும்பாலான மக்களை பிரதிநிதித்துவம் செய்வது 35,215 ஆண் பாராளுமன்ற உறுப்பினர்களாகும். இதனூடாக உலகின் அதிகார சமநிலை இழக்கப்பட்டிருப்பதுடன், பெண்களின் சமத்துவம் பாதிக்கப்பட்டிருப்பது புலனாகிறது.

எவ்வாறாயினும், அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவத்தில் உயர்ந்த விகிதாசாரத்தைக் கொண்டுள்ள சில நாடுகள் அபிவிருத்தியடைந்த ஐரோப்பா அல்லது நோர்ட்டிக் நாடுகள் என்பதும் உண்மையாகும். அண்மைய கொவிட்-19 தொற்றுநோய் சூழலில் இவ்வாறான பல நாடுகளின் தலைவிகள் செயற்பட்ட விதம் பாராட்டப்பட்டது என்பதையும் மறக்க முடியாது. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகள்

- துணை சஹாரா ஆபிரிக்க நாடுகளில் தேசிய மட்டத்தில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவத்தை 30 வீதம் என்ற உயர்ந்த இடத்திற்கு கொண்டுவரத் தேவையான அரசியல் மூலோபாயங்கள் கடைப்பிடிக்கப்பட்டன.

உகண்டா பாராளுமன்றத்தில் உறுப்பினர்களின் எண்ணிக்கை 80 ஆகக் காணப்படுவதுடன், இதில் 64 வீதம் அல்லது 51 பெண்களை உறுப்பினர்களாக நியமித்துள்ளமை சிறந்ததொரு உதாரணமாகும்.

அரசியல் ரீதியான ஒதுக்கீட்டு முறையைப் பயன்படுத்தியதன் மூலமே, வேறுவிதமாகக் கூறுவதாயின் "கோட்டா" முறையைப் பயன்படுத்தியே உகண்டா இந்த நிலையை அடைந்துள்ளது. அந்நாட்டின் தேசிய, மாகாண மற்றும் பிராந்திய அரசியலில் 60 வீதம் கோட்டா அல்லது பங்கு கட்டாயம் பெண்களுக்கு வழங்கப்பட வேண்டும். இந்த முறையைப் பயன்படுத்தி 90களின் இறுதிப் பகுதியிலிருந்து 2000 இன் ஆரம்பம் வரையில் ஆபிரிக்க நாடுகள் தமது பெண்களுக்கு அரசியலில் சம வாய்ப்புக்களை வழங்குவதில் முன்னோடியாக அமைந்தன.

எமது நாட்டில் பெண்கள் அரசியலில் நுழையும்போது எதிர்கொள்ளும் தடைகள் யாவை என்பது சமூகத்தில் அடிக்கடி கேட்கப்படும் கேள்வியாகும். அனைத்து தெற்காசிய நாடுகளிலும், இலங்கையிலும் பெண்கள் அரசியலுக்குச் செல்லும்போது அவர்களின் குடும்பப் பின்னணி தீர்க்கமான காரணியாக இருப்பது அவதானிக்கப்படுகிறது. அத்தகைய அரசியல் குடும்பத்திலிருந்து வராத ஒரு சாதாரண குடும்பப் பெண்ணின் அரசியல் விருப்பம் சமூக அழுத்தம், நிதி ரீதியான பற்றாக்குறை போன்ற காரணிகளால் அவரின் பயணம் மந்தமாக அமைகிறது.

இலங்கை சட்டவாக்கப் பேரவைக்குத் தெரிவுசெய்யப்பட பெண்கள் தகுதியற்றவர்கள் என 1910, 1920, 1924 இல் வெளியான அறிக்கைகளின் ஊடாக இந்நிலைமை ஏற்பட்டது. 1978ஆம் ஆண்டு இலங்கை அரசியலமைப்பின் 12 (2) உறுப்புரைக்கு அமைய ஒரு நபர் இனம், மதம், மொழி, சாதி, பால் போன்ற காரணங்களால் விசேடமாக கவனிக்கப்பட அல்லது கவனிக்காமல்விடப்பட முடியாது. இந்த அரசியலமைப்பின் 26 (7) உறுப்புரையில் பெண்களுக்கு சம உரிமை வழங்கப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை அரசியலமைப்பில் காணப்படும் இந்த ஏற்பாடுகள் பெண்கள் அரசியலில் நுழையும்போது எதிர்கொள்ளக்கூடிய சட்டரீதியான தடைகளை தகர்த்தெறிகின்றன. இருந்தபோதும் கடந்த எட்டாவது பாராளுமன்றத்தில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்கள் 12ஆகக் காணப்பட்டதுடன், இது 6 வீதமாகும். அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் பெண் அரசியல் பிரதிநிதித்துவ தரவரிசைக்கு அமைய 138 நாடுகளில் 128வது இடத்திலேயே நாம் உள்ளோம். 51 வீத மக்கள் தொகையைக் கொண்ட இலங்கையில் பெண்களின் அரசியல் பிரதிநிதித்துவம் திருப்திகரமாக இல்லை என்பதே இதனால் கூறப்படுகிறது.

பெரும்பாலும் எங்களை ஒத்த சமூக, கலாசார மற்றும் மதப் பண்புகளைக் கொண்ட அண்டைய தெற்காசிய நாடுகள் தங்களின் பெண் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க "ஒதுக்கீட்டு முறையை" அரசியலமைப்பின் ஏற்பாடாகப் பயன்படுத்துகின்றன. கலாசார கட்டுப்பாடுகள் என்று நாங்கள் கருதும் சில நாடுகளில் அரசியலில் பெண்களின் பிரதிநிதித்துவம் நம்மைவிட மூன்று மடங்கு அதிகமாகும். உதாரணமாக அயல் நாடான இந்தியாவில் பாராளுமன்ற உறுப்பினர்களில் 2/3 வீதத்தைப் பெண்களுக்கு ஒதுக்குவது தொடர்பாக 1996ஆம் ஆண்டு முன்வைக்கப்பட்ட சட்டத்தை இன்றுவரை நிறைவேற்ற முடியவில்லை. 2010ஆம் ஆண்டு மாநிலங்களவையில் பெண்கள் பிரதிநிதித்துவம் 33 வீதமாகும். 2/3 பெண்களை நியமிப்பதற்கான ஒதுக்கீடு மாநிலங்களவையில் நிறைவேற்றப்படாவிட்டாலும் ஷிலாபர்ஷத் மற்றும் பஞ்சாயத் மட்டத்தில் நடைமுறையில் உள்ளது.

மூலம் - பாராளுமன்ற ஆய்வுப் பிரிவு

# இலங்கை பாராளுமன்றத்தின் சபா மண்டபத்துக்கான பிரதான கதவு

சௌமிய ஏக்கநாயக்க
ஊடக அதிகாரி - தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
saumya_e@parliament.lk






இலங்கை பாராளுமன்றத்தின் சபா மண்டபத்தின் பிரதான கதவு இலங்கை கலைஞர்களின் திறமையை உலகத்துக்குப் பறைசாற்றும் தலைசிறந்த படைப்பாகும். டி.விமல்சுரேந்திர என்ற கலைஞரின் செதுக்கலில் உருவான இந்தக் கதவு 12 அடிக்கு 12 அடி அளவுடையதாகும். இது செப்பு மற்றும் வெள்ளி மென் பூச்சைக் கொண்டதாகவும் அமைந்துள்ளது.

இந்த வெள்ளித்தகடு புராதன கல்வெட்டுப் பாணியில் இலங்கை அரசியலமைப்பின் பாயிரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது. இந்தக் கதவின் ஓரங்களில் புராதன இலங்கையின் கலைகளைச் சித்தரிக்கும் கவர்ச்சியான தாமரை வடிவங்களும் அலங்கார மலர் வேலைப்பாடுகளும் காணப்படுகின்றன. கதவின் பின்புறத்தில் பிரித்தானிய அரும்பொருட் காட்சிசாலையில் காணப்படும் புராதன இலங்கை விதானம் ஒன்றின் மலர்வடிவம் காணப்படுகிறது. இக்கதவு வியக்கத்தக்க முப்பரிமாணத் தோற்றமுடையதாகும்.

கடந்த காலத்தின் மஹிமையை நினைவுபடுத்தி இலங்கை பாராளுமன்றத்திற்குப் பெருமை சேர்க்கும் இந்தக் கதவு, செதுக்கல் கலைஞர்களின் புத்திக் கூர்மையான தனித்துவமான தயாரிப்பாகும்.

# பாராளுமன்ற சபாமண்டபத்தின் தடை எல்லை

நிம்மி ஹாத்தியல்தெனிய
ஊடக முகாமையாளர் - தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
nimmiehathiyaldeniya@gmail.com



பிரித்தானிய பாராளுமன்ற சம்பிரதாயத்தை உதாரணமாக கொண்டு ஸ்தாபிக்கப்பட்டுள்ள இலங்கை பாராளுமன்றம் 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பிற்கு அமைய இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் சட்டமியற்றும் உயர் நிறுவனமாகும்.

இலங்கை பாராளுமன்றத்தின் சபாமண்டபம் என்பது மேலே குறிப்பிட்ட சட்டமியற்றும் பணியை மேற்கொள்ளும் இடமாகும். இது பாராளுமன்ற கட்டடத்தில் அமையப்பெற்றுள்ள முக்கியத்துவம்வாய்ந்த இடமாகவும் கருதப்படுகிறது.

பாராளுமன்ற சபாமண்டபத்தின் பிரதான நுழைவாயிலில் இருந்து, சபாமண்டபத்தை அடைவதற்கான படிகளுக்குச் சற்று மேலாக, சபாமண்டபத்தின் நடுப்பகுதியில் செங்கம்பளம் விரிக்கப்பட்ட தரைக்குக் குறுக்காக, நீண்ட செவ்வக வடிவான, நிக்கல் தகடொன்றும் காணப்படுகிறது. இதுவே சபையின் தடை எல்லையைக் குறிக்கிறது.

பாராளுமன்ற சபாமண்டபத்தின் தடை எல்லையால் பிரதிநிதித்துவ ஜனநாயகம், சட்டவாக்கத்தின் உயர்நிலை மற்றும் வெளிப்படைத்தன்மையை பாதுகாக்கும் இடத்தின் கௌரவம் என்பன நிர்ணயிக்கப்படுகிறன.

இதன் முகப்பில் பாரம்பரியமான, சிக்கலான வடிவமைப்பைக் கொண்ட சின்னங்கள் பொறிக்கப்பட்டுள்ளன. துணிச்சல், நிலைபேறு மற்றும் சுபிட்சம், ஒருமைப்பாடு போன்றே பாராளுமன்ற சபாமண்டபத்தின் கௌரவ தன்மைகள் இதன் மூலம் பறைசாற்றப்படுகின்றன.

பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரோ அல்லது சபை உத்தியோகத்தரோ தவிர்ந்த வேறு எந்தவொரு நபரும் இத்தடை எல்லைக்கு அப்பால் செல்ல முடியாது.

பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் பாராளுமன்றம் கூடும் முதலாவது நாளில் அனைத்து உறுப்பினர்களும் தடை எல்லைக்குள் அமர்கின்ற சந்தர்ப்பம் தவிர்ந்த, வேறு சந்தர்ப்பத்தில் சத்தியப்பிரமாணம் செய்யவுள்ள உறுப்பினரொருவர் சத்தியப்பிரமாணம் செய்வதற்கு முன்னர் சபாமண்டபத்தின் தடை எல்லைக்கு வெளியே நிற்கவேண்டும்.

அதற்கு மேலதிகமாக ஏதாவது காரணங்களுக்காக பாராளுமன்றத்தில் சமுகமளிக்கும்படி பணிக்கப்பட்ட ஒருவரோ அல்லது குழுவினரோ சபாமண்டபத்திற்குள் அழைக்கப்படும் வரை இத்தடை எல்லைக்கு வெளியே நிற்கவேண்டும்.

# இலங்கை பாராளுமன்றத்தின் ஊடக நிலையம் மற்றும் அதன் செயற்பாடுகள்

மகேஸ்வரன் பிரசாத்
ஊடக அதிகாரி - தொடர்பாடல் திணைக்களம்
இலங்கை பாராளுமன்றம்
pirassath_m@parliament.lk



பாராளுமன்ற அறிக்கையிடலில் ஈடுபடும் ஊடகவியலாளர்களின் பணிகளை மிகவும் முறையாகவும், திறமையாகவும் செயல்படுத்துவதற்கான வசதிகளை வழங்கும் நோக்கில் இலங்கை பாராளுமன்றத்தின் ஊடக நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. பாராளுமன்றத்தின் மூன்றாவது மாடியில் அமைந்துள்ள இது அதிநவீன தொழில்நுட்பத்துடன் பூரணப்படுத்தப்பட்டிருப்பதுடன், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களைச் சேர்ந்த 70ற்கும் அதிகமான ஊடகவியலாளர்கள் அமர்ந்து தமது பணிகளைச் செய்வதற்கான வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள சகல இருக்கைகளுக்கும் இணையத் தொடர்பு வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. ஒலிப்பதிவு செய்வதற்கும், வீடியோ ஒளிப்பதிவு செய்வதற்கும் ஏதுவாக நவீன உபகரணங்களைக் கொண்ட ஸ்டுடியோ ஒன்றும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றக் கூட்டங்கள் மற்றும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு உள்ளிட்ட குழுக் கூட்டங்களை ஊடக நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள அகல தொலைக்காட்சித் திரைகளில் ஊடகவியலாளர்களால் பார்க்க முடியும் என்பதுடன், தேவைப்படின் அவை தொடர்பான வீடியோ காட்சிகளை தரவிறக்கம் (download) செய்துகொள்ளவும் முடியும்.

ஊடக நிலையத்தில் அதிநவீன தொலைக்காட்சி ஸ்டுடியோவொன்றுள்ளது. இதில் தொலைக்காட்சி கலந்துரையாடல்களை நேரடியாக அல்லது ஒளிப்பதிவுசெய்து நிகழ்ச்சிகள் தயாரிக்கப்படலாம். இந்த நடவடிக்கைகள் அனைத்தும் பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களத்தினால் மேற்பார்வைசெய்யப்படுகிறது. மேலும் எந்தவொரு ஊடகவியலாளருக்கும் அல்லது பாராளுமன்ற உறுப்பினருக்கும் தொடர்பாடல் திணைக்களத்தில் பதிவுசெய்வதன் ஊடாக இந்த வசதியைப் பயன்படுத்த முடியும். இந்த ஸ்டுடியோவைப் பயன்படுத்தி தொடர்பாடல் திணைக்களம் பல்வேறு நிகழ்ச்சிகளைத் தயாரித்துள்ளது. பாராளுமன்றத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு போன்ற குழுக்கள் ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்தப்பட்டமையால் ஊடகவியலாளர்களின் ஈடுபாடு அதிகரித்திருப்பதுடன், ஊடகவியலாளர்களின் செயற்பாடுகளை மேலும் இலகுபடுத்துவதாக இந்த ஊடக நிலையம் அமைந்திருக்கும்.

# சுதந்திர இலங்கையில் பாராளுமன்ற முறைமையின் பரிணாமம்; விரிவான ஆய்வு

நிபுனி பலகமகே
பொது வெளிக்கள அதிகாரி - இலங்கை பாராளுமன்றம்
nipuni_b@parliament.lk

### அறிமுகம்

1948 ஆம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தமை இந்நாட்டு வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லாகும். அந்நேரத்தில் பாராளுமன்ற ஜனநாயக அரசியலமைப்பொன்று கிடைக்கப்பெற்றதுடன் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் ஊடாக இந்நாட்டு மக்களுக்கு நேரடியாக அரசியலில் பங்கேட்கும் வாய்ப்பும் கிடைத்தது. அதிக பிரதிநிதித்துவத்தை வழங்குமாறு சிறப்புக் குழுக்கள் முன்னெடுத்த பிரசாரங்களின் விளைவாகவே 1947ஆம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பு இலங்கைக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த அரசியலமைப்பின் மூலம் இலங்கைக்கு பாராளுமன்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றிலிருந்து சோல்பரி அரசியலமைப்பின் கீழ் ஏழு பாராளுமன்றங்கள் செயற்பட்டுள்ளன. 1972 ஆம் ஆண்டு மே 22ஆம் திகதி இலங்கையின் குடியரசு அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதுடன், ஏழாவது பாராளுமன்றத்துக்குப் பதிலாக தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது. தேசிய அரசுப் பேரவையானது இலங்கையின் நிர்வாகக் கட்டமைப்பில் 6 வருடங்களுக்கும் குறைவான காலமே நடைமுறையில் இருந்தது.

அதைத் தொடர்ந்து, 1978 செப்டம்பர் 7, ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இரண்டாவது அரசியலமைப்பு அமுல்படுத்தப்பட்டதுடன், இரண்டாவது தேசிய அரசுப் பேரவைக்குப் பதிலாக முதலாவது பாராளுமன்றம் உருவாக்கப்பட்டது. அன்றிலிருந்து இதுவரை எட்டு பாராளுமன்றங்கள் செயற்பட்டுள்ளன. சுதந்திர இலங்கையில் பாராளுமன்ற முறைமையின் பரிணாம வளர்ச்சி தொடர்பில் சுருக்கமான உள்ளடக்கங்களைக் கொண்டதாக இந்தக் கட்டுரை அமைந்துள்ளது.

### முதலாவது பாராளுமன்றம்

(1947 ஒக்டோபர் 14 - 1952 ஏப்ரல் 8)

இலங்கையின் முதலாவது பாராளுமன்றம் என அழைக்கப்படுவது, சோல்பரி அரசியலமைப்பின் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட பிரித்தானிய வெஸ்மினிஸ்டர் முறையின் கீழான சட்டவாக்கமாகும். இது பிரதிநிதிகள் சபை மற்றும் செனட் சபையை உள்ளடக்கியதாகும். வெஸ்ட்மினிஸ்டர் முறை என்பது இங்கிலாந்தின் வெஸ்ட்மின்ஸ்டர் சதுக்கத்தில் அமைந்துள்ள பிரித்தானிய பாராளுமன்றத்தை மையமாகக் கொண்ட அரசமைப்பு முறையாகும்.

- அமைச்சரவை உறுப்பினர்கள் சட்டவாக்க உறுப்பினர்களாக இருப்பர்.
- அரச தலைவரான பிரதமரின் அறிவுறுத்தலின் பெயரில் செயற்படும் நிர்வாகிகளாக இருப்பர்.
- அரச மற்றும் நீதித்துறை அதிகாரிகளின் சுயாதீனத்தைப் பாதுகாக்க சிறப்பு அரசியலமைப்பு ஏற்பாடுகளை வழங்குதல்.

- சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களை சரியான நேரத்தில் நடத்துதல் மற்றும் பாராளுமன்ற மக்கள் பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல். சட்டவாக்கத்தில் பிரதிநிதித்துவத்தை அடைதல்.

பொதுத் தேர்தல் 19 நாட்கள் நடைபெற்றமை விசேடமான அம்சமாகும். தேர்தலின் ஊடாக மொத்தமாக 101 உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டதுடன், இதில் 95 பேர் மக்களின் வாக்குகளாலும், 06 பேர் ஆளுநராலும் தெரிவுசெய்யப்பட்டனர். 58 வாக்குகளைப் பெற்ற கௌரவ. ஸ்ரீமத் பிரான்ஸிஸ் மெலமுரே அவர்கள் முதலாவது சபாநாயகராகப் பதவி வகித்தார். ராஜ்ய சபாவின் முதலாவது தலைவரான அவர், பிரதிநிதிகள் சபையின் முதலாவது சபாநாயாகராகவும் விளங்கினார். தனது பதவிக்காலத்தின் பின்னர் கௌரவ ஸ்ரீமத் அல்பேர்ட்.எப்.பீரிஸ் அவர்கள் சபாநாயகராகப் பதவிவகித்தார். முதலாவது பாராளுமன்றத்தின் முதலாவது இலங்கைப் பிரதமர் கௌரவ.மஹாமான்ய டி.எஸ்.சேனாநாயக்க ஆவார்.

### இரண்டாவது பாராளுமன்றம்

(1952 ஜூன் 09 - 1956 பெப்ரவரி 18)

முதலாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதைத் தொடர்ந்து 2 ஆவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் 1952 ஆம் ஆண்டு மே 24, 26, 28 மற்றும் 30 ஆகிய திகதிகளில் 4 நாட்கள் முழுவதும் நடைபெற்றது. இதில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. இரண்டாவது பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவி கௌரவ அல்பேர்ட். எப். பீரிஸ் அவர்களுக்குக் கிடைத்தது. பிரதி சபாநாயகர் பதவிக்கு கௌரவ எப். எஸ். இஸ்மாயில் அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இந்தக் காலகட்டத்தில் நடந்த சில சிறப்பு நிகழ்வுகள் பின்வருமாறு,

- சிங்களம் மற்றும் தமிழ் ஆகியவற்றை அரசாங்க மொழியாக்குவதே 1952 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலுக்கு முகங்கொடுத்த சகல அரசியல் கட்சிகளினதும் மொழிக்கொள்கையாகவிருந்தது.
- அரச மொழி தொடர்பான பிரச்சினை அரசியல் நீரோட்டத்தின் முக்கிய விடயமானது.
- 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றத்தின் காலம் முடிவடைவதற்கு ஒரு வருடத்துக்கு முன்னதாகவே, அதாவது 1956ஆம் ஆண்டே அடுத்த பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

### மூன்றாவது பாராளுமன்றம்

(1956 ஏப்ரல் 19 - 1959 மே 12)

சிங்களத்தை மட்டும் அரச மொழியாக்க வேண்டும் என்ற யோசனையொன்று 1956 பெப்ரவரி 18 ஆம் திகதி களனியில் நடைபெற்ற விசேட மாநாட்டில் ஐக்கிய தேசிய கட்சியினால் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. அன்றைய தினமே பிரதமரின் அறிவுறுத்தலுக்கு அமைய ஆளுநர் இரண்டாவது பாராளுமன்றத்தைக் கலைத்தார். நடைபெற்ற தேர்தலில் பண்டாரநாயக்க அவர்களின் மக்கள் ஐக்கிய முன்னணி மாபெரும் வெற்றியைப் பெற்றது. மூன்றாவது பாராளுமன்றத்தில் கௌரவ.எஸ். எச்.இஸ்மயில் அவர்கள் சபாநாயகரானார்.

கௌரவ. சேர். ஜோன் கொத்தலாவல அவர்களின் அமைச்சரவையிலிருந்த 14 அமைச்சர்களில் 12 பேர் தேர்தலில் போட்டியிட்டு அதில் 10 பேர் தோல்வியடைந்தனர். 1956 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலுக்கு பின்னர் மூன்றாவது பாராளுமன்ற காலப்பகுதியினுள் ஒரேயொரு இடைத்தேர்தலே நடைபெற்றிருந்தது. அது வெலிமட தேர்தல் தொகுதியிலாகும். தொகுதியில் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் 41977 என்ற அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்றதோடு தம்பத்தெனிய மற்றும் களனி எனும் இரண்டு தேர்தல் தொகுதிகளிலும் போட்டியிட்ட கௌரவ.ஆர். ஸி. சேனநாயக்க இருபதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகளைப்பெற்று வெற்றிபெற்றமை தேர்தல் வரலாற்றில் விசேடமாக குறிப்பிட்டு கூறவேண்டியதொரு விடயமாகும்.

1959 செப்டெம்பர் 25 ஆம் திகதி பிரதமர் கௌரவ பண்டாரநாயக்க ரொஸ்மிட் பிளேஸிலுள்ள அவருடைய வீட்டில் கொலை செய்யப்பட்டதோடு, பிரதமர் பதவிக்கு கௌரவ டபிள்யூ. தஹநாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டு, 1960 மார்ச் 20 ஆம் திகதி வரை ஆறு மாத காலத்திற்கு பதவியிலிருந்தார். உள்ளகக் கருத்து வேறுபாடு காரணமாக மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கத்திற்குக் கிடைத்த ஐந்து வருட ஆட்சிக் காலத்தை பூர்த்திசெய்ய முடியாமல் போனது. அத்துடன் அந்த அரசாங்கத்தினால் முக்கியமான முடிவுகள் பல எடுக்கப்பட்டன. அவையாவன,

- சிங்களத்தை அரச மொழியாக்குவது
- கொழும்பு துறைமுகம் மற்றும் பஸ் துறையை தேசியமயமாக்கல்
- கலாச்சாரத் திணைக்களத்தை ஆரம்பித்தல்
- ஊழியர் சேமலாப நிதியத்தை உருவாக்குதல்
- ஐன வித்யாலங்கர- வித்யோதயா பிரிவெனாக்களை பல்கலைக்கழகமயமாக்கல்

### நான்காவது பாராளுமன்றம்

(1960 மார்ச் 30 - ஏப்ரல் 23)

தேர்தல் வரலாற்றில் “முப்பது நாள்கள் பாராளுன்றம்” என அழைக்கப்படும் நான்வாது பாராளுமன்றம் என்பது விசேடமானதாகும். 1960 மார்ச் 19ஆம் திகதி தேர்தல் நடத்தப்பட்டதுடன், ஒரு நாளில் நடத்தப்பட்ட பொதுத் தேர்தலாகவும் அது அமைந்தது. இதில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு 50 ஆசனங்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு 46 ஆசனங்களும் கிடைத்தன. ஆளும் கட்சியினால் முன்மொழியப்பட்ட முன்னாள் சபாநாயகர் கௌரவ.அல்பேர்ட்.எப்.பீரிஸ் அவர்கள் தோற்கடிக்கப்பட்டு எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்திய கௌரவ.ரி.பி.சுபசிங்க அவர்கள் 33 மேலதிக வாக்குகளால் சபாநாயகராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

### ஐந்தாவது பாராளுமன்றம்

(1960 ஒகஸ்ட் 05 - 1964 டிசம்பர் 17)

1960 மார்ச் மாதம் பொதுத் தேர்தலில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்றம் 30 நாட்கள் மாத்திரமே நீடித்தது. ஜுலை மாதம் நடைபெற்ற தேர்தலின் பின்னர் கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களின் தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 75 ஆசனங்களை வென்றது. ஐக்கிய தேசியக் கட்சி 30 ஆசனங்களை வென்று இரண்டாவது இடத்தைப் பெற்றதுடன், பெடரல் கட்சி 16 ஆசனங்களையும் வென்றது.

கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் இலங்கையின் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்ட ஆறாவது நபராவார். இவரே உலகின் முதலாவது பெண் பிரதமராவார். ஐந்தாவது பாராளுமன்றத்தின் சபாநாயகராக கௌரவ.ஆர்.எஸ்.பல்பொல அவர்கள் நியமிக்கப்பட்டார்.

## ஆறாவது பாராளுமன்றம்

(1965 ஏப்ரல் 5 - 1970 மார்ச் 25)

மார்ச் 22 ஆம் திகதியன்று தேர்தல் நடைபெற்றது. ஐக்கிய தேசிய கட்சி 66 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 41 ஆசனங்களையும் வென்றன. ஆறாவது பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவிக்கு கௌரவ சேர்.அல்பேர்ட் தெரிவுசெய்யப்பட்டார்.

மேலும் பெடரல் கட்சி, லங்கா சமசமாஜ கட்சி மற்றும் இலங்கை சுதந்திர சோசலிஸக் கட்சி ஆகியன முறையே 14, 10 மற்றும் 05 ஆசனங்களை பெற்றன. கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் ஊடாக இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட முதலாவது பெண் உறுப்பினராக வரலாற்றில் இடம்பிடித்தார். இதில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள்,

- பொதுத்தேர்தலில் 18 வயதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் முதல் முறையாக வாக்களித்தனர்.
- பொதுத் தேர்தலில் போட்டியிட்ட 55 முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தோற்கடிக்கப்பட்டனர்.
- மார்ச் 27 ஆம் திகதியன்று கௌரவ டட்லி சேனநாயக்க அவர்களின் தலைமையில் தேசிய அரசாங்கத்தை நிறுவுதல். அதில் ஐக்கிய தேசியக் கட்சி தவிர, ஸ்ரீலங்கா சுதந்திர சோசலிசக் கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி, கூட்டாட்சி கட்சி மற்றும் தேசிய விடுதலை முன்னணி ஆகியவை இவ்வரசாங்கத்தில் இணைந்தன.
- டட்லி சேனநாயக்க ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை இரத்து செய்து அதற்கு பதிலாக போயா தின விடுமுறையை அறிவித்தார்.

## ஏழாவது பாராளுமன்றம்

(1970 ஜுன் 07 - 1972 மே 22)

ஏழாவது பாராளுமன்றத்தில் சபாநாயகர் பதவிக்கு கோட்டை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஸ்டான்லி திலகரட்ன அவர்கள் நியமிக்கப்பட்டார். இலங்கை அரசியலமைப்பைத் திருத்துவதற்குத் தேவையான மூன்றில் இரண்டு பாராளுமன்ற பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள சமகி பெரமுன அரசாங்கத்தினால் முடிந்தது. ஏழாவது பாராளுமன்றக் காலப் பகுதியில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் வருமாறு,

- 1972 மே 22ஆம் திகதி இலங்கை பிரித்தானிய முடியாட்சியிலிருந்து விலகி சுயாதீன இறைமையுள்ள குடியரசு ஆட்சியாக மாறியது.
- சமகி பெரமுனவின் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்க 1970 மே 29ஆம் திகதி இரண்டாவது தடவையாகவும் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.
- ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் ஜுன் 14ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது. அன்றையதினம் மக்கள் வெற்றிதினம் மற்றும் விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டது.

- 1972 மே 21ஆம் திகதி குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டது.
- குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்றப்பட்டதுடன் இலங்கை "ஸ்ரீலங்கா" என அறிவிக்கப்பட்டது. 139 வருடங்களாக சட்டவாக்கத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி நியமன உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்றமையை 1972 புதிய அரசியலமைப்பு இரத்துச்செய்தது.
- சோல்பரி அரசியலமைப்புக்கு அமைய 1948 உருவாக்கப்பட்ட பிரதிநிதிகள் சபை அல்லது செனட் சபை 1971 36ஆம் இலக்க அரசியலமைப்பு திருத்தத்தின் மூலம் 1971ஆம் ஆண்டு ஒக்டோபர் இரண்டாம் திகதி இரத்துச்செய்யப்பட்டது.
- 1970 டிசம்பர் 29ஆம் திகதி கூடிய பாராளுமன்றத்தில் சகல கட்சித் தலைவர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

## முதலாவது தேசிய அரசுப் பேரவை

(1972 மே 22 - 1977 மே 18)

1972 மே 22ஆம் திகதி இலங்கையின் குடியரசு அரசியலமைப்பு நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டதுடன் பாராளுமன்றத்துக்குப் பதிலாக தேசிய அரசுப் பேரவை உருவாக்கப்பட்டது. தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகராக கோட்டை தொகுதி உறுப்பினர் கௌரவ ஸ்டான்லி திலகரட்ன நியமிக்கப்பட்டார். மே 18ஆம் திகதி தேசிய அரசுப் பேரவை கலைக்கப்பட்டது. 1977 ஜுலை 21ஆம் திகதி பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது.

## இரண்டாவது தேசிய அரசுப் பேரவை

(1977 ஒகஸ்ட் 04 - 1978 செப்டெம்பர் 07)

1977 ஒகஸ்ட் 04ஆம் திகதி இரண்டாவது தேசிய அரசுப் பேரவையின் சபாநாயகராக கோட்டை பாராளுமன்ற உறுப்பினரான கௌரவ ஆனந்த திஸ்ஸ.டி. அல்விஸ் அவர்கள் நியமிக்கப்பட்டார். கீழ்வரும் நிகழ்வுகள் இரண்டாவது தேசிய அரசுப் பேரவைக் காலத்தில் இடம்பெற்றவற்றில் முக்கியமானவையாகும்,

- 1972 மே 20 திகதி நிறைவேற்றப்பட்ட இலங்கை குடியரசின் அரசியலமைப்புக்குப் பதிலாக 1977ஆம் ஆண்டு அதிகாரத்துக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தினால் தயாரிக்கப்பட்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 1978ஆம் ஆண்டு ஜுலை 25ஆம் திகதி தேசிய அரசுப் பேரவையில் முன்வைக்கப்பட்டது.
- ஒகஸ்ட் 31ஆம் திகதி அரசியலமைப்புக்கு அனுமதி வழங்கப்பட்டு கையொப்பமிடப்பட்டது.
- 1978 செப்டெம்பர் 07ஆம் திகதி இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதுடன், அதுவரை நடைமுறையிலிருந்த தேசிய அரசுப் பேரவைக்குப் பதிலாக "முதலாவது பாராளுமன்றம்" உருவாக்கப்பட்டது.
- 1978 இல் சட்டமாக்கப்பட்ட இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை மற்றும் பாராளுமன்ற அரசியலமைப்பு ஆகியவற்றை உள்ளடக்கியதாக அமைந்தது. மீண்டும் சட்டவாக்க பாராளுமன்றம் எனப் பெயரிடப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் முதலாவது பாராளுமன்றம்

(1978 செப்டெம்பர் 07 - 1988 டிசம்பர் 20)

### முதலாவது பாராளுமன்றத்தின் காலப் பகுதியில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் கீழ்வருமாறு,

- 1978-02-04ஆம் திகதி முதல் இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக கௌரவ ஜே.ஆர்.ஜயவர்த்தன அவர்கள் நியமிக்கப்பட்டார். கௌரவ ஆர். பிரமேதாச அவர்கள் பிரதமர் பதவிக்கு நியமிக்கப்பட்டார்.
- 1978 ஒக்டோபர் 5ஆம் திகதி முதல் நாடு முழுவதையும் உள்ளடக்கும் வகையில் மாவட்ட அமைச்சர்கள் 24 பேர் ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டனர்.
- எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரும் உயிரிழந்தால், இராஜினாமா செய்துகொண்டால் அல்லது கட்சியினால் வெளியேற்றப்பட்டால் அதுவரை நடத்தப்பட்ட இடைக்கால தேர்தலுக்குப் பதிலாக பிறிதொரு உறுப்பினரின் பெயரை அனுப்புவதற்கான பொறுப்பு கட்சியின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.
- தமிழ் ஈழ விடுதலை புலிகள் அமைப்பு மற்றும் அதுபோன்ற ஏனைய அமைப்புக்களை தடைசெய்யும் அரசியலமைப்பு வரைபு 1987 மே 25ஆம் திகதி நிறைவேற்றப்பட்ட பின்னர் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற புறக்கணிப்பை ஆரம்பித்தது.
- 1980 செப்டம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட 1980ஆம் ஆண்டு 35ஆம் இலக்க அபிவிருத்தி சபை சட்டத்தில் நிர்வாக கட்டமைப்பை மேலும் விருத்திசெய்யும் நோக்கில் ஒவ்வொரு மாவட்டத்துக்கும் ஒவ்வொரு அபிவிருத்தி சபைகள் அமைக்கப்பட்டன.
- 1980 ஒக்டோபர் மாதம் 16ஆம் திகதி கௌரவ சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்களினதும், கௌரவ பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்க அவர்களினதும் குடியிரிமை இரத்துச் செய்யப்பட்டு, திருமதி பண்டாரநாயக்க அவர்கள் பாராளுமன்றத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்.
- பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டேயில் அமைக்கப்பட்ட புதிய பாராளுமன்ற கட்டடத்துக்கு 1982 ஏப்ரல் 29ஆம் திகதி மாற்றப்பட்டது.
- 1982 நவம்பர் 4 பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அரசியலமைப்பின் நான்காவது உறுப்புரைக்கான திருத்தத்தின் ஊடாக பாராளுமன்றத்தின் பதவிக்காலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் நீடிக்கப்பட்டதுடன், குறித்த சட்டமூலத்துக்கு சர்வஜன வாக்கெடுப்பின் ஊடாக அனுமதி கிடைத்த பின்னரே அது சட்டமாகும் என்ற குறிப்புடனேயே அதற்கு சபாநாயகர் சான்றுரையளித்திருந்தார். இதற்கமைய இலங்கை அரசியல் வரலாற்றில் முதன் முறையாக சர்வஜன வாக்கெடுப்பொன்று நடைபெற்றது. இந்த யோசனைக்கு ஆதரவாக மக்களிடமிருந்து 3,141,223 வாக்குகளும், எதிராக 2,605,983 வாக்குகளும் அளிக்கப்பட்டன.
- அரசியலமைப்பின் ஆறாவது உறுப்புரைக்கு அமைய நாடு இரண்டாக பிளவுபடுவதற்கு எதிராக சத்தியப்பிரமாணம் செய்ய வேண்டும். இதனை எதிர்த்த தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களின் ஆசனங்கள் இழக்கப்பட்டன.
- 1978ஆம் ஆண்டு அரசியலமைப்பில் இணைக்கப்பட்ட 13வது திருத்தத்தின் ஊடாக, இலங்கையில் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளை அமைப்பதற்கான ஏற்பாடுகள் உள்வாங்கப்பட்டன.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் இரண்டாவது பாராளுமன்றம்

(1989 மார்ச் 09 - 1994 ஜுன் 24)

விகிதசார முறையின் கீழ் 1989ஆம் ஆண்டு இலங்கையில் முதலாவது பொதுத் தேர்தல் நடத்தப்பட்டது. 1931 சர்வஜன வாக்குரிமை கிடைத்த நாள் முதல் வாக்காளர்களால் பின்பற்றப்பட்ட தொகுதிவாரியான தேர்தல் முறை இத்துடன் முடிவுக்கு வந்தது. புதிய பாராளுமன்றம் 1989 மார்ச் 9ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்துகொண்டது. சபாநாயகராக கௌரவ எம். எச். முஹம்மது அவர்களும் பிரதி சபாநாயகராக கௌரவ காமினி பொன்சேகா அவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். தேர்தல் காலம் மற்றும் பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் வருமாறு,

- தேர்தல் தொகுதிகளில் கிடைத்த வாக்கு விகிதாசரங்களுக்கு அமைய அரசியலமைப்பில் உத்தேசிக்கப்பட்டுள்ள உறுப்பினர்கள் 196 பேரைத் தேர்ந்தெடுப்பதற்கும், தேசிய வாக்கு வீதத்துக்கு அமைய மேலும் நூற்றுக்கு 15 வீதம் அதாவது 29 பேரை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டது. .
- விருப்பு வாக்குமுறையின் கீழ் மூன்று வேட்பாளர்களுக்கு விருப்பு வாக்குகளை வழங்குவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.
- விருப்பு வாக்குகளை வழங்குகின்ற போது மூவருக்கு வழங்குகின்ற அமைப்பில் சந்தர்ப்பங்கள் ஏற்படுத்தப்பட்டன.
- 5 ஆண்டுகள் மூன்று மாதங்கள் 15 நாட்கள் பூர்த்தியடைந்ததும் இரண்டாவது பாராளுமன்றம் 1994 ஜுன் மாதம் 24ஆம் திகதி கலைக்கப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் மூன்றாவது பாராளுமன்றம்

(1994 ஆகஸ்ட் 25 - 2000 ஆகஸ்ட் 18)

இரண்டாவது பாராளுமன்றம் கலைக்கப்பட்டதன் பின்னர் மூன்றாவது பாராளுமன்றத்திற்கான தேர்தல் ஓகஸ்ட் 16 ஆம் திகதி நடத்தப்பட்டது. 1994 பொதுத் தேர்தலின் பின்னர் ஓகஸ்ட் 19 ஆம் திகதி இலங்கையின் பதினொராவது பிரதமராக கௌரவ சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க நியமிக்கப்பட்டார். சபாநாயகர் பதவிக்கு கௌரவ கே.பி.ரட்னாயக்க அவர்கள் நியமிக்கப்பட்டார்.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நான்காவது பாராளுமன்றம்

(2000 டிசம்பர் 18 - 2001 ஒக்டோபர் 10)

நான்காவது பாராளுமன்றத்துக்குப் புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்வதற்கான தேர்தல் 2000 ஒக்டோபர் 10ஆம் திகதி நடைபெற்றது. பொதுத் தேர்தலின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டம் 2000 ஒக்டோபர் 18ஆம் திகதி நடைபெற்றது. இதில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ அநுர பண்டாரநாயக்க அவர்கள் சபாநாயகராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். 11 மாதங்கள் 22 நாட்கள் எனக் குறுகிய காலத்தைக் கொண்ட நான்காவது பாராளுமன்றத்தின் பதவிக்காலத்தில் அரசாங்கத்துக்கும் மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டது. 20 பேரைக் கொண்ட அமைச்சரவை நியமிக்கப்பட்டது. 2001 ஒக்டோபர் 10 ஆம் திகதி பாராளுமன்றம் கலைக்கப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் ஐந்தாவது பாராளுமன்றம்

(2001 டிசம்பர் 19 - 2004 பெப்ரவரி 07)

ஐந்தாவது பாராளுமன்றத்திற்குப் புதிய உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கான தேர்தல் 2001 டிசம்பர் 5ஆம் திகதி நடைபெற்றது. ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய தேசிய முன்னணி என்ற பெயரில் போட்டியிட்டு அதிகமான உறுப்பினர்களைப் பெற்றுக்கொண்டது. 2001 டிசம்பர் 10 ஆம் திகதி ஐக்கிய தேசிய முன்னணி வேறு சிறு கட்சிகளின் ஆதரவுடன் 25 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவையை உருவாக்கியது. கௌரவ ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பிரதமராக ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்களின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார். கௌரவ எம்.ஜோசப் மைக்கல் பெரேரா அவர்கள் சபாநாயகராக ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் பாராளுமன்ற காலப்பகுதியில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் பின்வருமாறு,

- காலி மாவட்டத்தின் பொது ஜன முன்னணியில் போட்டியிட்டு 42,120 வாக்குகளைப்பெற்று பத்தேகம சமித தேரர் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்ட முதலாவது பௌத்த பிக்கு என தேர்தல் வரலாற்றில் இடம்பெற்றார்.
- கௌரவ ஜனாதிபதி குமாரதுங்க அவர்களினால் பாராளுமன்றத்தின் கூட்டத்தொடர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு, அவரசகாலச் சட்டம் பிரகடனப்படுத்தப்பட்டு முக்கியமான மூன்று அமைச்சுக்கள் (பாதுகாப்பு, உள்விவகாரம் மற்றும் ஊடகம்) அவருடைய கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.
- ஜனாதிபதி குமாரதுங்க அவர்களின் கட்சியை போல் எதிர்க்கட்சியின் பிரதான அங்கமான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி மற்றும் மக்கள் விடுதலை முன்னணி உடன் இணைந்து 2004 ஜனவரி 20ஆம் திகதி ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி (ஐமசுமு) என்ற புதிய அரசியல் கூட்டணி அமைக்கப்பட்டது.
  இப்பாராளுமன்றம் 2004 பெப்ரவரி 7ஆம் திகதி கலைக்கப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் ஆறாவது பாராளுமன்றம்

(2004 ஏப்ரல் 22 - 2010 பெப்ரவரி 09)

புதிய பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுப்பதற்கான பொதுத் தேர்தல் 2004 ஏப்ரல் 02ஆம் திகதி நடத்தப்பட்டது. இத்தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வெற்றிபெற்றது. இதில் 225 ஆசனங்களில் 105 ஆசனங்களைப் பெற்றிருந்தது. பரபரப்பான மூன்று சுற்று வாக்கெடுப்புக்களின் பின்னர் புதிய பாராளுமன்றத்தின் சபாநாயகராக எதிர்க்கட்சியின் வேட்பாளராகவிருந்த கௌரவ வி.ஜே.மு.லொக்குபண்டார அவர்கள் தெரிவுசெய்யப்பட்டார். இந்தப் பாராளுமன்றத்தின் காலத்தில் 2004 ஏப்ரல் 6ஆம் திகதி கௌரவ ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களினால் புதிய பிரதமராக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியைச் சேர்ந்த கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் நியமிக்கப்பட்டார். ஐந்து வருடங்கள் ஒன்பது மாதங்கள் பதினேழு நாட்களின் பின்னர் 6வது பாராளுமன்றம் 2010 பெப்ரவரி 09ஆம் திகதி கலைக்கப்பட்டது.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் ஏழாவது பாராளுமன்றம்

(2010 ஏப்ரல் 22 - 2015 ஜூன் 26)

இதற்கான தேர்தல் 2010 ஏப்ரல் 08 திகதி நடத்தப்பட்டது. இதில் ஐக்கிய தேசிய முன்னணி வெற்றிபெற்றது. புதிய சபாநாயகராக ஹம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ அவர்கள் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். இப்பாராளுமன்றத்துக்கு பத்து பெண் உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தனர். 2015 ஜனவரி 08ஆம் திகதி நடத்தப்பட்ட ஜனாதிபதித் தேர்தலில் அப்போதைய ஜனாதிபதியாகவிருந்த கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்களைத் தோற்கடித்து கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் ஜனாதிபதியானார். அந்த அரசாங்கத்தின் புதிய பிரதமராக கௌரவ ரணில் விக்ரமசிங்க அவர்கள் நியமிக்கப்பட்டார். ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்ததுடன், இது நல்லாட்சி அரசாங்கம் என அழைக்கப்பட்டது. இந்தப் பாராளுமன்றக் காலத்தில் 19ஆவது அரசியலமைப்புத் திருத்தம் நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் எட்டாவது பாராளுமன்றம்

(2015 செப்டெம்பர் 01 - 2020 மார்ச் 02)

எட்டாவது பாராளுமன்றத்துக்கான பொதுத் தேர்தல் 2015-08-17ஆம் திகதி நடத்தப்பட்டது. இத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி வெற்றிபெற்றது. 8வது பாராளுமன்றத்தில் இடம்பெற்ற விசேட நிகழ்வுகள் கீழ்வருமாறு,

- ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி இணைந்து தேசிய அரசாங்கத்தை அமைத்தன.
- பிரதமர் பதவியில் நான்கு தடவைகள் மாற்றங்கள் ஏற்பட்டன. (கௌரவ ரணில் விக்ரமசிங்க இரண்டு தடவைகளும், கௌரவ மஹிந்த ராஜபக்ஷ அவர்கள் இரண்டு தடவைகளும் பிரதமர் பதவியை வகித்தனர்).
- எதிர்க்கட்சித் தலைவர் பதவி மூவரினால் வகிக்கப்பட்டது.
- அரசியலமைப்புப் பேரவைக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர்ந்தவர்கள் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டமை மற்றுமொரு விசேட நிகழ்வாகும்.
- 2018 மார்ச் 07ஆம் திகதி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான நடத்தைக் கோவைக்கு பாராளுமன்றம் அங்கீகாரம் வழங்கியது.
- 2016 ஆம் ஆண்டு 12ஆம் இலக்க தகவலறியும் சட்டம் நிறைவேற்றப்பட்டது.
- பாராளுமன்றத்தின் புதிய நிலையியற் கட்டளைகள் 2018 ஏப்ரல் 15ஆம் திகதி முதல் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.
- 2018 ஒக்டோபர் மாதம் 26ஆம் திகதி முதல் 2018 டிசம்பர் மாதம் 16ஆம் திகதி வரையில் 52 நாட்கள் அரசாங்கம் எட்டாவது பாராளுமன்றத்தில் இருந்தது.

அதுவரை நடைமுறையில் காணப்பட்ட அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் இடைநிறுத்தப்பட்டு 2015 டிசம்பர் மாதம் 19ஆம் திகதி இரண்டு பிரேரணைகள் நிறைவேற்றப்பட்டு அரசாங்க நிதி பற்றிய குழு மற்றும் 16 துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் உருவாக்கப்பட்டன. எட்டாவது பாராளுமன்றம் 4 வருடங்கள் 6 மாதங்கள் 1 நாள் செயலாற்றியிருந்ததுடன், 2020 மார்ச் மாதம் 02ஆம் திகதி கலைக்கப்பட்டது.

# பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் இலகுபடுத்தப்பட்ட முறையில்

### பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தின் நடைமுறைகள் (நி.கட்டளை 1-2)

பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் பாராளுமன்றம் கூட்டப்படும் முதலாவது நாளில், பாராளுமன்றத்தைக் கூட்டுவது தொடர்பான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஜனாதிபதியுடைய பிரகடனம் பாராளுமன்ற செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்பட வேண்டும். அதனையடுத்து அன்றைய தினத்துக்கான அலுவல் ஒழுங்குகள் பின்வருமாறு அமைதல் வேண்டும்,

அ) சபாநாயகர் தேர்வு

ஆ) செயலாளர் நாயகத்தின் நெறிப்படுத்தலுடன், பாராளுமன்றத்தின் முன்னால் சபாநாயகர் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்தல்

இ) சகல உறுப்பினர்களும் சபாநாயகர் முன்னிலையில் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்தல்

ஈ) பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளருமானவரின் தேர்வு

உ) குழுக்களின் பிரதித் தவிசாளர் தேர்வு

மேற்கூறிய அலுவல்கள் முடிவுற்றதும் பாராளுமன்றமானது, பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்பட்ட திகதி மற்றும் நேரத்துக்கு ஒத்திவைக்கப்படும்.

சபாநாயகரின் பதவியில் வெற்றிடமொன்று ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வெற்றிடமேற்பட்டதன் பின்னர் கூடும் முதலாவது கூட்டத்தில் பாராளுமன்றம் சபாநாயகர் ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

### உறுப்பினர்களின் இருக்கை ஒழுங்கு (நி.கட்டளை 3)

பொதுத் தேர்தல் ஒன்றின் பின்னர் பாராளுமன்றம் கூடும் முதல் நாளிலும் அதன் பின்னர் ஒவ்வோர் உறுப்பினருக்கும் இருக்கையொன்றை குறித்தொதுக்கும்வரை, உறுப்பினர்கள் சபை தடை எல்லைக்குள் எந்தவொரு இருக்கையிலும் அமரலாம். சுபாநாயகர் தற்றுணிபின்பேரில் காலத்திற்குக்காலம் உறுப்பினர்களுக்கு ஆசனங்கள் குறித்தொதுக்குதல் வேண்டும்.

### சபாநாயகர் தேர்வு (நி.கட்டளை 4)

சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுவதற்கான உறுப்பினர் ஒருவரை முன்மொழிவதற்கு விரும்பும் எவரோனும் உறுப்பினர், தான் முன்மொழியும் உறுப்பினர் சபாநாயகராகச் சேவையாற்றுவதற்கு விரும்புகின்றாராவென்பதை முற்கூட்டியே நிச்சயப்படுத்திக்கொள்ளல் வேண்டும். எவரேனும் உறுப்பினர் செயலாளர் நாயகத்தை விளித்து, அப்போது பாராளுமன்றத்தில் சமுகமளித்துள்ள வேறேனும் உறுப்பினரை சபாநாயகராக முன்மொழிதல் வேண்டுமென்பதுடன், அவர் எந்த உறுப்பினரின் பெயரை முன்மொழிகின்றாரோ அந்த உறுப்பினரைச் சபாநாயகராகப் பாராளுமன்றத்தின் அக்கிராசனத்தில் அமரும்படி பிரேரித்தலும் வேண்டும். இது வழிமொழியப்படுதலும் வேண்டும். இது விவாதத்துக்கு அனுமதிக்கப்படாது.

சபாநாயகராக ஓர் உறுப்பினர் மட்டுமே அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால், குறித்த உறுப்பினர் வினாவின்றியே சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளாரெனச் செயலாளர் நாயகத்தினால் பிரகடனப்படுதல் வேண்டும். ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் அவ்வாறு முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டால் ஐந்து நிமிடத்துக்கு வாக்கழைப்பு மணி ஒலிக்கப்பட்டு அதன் பின்னர் பாராளுமன்றத்தில் இரகசிய வாக்கெடுப்பு நடத்தப்பட்டு அதன் மூலம் ஒருவர் சபாநாயகராகத் தேர்வுசெய்யப்படுதல் வேண்டும்.

### பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை (நி.கட்டளை 5)

தாம் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொண்டதன் பின்னர் சபாநாயகர் அங்கு சமுகமளித்திருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொள்வதற்கும் கையொப்பமிடுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். செயலாளர் நாயகத்தினால் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்து வைக்கப்படுதல் வேண்டும். பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொண்டதன் பின்னர் உடனடியாகச் சபாநாயகர் முதலாக ஒவ்வோர் உறுப்பினரும் செயலாளர் நாயகத்தினால் அதற்கென வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்.

ஏற்கனவே பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துகொள்ளாத ஓர் உறுப்பினர் பாராளுமன்றம் கூறுகின்ற எத்தினத்திலாவது செயலாளர் நாயகத்துக்கு அறிவித்ததற்கு அமைய சபாபீடத்தில் சமுகமளிக்கலாம் என்பதுடன் 22 ஆம் நிலையியற் கட்டளையின் கீழ் நியமிக்கப்பட்ட நேரத்தில் அவருக்கு பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை செய்துவைக்கப்படுதல் வேண்டும். அதன்பின்னர் அவர் புத்தகத்தில் கையொப்பமிடுதலும் வேண்டும்.

### பிரதிச் சபாநாயகர் மற்றும் குழுக்களின் பிரதித் தவிசாளர் தேர்வு (நி.கட்டளை 6)

புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின்போது அல்லது பிரதிச் சபாநாயகர் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளர் பதவியில் ஒரு வெற்றிடம் ஏற்பட்டதன் பின்னர் நிகழும் முதலாவது கூட்டத்தின் அலுவல் ஆரம்பத்தின்போது சந்தர்ப்பத்திற்கமைய, பிரதிச் சபாநாயகரொருவரை அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரொருவரைத் தேர்வு செய்வதற்குப் பாராளுமன்றம் முற்படும்.

பிரதிச் சபாநாயகரும், குழுக்களின் பிரதித் தவிசாளரும் தேர்வு முறை, தேர்வைச் சபாநாயகர் நடாத்துவதைத் தவிர மற்றெல்லா விதத்திலும், கூடுமானவரை சபாநாயகரைத் தேர்வு செய்யும் முறைமையை ஒத்திருத்தல் வேண்டும்.

### சனாதிபதியொருவரின் தேர்வு (நி.கட்டளை 7)

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலைமப்பின் 40(1)(ஆ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் சனாதிபதியொருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய சந்தர்ப்பத்தில் பாராளுமன்றமானது வாக்குச்சீட்டுப் பத்திரங்களைப் பயன்படுத்தி இரகசிய வாக்கெடுப்பை நடாத்துவதற்கு 1981 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, சனாதிபதித் தேர்தல்கள் (சிறப்பேற்பாடுகள்) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட நடைமுறையைப் பின்பற்றுதல் வேண்டும்.

## பாராளுமன்றத்தின் கூட்டங்கள் (நி.கட்டளை 8-9)

ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது ஞாயிற்றுக்கிழமைக்குப் பின்னர் தொடங்குகின்ற வாரத்திலும் ஒன்றுவிட்ட அடுத்த வாரத்திலுமாக மாதந்தோறும் முதலாவதும், மூன்றாவதுமான வாரங்களில் செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி ஆகிய நாட்களில் பாராளுமன்றம் கூடுதல் வேண்டும். பாராளுமன்ற அமர்வு செவ்வாய்க்கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் பி.ப. 1.00 மணிக்கும், வியாழக்கிழமைகளிலும், வெள்ளிக்கிழமைகளிலும் பி.ப.10.30 மணிக்கும் ஆரம்பமாவதுடன், அமர்வுகள் பிற்பகல் 6.30 மணிக்கு முடிவடையும்.

## செயலாளர் நாயகத்தின் கடமைகள் (நி.கட்டளை 10)

பாராளுமன்றத்தினதும் முழுப் பாராளுமன்றக் குழுக்களினதும் நடவடிக்கைகளைச் செயலாளர் நாயகம் அறிக்கைப்படுத்தி வைத்திருத்தல் வேண்டும். சமுகமளித்த உறுப்பினர்களின் பெயர்களும் பாராளுமன்றத்தால் செய்யப்பட்ட எல்லா முடிவுகளும் இக்கூட்ட அறிக்கையில் பதிவுசெய்யப்படும்.

பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவிலோ வாக்கெடுப்புகள் நிகழும் சந்தர்ப்பங்களில் பிரேரணைக்குச் சார்பாகவும், எதிராகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைகளும் 47 (2) (ஆ) மற்றும் (இ) ஆம் நிலையியற் கட்டளைகளின் கீழ் வாக்கெடுப்பு நிகழ்ந்தால், அவ்வாறு வாக்களிக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைகளும் பெயர்களும் வாக்கெடுப்பிலிருந்து விலகி நிற்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கைகளும் பெயர்களும் கூட்ட அறிக்கையில் இடம்பெறல் வேண்டும். கூட்ட அறிக்கை உறுதிப்படுத்தப்படத் தேவையில்லை. ஆனால் அறிக்கையில் பிழைகளிருப்பின் பாராளுமன்றத்தின் அனுமதியுடன் பிரேரிக்கப்படும் பிரேரணை மூலம் அவை திருத்தப்படலாம்.

செயலாளர் நாயகம் நாளிற்கு நாள் ஒழுங்குப் புத்தகமொன்றினைத் தயாரித்துப் பாராளுமன்றச் சபாபீடத்திலும் நூல் நிலையத்திலும் வைத்தல் வேண்டும். இந்த ஒழுங்குப் புத்தகத்தில் எதிர்வரும் எந்தவொரு தினத்திற்குமென நியமிக்கப்பட்ட எல்லா அலுவல்களும் குறித்த அல்லது குறிக்காத ஓர் எதிர்வரும் தினத்திற்கென நிர்ணயிக்கப்பட்ட வினாக்களின் அல்லது பிரேரணைகளின் முன்னறிவித்தல்களும் இடம்பெற்றிருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஓர் தினத்திற்கென அலுவல்கள் ஒழுங்குப் புத்தகத்தில் நிர்ணயிக்கப்படலாம் என்பதுடன் அது தொடர்பாகக் குறிப்பிடப்படுதலும் வேண்டும்.

பாராளுமன்றத்தின் கூட்ட அறிக்கைகள், பதிவேடுகள், சட்டமூலங்கள் ஏனைய ஆவணங்கள் அனைத்தினதும் பாதுகாப்பிற்கு செயலாளர் நாயகம் பொறுப்பாவார். சபாநாயகர் அனுமதிக்கும் ஒழுங்கு முறைகளிற்கேற்ப பாராளுமன்ற உறுப்பினரும் மற்றையோரும் இவற்றைப் பரிசீலனை செய்வதற்கு வசதியளித்தல் வேண்டும். செயலாளர் நாயகம், குழுக்களிற்கான நிர்வாக மற்றும் வள ஆதரவை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாயிருந்தல் வேண்டும்.

## கூட்டநடப்பெண் (நி.கட்டளை 11-12)

பாராளுமன்றத்தின் கூட்டநடப்பெண் தலைமைதாங்கும் உறுப்பினர் உட்பட இருபது உறுப்பினர்களாகும். எந்நேரத்திலாவது கூட்டநடப்பெண் இல்லை என்பது சபாநாயகரின் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டால் அவர் வாக்கழைப்பு மணி அழைக்கக் கட்டளையிடுவார் என்பதுடன் ஐந்து நிமிடங்களின் முடிவில் கூட்டநடப்பெண் காணப்படாதபோது சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் வினாவின்றிப் பாராளுமன்றத்தை ஒத்திவைத்தல் வேண்டும்.

### பாராளுமன்ற நடவடிக்கைகள் (நி.கட்டளை 13)

பாராளுமன்ற அலுவல்கள் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நடாத்தப்படுதல் வேண்டும். பாராளுமன்றத்தில் நிகழ்த்தப்படும் ஒவ்வோர் உரையும் உரையாற்றப்படும் மொழியிலேயே பாராளுமன்ற விவாதங்களைப் பதிவு செய்யும் அதிகார அறிக்கையில் (ஹன்சாட்) பதிவு செய்யப்படும். ஏதேனும் உரை நிகழ்த்தப்படும் மொழியைப் புரிந்துகொள்ள முடியாத உறுப்பினர்களுக்குத் தகுந்த ஏற்பாடுகளைச் செய்வது சபாநாயகரின் கடமையாகும்.

அவ்வேற்பாடுகளில் அடங்கவேண்டியவை:

- ஒழுங்குப் பத்திரம் சிங்களத்திலும், தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப்படுதல்
- உரைகளையும் மற்ற நிகழ்ச்சிகளையும் இரு மொழிகளில் சமகாலத்தில் உரைபெயர்த்தல்
- பாராளுமன்ற விவாதங்களைப் பதிவுசெய்யும் அதிகார அறிக்கையின் முகப்புப் பக்கம் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அச்சிடப்படுதல்
- உரைகள் அவை நிகழ்த்தப்படும் மொழிகளிலேயே ஹன்சாட் அறிக்கையில் பதிவு செய்யப்படுவதுடன், உரை நிகழ்த்துபவரின் பெயர் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் பதிவு செய்யப்படுதல்.

### பாராளுமன்றத்தின் ஒளிபரப்பு (நி.கட்டளை 14)

சபை நடவடிக்கைகள், காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான விதிகளிற்கும் நிபந்தனைகளிற்கும் அமைவாக வானொலி, தொலைக்காட்சி அல்லது வேறேதனும் இலத்திரனியல் வழிவகைகள் அல்லது சாதனங்கள் மூலமாக ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பு செய்யப்படலாம்.

சபை நடவடிக்கைகளினது ஏதேனும் ஒலிபரப்பு அல்லது ஒளிபரப்பானது, பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்றவாறான அத்தகைய நியாயமான தராதரங்களைப் பேணுதல் வேண்டும்.

வழங்கப்பட்ட ஏதேனும் நேரத்தில் பாராளுமன்றத்தின் அல்லது ஏதேனும் குழுவின் நடவடிக்கைகளின் நேரடி ஒலி அல்லது ஒளிபரப்பை அனுமதிப்பதா, மட்டுப்படுத்துவதா அல்லது கட்டுப்படுத்துவதா என்பது பற்றி முடிவு செய்வதற்கு, நிலைமைக்கேற்ப சபாநாயகர் அல்லது உரிய குழுவின் தவிசாளர் தமது தற்றுணிபைப் பிரயோகிக்கலாம்.

### ஒத்திவைப்புக்கள் (நி.கட்டளை 15-16)

முன்னறிவித்தலின் பின் பிரேரிக்கப்படும் பிரேரணையின் மூலம் வேறொரு குறிப்பிட்ட தினத்திற்குப் பாராளுமன்றத்தை ஒத்திவைக்கும்படி பாராளுமன்றம் கட்டளையிட்டாலொழிய பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பு என்பது அடுத்துவரும் சாதாரண அமர்வு தினம் வரை எனப் பொருள்படும். காலவரையறையின்றி ஒத்திவைக்கும் பிரேரணை அனுமதிக்கப்படமாட்டாது.

நாற்பத்தெட்டு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட ஓர் ஒத்திவைப்புக் காலத்தில் ஏற்கனவே ஒத்திவைக்கப்பட்ட தினத்திற்கு முன்னரான ஒரு தினத்தில், பாராளுமன்றத்தைக் கூட்டுவதாயின் அது தொடர்பான கோரிக்கையை பிரதமர் விடுக்க வேண்டும். பிரதமரின் கோரிக்கைக்கு அமைய

சபாநாயகர் அறிவித்தல் விடுப்பார். சபாநாயகரின் அறிவித்தல் குறிப்பிடப்பட்ட தினத்திலும், நேரத்திலும் பாராளுமன்றம் கூடி, முறைப்படி அந்தத் தினம் நேரம் வரையுமே பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது போல் கருதி அன்றைய அலுவல்களைக் கவனிக்கும். சபாநாயகர் இத்தகைய ஓர் அறிவித்தலை விடுக்கும்போது பாராளுமன்றம் கூட்டப்படும் தினத்தையும் நேரத்தையும் உறுப்பினர்களுக்கு அறியத்தருவதற்கான நடைமுறைச் சாத்தியமான நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்கொள்ளுதல் வேண்டும்.

### ஒத்திவைப்பு வேளையில் பிரேரணைகள் அல்லது கேள்விகள் (நி.கட்டளை 20)

பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு ஓர் ஒத்திவைப்புப் பிரேரணையை அல்லது ஒத்திவைப்புக் கேள்வியை ஏற்றுக்கொள்வதற்குத் தீர்மானித்துள்ள தினத்தில், இந்நோக்கத்திற்காக, பிரதான அலுவல்கள் முடிவுற்ற பின்னர் ஒரு மணித்தியாலயத்திற்கு மேற்படாத நேரம் பின்வரும் விதிகளிற்கமைய ஒதுக்கப்படுதல் வேண்டும்.

- ஒத்திவைப்பு பிரேரணை அல்லது கேள்வி, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களிற்கு வரையறுக்கப்படுதல் வேண்டும்.
- ஒரு பிரேரணை அல்லது கேள்வி ஏதேனும் நிலையியற் கட்டளையை மீறுகின்ற அல்ல அத்தகைய பிரேரணையை அல்ல கேள்வியை முன்மொழியும் ஓர் உறுப்பினரின் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்கின்றது எனச் சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால், அத்தகைய பிரேரணைக்கு அல்லது கேள்விக்கு அனுமதி மறுப்பதற்கு அவர் தத்துவமுடையவராதல் வேண்டும்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான விவாதத்தின்போது ஒத்திவைப்பு பிரேரணைக்காக அல்ல ஒத்திவைப்புக் கேள்விகளிற்காகக் குறித்தொதுக்கப்படும் நேரம், பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறு குறைக்கப்படலாம் மற்றும்
- பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் ஒத்திவைப்பு பிரேரணைகளை அல்லது கேள்விகளை ஏற்றுக்கொள்ளுதல் தொடர்பான நடவடிக்கைமுறை தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

### பாராளுமன்ற அலுவல்கள் (நி.கட்டளை 22)

பாராளுமன்றத்தின் அலுவல்கள் பின்வரும் ஒங்குமுறையில் நடாத்தப்படுதல் வேண்டும்

(1) புதிய உறுப்பினர்களின் பதவிச் சத்தியம் அல்லது உறுதியுரை

(2) சனாதிபதியின் செய்திகள்

(3) சபாநாயகரின் அறிவித்தல்கள்

(4) பத்திரங்கள் சமர்ப்பித்தல்

(5) குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்

(6) பொது மனுக்கள் சமர்ப்பித்தல்

(7) வாய்மூல விடைக்கான வினாக்கள்

(8) சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்

(9) அமைச்சு சம்பந்தப்பட்ட கூற்றுக்கள்

(10) தனிப்பட்ட விளக்கங்கள்

(11) சிறப்புரிமைக் கேள்விகள்

(12) முன்னறிவித்தல் தேவைப்படாத பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான பிரேரணைகள்

(13) முன்னறிவித்தல் தேவைப்படுகின்ற பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போதான பிரேரணைகள்

(14) அனுதாபப் பிரேரணைகள்

(15) பொது அலுவல்கள்

### பொது அலுவல்கள் (நி.கட்டளை 23)

பொது அலுவல்கள், தினப் பணிகளையும், பிரேரணைகளின் முன்னறிவித்தல்களையும் கொண்டிருக்கும். குறித்த ஒரு தினத்தில் பரிசீலனைக்கு எடுப்பதற்குப் பாராளுமன்றம் பணித்த ஒரு சட்டமூலம், ஒழுங்குவிதி, தீர்மானம் அல்லது வேறு ஏதேனும் விடயம் தினப் பணி ஆகும். அவ்வாறு நியமிக்கப்பட்ட தினத்திற்கு முன்னைய தினமொன்று பதிலீடு செய்யப்படலாகாது. ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வொரு நாளிலும் அரசாங்க அலுவல்கள் முன்னீடடைதல் வேண்டும்.

ஒவ்வொரு மாதத்திலும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வின்போது “இன்று அரசாங்க அலுவல்கள் முன்னீடடையுமாக” என்றோ “இன்று அரசாங்க அலுவல்களில் குறிப்பிட்ட ஒரு விடயம் முன்னீடடையுமாக” என்றோ பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போதோ விவாதேமா இன்றித் தீர்மானிப்பதற்கான பிரேரணையொன்றை அமைச்சரவையின் அமைச்சர் ஒருவர் முன்னறிவித்தலின்றிப் பிரேரிக்கலாம். அப்பிரேரணையை நிறைவேற்றினால், அரசாங்க அலுவல் அல்லது அலுவலின் குறிப்பிட்ட ஒரு விடயம் முன்னீடடைதல் வேண்டும். அரசாங்க அலுவல்கள், அரசாங்கம் உகந்ததெனக் கருதும் ஒழுங்குமுறையில் வகுக்கப்படுதல் வேண்டும்.

### தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் (நி.கட்டளை 24)

ஒவ்வொரு மாத்தினதும் முதலாவது வெள்ளிக்கிழமை அமர்வுகளில் தனியார் உறுப்பினர்களின் அலுவல்கள் அரசாங்க அலுவல்களின் மீது முன்னீடடைதல் வேண்டுமென்பதுடன், பிரேரணைகள் பற்றிய அறிவித்தல்கள் தினப்பணிகளின் மீது முன்னீடடைதல் வேண்டும்.

தனியார் உறுப்பினர் பிரேரணை முன்னறிவித்தலைக் கொடுக்கும் ஓர் உறுப்பினர் குறிப்பிட்ட ஒரு தனியார் உறுப்பினர்களின் தினத்திற்கு அந்தப் பிரேரணை ஒதுக்கப்பட வேண்டுமென்ற அவரது விருப்பத்தைத் தெரிவித்தாலன்றி, எல்லாத் தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகளும் அடுத்துவரும் தனியார் உறுப்பினர்கள் தினத்திற்கு ஒதுக்கப்பட வேண்டும். அத்தகைய ஏதேனும் பிரேரணை, பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவினால் எடுக்கப்பட்ட ஏதேனும் முடிவிற்கமைய, அது ஒழுங்குப் பத்திரத்தில் எந்த ஒழுங்குமுறையில் காணப்படுகிறதோ அந்த ஒழுங்குமுறையில் பரிசீலனைக்கு எடுக்கப்படுதல் வேண்டும். தனியார் உறுப்பினர்களின் பிரேரணைகள் காலவரிசை ஒழுங்குமுறையில் பரிசீலனைக்கு ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படுதல் வேண்டுமென்பதுடன், குறிப்பிட்ட நேரத்தில் எவரேனும் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்பட்ட பத்திற்கு மேற்பட்ட பிரேரணைகள் ஒழுங்குப் புத்தகத்தில் சேர்க்கப்படுதலாகாது.

‘தனியார் உறுப்பினர்’ என்பது, சபாநாயகர், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பிரதம அமைச்சர், அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் ஆகிய பதவிகளை வகிக்கின்ற உறுப்பினரொருவரை உள்ளடக்காது.

### பத்திரங்கள் (நி.கட்டளை 26)

பத்திரங்களைச் சமர்ப்பித்தல் ஒரு நியதிச்சட்டத் தேவைப்பாடாகும். பாராளுமன்றத்தின் பல்வேறு சட்டவாக்கங்களின் கீழான தீர்மானங்கள், ஒழுங்கு விதிகள், விதிகள், கட்டளைகள், குறைநிரப்பு மதிப்பீடுகள் போன்றவை. கௌரவ சபாநாயகரினால் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்றவாறு சம்பந்தப்பட்ட அமைச்சர்களினால் அல்லது பிரதி அமைச்சரினால் சபையில் சமர்ப்பிக்கப்படுகின்றன.

வருடாந்த செயல்நிறைவேற்றுகை அறிக்கைகள், மத்திய வங்கி அறிக்கை போன்ற வருடாந்த அறிக்கைகள், மற்றும் பல்வேறு அமைச்சுக்கள், அரச கூட்டுத்தாபனங்கள். மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு மற்றும் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளர் (குறைகேள் அதிகாரி) போன்ற நியதிச்சட்ட அமைப்புக்களின் நிதிக் கூற்றுக்கள் ஆகியவை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் பத்திரங்களின் நோக்கெல்லையினுள் வருகின்றன.

சமர்ப்பிக்கப்பட வேண்டிய பத்திரங்கள் சபை முதல்வர் அலுவலகத்தின் ஊடாக பாராளுமன்றத்துக்கு கையளிக்கப்படும். சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் கூட்ட அறிக்கையில் புதிவு செய்யப்படல் வேண்டும். பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படும்போது அவற்றின் உள்ளடக்கம் பற்றிச் சிறிய விளக்கக் கூற்று அளிக்கப்படலாம். ஆனால் சமர்ப்பிக்கும்போது விவாதமேதும் நிகழலாகாது. சமர்ப்பிக்கப்பட்ட பத்திரங்கள் அனைத்தும் சபாபீடத்தில் இடப்படுவதற்குக் கட்டளையிடப்பட்டுள்ளதாகக் கருதப்படுவதுடன், அவற்றை அச்சிடக்கோரும் ஏதேனும் பிரேரணை திருத்தமோ அல்லது விவாதமோ இன்றி தீர்மானிக்கப்படுதலும் வேண்டும்.

### முன்னறிவித்தல் (நி.கட்டளை 27/28/29)

கேள்விகள் அல்லது பிரேரணைகள் பற்றிய முன்னறிவித்தல்கள், எழுத்துமூலம் முன்னறிவித்தல் கொடுக்கும் உறுப்பினரால் கையொப்பமிடப்பட்டு செயலாளர் நாயகத்துக்கு முகவரியிட்டுக் கொடுக்கப்படல் வேண்டும். பாராளுமன்றம் அமரும் நாட்களில் எந்நேரத்திலும் அத்தகைய முன்னறிவித்தல்களை செயலாளர் நாயகத்திடம் கொடுக்கலாம் அல்லது எந்நேரத்திலும் செயலாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு அனுப்பலாம் அல்லது அங்கு கொடுக்கலாம்.

ஆயினும், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த விடயமொன்றுடன் தொடர்புள்ள கேள்வியொன்று உரிய அமைச்சுக்குப் போதுமான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னர் கேள்விகள் முடிவடைந்ததுடன், எதிர்க்கட்சித் தலைவரினாலோ அல்லது அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி ஒன்றின் தலைவரினாலோ கேட்கப்படலாம்.

செயலாளர் நாயகத்துக்கு முன்னறிவித்தல் கொடுக்கப்பட்ட எல்லாப் பிரேரணைகளும் சபாநாயகர் ஒழுங்கற்றதெனத் தீர்ப்பளித்தாலொழிய, அதனை ஒழுங்குப் புத்தகத்தில் சேர்த்தல் வேண்டும். ஆனால், பாராளுமன்றம் வேறுவகையாக கட்டளையிட்டாலன்றி முன்னறிவித்தல் செய்து ஐந்து முழு நாட்கள் கழியுமுன் அவற்றின்மீது விவாதமொன்றும் நிகழமுடியாது. இப்பந்தியின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் பொது அலுவல்கள் ஆரம்பத்தின்போது பிரேரிக்கப்பட்டுள்ள பிரேரணைகளின் முன்னறிவித்தல்கள் முன்னைய அமர்வுநாளில் சபாபீடத்தில் கிடைக்கப்பெற்றிருந்தால் அவை ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

அமைச்சு சம்பந்தமான கூற்றொன்று, பிரதம அமைச்சரினால் அல்லது அமைச்சரவையின் அமைச்சரொருவரினால் அவ்வமைச்சுக்கு எந்த விடயம் தொடர்பில் அமைச்சு ரீதியிலான பொறுப்பானது பொறுப்பிக்கப்பட்டுள்ளதோ அந்த விடயத்தின் மீது அளிக்கப்படுதல் வேண்டும். ஒரு கூற்றை அவ்வாறு அளிப்பதற்குக் காணப்படுகின்ற அமைச்சர் கூற்றின் பிரதியொன்றை முன்கூட்டியே சபாநாயகருக்கு சமர்ப்பித்து அவரின் அங்கீகாரத்தை முதலில் பெறுதல் வேண்டும்.

உறுப்பினரொருவர் சபையில் சமுகமாயிராத சந்தர்ப்பத்தில் இன்னோர் உறுப்பினரினால் சபையில் செய்யப்பட்டுள்ளவொரு குறிப்பீட்டிற்குப் பதிலளிக்கும்போது அவ்வுறுப்பினரின் சொந்த நடத்தையை நிலைநாட்டும் நோக்கத்திற்காக அவ்வுறுப்பினரினால் தனிப்பட்ட விளக்கமொன்று கொடுக்கப்படலாம் அவ்வாறு விளக்கமொன்றை அளிக்கக் கருதுகின்ற எவரேனும் உறுப்பினர் அவ்விளக்கத்தின் பிரதியொன்றை முன்கூட்டியே போதுமான அறிவித்தல் கொடுத்துச் சபாநாயருக்குச் சமர்ப்பிப்பதுடன், சபாநாயகரின் அங்கீகாரத்தை முதலில் பெறுதல் வேண்டும். அவ்வாறு அளிக்கப்படும் விளக்கம் கண்டிப்பாக அவ்வுறுப்பினரின் சொந்த நடத்தையை நிலைநாட்டும் நோக்கத்திற்காக மட்டுமே வரையறுக்கப்பட்டதாகவிருத்தல் வேண்டும்.

நிலையியற் கட்டளைகள் பிறவாறு பணித்தாலன்றி, பின்வரும் பிரேரணைகள் தவிர்ந்த வேறு எவையேனும் தொடர்பாகச் சமர்ப்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள எப்பிரேரணைக்கும் முன்னறிவித்தல் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(அ) முழுப் பாராளுமன்றக் குழுவில் பிரேரிக்கப்படும் பிரேரணைகள்

(ஆ) பாராளுமன்றத்தை அல்லது ஏதாவது விவாதத்தை ஒத்திவைப்பதற்கான பிரேரணை

(இ) விசேட குழுவொன்றின் அறிக்கையைப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தத்தவோ அல்லது அச்சிடவோ கோரும் பிரேரணை

(ஈ) புறத்தோரை வெளியேற்றுவதற்கான பிரேரணை

(உ) ஓர் உறுப்பினரை பாராளுமன்றச் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைப்பதற்கான பிரேரணை

(ஊ) ஒரு சிறப்புரிமை விடயத்தையொட்டிய பிரேரணை

(எ) ஒரு தினத்தில் அமர்வொன்றில் விவாதிக்கப்பட வேண்டிய புதிய விடயங்கள் ஆரம்பிக்கப்படும் முன்னரும் அவ்வலுவலிலிருந்து எழுகின்ற பிரேரணை

பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளுடன் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஓர் அவசரப் பிரேரணை முன்னீடடைதல் வேண்டும். வாக்கெடுப்பு நிகழ்ந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தைத் தவிர்ந்த வேறு சந்தர்ப்பத்தில் பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளை நேரடியாகத் தழுவிய ஒரு விடயம் அண்மையில் தோன்றியிருக்கும்போது சிறப்புரிமையை அடிப்படையாகக் கொண்ட ஒரு பிரேரணை மூலம் பாராளுமன்ற நடவடிக்கை இடைமறிக்கப்படலாம்.

சிறப்புரிமை பற்றிய விடயத்தை எழுப்புவதற்கு கருதுகின்ற எவரேனும் உறுப்பினர் அக்கிராசனத்திற்கு முதலில் அறிவித்தல் கொடுக்கவேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்தின் நடவடிக்கைகளை இடைநிறுத்திவைப்பதற்கு அக்கிராசத்திடமிருந்து அனுமதி பெறுதல் வேண்டும்.

## பொது மனுக்கள் (நி.கட்டளை 30)

பாராளுமன்றத்திற்கான ஒவ்வொரு மனுவும் சபாநாயருக்கு முகவரியிடப்பட்ட ஒரு மனு வடிவத்திலிருக்க வேண்டுமென்பதுடன், அது ஓர் உறுப்பினரால் சமர்ப்பிக்கப்படுதலும் வேண்டும். ஒவ்வொரு மனுவும் மதிப்பான வார்த்தைகளில் இருந்தல் வேண்டுமென்பதுடன், பொருத்தமற்ற கூற்றுக்களைக் கொண்டிருத்தலுமாகாது. ஒவ்வொரு மனுவும் தெளிவாகவும், வாசிக்கக் கூடியதாகவும் இருத்தல் வேண்டும் என்பதுடன், கோருவதற்கான நிவாரணத்தை எடுத்துரைக்கும் இறைஞ்சுதலுடன் அது முடிவுறுதல் வேண்டும்.

சுகவீனத்திலான இயலாமை விடயத்தில் தவிர, ஒவ்வொரு மனுவும் மனுதாரரால் அல்லது மனுதாரர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும். எழுத இயலாத ஆள் ஒருவர், சாட்சி ஒருவரின் முன்னிலையில் தனது அடையாளத்தை இடுதல் வேண்டும். மனு ஒன்றின் கையொப்பக்காரர் ஒவ்வொருவரினதும் முழுப்பெயர், முகவரி மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பதை மனுவில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

ஏதேனும் மனுவுடன் கடிதங்கள், சத்தியக்கடதாசிகள் அல்லது பிற ஆவணங்கள் எவையும் இணைக்கப்படுதல் ஆகாது.

மனுவொன்றில் பாராளுமன்றத்தின் ஏதேனும் விவாதம் பற்றிய குறிப்பீடு இருக்கலாகாது. உறுப்பினரொருவர் தமது சொந்த மனுவொன்றை முன்வைப்பதற்குத் தகுதிவாய்ந்தவராகவிருத்தலாகாது, ஆனால் அது வேறோர் உறுப்பினரினால் முன்வைக்கப்படலாம்.

ஒவ்வொரு மனுவும் சமர்ப்பிக்கப்படும் முன்னர், அதன் ஆரம்பத்தில் அதற்குப் பொறுப்பாயிருக்கும் உறுப்பினரால் ஒப்பமிடப்படுதல் வேண்டுமென்பதுடன் குறைந்தபட்சம் இரு முழு நாட்களிற்குச் செயலாளர் நாயகத்திடம் இருக்கத்தக்கதாக அதனைச் சமர்ப்பித்தலும் வேண்டும். செயலாளர் நாயகம் அதனை அங்கீகாரத்திற்கெனச் சபாநாயகருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். இவ்வாறு அங்கீகரிக்கப்பட்டாலன்றி மனு எதுவும் சமர்ப்பிக்கப்படுதலாகாது.

மனு ஒன்றைச் சமர்ப்பிக்கும் உறுப்பினர் பின்வரும் முறையிலான கூற்றொன்றிற்குத் தம்மை வரையறுத்துக்கொள்ள வேண்டும் என்பதுடன், இக்கூற்றின்மீது விவாதம் எதையும் அனுமதித்தலாகாது.

“சபாநாயகர் அவர்களே! ............................ ............................ (முகவரி) எனும் இடத்தைச் சேர்ந்த ............................ (மனுதாரரின் பெயர்) என்பவரிடமிருந்து / ஏனைய ............................ (மனுதாரரின் எண்ணிக்கை) ஆட்களிடமிருந்தும் கிடைக்கப்பெற்ற மனு ஒன்றைச் சமர்ப்பிக்கின்றேன்”

மனு ஒன்று பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அது பொது மனுக்கள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும்.

## கேள்விகள் (நி.கட்டளை 31-37)

பொது விடயங்கள் தொடர்பான கேள்விகள் பிரதம அமைச்சரிடம் அல்லது சனாதிபதியினால் எவரேனும் அமைச்சுக்குக் குறித்தளிக்கப்பட்ட விடயங்களும் பணியகம் தொடர்பாக அமைச்சு ரீதியிலான பொறுப்பைக் கொண்டுள்ள அத்தகைய அமைச்சரிடம் கேட்கப்படலாம்.

வாய்மூல விடையினைக் கோரும் கேள்வியொன்று பாராளுமன்ற ஒழுங்குப் பத்திரத்தில் வெளியிடப்படும் சந்தர்ப்பத்தில், ஒழுங்குப்பத்திரத்தில் அக்கேள்விக்குரிய முறை வந்ததும் சபாநாயகர் அக்கேள்விக்குரிய உறுப்பினரின் பெயரை அழைக்கவேண்டும். அவ்வண்ணம் அழைக்கப்பட்ட உறுப்பினர் தமது இடத்தில் எழுந்து நின்று ஒங்குப் பத்திரத்திலுள்ள அக்கேள்வியின் இலக்கத்தைக் குறிப்பிடுவதன் மூலம் கேள்வியினைக் கேட்டல் வேண்டும். அதன் பின் அக்கேள்விக்குரிய விடை பிரதம அமைச்சரால் அல்லது அக்கேள்வி கேட்கப்படும் அமைச்சரால் அளிக்கப்படுதல் வேண்டும்.

உரிய விடயம் தொடர்பான அமைச்சர் அல்லது அத்தகைய அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட வோறொரு அமைச்சர் அக்கேள்விகளுக்கு எந்த நாளன்று விடையளிக்கவேண்டியுள்ளதோ அந்த நாள் வாய்மொழிமூலம் விடையளிப்பதற்குச் சபையில் சமுகமளித்தல் வேண்டும்.

கேள்வியொன்றிற்கு எழுத்துமூலம் விடை கோரும்போது பிரதம அமைச்சர் அல்லது அக்கேள்வி கேட்கப்படும் அமைச்சர் அதற்குரிய விடையை ஹன்சாட் அறிக்கையில் மும்மொழிகளில் அச்சிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

குறிப்பிட்டவொரு நாளில் உப்பினரொருவரினால் எழுப்பப்பட்ட ஏதேனும் கேள்விக்கு விடையளிப்பதற்குச் சபையில் சமுகமாயிருப்பதற்கு இயலாதவராகவுள்ள அமைச்சரொருவர் சபாநாயகரின் முன்னனுமதியைப் பெறுதல் வேண்டும் என்பதுடன், அக்கேள்விக்கு விடையளிப்பதற்கு அத்தகைய அமைச்சர் செய்துள்ள ஒழுங்கேற்பாடுகளைச் சபாநாயகருக்கு அறிவித்தல் வேண்டும். ஆகக்குறைந்தது மூன்றாவது முறையாக கேள்வியொன்று விடையளிப்பதற்காக அட்டவணைப்படுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்திலாவது அக்கேள்விக்கு பதிலளிக்கப்படுதல் வேண்டும்.

அளிக்கப்பட்ட அத்தகைய ஏதேனும் விடையின்மீது எவரேனும் உறுப்பினர் இரண்டிற்கு மேற்படாத குறைநிரப்புக் கேள்விகளைக் கேட்கலாம்.

அத்தகைய குறைநிரப்புக் கேள்விகள், தொடக்கக் கேள்வியில் உள்ளடக்கப்படாத விடயங்களை அறிமுகப்படுத்தலாகாதென்பதுடன், வாய்மொழிமூலமான விடையிலிருந்து எழுகின்ற ஏதேனும் விடயத்தை மேலும் தெளிவுபடுத்தும் நோக்கத்துக்காக மட்டுமே கேட்கப்படுதல் வேண்டும். ஆயினும், மேலும் கேள்விகளின் ஏல்தகைமை பற்றிய விதிகள் ஏதேனும் குறைநிரப்பிக் கேள்விகள் மீறுகின்றதென சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால் அத்தகைய குறைநிரப்பிக் கேள்விகளுக்கு அனுமதி மறுத்தல் வேண்டும்.

எந்தவொரு தினத்திலும் கேள்விகளிற்கென ஒரு மணித்தியாலத்திற்கு மேற்பட்ட நேரம் ஒதுக்கப்படுதலாகாது என்பதுடன், உப்பினரொருவரால் எந்தவொரு தினத்திலும் வாய்மொழி மூலமான விடைக்காக இரண்டிற்கு மேற்பட்ட கேள்விகள் கேட்கப்படுதலுமாகாது.

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் குழுநிலை விவாதத்திற்காக நிர்ணயிக்கப்பட்ட தினங்களில் கேள்விகளிற்காக முப்பது நிமிடங்களிற்கு மேற்பட்ட நேரம் ஒதுக்கப்படலாகாது.

கேள்விகளைக் கேட்பதற்கான உரிமை பின்வரும் விதிகளிற்கு உட்பட்டதாயிருத்தல் வேண்டும்

(அ) ஏதேனுமொரு கேள்வியில் ஒரு விடயம் மட்டுமே குறிப்பீடு செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் கேள்வியானது நூற்றம்பது சொற்களிற்கு மேற்படுதலுமாகாது.

(ஆ) கேள்வியை விளங்கிக்கொள்வதற்கு அத்தியாவசியமற்ற ஏதேனும் பெயர் அல்லது கூற்று ஒரு கேள்வியில் குறிப்பிடப்படுதலாகாது.

(இ) கேள்வியொன்று ஒரு கூற்றைக் கொண்டிருப்பின், அதனைக் கேட்கும் உறுப்பினர் அத்தகைய கூற்றின் பிழையின்மைக்கான பொறுப்பையேற்றல் வேண்டும்.

(ஈ) கேள்வியொன்றில் ஏதேனும் வாதம், ஊகம், காரணம் கற்பித்தல், அடைமொழி அல்லது வஞ்சகப்புகழ்ச்சியான சொற்றொடர் இடம்பெறலாகாது.

(உ) குழுவொன்றின் அறிக்கைமூலம் பாராளுமன்றத்திற்கு முன்னிடப்படாத அக்குழு தொடர்பான நடவடிக்கைகள் பற்றிக் கேள்வியொன்று கேட்கப்படலாகாது.

(ஊ) சட்ட நீதிமன்றமொன்றின் தீர்ப்பிற்குட்பட்டுள்ள அல்லது சட்டமுடிவை எதிர்நோக்கியுள்ள எவ்விடயமும் ஒரு கேள்வியில் இடம்பெறலாகாது.

(எ) கருத்துத் தெரிவிக்கும்படியோ, யதார்த்தமற்ற ஒரு சட்டப் பிரச்சினைக்கு அல்லது ஓர் அனுமான நிலைக்குப் பாரிகாரம் கோரியோ கேள்வி கேட்கப்படலாகாது.

(ஏ) தனிப்பட்ட ஒருவரது பொது அல்லது உத்தியோக முறை சம்பந்தப்படாத ஒழுக்கத்தையோ நடத்தையையோ ஒட்டிய கேள்வி கேட்கப்படலாகாது.

(ஐ) ஒரு தன்னிலைப் பிரேரணையினால் மட்டுமே வினாவெழுப்பக்கூடிய எந்தவோர் ஆளினதும் ஒழுக்கத்தை அல்லது நடத்தையைப் பிரதிபலிக்கக் கூடிய கேள்வி கேட்கப்படலாகாது.

(ஒ) ஒருவரின் சொந்த ஒழுக்கம் பற்றி நேரடியாகவோ உள்ளார்த்தமாகவோ குற்றம் சுமத்தும் கேள்வி அனுதிக்கப்படமாட்டாது மற்றும்,

(ஓ) ஏதேனும் அமர்வுத்தொடரில் அதற்கு முழுமையாக விடையளிக்கப்பட்ட ஒரு கேள்வி அதே அமர்வுத்தொடரின்போது மீண்டும் கேட்கப்படுதலாகாது.

இந்நிலையியற் கட்டளைகளின் கீழ் ஒரு கேள்வியை அனுமதிக்கலாமா இல்லையா என்பதைச் சபாநாயகர் தீர்மானிப்பார். கேள்வி கேட்கும் உரிமையைத் துஷ்பிரயோகம் செய்யும் விடயமோ, பாராளுமன்றத்தின் நடவடிக்கையைத் தடைப்படுத்தும் அல்லது குந்தகமான முறையில் பாதிக்கும் நோக்கம் கொண்டதென்றோ தாம் அபிப்பிராயப்படும் எந்தெவொரு கேள்விக்கும் சபாநாயகர் அனுமதி மறுக்கலாம். இந்நிலையியற் கட்டளைகள் எவற்றையாவது மீறும் எந்தவொரு கேள்விக்கும் சபாநாயகர் அனுமதி மறுக்க வேண்டும். சபாநாயகர் ஒரு கேள்விக்கு அனுமதி மறுத்தால் அம்மறுப்பை அதற்குரிய காரணத்தோடு, செயலாளர் நாயகம் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு எழுத்துமூலம் அறிவித்தல் வேண்டும்.

தகாத சொல்லமைப்புக்களைக் கொண்ட அல்லது பாராளுமன்றத்தின் ஏதேனும் நிலையியற் கட்டளைக்கு காரணமாகவுள்ள ஏதேனும் அறிவித்தல், அது ஒழுங்குப் புத்தகத்தில் தோன்றும் முன்னர், கேள்வியைக் கேட்கும் உறுப்பினரின் சம்மதத்துடன் சபாநாயகரினால் திருத்தப்படலாம்.

ஒரு கேள்விக்கு நீண்ட விடை தேவையாகவுள்ளதெனச் சபாநாயகர் அபிப்பிராயப்பட்டால், அக்கேள்வியானது வாய்மொழிமூலமான விடைக்கான கேள்வியல்லவெனக் கருதப்பட வேண்டுமெனப் பணிக்கலாம். அது பற்றிய முடிவு செயலாளர் நாயகத்தினால் சம்பந்தப்பட்ட உறுப்பினருக்கு அறிவிக்கப்படுதலும் வேண்டும்.

### பிரதம அமைச்சரிடம் கேட்கப்படும் கேள்விகள் (நி.கட்டளை 38)

ஒவ்வொரு மாதத்தினதும் முதலாவது அமர்வு வாரத்தின் புதன்கிழமையன்று வாய்மொழிமூலமான விடைகளிற்கான கேள்விகளிற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நேரத்தின்போது, பிரதம அமைச்சரிடமிருந்து நான்கிற்கு மேற்படாத கேள்விகளைக் கேட்பதற்கு முப்பது நிமிடங்கள் ஒதுக்கப்படலாம். முதலாவது புதன்கிழமையன்று பிரதம அமைச்சர் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு அத்தகைய நோக்கத்திற்காக அதே மாதத்தின்போது பொருத்தமான நாள் பற்றி முடிவு செய்யலாம்.

பிரதம அமைச்சருக்கான கேள்விகள், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களுட்பட அரசாங்கக் கொள்கைகள் தொடர்பான விடயங்களிற்கு மட்டுமே வரையறுக்கப்படுதல் வேண்டும். விபரமான விடையைத் தேவைப்படுகின்ற அல்லது குறித்தவொரு விடயத்திற்கு வரையறுக்கப்பட்ட ஏதேனும் கேள்வி, பிரதம அமைச்சரின் தற்றுணிபின்பேரில் விடையளிப்பதற்காக உரிய விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சருக்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

### விவாதத்திற்கான விடயங்கள் (நி.கட்டளை 39)

பொதுமக்களின் நலன் தொடர்பான ஏதேனும் விடயம் பற்றிய பிரேரணையைப் பிரேரிப்பதற்கு எவரேனும் உறுப்பினர் தகுதிவாய்ந்தவராயிருத்தல் வேண்டுமென்பதுடன், அத்தகைய பிரேரணை இந்நிலையியற் கட்டளைகளிற்கிணங்க விவாதிக்கப்படவோ அல்லது வேறுவகையில் முடிவுறுத்தப்படவோ முடியாது.

தமது பெயரிலிருக்கும் ஒரு பிரேரணையைப் பிரேரிக்கும்படி அழைக்கும்போது ஒரு தனியார் உறுப்பினர் அவ்வாறு பிரேரிக்கப்படாவிட்டால் அது காலாவதியாகும். ஆனால் அவர் எழுத்துமூலம் அதிகாரம் அளித்த இன்னொரு உறுப்பினர் அவருக்காக அப்பிரேரணையைப் பிரேரிக்கலாம்.

### திருத்தங்கள் (நி.கட்டளை 43-45)

(1) அக்கிராசனத்திலிருந்து பிரேரணையொன்றை எடுத்தியம்பும்போது

(அ) குறித்த சில சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்காக குறித்த சில வேறு சொற்களைப் பதிலீடு செய்தல் வேண்டுமென்றோ அல்லது

(ஆ) குறித்த சில சொற்கள் நீக்கப்பட வேண்டுமென்றோ அல்லது

(இ) குறித்த சில சொற்கள் புகுத்தப்பட அல்லது சேர்க்கப்பட வேண்டுமென்றோ அப்பிரேரணை திருத்தப்படலாம்

(2) அத்தகைய ஒவ்வொரு திருத்தமும் அதனைப் பிரேரிக்கின்ற உறுப்பினரினால் எழுத்துமூலம் செயலாளர் நாயகத்துக்குக் கையளிக்கப்படுதல் வேண்டும்.

(3) சட்டமூலமொன்றிற்கு முன்மொழியப்படும் ஒவ்வொரு திருத்தமும் அரசியலைமப்பின் 77ஆம் உறுப்புரையின் நியதிகளின்படி சட்டத்துறை தலைமையதிபதியினால் பரிசீலனை செய்யப்படுதல் வேண்டும்.

(4) பிரேரணையொன்றிக்கான திருத்தம் எப்பிரேரணை தொடர்பாக முன்மொழியப்படுகின்றதோ அப்பிரேரணைக்கு இயைபானதாகவிருத்தல் வேண்டும்.

(5) பாராளுமன்ற விதிகளிற்கமைய முன்னறிவித்தல் அளிக்கப்பட்ட தன்னிலைப் பிரேரணைமூலம் மாத்திரமே எழுப்பப்படக்கூடிய ஒரு பிரச்சினை திருத்தமொன்றின்மூலம் எழுப்பப்படலாகாது.

(6) ஒரு பிரேரணையின் ஏதாவது ஒரு பகுதிக்கான திருத்தத்திற்குரிய முடிவு வழங்கப்பட்டதன் பின்னர் அப்பகுதிக்கு முன்னதாக உள்ள பகுதியைத் திருத்த முடியாது.

(7) அதேமுறையில், அக்கிராசனத்திலிருந்து ஒரு பிரேரணையின் ஏதாவது பகுதிக்குத் திருத்தம் எடுத்தியம்பப்பட்டால் அத்திருத்தம் மீட்கப்பட்டாலன்றி, அப்பகுதிக்கு முன்னதாகவுள்ள ஒரு பகுதியைத் திருத்த முடியாது.

(8) ஒரு பிரேரணை தொடர்பான திருத்தம் ஏதாவதொரு சட்டமூலம் அல்லது விடயம் தொடர்பாக அதேபோன்ற சந்தர்ப்பத்தில் திருத்தம் தொடர்பான முன்னர் எடுக்கப்பட்ட முடிவிற்கு முரணானதாயித்தலாகாது.

(9) அக்கிராசனத்திலிருந்து திருத்தமொன்று எடுத்தியம்பப்படும்போது அத்திருத்தத்திற்கும் பொருத்தமான திருத்தம் பிரேரிக்கப்படலாம்.

திருத்தமொன்று குறித்த சில சொற்களை நீக்கிவிட்டு அவற்றிற்காக வேறு சில சொற்களைப் பதிலீடு செய்வதாயிருந்தால் சபாநாயகரோ அல்லது தவிசாளரோ, அத்திருத்தத்தினைக் குறிப்பிட்ட பின்னர் 'நீக்கப்படவேண்டுமெனப் பிரேரிக்கப்பட்ட சொற்கள் பிரேரணையின் அல்லது வாசகத்தின் ஒரு பகுதியாக இருக்குமாக' என்ற பிரேரணையை முதலில் எடுத்தியம்புவார். அப்பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு நிராகரிக்கப்பட்டால் திருத்தத்தில் பிரேரிக்கப்பட்ட அச்சொற்கள் அங்கு பதிலீடு செய்யப்படுமாக என்ற பிரேரணையை அவர் எடுத்தியம்புதல் வேண்டும்.

## வாக்களிப்பு (நி.கட்டளை 47-49)

சபாநாயகரினால் பிரேரணை முன்வைக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், 'ஆம்', 'இல்லை' என்ற குரல்களிலிருந்து வாக்கெடுப்பின் முடிவு சபாநாயகரினால் பிரகடனப்படுத்தப்படலாம்.

சபாநாயகரின் முடிவிற்கு உடன்படாத எவரேனும் உறுப்பினர், சபாநாயகரினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறாகப் பின்வரும் ஏதேனும், முறையொன்றின் கீழ் வாக்கெடுப்பொன்றினைக் கோரலாம். அத்தகைய சந்தர்ப்பத்தில் ஐந்து நிமிடங்களிற்கு வாக்கழைப்பு மணி அடிக்கப்பட்டு அதன் பின்னர்

(அ) சபையில் பிரேரணைக்கு ஆதரவாக அல்லது சபையில் பிரேரணைக்கு ஆதரவாக அல்லது எதிராகத் தத்தமது இடங்களில் எழுந்து நிற்கின்ற உறுப்பினர்களை வரிசை வரிசையாக எண்ணுவதன் மூலம் வாக்கெடுப்பொன்று நடத்தப்படல் வேண்டும் அல்லது

(ஆ) இலத்திரனியல் வாக்குப் பதிகருவியைப் பயன்படுத்துவதன்மூலம் வாக்கெடுப்பொன்று நடாத்தப்படல் வேண்டும். அதற்காக சபாநாயகரினால் அனுமதிக்கப்பட்ட காலப்பகுதியினுள் அவர்கள் முடிவைச் சுட்டிக்காட்டுவதற்கு உறுப்பினர்கள் பொருத்தமான பொத்தானை அழுத்துதல் வேண்டும் அல்லது

(இ) ஒவ்வோர் உறுப்பினரிடமிருந்தும் அவர் எவ்வாறு வாக்களிக்க விரும்புகின்றாரெனச் செயலாளர் நாயகம் தனித்தனியாகக் கேட்பதன்மூலம் வாக்கெடுப்பொன்று நடத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க வாக்குகளைப் பதிதலும் வேண்டும். செயலாளர் நாயகம் முதலில் பிரதம அமைச்சரிடமும், அதன்பின்னர் அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர் அல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்கள் ஆகியோரிடமும் அவர்களின் பெயர்களின் அகரவரிசை ஒழுங்கிலும் அதன்பின்னர்

ஏனைய உறுப்பினர்களிடம் அவர்களினது பெயர்களின் அகரவரிசை ஒழுங்கிலும் கேட்க வேண்டும். எவரேனும் உறுப்பினர் வாக்களிக்காதிருப்பதற்கு விரும்பினால் அதனை செயலாளர் நாயகத்திடம் கூறலாம். செயலாளர் நாயகம் அத்தகைய விடயத்தில் வாக்களிக்காது தவிர்த்தவராக அத்தகைய உறுப்பினரின் பெயரைப் பதிதல் வேண்டும்.

சபாநாயகர் பிரேரணைக்கு ஆதரவாகவும் எதிராகவும் அளிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைகளை அறிவித்தல் வேண்டுமென்பதுடன், அவ்வாக்குகள் சமமானவையாக இருக்கும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர் அறுதியிடும் வாக்கொன்றை அளிப்பார். சபாநாயகர் அதன் பின்னர் வாக்கெடுப்பின் முடிவைப் பிரகடனப்படுத்துதல் வேண்டும்.

வாக்கெடுப்பொன்றின்போது பதியப்பட்ட எண்ணிக்கைகள் அல்லது பெயர்கள் சம்பந்தமாக வேறுவகையில் திருத்தப்பட முடியாத குழப்பம் அல்லது தவறு ஏற்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர், அதன் பின்னர் உடனடியாக இன்னொரு வாக்கெடுப்பை மேற்கொள்ளும்படி சபையைப் பணித்தல் வேண்டும்.

ஓர் உறுப்பினர் தாம் தவறாக வாக்களித்துவிட்டதாகவோ, தம்முடைய வாக்குப் பிழையாக எண்ணப்பட்டுவிட்டதாகவோ கூறினால், தாம் அளித்த வாக்கைத் திருத்திக்கொள்ள அவர் உரிமை கோரலாம்.

ஆயினும், வாக்களிப்பிற்கு அனுமதிக்கப்பட்ட நேரம் முடிவடைந்து விட்டதென்ற பிரகடனத்தை சபாநாயகர் செய்யும் முன்னர் உறுப்பினர் அத்தகையை கோரிக்கையை செய்ய வேண்டும்.

### சட்டமூலங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடைமுறை (நி.கட்டளை 50)

அமைச்சரவையின் அமைச்சர் முன்னறிவித்தலின் பின்னர், சட்டமூலம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கான பாராளுமன்றத்தின் கட்டளையின்றி, அதனைச் சமர்ப்பிக்கலாம். பொது அலுவல்கள் ஆரம்பத்தில் சட்டமூலமொன்றை அவ்வாறு அறிமுகப்படுத்தும்போது, சட்டமூலத்தின் தலைப்பு செயலாளர் நாயகத்தினால் வாசிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், சட்டமூலமானது அப்போது முதலாவது முறையாக மதிப்பிடப்பட்டதாகக் கருதப்படும்.

முதலாம் மதிப்பீட்டின் பின்னர் அத்தகைய சட்டமூலம் பிரேரணை எதுவுமின்றி உரியதுறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். குழுவானது சட்டமூலத்திற்குத் திருத்தங்களைப் பரிந்துரைக்கலாம். குழுவானது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அல்லது பாராளுமன்றத்தினால் அறிக்கையிடுவதற்காக வழங்கப்பட்ட காலம் முடியும்வரை சட்டமூலம் தொடர்பில் மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

### அரசியலமைப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் IIIஇல் தரப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பிலான சட்டமூலங்கள்

அரசியலைமப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் IIIஇல் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் சம்பந்தமான ஒரு சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது, பாராளுமன்றம் வேறுவிதமாக தீர்மானித்தாலன்றி, இந்நிலையியற் கட்டளையின் 2ஆம் பந்தியில் விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கை முறை பின்பற்றப்படுதல் வேண்டும்.

(2) (அ) அச்சட்டமூலம் தொடர்பான ஒவ்வொரு மாகாண சபையினதும் கருத்துக்களை அச்சட்டமூலத்தின் பிரதிகள் ஒவ்வொரு மாகாண சபைக்கும் அனுப்பப்பட்ட திகதியிலிருந்து இரு மாத காலப்பகுதியினுள் அல்லது பாராளுமன்றம் குறித்துரைக்கக்கூடிய அத்தகைய வேறு காலப்பகுதியினுள், பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்காக அச்சட்டமூலத்தின் பிரதிகளை சகல மாகாண சபைகளிற்கும் அனுப்பிவைக்குமாறு சபாநாயகர், செயலாளர் நாயகத்தைப் பணித்தல் வேண்டும்.

(ஆ) உபபந்தி (அ) வில் குறித்துரைக்கப்பட்ட காலம் முடிவுறுவதன்மேல் அல்லது மாகாண சபைகளின் கருத்துக்கள் பெறப்பட்டதன்மேல், இவற்றுள் எது முந்தியதோ அதன்மேல் பாராளுமன்றமானது அச்சட்டமூலம் சம்பந்தமாக நடவடிக்கையெடுக்க முயலலாம்.

(3) (அ) அரசியலமைப்பிற்கான ஒன்பதாம் அட்டவணையின் நிரல் III இல் தரப்பட்டுள்ள ஏதேனும் விடயம் தொடர்பில் ஆக்கப்படவேண்டிய ஏதேனும் உத்தேச நியதிச்சட்டத்தின்மீது பாராளுமன்றத்தைக் கலந்தாலோசிப்பதற்கு நாடுகின்ற ஏதேனும் மாகாண சபையிடமிருந்து தொடர்பாடலொன்று பெறப்படும்போதெல்லாம் சபாநாயகர், கிடைக்கக்கூடிய முதலாவது சந்தர்ப்பத்தில் அத்தொடர்பாடல் கிடைக்கப்பெற்றமை தொடர்பாகப் பாராளுமன்றத்திற்கு அறிவித்தல் வேண்டும். அத்தகைய தொடர்பாடலானது அதன்மேல் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

(ஆ) பாராளுமன்றம், சட்டவாக்க நிலையியற் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர், மாகாண சபையிடமிருந்து அத்தகைய தொடர்பாடல் கிடைக்கப்பெற்ற தினத்திலிருந்து இரண்டு மாதங்களினுள், உத்தேச நியதிச்சட்டம் தொடர்பாகப் பாராளுமன்றத்தின் கருத்துக்களை உரிய மாகாணசபைக்கு அனுப்பிவைக்கும்படி செயலாளர் நாயகத்துக்குப் பணிப்புரை வழங்குதல் வேண்டும்.

### தனியார் உறுப்பினர்களின் சட்டமூலங்கள் (நி.கட்டளை 52-53)

ஒரு சட்டமூலத்தைச் சமர்ப்பிக்க விரும்பும் தனியார் உறுப்பினர் எவரும், சட்டமூலத்தின் நோக்கம், முக்கிய அம்சங்கள் ஆகியவற்றைத் தெரிவித்து அச்சட்டமூலத்தைச் சமர்ப்பிப்பதற்குப் பாராளுமன்றத்தின் அனுமதி கோரி விண்ணப்பித்தல் வேண்டும்.

அத்தகைய விண்ணப்பம் ஒவ்வொன்றும் ஒரு பிரேரணை உருவில் தயாரிக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய விண்ணப்பத்தைச் செய்யும் உறுப்பினர், அவரது உத்தேச சட்டமூலத்தின் பிரதிகளைச் சிங்களத்திலும் தமிழிலும், ஆங்கில மொழிபெயர்ப்புடன் அப்பிரேரணையின் பிரதியுடன் செயலாளர் நாயகத்திடம் ஒப்படைத்தல் வேண்டும். செயலாளர் நாயகம் அச்சட்டமூலம் அரசியலைமப்பிற்கு முரணானதா மற்றும் அரசியலமைப்பிற்கான பதின்மூன்றாம் திருத்தத்தின் ஏற்பாடுகளிற்குட்படுகின்றதாவென்பது தொடர்பாகச் சட்டத்துறை தலைமையதிபதியின் கருத்தை அறிந்துகொள்வதற்காக அச்சட்டமூலத்தைச் சட்டத்துறை தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தல் வேண்டும். சட்டத்துறை தலைமையதிபதி ஆறு வார காலத்தினுள் தனது கருத்தினைப் பாராளுமன்றத்திற்கு தெரியப்படுத்தல் வேண்டும்.

சட்டத்துறை தலைமையதிபதியின் கருத்தினைப் பெற்றதன் பின்னர் செயலாளர் நாயகம் அச்சட்டமூலத்தைச் சிங்களத்திலும், தமிழிலும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் வர்த்தமானியில் வெளியிடுவதற்கு வகைசெய்தல் வேண்டும்.

சட்டமூலமானது வர்த்தமானியில் வெளியிடப்பட்ட திகதியிலிருந்து பதின்னான்கு நாட்கள் கழிந்ததன் பின்னர் எந்நேரத்திலும் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

பிரேரணை ஒன்று சபைக்கு விடப்பட்டு, அது ஏற்றுகொள்ளப்பட்டு அனுமதி வழங்கப்பட்டதும் அல்லது சபையால் அனுமதி வழங்கப்படாதபோது இருபதிற்கும் குறையாத உறுப்பினர்கள் அவ்வுறுப்பினரின் பிரேரணையை ஆதரித்து தத்தம் இடங்களில் எழுந்து நின்றால், அச்சட்டமூலம் முதலாம் மதிப்பீடு செய்யப்பட்டு அச்சிடுவதற்குக் கட்டளையிடப்பட்டதாகக் கருதப்படுவதுடன், அதன்மீது விவாதமொன்று மேற்கொள்ளப்படாது சட்டமூலத்தின் விடயங்களும் பணிகளும் தொடர்பாகக் குறித்தொதுக்கப்பட்ட அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும். அத்தகைய அமைச்சரோ அல்லது பிரதியமைச்சரோ இல்லாத சந்தர்ப்பத்தில் சபாநாயகர் நியமிக்கும் வேறொரு அமைச்சருக்கோ அல்லது பிரதி அமைச்சருக்கோ ஆற்றுப்படுத்தப்பட்டவுடன், சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சரோ அல்லது பிரதி அமைச்சரோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடும்வரை அச்சட்டமூலம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படலாகாது.

மேற்படி அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் அல்லது அமைச்சருக்கு அல்லது பிரதி அமைச்சருக்குச் சட்டமூலம் ஆற்றுப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து ஆறு மாதங்கள் முடிவடைந்த பின்னர் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அல்லது பிரதி அமைச்சரினால் அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படாவிட்டால், அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பான உறுப்பினர் விரும்பும் திகதிக்கு இரண்டாம் மதிப்பீட்டிற்காக அச்சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தில் இடப்படல் வேண்டும்.

### இரண்டாம் மதிப்பீடு (நி.கட்டளை 55)

சட்டமூலமொன்று சமர்ப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒருவாரத்திற்கு மேற்படாத ஒரு திகதிக்கு இரண்டாவது மதிப்பீட்டிற்காக ஒதுக்கப்படல் வேண்டும்.

ஏதாவது சட்டமூலம் அரசியலமைப்பிற்கு முரணானதாகவுள்ளதா என்பதைத் தீர்மானிப்பதற்கு அரசியலைமப்பின் 121 ஆம் உறுப்புரையின் கீழ் உயர்நீதிமன்றத்தின் நியாயாதிக்கம் கோரப்பட்டு அத்தகைய ஆற்றுப்படுத்தலின் அல்லது மனுவின் பிரதியொன்று சபாநாயகரிடம் ஒப்படைக்கப்படும் சந்தர்ப்பத்தில்,

(அ) அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டதன் பின்னர் அல்லது அத்தகைய மனு தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் கூடும் பாராளுமன்றத்தின் முதலாவது நாள் கூட்டத்தின்போது சபாநாயகரினால் அத்தகைய ஆற்றுப்படுத்தல் அல்லது மனு தாக்கல் தொடர்பாக பாராளுமன்றத்திற்கு அறிவிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு சபாநாயகருக்குத் தெரிவிக்கப்படும்வரை அல்லது அத்தகைய ஆற்றுப்படுத்லோ, மனுத்தாக்கலோ செய்யப்பட்ட திகதியிலிருந்து மூன்று வாரங்கள் முடியும்வரை இவற்றுள் எது முதல் நிகழ்கின்றதோ அதுவரை அத்தகைய சட்டமூலம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படலாகாது.

(இ) உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு பெறப்பட்டதன் பின்னர் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பினைச் சபாநாயகர் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், அவ்வறிவித்தலின் மீது விவாதமெதுவும் அனுமதிக்கப்படுதலுமாகாது.

### இரண்டாம் மதிப்பீட்டில் விவாதம் (நி.கட்டளை 56)

சட்டமூலம் ஒன்றின் இரண்டாம் மதிப்பீட்டின்போது சட்டமூலத்தின் பொதுத் தகைமைகளையும், கொள்கைகளையும் உள்ளடக்கிய விவாதமொன்று எழலாம்.

### சட்டமூலங்கள் மீதான குழுநிலை (நி.கட்டளை 57-58)

சட்டமூலமொன்று இரண்டாம் மதிப்பீடு செய்யப்பட்டதும் அச்சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படல் வேண்டும்.

ஆயினும், அமைச்சரவையின் அமைச்சர், அமைச்சரவையின் உறுப்பினரல்லாத அமைச்சர் அல்லது பிரதி அமைச்சரினால் செய்யப்பட்ட பிரேரணையின்மேல் பாராளுமன்றம் அவ்வாறு செய்தால், வருடாந்த அல்லது குறைநிரப்பு ஒக்கீட்டுச் சட்டமூலம் தவிர்ந்த சட்டமூலமொன்று சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்பட வேண்டிய விசேட குழுவொன்றிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு அல்லது பொருத்தமான துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம்.

சட்டமூலமொன்று விசேட குழுவிற்கு அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு அல்லது துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளபோதும் அக்குழுவானது அறிக்கையிடும்வரை சட்டமூலத்தின்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எவையும் எடுக்கப்படலாகாது.

### குழுநிலையிலுள்ள சட்டமூலங்கள் மீதான நடைமுறை (நி.கட்டளை 59-66)

ஏதேனும் சட்டமூலம் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் அத்தகைய குழு அதன் பல்வேறு ஏற்பாடுகளையும் பிரேரிக்கப்பட்ட எவையேனும் திருத்தங்களைப் பற்றி கலந்துரையாட வேண்டுமென்பதுடன் குழு அதன் அமர்வினை ஒத்திவைக்கலாம், அது பாராளுமன்ற முழுக் குழுவாகவிருப்பின் எப்போதும் காலத்திற்குக்காலம் அதன் முன்னேற்றத்தை அறிக்கையிடலாம்.

குழுவின் தவிசாளர் அல்லது செயலாளர் நாயகம் சட்டமூலத்தின் ஒவ்வொரு வாசகத்தினதும் இலக்கத்தை ஒன்றன்பின் ஒன்றாக வாசித்தல் வேண்டும்.

ஒரு வாசகத்திற்கு அல்லது வாசகங்களிற்கு அச்சட்டமூலத்தின் விடயப்பொருளிற்கு இயைபானதாகவும், நிலையியற் கட்டளைகளுக்கு வேறுவகையில் இசைந்தொழுகுவதுமான திருத்தங்களை ஏதேனும் ஏற்பாடுகளை நீக்கிவிடுவதன்மூலம், பதிவதன்மூலம் அல்லது உட்புகுத்துவதன்மூலம் அல்லது சேர்ப்பதன்மூலம் மேற்கொள்ளலாம்.

குழுநிலையில் சட்டமூலத்தின் அடிப்படைக்கொள்கை கலந்துரையாடப்படலாகாது என்பதன், அதன் விபரங்கள் மட்டுமே கலந்துரையாடப்படுதல் வேண்டும். ஒரு சட்டமூலத்தின் முற்பகுதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவிற்கு முரணான எந்தவொரு திருத்தம் பிரேரிக்கப்படலாகாது.

சட்டமூலமொன்று குழுநிலையில் மதிப்பிடப்பட்ட பின்னரும் அச்சட்டமூலம் தொடர்ந்து குழு நிலையிலுள்ளபோது எவரேனும் உறுப்பினர் தவிசாளரின் அனுமதியுடன் ஏற்கனவே நிறைவேற்றப்பட்ட ஏதேனும் வாசகத்திற்குத் திருத்தமொன்றைப் பிரேரிக்கலாம்.

சட்டமூலத்தின் ஏதேனும் வாசகத்தின் பரிசீலனை சட்டமூலத்தின் எஞ்சியுள்ள வாசகங்கள் பரிசீலிக்கப்படும் வரையும் புதிய வாசகங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும் பிற்போடப்படலாம்.

சட்டமூலத்தின் அட்டவணைகள் பரிசீலிக்கப்படும் முன் அச்சட்டமூலத்திற்குப் புது வாசகங்கள் சமர்ப்பிக்கப்படலாம். அவ்வாறு சமர்ப்பிக்கப்படும் புது வாசகங்கள் முதல் மதிப்பீடு பெற்றவையாகக் கருதப்படல் வேண்டும். அதையடுத்து முறையே "அந்த வாசகம் இரண்டாம் மதிப்பீடு பெறுக" என்றும் "அந்த வாசகம் சட்டமூலத்துடன் சேர்க்கப்படுவதாக" வும் என்றும் பிரரேரணைகள் பிரேரிக்கப்படல் வேண்டும்.

சட்டமூலத்துக்குரிய அட்டவணைகள் பரிசீலிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டதும் புது அட்டவணைகள் சமர்ப்பிக்கப்படலாம். அங்ஙனம் சமர்ப்பிக்கப்படும் அட்டவணைகள் புது வாசகம் எவ்வாறு பரிசீலிக்கப்படுமோ அவ்வாறே பரிசீலிக்கப்படுதல் வேண்டும்.

ஒவ்வொரு வாசகமும், அட்டவணையும் பிரேரிக்கப்பட்ட ஏதேனும் புதிய வாசகமும் அல்லது அட்டவணையும் பரிசீலிக்கப்பட்டதும் சட்டமூலத்திற்கு முன்னுரை இருக்குமானால் "இது சட்டமூலத்தின் முன்னுரையாக இருக்குமாக" என்று பிரேரணை பிரேரிக்கப்படுதல் வேண்டும்.

சட்டமூலத்தின் சட்டப்பெயருக்கு ஏதேனும் திருத்தம் அவசியமானால், அது நிலையியற் கட்டளையில் தரப்பட்டுள்ள நடவடிக்கைகளின் முடிவில் செய்யப்படுதல் வேண்டும்.

### சட்டமூலங்கள் மீதான குழுக்களின் அறிக்கைகள் (நி.கட்டளை 67-70)

முழுப் பாராளுமன்றக் குழுவொன்று ஒரு சட்டமூலத்தைப் பரிசீலனை செய்து முடித்ததும் தவிசாளர் அச்சட்டமூலத்தைத் திருத்தங்களுடனோ அல்லது திருத்தங்களின்றியோ பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

சட்டமூலமொன்று ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள ஒரு துறைசார் மேற்பார்வைக் குழு, சட்டவாக்க நிலையியற் குழு அல்லது விசேட குழு அதன் விதப்புரைகளை வழங்குகின்ற அறிக்கையொன்றைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்பதுடன், அறிக்கையின் பிரதியொன்று ஒவ்வோர் உறுப்பினருக்கும் வழங்கப்படுதலும் வேண்டும்.

ஒரு சட்டமூலத்தின் விசேட குழுவின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அவ்வறிக்கை சபாபீடத்தில் இடப்படுவதாக எனக் கட்டளையிடலாம் அல்லது பாராளுமன்றத்தால் பணிக்கப்படக் கூடியவாறான முறையில் கையாளப்படலாம். எந்தவோர் உறுப்பினரும் பிரேரிக்கும் பிரேரணை ஒன்றின் அடிப்படையில் சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவொன்றிற்கு ஆற்றுப்படுத்தப்படலாம் அல்லது விசேட குழுவின் அறிக்கை அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பாகவுள்ள உறுப்பினர் பிரேரிக்கும் ஒரு நாளில் பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படலாம்.

ஒரு சட்டமூலத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவொன்றின் அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் அறிக்கையைத் தவிசாளர் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் அச்சட்டமூலத்திற்குப் பொறுப்பாகவுள்ள உறுப்பினர் நியமிக்கும் ஒரு நாளில் அவ்வறிக்கை பரிசீலனை செய்யப்படுவதற்கென ஒதுக்கப்படல் வேண்டும். ஒரு துறைசார் மேற்பார்வைக் குழுவின், சட்டவாக்க நிலையியற் குழுவின் அல்லது விசேட குழுவின் அறிக்கை பரிசீலனை செய்யப்படும்போது குழுவால் அச்சட்டமூலத்தில் திருத்தங்கள் எதுவும் செய்யப்பட்டிருந்தால் பாராளுமன்றம் அக்குழு செய்திருக்கும் திருத்தங்களை மட்டுமே பரிசீலிக்கும்

ஆயினும் அத்திருத்தங்களை மேலும் திருத்தலாம். அறிக்கையைப் பரிசீலிக்கும்போது, குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திருத்தங்களின் விளைவாக முன்வைக்கப்பட்டவை தவிர, பாராளுமன்றத்தால் புதிய திருத்தங்கள் எதனையும் செய்ய முடியாது. ஆனால், குழுவால் செய்யப்பட்ட குறிப்பிட்ட சில திருத்தங்களைப் பற்றிய குறிப்புடன் சட்டமூலம் அதே குழுவிற்கு மீளச்சமர்ப்பிக்கப்படலாம்.

### மூன்றாம் மதிப்பீடு (நி.கட்டளை 71-73)

ஒரு சட்டமூலம் முழுப் பாராளுமன்றக் குழுவால் நிறைவேற்றப்பட்ட அல்லது ஒரு விசேட குழுவால் திருத்தமின்றி பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட ஒரு பிரேரணையின் அடிப்படையில் உடனே மூன்றாம் மதிப்பீடு செய்யப்பட்டு நிறைவேற்றப்படலாம் அல்லது பாராளுமன்றம் பணித்தால் மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்படலாம்.

துறைசார் மேற்பார்வைக் குழுவினால் அல்லது சட்டவாக்க நிலையியற் குழுவினால் திருத்தங்களின்றிப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்ட சட்டமூலமொன்று பரிசீலனைக்கென நியமிக்கப்பட்ட நாளன்று உடனடியாக மூன்றாம் முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம் அல்லது மூன்றாம் மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

துறைசார் மேற்பார்வைக் குழு அல்லது சட்டவாக்க நிலையியற்குழு அல்லது விசேட குழு சட்டமூலத்தைத் திருத்தியிருந்தால் குழுவினால் செய்யப்பட்ட திருத்தங்களைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்து முடித்தவுடன் மூன்றாவது முறையாக மதிப்பிடப்பட்டு நிறைவேற்றப்படலாம் அல்லது மூன்றாவது மதிப்பீடு பிற்போடப்பட வேண்டுமெனப் பாராளுமன்றம் பணித்தால் பிற்போடப்படலாம்.

ஒரு சட்டமூலத்தின் மூன்றாவது மதிப்பீட்டின்போது அறிவித்தலின் பின்னரான பிரேரணையின் மேல் வார்த்தைகளில் அல்லது வரைவுத் தேவைப்பாடுகளிற்கு ஏதேனும் திருத்தங்கள் செய்யப்படலாம். சபாநாயகரினால் சட்டமூலத்தில் சான்றுரை எழுதப்படுவதற்கு முன்னர் சட்டமூலத்திலிருக்கக் கூடிய இலக்கணப் பிழை அல்லது தட்டெழுத்துப் பிழை எதனையும் திருத்துவதற்குச் சபாநாயகருக்குத் தத்துவம் உண்டு.

### சபாநாயகரின் சான்றுரை (நி.கட்டளை 74)

பாராளுமன்றத்தினால் சட்டமூலமொன்று நிறைவேற்றப்பட்ட பின்னர் அரசியலைமப்பின் 79 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்ட சான்றுரையொன்றை இயன்றளவு விரைவாக சபாநாயகர் சிங்கள, தமிழ் மொழிமூல சட்டமூலத்தில் புறக்குறிப்பிடுதல் வேண்டும்.

### ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்காகக் குறித்தொதுக்கப்பட்ட நாட்கள் (நி.கட்டளை 75)

ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்கென திசெம்பர் 31 ஆம் திகதிக்கு முன்பாக இருபத்தாறு நாட்களிற்கு மேற்படாத நாட்கள் ஒதுக்கப்படல் வேண்டும்.

ஆயினும், ஏதாவது குறைநிரப்பு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தைப் பரிசீலிப்பதற்காக எடுக்கப்பட்ட நாட்கள் மேற்குறிப்பிட்ட இருபத்தாறு நாட்களைக் கணக்கிடுவதில் சேர்த்துக்கொள்ளப்படலாகாது.

வெள்ளிக்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் அமர்வு நேரம் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணிவரையும், பி.ப 1.00 மணியிலிருந்து பி.ப. 6.30 மணிவரையுமாக இருத்தல் வேண்டும்.

வெள்ளிக்கிழமைகளில் அமர்வு நேரம் மு.ப. 9.30 மணியிலிருந்து பி.ப. 12.30 மணிவரையும் பி.ப 1.30 மணியிலிருந்து பி.ப. 6.30 மணிவரையுமாக இருத்தல் வேண்டும்.

### ஒழுங்கு பேணல் விதிகளிற்கான பொறுப்பு (நி.கட்டளை 76)

சபாநாயகரும் ஏதேனும் குழுவில் அக்குழுவின் தவிசாளரும் முறையே பாராளுமன்றத்திடம் குழுக்களிடம் ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடிப்பதற்குப் பொறுப்புடையோராவர். எந்தவிதமான ஒழுங்குப்பிரச்சினை மீதும் இவர்களின் முடிவு மேன்முறையீட்டுக்கு உட்படலாகாது என்பதுடன் முன்னறிவித்தலின் பின் செய்யப்படும் தன்னிலைப் பிரேரணை ஒன்றின் மீதன்றி இது பாராளுமன்றத்தினால் மீளாய்வு செய்யப்படுதலுமாகாது.

ஒரு விவாதத்தின்போது சபாநாயகரோ தவிசாளரோ தமது இருக்கையிலிருந்து ஏதேனும் தெரிவிக்கும் எச்சந்தர்ப்பத்திலும் உரையாற்றிக்கொண்டிருக்கும் அல்லது உரையாற்றவிருக்கும் உறுப்பினரெவரும் தமது இருக்கையிலமர வேண்டுமென்பதுடன், சபாநாயகர் அல்லது தவிசாளர் கூறுவதை எவ்விதக் குறுக்கீடுமின்றிச் செவிமடுக்கக்கூடியதாகப் பாராளுமன்றமோ குழுவோ, அமைதியாக இருத்தல் வேண்டும்.

ஒழுங்குப் பிரச்சினையொன்றை எடுத்துரைத்தபின் அதனை எடுத்துரைத்த உறுப்பினர் தமது இருக்கையில் அமர்தல் வேண்டுமென்பதுடன், சபாநாயகரோ தவிசாளேரா ஒழுங்குப் பிரச்சினையில் தமது தீர்ப்பினைக் கூறும்வரை சபாநாயகரின் அல்லது தவிசாளர்களின் அனுமதியின்றி வேறெந்த உறுப்பினரும் எழுந்து நிற்றலாகாது. தீர்ப்பளிக்கப்பட்ட பின் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட்ட சமயம் பாரளுமன்றத்தில் உரையாற்ற நின்ற உறுப்பினர் அக்கிராசனத்தின் தீர்ப்பிற்கிணங்கத் தமது உரையைத் தொடர்ந்து நிகழ்த்தத் தகுதியுடையவராவார்.

### பாராளுன்றத்தில் ஒழுங்கு (நி.கட்டளை 77-83)

ஓர் உறுப்பினர் அக்கிராசனத்தின் அதிகாரத்தைப் புறக்கணித்தல், வேண்டுமென்றும் விடாப்பிடியாகவும் பாராளுமன்றத்தின் அலுவலுக்கு தடையினை ஏற்படுத்தல் அல்லது வேறெவ்வகையிலாவது பாராளுமன்றத்தின் விதிகளைத் துஷ்பிரயோகம் செய்தல் போன்ற குற்றச்சாட்டுக்களைப் புரிந்தவுடன் சபாநாயகர் அவ்வுறுப்பினரைப் பெயர் குறிப்பிட்டு “குறித்த அவ்வுறுப்பினர் பாராளுமன்றத்தின சேவையினின்றும் இடைநிறுத்தி வைக்கப்படல் வேண்டும்” என்ற பிரேரணையை விவாதேமா ஒத்திவைப்போ, திருத்தமோ அனுமதிக்கப்படாட்டாது) உடனடியாகச் சபைக்கு விடவேண்டும்.

அத்தகைய ஏதேனும் பிரேரணை நிறைவேற்றப்பட்டால் மற்றும் எவரேனும் உறுப்பினர் இந்நிலையியற் கட்டளையின் கீழ் இடைநிறுத்தப்படும் போது முதலாவது சந்தர்ப்பத்தில் அத்தகைய உறுப்பினரின் இடைநிறுத்துகை இருவாரங்களாக அமைய வேண்டும். அதே அமர்வுத்தொடரின்போது இரண்டாவது சந்தர்ப்பத்தில் மூன்று வாரங்களிற்கானதாக வேண்டும் என்பதுடன் அதே அமர்வுத்தொடரின்போது மூன்றாவது அல்லது ஏதேனும் அடுத்துப்பின்னரான சந்தர்ப்பத்தில் நான்கு வாரங்களிற்கானதாகவிருத்தல் வேண்டும்.

ஆயினும், எவ்வுறுப்பினரின் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளனவோ அவ்வுறுப்பினருக்கு, அத்தகைய இடைநிறுத்துகைக் காலப்பகுதியின்போது ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இறுதி வாக்கெடுப்பில் மட்டும் வாக்களிப்பதற்குச் சபாநாயகரினால் அனுமதியளிக்கப்படலாம்.

செங்கோல் சபையில் வைத்திருக்கப்படும்போது அதனைத் தொடுகின்ற அல்லது அதனை உயர்த்துகின்ற எவரேனும் உறுப்பினர் பாரதூரமான ஒழுங்கீனத்தைப் புரிகின்றார் என்பதுடன், அத்தகைய தவறு அவ்வுறுப்பினரினால் முதலாவது தடவையாகப் புரியப்பட்டதாகவிருந்தாலும் அவர் நான்கு வார காலப்பகுதிக்கு இடைநிறுத்தப்படுதல் வேண்டும்.

சமுகமாயிருக்கும் பல உறுப்பினர்கள் கூட்டாக ஒன்று சேர்ந்து அக்கிராசனத்தின் அதிகாரத்தைப் புறக்கணித்தாலொழிய ஒரேநேரத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் பெயர் குறிப்பிடப்படுதலாகாது.

இந்நிலையியற் கட்டளையின் கீழ் பாராளுமன்றத்தின் சேவையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட ஓர் உறுப்பினர் அல்லது கூட்டாக இயங்கும் பல உறுப்பினர்கள் இடைநிறுத்தி வைக்கப்பட்ட காலவரையறையுள் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து வெளியேற வேண்டும் என்ற சபாநாயகரின் கட்டளைக்கு எந்தநேரத்திலாவது கீழ்ப்படிய மறுத்தால், தனது கட்டைளையச் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி சபாநாயகர் பணிக்கலாம்.

மேலே குறிப்பிடப்பட்டது போன்ற குற்றமொன்று முழுப் பாராளுமன்றக் குழுநிலையில் புரியப்படும்போது தவிசாளர் உடனடியாக குழுவின் நடவடிக்கையை இடைநிறுத்தி அவ்வாறு இடைநிறுத்தி வைப்பதற்கான சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பாராளுமன்றத்திற்கு அறிவிக்க வேண்டுமென்பதுடன், பாராளுமன்றத்திலேயே அத்தகைய குற்றம் இழைக்கப்பட்டதாகக்கொண்டு அறிவித்தலின் பேரில் பிரேரிக்கப்படும் ஒரு பிரேரணையான திருத்தம், ஒத்திவைப்பு அல்லது விவாதம் எதுவுமின்றி சபாநாயகரினால் சபைக்கு விடப்படுதல் வேண்டும்.

விவாதத்தின்போது சொந்த வாதங்களை அல்லது ஏனைய உறுப்பினர்களால் மேற்கொள்ளப்பட்ட வாதங்களை சலிப்பூட்டும் முறையில் மீட்டுரைப்பதிலோ அல்லது விவாதப் பொருளிற்குப் பொருத்தமற்ற வகையில் உரையாற்றுவதிலோ ஓர் உறுப்பினர் விடாப்பிடியாயிருந்தால் சபாநாயகர் அவ்வுறுப்பினரின் நடத்தையைப் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவந்த பின்னர் அவ்வுறுப்பினரை உரையாற்றுவதை நிறுத்துமாறு பணிப்பதுடன், நேரடி ஒலி, ஒளிபரப்பை நிறுத்துமாறும் கட்டளையிடலாம்.

பாரதூரமான ஒழுங்கற்ற முறையில் செயற்படும் உறுப்பினர் அன்றைய எஞ்சிய நேரக் கூட்ட அமர்விலிருந்து உடனடியாக வெளியேற வேண்டுமெனச் சபாநாயகர் கட்டளையிட வேண்டுமென்பதுடன் அவரது கட்டளையைச் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறும் சபாநாயகர் பணிக்கலாம். படைக்கல சேவிதர் அத்தகைய உத்தரவின் பிரகாரம் செற்படுதல் வேண்டும்.

வெளியேறுமாறு பணிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர் பாராளுமன்ற வளவெல்லையிலிருந்து உடனடியாக வெளியேறுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய இடைநிறுத்தல் காலப்பகுதியின்போது குழுக்களிலிருந்தும் தடைசெய்யப்படுதல் வேண்டும்.

பாராளுமன்றத்தில் பாரதூரமான ஒழுங்கீனம் எழுகின்ற விடயத்தில், சபாநாயகர் அவசியெமனக் கருதினால், வினாவின்றியே பாராளுமன்றத்தை ஒத்திவைக்கலாம் அல்லது சபாநாயகரினால் தீர்மானிக்கக்கூடியவாறான நேரத்திற்கு அமர்வை இடைநிறுத்தி வைக்கலாம்.

மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாத தகாத வார்த்தைகளை விவாதத்தில் பயன்படுத்தியுள்ள, அவ்வார்த்தையைப் பயன்படுத்தியதற்காகப் பாராளுமன்றம் திருப்திப்படும் வகையில் மன்னிப்புக் கோராத அல்லது இந்நிலையியற் கட்டளைகளில் குறித்துரைக்கப்பட்ட ஒழுங்குபேணுகையின் மீறுகைக்காக எவரேனும் உறுப்பினருக்கு எதிராக பாராளுமன்றம் தகுதியெனக் கருதுகின்ற ஏதேனும் நடவடிக்கையெடுக்கலாம்.

எவரேனும் உறுப்பினர் இயைபற்ற முறையில் அல்லது நிலையியற் கட்டளைகளிற்கு முரணாகத் தொடர்ந்து செயற்படுகின்றாரெனச் சபாநாயகர் அபிப்பிராயப்படும்போது அவர் அப்பாராளுமன்ற நடவடிக்கைகளின் ஏதேனும் ஓர் ஒளிபரப்பை உடனடியாக இடைநிறுத்தப்பட வேண்டுமெனக் கட்டளையிடலாம். விவாதத்தில் ஒழுங்கற்ற அல்லது மாமன்றப் பண்பிற்கு ஒவ்வாதனவாகவுள்ள தகாத வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டுள்ளனவென சபாநாயகர் அபிப்பிராயப்படும்போது அவர் தனது தற்றுணிபின்படி அத்தகைய சொற்கள் அல்லது அத்தகைய கூற்றுக்களை ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்கிவிட வேண்டுமெனக் கட்டளையிடலாம்.

தன்னிலைப் பிரேரணை ஒன்றின் மீதன்றி சனாதிபதி, பதில் சனாதிபதி, பாராளுமன்ற உறுப்பினர்கள், நீதிபதிகள் மற்றும் நீதி நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள வேறு ஆட்களின் தனிப்பட்ட நடத்தை பற்றிப் பாராளுமன்றத்தில் வினாவெதுவும் எழுப்பப்படலாகாது, அத்துடன் எவையேனும் நடவடிக்கைகளில், அமைச்சரொருவரிடம் கேட்கப்படும் கேள்வியொன்று அல்லது ஏதேனும் விடயம் தொடர்பான பிரேரணையொன்றின் மீதான விவாதத்திலான குறிப்புகளில் அத்தகைய எவரேனும் ஆட்களின் நடத்தை பற்றிக் குறிப்பிடுதலும் ஒழுங்கற்றதாகும்.

(நிலையியற் கட்டளையில் 'நீதிபதி' என்பது குடியரசின் சனாதிபதி அவர்களால் அவரது கைபட எழுத்தாணைமூலம் நியமிக்கப்பட்ட பிரதம நீதியரசர், மேன்முறையீட்டு நீதிமன்றத் தலைவர், உயர் நீதிமன்றத்தினதும், மேன்முறையீட்டு நீதிமன்றத்தினதும் மற்றெல்லா நீதிபதிகள் எனப் பொருள்படும்.)

### தன்னிலைப் பிரேரணை மீது குறித்த சில ஆட்களை அகற்றுதல் (நி.கட்டளை 84-85)

ஏதேனும் சட்டத்திற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை என்ற ஏதுவின்மீது பிரதம நீதியரசர், உயர்நீதிமன்ற நீதிபதிகள், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் என்போரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான பிரேரணையொன்றை சனாதிபதிக்கு முன்வைப்பதற்கான தீர்மானம் பற்றிய முன்னறிவித்தல் அரசியலைமப்பின் 107 ஆம் உறுப்புரையின் பிரகாரம் சபாநாயகருக்கு கொடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் சபாநாயகர் அத்தகைய தீர்மானத்தை ஏற்றுக் கவனித்து, அதனைப் பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறச் செய்தல் வேண்டும்.

சபாநாயகர் பிரதம அமைச்சரினதும் பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவரினதும் கலந்தாலோசனையுடன் சம்பந்தப்பட்ட நீதிபதியின் மீது சார்த்தப்பட்ட துர்நடத்தையை அல்லது தகவின்மையை ஆய்வு செய்வதற்கு ஓய்வுபெற்ற மூன்று உயர் நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட விசாரணைக் குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

சபாநாயகர் அத்தகைய விசாரணைக் குழாத்தின் உறுப்பினர்களுள் ஒருவரை விசாரணைக் குழாத்தின் தவிசாளராக நியமித்தல் வேண்டும்.

அவ்வாறு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழாம் விசாரணையை இரண்டு மாதக் காலப்பகுதியினுள் முன்வைத்தல் வேண்டுமென்பதுடன் உரிய விசாரணை நடைமுறையான சட்டத்தினால் குறித்துரைக்கப்படும். எவ்வாறாயினும், சபாநாயகர், விசாரணைக் குழாத்தின் வேண்டுகோளின்பேரில் ஒரு தடவையில் ஒரு மாதத்திற்கு மேற்படாத வகையில் எல்லையினை நீடிக்கலாம்.

விசாரணையின் நடவடிக்கைகள் முடிவுற்ற பின்னர், அவ்வாறு நியமிக்கப்பட்ட விசாரணைக் குழாம், அக்குழாத்தின் முன்னர் எடுக்கப்பட்ட சான்றின் நிகழ்ச்சிக் குறிப்புகளுடன் அதன் அவதானிப்புக்களை சபாநாயருக்கு அறிக்கையிடுதல் வேண்டுமென்பதுடன் சபாநாயகர், சம்பந்தப்பட்ட நீதிபதி சார்த்தப்பட்ட துர்நடத்தைக்கு அல்லது தகவின்மைக்கு குற்றவாளியாக உள்ளாரென விசாரணைக் குழாமானது கண்டுடிருந்தால் அவர் அதனைப் பாராளுமன்றத்திற்கு அறிவித்து நடவடிக்கையெடுக்க வேண்டும்.

சம்பந்தப்பட்ட நீதிபதி சார்த்தப்பட்ட துர்நடத்தை அல்லது தகவின்மை தொடர்பாகக் குற்றவாளியாக காணப்பட்டுள்ளாரென்று விசாரணைக் குழாம் அறிக்கையிட்டிருந்தால், சபாநாயகர் பாராளுமன்றத்தின் அங்கீகாரத்திற்காக அவ்வறிக்கையை முன்வைத்தல் வேண்டும். அத்தகைய தீர்மானம் பாராளுமன்றத்தின் மொத்த உறுப்பினர்களின் பெரும்பான்மையானோரினால் அல்லது தகவின்மை என்ற ஏதுவின்மீது சம்பந்தப்பட்ட நீதிபதியை அகற்றுவதற்காக அதனைச் சபாநாயகர் சனாதிபதிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

பாராளுமன்ற அமர்வுகள் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் அல்லது பாராளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலும் விசாரணைக் குழாம் தனது விசாரணைகளைத் தொடர்ந்தும் நிகழ்த்தலாம்.

(அ) அரசியலைமப்பின் 65 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட பாராளுமன்றச் செயலாளர் நாயகம் அல்லது

(ஆ) அரசியலைமப்பின் 104உ ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட் தேர்தல்கள் ஆணையாளர் தலைமையதிபதி அல்லது

(இ) அரசியலமைப்பின் 153 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமையதிபதி அல்லது

(ஈ) அரசியலைமப்பின் 156 ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளர் (ஒம்புட்சுமான்),

ஆகியோரைப் பதவியிலிருந்து அகற்றுவதற்கான பிரேரணையொன்றை சனாதிபதிக்கு முன்வைப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் இடம்பெறும் சந்தர்ப்பத்தில், அத்தகைய தீர்மானம் நியமிக்கப்பட்ட விசேட குழு பாராளுமன்றத்திற்கு அறிக்கை சமர்ப்பித்த திகதியிலிருந்து ஒரு மாத காலப்பகுதி முடிவடையும்வரை தொடங்கப்படலாகாது.

இவ்வாறான சந்தர்ப்பத்தில், சபாநாயகர் அத்தகைய தீர்மானத்தில் தரப்பட்டுள்ள கருமங்களை ஆய்வு செய்து அவற்றின் மீது பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கு ஏழு உறுப்பினர்களுக்குக் குறையாதோரைக் கொண்டுள்ள பாராளுமன்ற விசேட குழுவொன்றை நியமித்தல் வேண்டும்.

நியமிக்கப்பட்ட விசேட குழுவொன்று எந்த ஆளின் பதவியகற்றுகை அதன் நுண்ணாய்வின் விடயப்பொருளாகவுள்ளதோ அந்த ஆளுக்கு அத்தகைய விசேட குழு எந்தத் தீர்மானத்தைப் பின்பற்றி நியமிக்கப்பட்டதோ அந்தத் தீர்மானத்தில் தரப்பட்டுள்ள விடயங்களின் பிரதியொன்றை அனுப்புதல் வேண்டுமென்பதுடன், விசேட குழு குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதியினுள் எழுத்திலான எதிர்வாதக் கூற்றொன்றை அளிக்கும்படி அத்தகைய ஆளைத் தேவைப்படுத்துதலும் வேண்டும்.

விசேட குழுவினாலான ஆய்வின் விடயமாகவுள்ளதோ அந்த ஆள் நேரடியாகவோ அல்லது ஒரு சட்டத்தரணிமூலமாகவோ விசேட குழுவின் முன்பு தோன்றி அத்தகைய குழுவினால் செவிமடுக்கப்படுவதற்கும் அத்தகைய ஆளுக்கெதிராகச் செய்யப்பட்ட சார்த்துரைகளை இல்லையென நிரூபிப்பதற்கும் வாய்மொழி மூலமான அல்லது ஆவண ரீதியான சான்றுரை அளிப்பதற்கும் உரிமைகொண்டிருத்தல் வேண்டும்.

விசேட குழு எவரேனும் ஆளைக் கட்டளையிட்டழைப்பதற்கும் பத்திரங்களையும், பதிவேடுகளையும் கோருவதற்கும் தத்துவங்கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன், குழுவின் கூட்டநடப்பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் அரைவாசிக்குக் குறையாததாக அமைதலும் வேண்டும்.

விசேட குழு, அதனாற் செய்யப்படும் ஆய்வுகளின் முடிவில் எடுக்கப்பட்ட சான்றுக் குறிப்புக்களுடன் அதன் முடிவுகளைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதுடன், பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவருதல் உசிதமானது என அது கருதக்கூடிய எவ்விடயங்கள் பற்றியும் விசேட அறிக்கையை சமர்ப்பிக்கலாம்.

சனாதிபதிக்குச் சமர்ப்பிப்பதற்கான தீர்மானமொன்று பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர், பாராளுமன்றத்தின் சார்பில் அப்பிரேரணையைச் சனாதிபதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### விவாத விதிகள் (நி.கட்டளை 86-90)

பாராமன்றத்தினால் சமர்ப்பிக்கப்பட்டிக்கும் எந்த ஒரு விடயத்திலும் உறுப்பினரொருவர் ஒரு முறைக்கு மேல் உரையாற்றலாகாது என்பதுடன், புதிய விடயம் எதனையும் புகுத்தாமல் தமதுரையில் தவறாக விளங்கிக் கொள்ளப்பட்ட பொருட்பகுதியை விளக்குவதற்காக உரையாற்றுதல் அல்லது ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின் மீது உரையாற்ற முடியும்.

ஏதேனும் பிரேரணையை அல்லது திருத்தத்தைப் பிரேரிக்கின்ற உறுப்பினர் அதற்கு ஆதரவாக உரையாற்றலாம். எவ்வாறாயினும், அப்பிரேரணை அல்லது திருத்தம் முறையாக வழிமொழியப்படும் வரை விவாதம் அனுமதிக்கப்படுதலாகாது என்பதுடன் அப்பிரேரணை சபைக்கு விடப்படுதலுமாகாது.

தமது இடத்தில் எழுந்து நின்று அக்கிராசனத்திற்குத் தலைசாய்ப்பதன்மூலம் ஓர் உறுப்பினர் ஒரு பிரேரணையையோ அல்லது திருத்தத்தையோ வழிமொழியலாம். இதனால் அவர் விவாதத்தில் பின்னொரு கட்டத்தில் உரையாற்றும் உரிமையை இழக்கமாட்டார்.

ஒரு பிரேரணையில் ‘ஆம்’, ‘இல்லை’ எனும் குரல்களின் பின்னர் அந்தப் பிரேரணை முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டதாகிவிடும்.

விவாதத்திற்குரிய ஒரு பிரேரணை விவாதித்து நிறைவேற்றப்பட்டால் அத்தகைய பிரேரணையை மீண்டும் அதே அமர்வுத் தொடரில் சபாநாயகரின் அனுமதியின்றிப் பிரேரிக்க எந்தவோர் உறுப்பினரும் தகுதியற்றவர் ஆவார்.

## பாராளுமன்றத்தில் உரையாற்றுகின்ற உறுப்பினர்களுக்கான விதிகள் (நி.கட்டளை 91)

பாராளுமன்றத்தில் பரிசீலனையில் இருக்கும் எந்தவொரு விடயத்திலும் உரையாற்றும்போது பின்வரும் விதிகள் கண்டிப்பாகக் கவனிக்கப்படுதல் வேண்டும்:-

(அ) ஒவ்வொரு உறுப்பினரும் சபாநாயகரை நோக்கியே உரையாற்ற வேண்டுமென்பதுடன், சபாநாயகரின் அனுமதியுடனன்றி தமக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தினிலிருந்து எழுந்து நின்றே உரையாற்ற வேண்டும்.

(ஆ) ஒழுங்குப் பிரச்சினை ஒன்றின்மீது அல்லது உரையாற்றும் உறுப்பினர் இடமளித்தாலன்றி உறுப்பினரொருவர் உரையாற்றும்போது எவரும் இடையில் குறுக்கிடலாகாது.

(இ) உறுப்பினரொருவர் தனது உரையை முடித்ததும் தமது இருக்கையில் மீண்டும் அமர வேண்டுமென்பதுடன், உரையாற்ற விரும்பும் வேறு எந்த உறுப்பினரும் அப்பொழுது எழுந்து நிற்கலாம்.

(ஈ) ஒரே நேரத்தில் இரண்டு உறுப்பினர்கள் எழுந்து நின்றால் முதல் தன் பார்வையில் பட்ட உறுப்பினரை உரையாற்றும்படி சபாநாயகர் அழைக்க வேண்டும்.

(உ) ஒவ்வொரு உறுப்பினரும் கலந்துரையாடப்படும் விடயத்திற்குட்பட்டே தமது உரையை நிகழ்த்த வேண்டும்.

(ஊ) உறுப்பினரெவரும் ஏதேனும் பிரேரணையின் அல்லது விவாதத்தின்போது நீதிமன்றத் தீர்ப்பின் கீழுள்ள ஏதேனும் விடயம் அல்லது நீதித் தீர்ப்பொன்று நிறைவுபெறாதிருக்கும் விடயம் பற்றிக் குறிப்பீடு செய்தலாகாது. குறித்த விதியை மீறி நீதிமன்றத்தின் முன்னிலையிலுள்ள விடயம் பற்றிக் குறிப்பிடுகின்ற எவரேனும் உறுப்பினரைச் சபாநாயகர் அல்லது தவிசாளர் அவரது ஆசனத்தில் அமருமாறு பணிக்கலாம்.

(எ) உரையாற்கின்ற அல்லது சமுகமளித்திருக்கின்ற உறுப்பினரொருவரினால் ஏதேனும் அவதூறான அல்லது ஒழுங்கீனமான சொற்கள் பிரயோகிக்கப்பட்டால், சபாநாயகர் அவரை ஒழுங்கு பேணும்படி கட்டளையிட வேண்டுமென்பதுடன் அத்தகையவை ஹன்சாட் அறிக்கையிலிருந்து நீக்கப்பட வேண்டுமெனப் பணித்தலும் வேண்டும்.

(ஏ) உறுப்பினரெவரும் மற்றொரு உறுப்பினருக்கெதிராகத் தகாத நோக்கத்தில் குற்றம் சாட்டுதலோ அல்லது மற்றொரு உறுப்பினரின் தனிப்பட்ட விடயங்கள் பற்றிக் குறிப்பிடுதலோ ஆகாது.

(ஐ) உறுப்பினரொருவர் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டுள்ள விடயம் தொடர்பில் மாத்திரமே உரையாற்றுதல் வேண்டும்.

(ஒ) பாராளுமன்றத்தின் முன் பிரேரணை இல்லாவிட்டாலும் பாராளுமன்றத்தின் இணக்கத்துடன் ஓர் உறுப்பினர் தனது தனிப்பட்ட விடயங்களைப் பாராளுமன்றத்தில் விளக்கலாம். ஆனால், அவ்விடயம் பற்றி விவாதம் எதுவும் அனுமதிக்கப்படலாகா என்பதுடன், அவர் கண்டிப்பாகத் தனது நன்னடத்தையை எடுத்துக்காட்டும் வரையறைக்குள் நிற்றல் வேண்டும்.

(ஓ) சட்டமூலம், தீர்மானம், ஒழுங்குவிதி அல்லது பிரேரணை ஒன்றைப் பிரேரித்த உறுப்பினர்

விவாத முடிவில் அது தொடர்பாகப் பதிலளிக்க உரிமையுடையவராக இருத்தல் வேண்டும்.

(ஔ) விதிகளை மீறுகின்ற எவரேனும் உறுப்பினரைச் சபாநாயகர் உடனடியாக ஒழுங்கு பேணும்படி பணிக்கலாம்.

(க) உறுப்பினர்கள் வாக்களிக்கும் நேரம் தவிர, பாராளுமன்றச் சபையினுள் நுழையும்போதும், வெளியேறிச் செல்லும்போதும் அக்கிராசனத்திற்குத் தலைசாய்த்து மதிப்பளித்தல் வேண்டும்.

(ங) அமர்வு ஒன்றின் முடிவில் சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றச் சபையை விட்டு வெளியேறவுள்ள சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் பாராளுமன்றச் சபையை விட்டு வெளியேறும்வரை உறுப்பினர்கள் தமது ஆசனங்களிலிருந்து எழுந்து நிற்றல் வேண்டும்.

(ச) இந்நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், நியாயமானதும் ஒப்புரவானதுமான முறையில் உறுப்பினர்களிடையே நேரத்தைக் குறித்தொதுக்குவதற்குச் சபாநாயகர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும். எவர் உரையாற்ற வேண்டும் என்பதைத் தீர்மானிப்பதில் ஆளும் கட்சியினதும், எதிர்க்கட்சியினதும் முதற்கோலாசான்கள் அவ்வாறு உரையாற்றுவதற்குச் சபாநாயகரினால் அழைக்கப்பட வேண்டிய உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியலை வழங்குவதன் மூலம் சபாநாயகருக்கு உதவ வேண்டும்.

## உரையாற்றாத உறுப்பினர்களுக்கான விதிகள் (நி.கட்டளை 92)

பாராளுமன்றத்திலோ அல்லது முழுப் பாராளுமன்றக் குழுவொன்றிலோ விவாதம் நிகழும்போது எந்தவொரு உறுப்பினரும்,

(அ) பாராளுமன்றத்திற்குள் அல்லது குழுவிற்குள் பண்புடனும் ஒழுங்கான முறையிலும் பிரவேசிக்க வேண்டும்.

(ஆ) பாராளுமன்றச் சபாகூடத்தின் குறுக்கே போகக்கூடாது.

(இ) பாராளுமன்றத்தின் முன்னிற்கும் விடயத்திற்குத் தொடர்பற்ற செய்தித்தாள்கள், நூல்கள் அல்லது கடிதங்கள் முதலியனவற்றை வாசித்தலாகாது.

(ஈ) புகைத்தலாகாது

(உ) இன்னுமோர் உறுப்பினர் உரையாற்றும்போது அமைதியாயிருக்க வேண்டுமென்பதுடன், உரையாற்றும் உறுப்பினர் இடமளித்தாலன்றி அவரை இடைமறித்தலுமாகாது

(ஊ) வாய்மூலத் தொடர்பாடல் சாதனங்களைப் பயன்படுத்தி உரையாற்றுதலாகாது அத்துடன்,

(எ) பாராளுமன்றச் சபாகூடத்தின் மையப்பகுதிக்குள் பிரேவசித்தலாகாது.

## ஒழுங்குப் பிரச்சினைகள்

ஓர் உறுப்பினர் வாக்கெடுப்பு நடந்துகொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் தவிர, வேறு எந்த சபை நடைமுறைகளிலும் உரிய நடைமுறை பின்பற்றப்பட்டதா அல்லது பின்பற்றப்படுகின்றதா என்பது தொடர்பான வினாவினை ஒழுங்குப் பிரச்சினையொன்றின்மூலம் முன்வைக்கலாம்.

ஒழுங்குப் பிரச்சினையொன்றின்போது குறிப்பிட்ட உறுப்பினர் ஒரு நிமிடத்திற்கு மேலாக பேச முடியாது என்பதுடன் பரிசீலனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் விடயம் தொடர்பாகக் பேசக்கூடாது. ஒழுங்குப்பிரச்சினை பரிசீலனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் விடயத்தினைவிட முன்னீடடையும் என்பதுடன், அவை பரிசீலனைக்குட்படுத்தப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உரிய விடயம் தொடர்பான கலந்துரையாடலும் இடைநிறுத்தப்படும்.

இந்நிலையிற் கட்டளைகளிற்கிணங்கச் சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் ஒழுங்குப் பிரச்சினை தொடர்பாக உடனடியாகத் தீர்மானமொன்றினை எடுப்பார். ஆனால், விசேடமான சந்தர்ப்பத்தில் அத்தீர்மானத்தைக் காலதாமதப்படுத்தலாம். சபாநாயகர் அல்லது தலைமைதாங்கும் உறுப்பினர் இந்நிலையியற் கட்டளையின் கீழ் தமது தீர்மானத்தை அறிவிக்கலாம் என்பதுடன் அத்தீர்மானத்தின்மேல் மேலதிக கலந்துரையாடலும் இடம்பெற அனுமதிக்கப்படலாகாது.

### முழுப் பாராளுமன்றக் குழு (நி.கட்டளை 93-99)

பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் ஒன்றின்மூலம் ஒரு முழுப் பாராளுமன்றக் குழு நியமிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்படும்போது வினா விடுக்காமலே சபாநாயகர் அக்கிராசனத்தைவிட்டகல வேண்டும்.

சபாநாயகர் அல்லது அவர் சமுகமளித்திராத சந்தர்ப்பத்தில் பிரதிச் சபாநாயகர் முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளராகத் தலைமை வகித்தல் வேண்டும். இவரும் சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை வகித்தல் வேண்டும். சபாநாயகரும், பிரதிச் சபாநாயகரும், குழுக்களின் பிரதித் தவிசாளரும் சமுகமளிக்காத சந்தர்ப்பத்தில் தவிசாளர் குழாமிலுள்ள உறுப்பினரொருவர் தலைமை வகித்தல் வேண்டும்.

முழுப் பாராளுமன்றக் குழுநிலையிலான வாக்கெடுப்பு “சபாநாயகர்” என்னும் சொல்லுக்குப் பதிலாகத் “தவிசாளர்” என்னும் சொல்லை இடுவதன்மூலம் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

ஏனைய உறுப்பினர்களின் வாக்குகள் சமமாகப் பிரிந்தாலன்றி முழுப் பாராளுமன்றக் குழுவின் தவிசாளர் வாக்களித்தலாகாது வாக்குகள் சமமாகவிக்கும் சந்தர்ப்பத்தில் தவிசாளர் தமது தீர்வு வாக்கை அளித்தல் வேண்டும்.

பின்வரும் விடயங்கள் தவிர, சபாநாயகர் தலைமைவகிக்கும் சந்தர்ப்பங்களில் சபை நடைமுறைகளைக் கட்டுப்படுத்தும் விதிகள் முழுப் பாராளுமன்றக் குழு நடவடிக்கைகளிற்கும் பொருந்தும்:-

அ) ஒரு பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவையில்லை.

(ஆ) ஒரு பிரேரணை வழிமொழியப்பட்ட வேண்டியதில்லை.

(இ) உறுப்பினரொருவர் ஒரே பிரேரணைமீது ஒரு முறைக்குமேல் உரையாற்றலாம்.

பாராளுமன்றத்தால் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயங்களை மாத்திரமே ஒரு முழுப் பாராளுமன்றக் குழு பரிசீலனை செய்தல் வேண்டும். முழுப் பாராளுமன்றக் குழுவின் நடவடிக்கைகள் பாராளுமன்றக் கூட்ட அறிக்கையில் பதியப்படல் வேண்டும்.

## விசேட குழுக்கள் (நி.கட்டளை 100-110)

பாராளுமன்றத் தீர்மானத்தின்மூலம் விசேட குழுவொன்று நியமிக்கப்படலாம். விசேட குழுவொன்று பாராளுமன்றத்தின் அனுமதியின்றி பன்னிரண்டிற்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டிருத்தலாகாது. அத்தகைய அனுமதி கோரும் பிரேரணைக்கு முன்னறிவித்தல் தேவைப்படும்.

ஒரு விசேட குழுவினாலான விசாரணையொன்றின் நோக்கெல்லை, அது எந்தக் கட்டளையின் நியதிகளின்கீழ் நியமிக்கப்படுகின்றதோ அந்தக் கட்டளையினால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும். ஆனாலும், அந்த விடயப்பரப்பு பாராளுமன்றத்தின் பணிப்பினால் விரிவாக்கப்படவோ அல்லது மட்டுப்படுத்தப்படவோ முடியும். அத்தகைய கட்டளை, குழுவின் இறுதியறிக்கை முன்வைப்பதற்கான காலத்தை குறித்துரைத்தல் வேண்டும் ஆயினும், பாராளுமன்றம் அத்தகைய காலப்பகுதியை பொருத்தமானதெனக் கருதுகின்றவாறு குறித்துரைக்கப்பட்ட திகதிவரை நீடிக்கலாம்.

ஒவ்வொரு விசேட குழுவினதும் தவிசாளரும் உறுப்பினர்களும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும். தவிசாளர் இல்லாதிருக்கும் சந்தர்ப்பத்தில், சமுகமளித்துள்ள உறுப்பினர்களினால் தெரிவுசெய்யப்பட்ட குழுவின் எவரேனும் உறுப்பினர் அக்கூட்டத்திற்கான தவிசாளராகவிருத்தல் வேண்டும். தவிசாளர் நியமிக்கும் நேரத்திலும் இடத்திலும் குழு தனது முதற் கூட்டத்தை நடத்தும். முதற் கூட்டத்திற்குப் பின் நிகழும் கூட்டங்கள் குழு தீர்மானிக்கும் நேரங்களிலும் இடங்களிலும் நிகழ்தல் வேண்டும்.

வேறுவகையாகக் கட்டளையிட்டாலொழிய, விசேட குழுவின் கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களைக் கொண்டதாக அமைதல் வேண்டும்.

விசேட குழுவொன்றில் வெற்றிடமொன்று ஏற்படும் சந்தர்ப்பத்தில், சபாநாயகர், காலத்திற்குக்காலம், அக்குழுவின் அத்தகைய உறுப்பினரின் இடத்தில் செயலாற்றுவதற்கு இன்னோர் உறுப்பினரை நியமிக்கலாம். விசேட குழுவின் முன்னனுமதியைப் பெறாமல் அக்குழுவின் தொடர்ச்சியான மூன்று கூட்டங்களிற்கு வருகைதராதுள்ள எவரேனும் உறுப்பினர், அத்தகைய குழுவின் உறுப்பாண்மையை இழந்துள்ளாரெனக் கருதப்படுதல் வேண்டும். இந்நிலையியற் கட்டளையின் கீழான ஒவ்வொரு நியமனம் பாராளுமன்றத்தின் அடுத்த கூட்டத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும்.

விசேட குழுவொன்றின் தவிசாளர் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும். அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகவிக்கும் சந்தர்ப்பத்தில் அவர் அறுதியிடும் வாக்கொன்றைப் பிரயோகிக்கலாம்.

ஒரு விசேட குழுவிடம் ஆற்றுப்படுத்தப்பட்ட ஒரு சட்டமூலத்திலோ அல்லது விடயத்திலோ அவ்விசேட குழு சாட்சியங்களை விசாரிக்க வசதி செய்ய வேண்டுமென விரும்பினால், ஆட்களையோ பத்திரங்களையோ பதிவேடுகளையோ அவ்விசேட குழு வரவழைப்பதற்கு ஒரு தீர்மானம்மூலம் பாராளுமன்றம் அதிகாரம் வழங்கலாம். அத்தகைய அதிகாரம் வழங்கப்பட்ட எந்த ஒரு குழுவும் தன்முன் அளிக்கப்பட்ட சாட்சியத்தின் பதிவறிக்கையுடன் பாராளுமன்றத்திற்குத் தனது கருத்துக்கள், குறிப்புரைகள் பற்றி அறிக்கையிட அனுமதி பெற்றிருக்கும். அத்துடன் பாராளுமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரத் தகுந்ததெனத் தான் கருதும் எந்த விடயம் பற்றியும் ஒரு விசேட அறிக்கையைச் சமர்ப்பிக்கும் அனுமதி பெற்றிருக்கும்.

பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டாலும் அல்லது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டாலும் ஒரு விசேட குழு தனது புலனாய்வுகளைத் தொடர்ந்து நிகழ்த்தலாம். தனது அறிக்கையைக் குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும்வரை அல்லது பாராளுமன்றத்தின் பிரேரணை ஒன்றின் மீதன்றி ஒரு விசேட குழுவைக் கலைக்க முடியாது.

- எந்தவொரு விசேட குழுவினதும் கூட்டத்தில்
- ஒவ்வொரு நாளும் சமுகமளிக்கும் உப்பினர்களின் பெயர்கள்
- விசேட குழுவினதும் கூட்டத்தில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் பெயர்கள்
- வாக்கெடுப்பு எதுவும் நிகழ்ந்தால் அங்கு பிரேரிக்கப்பட்ட பிரேரணை
- பிரேரித்தவர் பெயர் அப்பிரேரணைமீது சமுகமளித்த உறுப்பினர்கள் அளித்த வாக்குகள்

குழுவின் கூட்ட அறிக்கையில் பதியப்படல் வேண்டும். அத்தகைய கூட்ட அறிக்கைகள் சாட்சியக் குறிப்புக்களுடன் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட்டு குழுவின் அறிக்கைகளுடன் அச்சிடப்படல் வேண்டும்.

### துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் (நி.கட்டளை 111)

பாராளுமன்றமானது ஒரு தேர்தலையடுத்து நடைபெறும் அதன் முதலாவது அமர்விற்குப் பின்னர் ஆறு வாரங்களினுள் தீர்மானமொன்றின்மூலம் தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான எண்ணிக்கையில் துறைசார் மேற்பார்வைக் குழுக்களை நியமித்தல் வேண்டும். எவ்வாறாயினும், துறைசார் மேற்பார்வைக் குழுக்களை நியமித்தல் வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் துறைசார் மேற்பார்வைக் குழுக்களின் எண்ணிக்கை இருபதிற்கு மேற்படலாகாது.

தெரிவுக் குழுவானது ஒவ்வொரு துறைசார்மேற்பார்வைக் குழுவிற்கும் குறித்தொதுக்கப்படவேண்டிய விடயங்களையும் பணிகளையும் தீர்மானித்தல் வேண்டும்.

துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் ஏதேனும் சட்டமூலம், துணைநிலைச் சட்டவாக்கம் உட்பட ஒழுங்குவிதிகள், தீர்மானம், பொருத்தனை, அறிக்கை அல்லது தமது எல்லைக்குட்பட்ட விடயங்களும் பணிகளும் தொடர்பான வேறேதேனும் கருமம் தொடர்பாகப் பரிசோதனை செய்வதற்குத் தத்துவமுடையனவாதல் வேண்டும்.

ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும், அது நியமிக்கப்பட்டதினத்திலிருந்து ஆறு வாரங்களிற்குப் பிந்தாமல் பாராளுமன்றத்தின் அந்த அமர்வுத்தொடரிற்கான அதன் மேற்பார்வைத் திட்டத்தை வகுத்தல் வேண்டும்.

பின்வருவோர் தவிர்ந்த எல்லாப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஏதேனும் துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களாகச் சேவையாற்றுவதற்குத் தகைமையுடையோராதல் வேண்டும்.:-

(அ) சபாநாயகர்

(ஆ) பிரதிச் சபாநாயகர்

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்

(ஈ) பிரதம அமைச்சர்

(உ) பாராளுமன்றச் சபை முதல்வர்

(ஊ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் அத்துடன்

(எ) அரசியலமைப்பின் 43(2) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சர்கள்.

ஒவ்வொரு துறைசார் மேற்பார்வைக் குழுவும் அதன் முதலாவது கூட்டத்திலும் அதன் பின்னர் தவிசாளர் பதவி வறிதாகிய பின்னர் கூடும் முதலாவது கூட்டத்திலும், துறைசார் மேற்பார்வைக் குழுவின் உறுப்பினர்களிடையேயிருந்து தவிசாளரொருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

துறைசார் மேற்பார்வைக் குழுவொன்று சட்டவாக்கம் இயற்றப்படுவதனை விதந்துரைக்கும்போது அல்லது சட்டவாக்கம்சாரா அறிக்கையைச் சமர்ப்பிக்கும்போது அமைச்சரவையானது அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்தின் சபாபீடத்தில் இடப்பட்டதிலிருந்து ஆறு வாரங்களினுள் அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

### அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (நி.கட்டளை 112)

பின்வரும் உறுப்பினர்களை உள்ளடக்கியவாறான அமைச்சரவை அமைச்சுக்களின் எண்ணிக்கைக்கு சமமான அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் இருத்தல் வேண்டும்:-

(அ) உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர்-குழுவின் தவிசாளராவார்.
(ஆ) இராஜாங்க அமைச்சர்,
(இ) பிரதி அமைச்சர், மற்றும்
(ஈ) தெரிவுக் குழுவினால் நியமிக்கப்படும் வேறு ஐந்து பாராளுமன்ற உறுப்பினர்கள்

குழுவின் கடமையானது எவரேனும் பாராளுமன்ற உறுப்பினரால் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதாக இருத்தல் வேண்டும். குழுவின் அங்கத்தவர்களுக்கு மேலதிகமாக எவரேனும் உறுப்பினர் குழுத் தவிசாளரின் அனுமதியுடன் குழுவின் கூட்டங்களில் கலந்துகொள்ளலாம். குழுவானது மாதத்திற்கு ஒரு தடவை கூடும் என்பதுடன், தமது கூட்டத்தினுடாக அறிந்துகொண்ட காண்புகளை இரண்டு வாரங்களிற்குள் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடவும் வேண்டும்.

குழுவின் கூட்டமானது குறித்த அமைச்சின் செயலாளருடனான கலந்தாலோசனைகளுடன் கூட்டப்படலாம். அமைச்சுசார் ஆலோசனைக் குழுவானது எவரேனுமாளை அதன் முன்னர் அழைத்து விசாரிக்கவும், ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது வேறு ஆவணங்களைக் கேட்டுப்பெறுவதற்கு அதிகாரமுடையதாகவிருத்தல் வேண்டும். குழுக்களிற்கான பொது விதிகள் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களிற்கும் ஏற்புடையதாகும்.

### சட்டவாக்க நிலையியற் குழு (நி.கட்டளை 113)

தவிசாளராக பிரதிச் சபாநாயகரையும், குழுக்களின் பிரதித் தவிசாளர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட வேறு பத்து உறுப்பினர்களையும் கொண்டுள்ள சட்டவாக்க நிலையியற்குழு எனப்படும்.

தெரிவுக்குழுவானது அரசாங்கத்தையும் எதிர்க்கட்சியையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடிய வகையில் இக்குழுவில் சேவையாற்றுவதற்கான மேலதிகமான உறுப்பினர்களின் எண்ணிக்கையைத் தீர்மானிக்கலாம். சபாநாயகர் அத்தகைய மேலதிக உறுப்பினர்களை நியமிப்பதற்கு தத்துவங்கொண்டவராவார்

குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும். சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் கடமையானது பாராளுமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படும் நியதிச்சட்டங்களையும் சட்டமூலங்களையும் பரிசீலனை செய்தலுடன் வரையறுக்கப்படும்.

சட்டவாக்க நிலையியற் குழுவொன்றின் தவிசாளருக்கு மூலவாக்கு ஒன்றிருத்தல் வேண்டுமென்பதுடன், வாக்கெடுப்பின்போது வாக்குகள் சமமாகவிருக்கும் சந்தர்ப்பத்தில், அறுதியிடும் வாக்கொன்றும் அவருக்கு இருத்தல் வேண்டும்.

ஒரு அமர்வுத்தொடரின் இறுதியில் சட்டவாக்க நிலையியற்குழுவொன்று அதன் கலந்தாராய்வினை முடித்து அறிக்கையைப் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் அக்குழுவின் நடவடிக்கைகள் பராளுமன்றத்தின் அடுத்த அமர்வுத்தொரில் அச்சட்டமூலம் அல்லது உத்தேச நியதிச்சட்டம் ஆற்றுப்படுத்தப்படும் சட்டவாக்க நிலையியற் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும்.

### சிறப்பு நோக்கங்களுக்கான குழுக்கள்

### தெரிவுக்குழு (நி.கட்டளை 114)

துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் மற்றும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் அமைப்புருவாக்கம், எண்ணிக்கை, தொழிற்பாடுகள் மற்றும் கூட்டநடப்பெண் என்பவை பற்றி கவனத்தில் கொள்வதற்கும் அவற்றின் மீதான தனது அபிப்பிராயங்களை வசதியானவரை விரைவாகப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதற்கும் பின்வரும் குழுக்களில் சேவையாற்றுவதற்கு உறுப்பினர்களைப் பெயர்குறித்து நியமிப்பதற்கும் ஒவ்வோர் அமர்வுத்தொடரின் தொடக்கத்திலும் நியமிக்கப்பட்ட “தெரிவுக் குழு”எனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(அ) பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு

(ஆ) நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு

(இ) சபைக் குழு

(ஈ) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு

(உ) சட்டவாக்க நிலையியற் குழு

(ஊ) அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள்

(எ) அரசாங்க கணக்குகள் பற்றிய குழு

(ஏ) அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு

(ஐ) அரசாங்க நிதி பற்றிய குழு

(ஒ) பொது மனுக்கள் பற்றிய குழு

(ஓ) உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும்

(ஔ) பின்வரிசை உறுப்பினர் குழு

தெரிவுக் குழுவானது பன்னிரெண்டு உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும். தெரிவுக் குழுவானது பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டிருந்தாலும் கூடுவதற்கும் காலத்துக்குக்காலம் அறிக்கையிடுவதற்கும் ஏதேனும் குழுவிற்கு எவரேனும் உறுப்பினர் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளபோது அது தொடர்பாக பாராளுமன்றத்துக்குத் தெரிவிப்பதற்கும் தத்துவமுடையதாதல் வேண்டும்.

### பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழு (நி.கட்டளை 115)

தவிசாளராகச் சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர், பாராளுமன்றச் சபை முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு எட்டு உறுப்பினர்களையும் கொண்டுள்ள பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

சபாநாயகரால் பாராளுமன்றச் சபை முதல்வரின் கலந்தாலோசனையுடன் குழுவிற்கு ஆற்றுப்படுத்தக்கூடிய, பாராளுமன்றம் தொடர்பாகக் கலந்துரையாடுவதற்காகக் குறித்தொதுக்கப்படவேண்டிய நேரத்தையும், அலுவல்களும் குழுவின் வேறு அத்தகைய கருமங்களையும் கவனத்தில்கொண்டு முடிவு செய்வதும் குழுவின் கடமையாதல் வேண்டும். பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கை சகல உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

### நிலையியற் கட்டளைகள் பற்றிய குழு (நி.கட்டளை 116)

தவிசாளராகச் சபாநாயகரையும், பிரதிச் சபாநாயகர், குழுக்களின் பிரதித் தவிசாளர் மற்றும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு ஆறு உறுப்பினர்களையும் கொண்டதாக இக்குழு அமைந்திருத்தல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் நடவடிக்கைமுறை மற்றும் அலுவல்களை நடாத்தும் கருமங்களைக் கவனத்திற் கொள்ளவும் அவசியமெனக் கருதப்படக்கூடிய நிலையியற் கட்டளைகளிற்கான எவையேனும் திருத்தங்களை விதந்துரைப்பதும் பாராளுமன்றத்தினால் அதற்கு ஆற்றுப்படுத்தப்படக்கூடிய நிலையியற் கட்டளை தொடர்பான எல்லாக் கருமங்கள் மீதும் அறிக்கையிடுவதும் நிலையியற் கட்டளைகள் பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்.

### சபைக் குழு (நி.கட்டளை 117)

தவிசாளராகச் சபாநாயகரையும் தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் ஒன்பது உறுப்பினர்களையும் கொண்டுள்ள சபைக் குழுவெனப் பெயர்குறிக்கப்பட்ட குழுவொன்று இருத்தல்

வேண்டும். உறுப்பினர்களின் வசதிகள் சம்பந்தப்பட்ட எல்லாக் கருமங்களையும் கவனத்திற்கொள்வதும் அவற்றின்மீது மதியுரைத்தலும் சபைக் குழுவின் பணிகளாதல் வேண்டும். சபைக் குழுக் கூட்டங்களின் கூட்ட அறிக்கைகள் எல்லா உறுப்பினர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுதல் வேண்டும்.

### ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு (நி.கட்டளை 118)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பத்து உறுப்பினர்களுக்கு மேற்படாதவர்களைக் கொண்டதாக இந்தக் குழு அமையும்.

குழுவானது, பாராளுமன்ற உறுப்பினர்களின் நடத்தைக்கோவை விதிகளின் மீறுகை அல்லது கடைப்பிடிக்காமை தொடர்பாக அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட ஏதேனும் கருமத்தையும் விசாரணை செய்தல் வேண்டும்

ஒவ்வொரு விடயம் தொடர்பான நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்டு நடத்தை மற்றும் நற்பண்பு பற்றிய விதிகள் மீறப்பட்டுள்ளதா என்பதையும் அவ்வாறு மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அம்மீறுகையின் தன்மை அத்தகைய மீறுகை ஏற்படக் காரணமாயிருந்த சூழ்நிலைகள் என்பவற்றைத் தீர்மானிப்பதுடன் குழு பொருத்தமெனக் கருதக்கூடிய விதப்புரைகளைச் செய்வது ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிகைள் பற்றிய குழுவின் பணியாகும்.

குழுவானது, காலத்திற்குக்காலம் அதன் நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துவதற்கான விதிகளை ஆக்கலாம்.

### அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு (நி.கட்டளை 119)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினாறு உறுப்பினர்களைக் கொண்டதாக இக்குழு அமைந்திருக்கும்.

- அரசாங்கச் செலவுகளுக்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்கின்ற கணக்குகள்,
- அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகள்,
- கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனைசெய்வது என்பன அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் கடமையாகும்.

### அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (நி.கட்டளை 120)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினாறு உறுப்பினர்களைக் கொண்டதாக அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு அமைந்திருக்கும்.

பகிரங்கக் கூட்டுத்தாபனங்கள், அரசாங்கத்தினால் முழுமையாக அல்லது பகுதியளவில் நிதியளிக்கப்பட்ட நிறுவனங்களின் கணக்குகள், மற்றும் ஏதேனும் எழுத்திலான சட்டத்தினால் அரசாங்கத்திற்கு உரித்தாக்கப்பட்ட ஏதேனும் தொழிலின் அல்லது வேறு பொறுப்புமுயற்சியின் கணக்குகளை கணக்காய்வாளர் தலைமையதிபதியின் உதவியுடன் பரிசோதனை செய்வது இக்குழுவின் கடமையாகும்.

அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

### அரசாங்க நிதி பற்றிய குழு (நி.கட்டளை 121)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் தவிசாளரொருவரையும் பதினொரு உறுப்பினர்களையும் இக்குழு கொண்டிருப்பதுடன், அதன் தவிசாளர் எதிர்க்கட்சி உறுப்பினராகவிருத்தலும் வேண்டும்.

பின்வருவனவற்றைப் பரிசீலனை செய்வது அரசாங்க நிதி பற்றிய குழுவின் கடமையாதல் வேண்டும்:

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் கீழ் வருமானங்களைச் சேகரித்தல்

(ஆ) திரட்டுநிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்தல்

(இ) குறித்துரைக்கப்பட்ட சட்டரீதியான தேவைப்பாடுகளிற்காக அரசாங்க நிதிகளைப் பயன்படுத்தல்

(ஈ) அரசாங்க நிதிகளைப் பயன்படுத்தல்

(உ) நடப்பாண்டிற்காக ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தில் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீடுகளின் மந்தநிலைகள், ஒதுக்கீட்டைக் கைமாற்றுதல் மற்றும் எதிர்பார்க்கப்படாத மீதி

(ஊ) நடப்பாண்டிற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்

(எ) பொதுக் கடனும் கடன் சேவையும் மற்றும்

(ஏ) 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க, நிதி முகாமைத்துவப் (பொறுப்புச்) சட்டத்தின்கீழான அறிக்கைகளும் கூற்றுக்களும்

மேலே குறிப்பிடப்பட்ட கருமங்களில் இருந்து எழுகின்ற பிரச்சினைகளைக் காலத்திற்குக்காலம் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

### பொது மனுக்கள் பற்றிய குழு (நி.கட்டளை 122)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பதினைந்து உறுப்பினர்களைக் கொண்டதாக பொது மனுக்கள் பற்றிய குழு அமையும். குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுக்களைக் கவனத்தில் கொள்ளுதல் இதன் கடமையாகும்.

அரசாங்க அலுவலரொருவரால் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனம், உள்ளூரதிகாரசபை அல்லது அதேபோன்ற பிற நிறுவனமொன்றின் அலுவலரொருவரால் அடிப்படை உரிமை மீறப்படுதலை அல்லது வேறு அநீதி இழைக்கப்படுதலை ஏதேனும் மனு வெளிக்காட்டுகின்றதெனப் பொது மனுக்கள் பற்றிய குழு கருதும்போது, அத்தகைய மனு பற்றி விசாரணை செய்யலாம் அல்லது அத்தகைய மனுவை விசாரித்து அறிக்கையிடுவதற்காக நிருவாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளருக்கு (ஒம்புட்சுமான்) ஆற்றுப்படுத்தலாம்.

பொது மக்கள் பற்றிய குழு, மனுவொன்றை விசாரணை செய்த பின்னர் அல்லது பொது மக்கள் பற்றிய குழுவினால் நிர்வாகத்திற்கான பாராளுமன்ற ஆணையாளரிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட மனுவொன்று தொடர்பில் அவரது ஆய்வு முடிவுற்றதன்மேல் அவரால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையைக் கவனத்தில்கொண்டதன் பின்னர், அத்தகைய மனு அல்லது அறிக்கைமீது எடுக்கப்படவேண்டிய நடவடிக்கை பற்றி அதன் அபிப்பிராயத்தைப் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடலாம்.

பொது மனுக்கள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

## அரசியலைமப்பு அலுவல்கள் பற்றிய குழு (நி.கட்டளை 123)

சபாநாயகரைத் தவிசாளராகவும் மற்றும் பிரதம அமைச்சர், பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உட்பட சபாநாயகரினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் வேறு மூன்று உறுப்பினர்களைக் கொண்டதாக அரசியலமைப்பு அலுவல்கள் பற்றிய குழு அமையும். இக்குவின் கூட்டநடப்பெண் மூன்று உறுப்பினர்களாதல் வேண்டும்.

அரசியலைமப்பின் 41ஆ ஆம் உறுப்புரையின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களும் அவற்றின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகள் ஆகியவற்றின் பிரயோகம், செயலாற்றுகை மற்றும் நிறைவேற்றுகை உள்ளடங்கலாக அவற்றின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையினை ஒவ்வொரு பஞ்சாங்க வருடத்திற்காகவும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்க வேண்டும். குழு, ஆணைக்குழுக்களின் வருடாந்த அறிக்கையைப் பரிசீலிக்க வேண்டுமென்பதுடன் அதன் கடமையை நிறைவேற்றும்போது ஆணைக்குழுக்களின் தவிசாளர்களையும், உறுப்பினர்களையும், அலுவலர்களையும் அழைப்பதற்கு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

## உயர் பதவிகள் பற்றிய குழு (நி.கட்டளை 124)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் பன்னிரெண்டு உறுப்பினர்களுக்கு மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டதாக இக்குழு அமையும்.

அமைச்சரவையினால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் பதவிக்கு நியமிக்கப்பட்ட அல்லது ஏதேனும் பதவியில் பதவி வகிப்பதற்குப் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட எவரேனும் ஆளின் தகுதியை ஆராய்ந்து அத்தகைய ஆட்கள் தொடர்பாக விதப்புரைகள் செய்தல் உயர் பதவிகள் பற்றிய குழுவின் பணியாகும்.

அமைச்சுக்களின் செயலாளர்கள், வெளிநாட்டு தூதரகங்களின் தலைவர்கள் மற்றும் உயர் பதவிகள் மீதான குழுவின் தீர்மானத்திற்கேற்ப தெரிவுசெய்யப்பட்ட கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் போன்ற பதவிகளிற்கு நியமிக்கப்பட்ட அல்லது பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்களின் தகுதி தொடர்பாக மூன்று மாத காலப்பகுதியினுள் பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும்.

உயர் பதவிகள் பற்றிய குழுவின் கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

## இணைப்புக் குழு (நி.கட்டளை 125)

சபாநாயகர் புதிய பாராளுமன்றமொன்றின் தொடக்கத்தில் இணைப்புக் குழுவை நியமித்தல் வேண்டும். இணைப்புக் குழு பின்வருவோரைக் கொண்டிருத்தல் வேண்டும்:

(அ) சபாநாயகர்- குழுவின் தவிசாளராவார்,

(ஆ) பிரதிச் சபாநாயகர்,

(இ) குழுக்களின் பிரதித் தவிசாளர்,

(ஈ) பாராளுமன்றச் சபை முதல்வர்,

(உ) பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்,

(ஊ) அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான்

(எ) எதிர்க்கட்சியின் முதற்கோலாசான்

(ஏ) ஒழுக்கவியல் மற்றும் சிறப்புரிமைகள் பற்றிய குழு, அரசாங்க கணக்குகள் பற்றிய குழு, அரசாங்க பொறுப்புமுயற்சிகள் பற்றிய குழு, அரசாங்க நிதி பற்றிய குழு, சட்டவாக்க நிலையியற் குழு, துறைசார் மேற்பார்வைக் குழுக்கள், அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள், பொது மனுக்கள் பற்றிய குழு, உயர் பதவிகள் பற்றிய குழு மற்றும் பின்வரிசை உறுப்பினர் குழு என்பவற்றின் தவிசாளர்கள்.

இணைப்புக் குழுவானது பின்வருவனவற்றைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்:-

(அ) குழுக்களின் வசதிகள் மற்றும் அவற்றின் பணியாட்தொகுதி பற்றிய எவையேனும் கருமங்கள்

(ஆ) குழுக்களின் கூட்டங்களிற்காக குழு அறைகள் கிடைக்கக்கூடிய தன்மை

(இ) குழுக்களிற்கான நிபுணர்களும் ஆராய்ச்சியாளர்களும் கிடைக்கக்கூடிய தன்மை

(ஈ) குழுக்களின் கூட்டங்களிற்கு குழு உறுப்பினர்களின் வருகை அத்துடன்

(உ) குழுக்களின் அறிக்கைகளை விவாதிப்பதற்கான நேர ஒதுக்கீடு

இணைப்புக் குழுவான, ஆகக்குறைந்தது இரண்டு மாதங்களிற்கு ஒருதடவையாவது கூடுதல் வேண்டுமென்பதுடன், தவிசாளர் குழுவின் கூட்டங்களை அழைப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்தலும் வேண்டும்.

### பின்வரிசைக் குழு (நி.கட்டளை 126)

தெரிவுக் குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்படும் குழுவாக இது அமைந்துள்ளது. பின்வரிசைக் குழுவில் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருக்கும்,

(அ) அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்கட்சியின் முதற்கோலாசான், அரசாங்கக் கட்சியின் மூன்று பின்வரிசை உறுப்பினர்கள் மற்றும் எதிர்க்கட்சியின் மூன்று பின்வரிசை உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) எதிர்க்கட்சியிலிருந்து தெரிவுசெய்யப்படும் உறுப்பினர்களுள் ஓர் இடம் எதிர்க்கட்சியிலுள்ள மிகப்பெரிய கட்சிக்கு குறித்தொதுக்கப்படுதல் வேண்டுமென்பதுடன், இன்னோரிடம் எதிர்க்கட்சியிலுள்ள இரண்டாவது மிகப்பெரிய கட்சிக்கு ஒதுக்கப்படுதல் வேண்டும்.

(இ) அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் தவிர அமைச்சரவையின் அமைச்சர்கள், அமைச்சரவையின் உறுப்பினர்கள் அல்லாத அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள்,

பாராளுமன்றச் சபை முதல்வர், பாராளுமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் அரசியற் கட்சிகளின் தலைவர்கள் இக்குழுவின் உறுப்பினராகவிருப்பதற்கு தகுதியுடையவர் அல்லர்.

அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான் குழுவின் தவிசாளராகவித்தல் வேண்டுமென்பதுடன் அவர் இல்லாத சந்தர்ப்பத்தில் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் குழுவின் தவிசாளராகவிருத்தல் வேண்டும்.

பின்வரிசையாளர் அலுவல்களிற்காக குறித்தொதுக்கப்பட்ட நாட்களில் எடுக்கப்படவேண்டிய அலுவல்களைத் தீர்மானித்தல் பின்வரிசைக் குழுவின் கடமையாதல் வேண்டும்.

### சிறப்பு நோக்கங்களிற்கான குழுக்களின் நடைமுறை (நி.கட்டளை 127)

சிறப்பு நோக்கங்களிற்கான ஒவ்வொரு குழுவும், அதன் முதலாவது கூட்டத்தில் அலுவல்களைத் தொடங்குவதற்கு முன்னர், தவிசாளராக அதன் உறுப்பினர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

தவிசாளருக்கு முதல் வாக்கொன்றும் அளிக்கப்பட்ட வாக்குகள் சமமாகவிக்கும் சந்தர்ப்பத்தில் தீரவு வாக்கொன்றும் இருத்தல் வேண்டும்.

வெற்றிடங்கள் தெரிவுக் குழுவினால் நிரப்பப்படுதல் வேண்டும். ஒரு குழுவில் காணப்படும் அத்தகைய ஒவ்வொரு வெற்றிடமும் நிரப்பப்படும்போது அவைபற்றி பாராளுமன்றத்தின் அடுத்துவரும் கூட்டத்தில் அறிவிக்கப்படுதல் வேண்டும். கூட்டநடப்பெண்ணானது மூன்று உறுப்பினர்களாகும்.

### அரசாங்கப் பணம் (நி.கட்டளை 133)

குடியரசின் திரட்டு நிதியத்தை அல்லது வேறு நிதியங்களைக் கையாள்வதற்கு அல்லது அவற்றின்மீது பொறுப்புக்களைச் சுமத்துவதற்கு அல்லது,

ஏதேனும் வரியை விதிப்பதற்கு, அல்லது அச்சந்தர்ப்பத்தில் வலுவிலிருக்கும் ஏதேனும் வரியை நீக்குவதற்கு, கூட்டுவதற்கு அல்லது குறைப்பதற்கு அதிகாரமளிக்கும் பிரேரணை,

சட்டமூலம் அல்லது அதற்கான திருத்தம் எதுவும் அமைச்சரவையின் அமைச்சர் ஒருவரால் மாத்திரமே சமர்ப்பிக்கப்படலாம்.

அத்தகைய பிரேரணையை, சட்டமூலத்தை அல்லது திருத்தத்தினைக் கொண்டுவருவதற்கு முன்னர் அத்தகைய பிரேரணைக்கோ, சட்டமூலத்திற்கோ, திருத்தத்திற்கோ அமைச்சரவையால் அங்கீகாரமளிக்கப்பட்டதெனக் குறிப்பிட்டாலன்றி அவற்றைப் பாராளுமன்றம் பரிசீலனை செய்யாது. பாராளுமன்றத்தின் ஒழுங்குப் பத்திரத்தில் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக "அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது" எனக் குறிப்பிடப்பட்டிருந்தால் இத்தேவைப்பாட்டைப் பூர்த்திசெய்ததாகக் கருதப்படும்.

### நிலையியற் கட்டளைகளில் திருத்தம் (நி.கட்டளை 134)

நிலையியற் கட்டளைகளைத் திருத்துவதற்காக எந்தவோர் உறுப்பினரும் ஒரு பிரேரணையை முன்னறிவித்தல் கொடுக்கலாம். அத்தகைய முன்னறிவித்தலுடன் உத்தேசிக்கப்பட்டுள்ள திருத்தங்களைக் கொண்ட ஒரு வரைபு நிலையியற் கட்டளை இணைக்கப்பட வேண்டுமென்பதுடன், இப்பிரேரணையை முன்மொழிந்து வழிமொழியப்பட்டதும் அது சபைக்கு விடப்படாமல் நிலையியற் கட்டளைகள் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்படும். அத்தகைய பிரேரணை எதைப்பற்றியும் நிலையியற் கட்டளைகள் குழு அறிக்கை சமர்ப்பிக்கும்வரை அதில் மேற்கொண்ட நடவடிக்கைகள் எதுவும் எடுத்தலாகாது.

### நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தல் (நி.கட்டளை 135)

ஏதேனும் விசேட அலுவலைப் பரிசீலிக்க அல்லது முடிவாக்க இயலும் வகையில் முன்னறிவித்தல் வழங்கப்பட்ட ஒரு பிரேரணையை பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதரிப்பதன்மூலம் எந்தவொரு கூட்டத்திலும் ஒரு நிலையியற் கட்டளையை அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிலையியற் கட்டளைகளை இடைநிறுத்தி வைக்கலாம்: ஆயினும், அமைச்சரவையின் ஓர் அமைச்சரால் பிரேரிக்கப்பட்டலான்றி இந்நிலையியற் கட்டளையின் கீழ்வரும் ஒரு பிரேரணை வாக்கெடுப்பு வாயிலாகத் தீர்மானிக்கப்படும். வாக்கெடுப்பில் பிரேரணையை ஆதரித்து இருபதிற்குக் குறைவான உறுப்பினர்களே பெரும்பான்மையினராக வாக்களித்தார்களெனக் காணப்பட்டால் பிரேரணை தோல்வியுற்றதாகப் பிரகடனப்படுத்தப்பட வேண்டும்.

### சபாநாயகரின் பொது அதிகாரம் (நி.கட்டளை 136-139)

நிலையியற் கட்டளைகளில் ஏற்பாடு செய்யப்பெறாத எவ்விடயம் தொடர்பாகவும் பாராளுமன்ற அலுவலை நடாத்தும் முறையை ஒழுங்குபடுத்தும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு.

சபாநாயகர், சபையில் ஒழுங்கைப் பேணுவதற்காக, அவசியெமனக் கருதினால் பாராளுமன்ற அமர்வை இடைநிறுத்தலாம் அல்லது சபையை ஒத்திவைக்கலாம்.

சபாநாயகரால் பாராளுமன்ற அமர்வொன்று இடைநிறுத்தப்படும் போதெல்லாம், பாராளுமன்ற அமர்வானது மீண்டும் எப்போது தொடங்கப்பட வேண்டுமென்பதும் சபாநாயகரால் முடிவுசெய்யப்படல் வேண்டும். சபாநாயகரால் சபை ஒத்திவைக்கப்படும் போதெல்லாம், அது அடுத்த பாராளுமன்ற அமர்வு நாள்வரை ஒத்திவைக்கப்பட்டதாதல் வேண்டும்.

பாராளுமன்றக் கட்டட நிர்வகிப்பு, பாதுகாப்பு ஒழுங்குகள் மற்றும் பாராளுமன்றச் சபையின் பொது நிர்வாகம் என்பவற்றிற்கு சபாநாயகர் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

இந்த நிலையியற் கட்டளைகளினால் சபாநாயகரினால் ஆற்றப்படக்கூடிய எதுவும், அரசியலமைப்பின் 159 ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளிற்குட்பட்டு, பிரதிச் சபாநாயகரினால் அல்லது குழுக்களின் பிரதித் தவிசாளரினால் அல்லது சபாநாயகரின் ஆசனத்தில் தலைமைதாங்குவதற்குப் பாராளுமன்றத்தினால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினரொருவரினால் ஆற்றப்படலாம்.

### தவிசாளர் குழாம் (நி.கட்டளை 140)

சபாநாயகர் ஒவ்வொரு அமர்வுத்தொடரின் ஆரம்பத்திலும் பிரதிச் சபாநாயகராலோ, பிரதிச் சபாநாயகர் சமுகமளிக்காதபோது குழுக்களின் பிரதித் தவிசாளராலோ கேட்டுக்கொள்ளப்படும்போது தற்காலிகமாகக் குழுக்களின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கு நான்கு உறுப்பினர்களுக்குக் குறையாத ஒரு தவிசாளர் குழாத்தை நியமித்தல் வேண்டும். காலத்திற்குக்காலம் தவிசாளர் குழாத்தின் அமைப்பை அவர் மாற்றலாம். பிரதிச் சபாநாயகக்குப் பதிலாக ஒரு தற்காலிகத் தவிசாளர் தலைமைவகிக்கும்போது அவர் பிரதிச் சபாநாயகர் ஆற்றக்கூடிய எதையும் ஆற்றலாம்.

### உறுப்பினர்கள் சட்டத்தரணியாக பிரதிநிதித்துவப்படுத்தப்பட முடியாமை (நி.கட்டளை 141)

உறுப்பினரெவரும் சட்டத்தரணி என்ற அவரது பதவியில் பாராளுமன்றத்தின் முன்னரோ அல்லது அதன் ஏதேனும் குழுவின் முன்னரோ எந்தவொரு கட்சிக்காரருக்காகவும் வேதனம் அல்லது வெகுமதி பெறவிருக்கும் சட்டத்தரணியாகவோ வேறெந்த துறையிலோ செயற்படலாகாது.

### சாட்சிகள் மற்றும் நிபுணர்களின் செலவுகள் (நி.கட்டளை 142)

அக்காலத்தில் வலுவிலிருக்கும் ஒழுங்குவிதிகளிற்கமைய ஒரு சாட்சியாக நீதிமன்றத்தில் சமுகமளிக்கும் ஒருவக்கு வழங்கவேண்டிய தொகை ஓர் ஆவணத்தை சமர்ப்பிக்கும்படி அல்லது நேரில் சமுகமளிக்கும்படி அழைப்பாணை அனுப்பப்படும் ஒருவரின் செலவுகளிற்காக வழங்கப்படலாம்.

ஏதேனும் நிபுணர் அல்லது ஏதேனும் தொழில்நுட்பப் பணியாட்களின் சேவைகள் பாராளுமன்றக் குழுக்களிற்கு தேவைப்படும்போது, அவர்களால் வழங்கப்பட்ட சேவைகளிற்காகப் பாராளுமன்றப் பணியாட்டொகுதி ஆலோசனைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு அத்தகைய சேவை வழங்குனர்களுக்கு ஊதியம் வழங்கப்படல் வேண்டும்.

### எஞ்சிய அதிகாரங்கள் (நி.கட்டளை 143)

இந்நிலையியற் கட்டளைகளில் திட்டவட்டமாகக் குறிப்பிடப்படாத எல்லா விடயங்களும் இந்நிலையியற் கட்டளைகள் விரிவாகச் செயற்படுதல் தொடர்பான எல்லாப் பிரச்சினைகளும் காலத்திற்குக்காலம் சபாநாயகர் பணிக்கின்ற முறைப்படி ஒழுங்குபடுத்தப்படல் வேண்டும்.